வீரகேசரி
பிரசுரம்

# ஜீவஜோதி

கே.வி.எஸ்.வாஸ் எம்.ஏ
(ரஜனி)



வீரகேசரி பிரசுரம்: 70

# ஜீவஜோதி

K. V. S. வாஸ் எம். ஏ.
(ரஜனி)

ம் தந்தியும்
வெளியீடு
வீரகேசரி
த.பெட்டி 60,
கொழும்பு

# "Jeevajothi"

Written by: K. V. S. VAS M.A.
(Rajani)
219, Jampettah Street,
Colombo - 13.

First Edition:
August — 1980

PRICE Rs. 7-90

Copyrights
RESERVED WITH
THE PUBLISHERS

VIRAKESARI PIRASURAM 70

Publi[illegible]

VI[illegible]RI
P.O[illegible]OLOMBO.

Sole Distributors:

Express Newspapers (Cey.) Ltd.
185, Grandpass Road, Colombo - 14.

# ஆசிரியர் முன்னுரை



கண்ணினால் காணாதவைகளையும் காணமுடியாதவைகளையும் பகுத்தறிவிற்கு அப்பாற்பட்டவைகளையும் இல்லையெனக் கூறுவது சிலரது வாதம். இந்தப் பிரபஞ்சத்தில் நாம் காண்பதும் காணக்கூடியதும் கடுகளவு, என்பதை இவர்கள் கவனத்தில் கொள்ளுவதில்லை. அறிவென்பது எல்லையில்லாத ஒரு மகா சமுத்திரமென்பதும் இந்தச் சூன்யவாதிகளின் பகுத்தறிவில் படுவதில்லை. தினே தினே வளரும் விஞ்ஞானம் கற்றது கைமண்ணளவு, இன்னமும் கற்க வேண்டியது மலையளவு என்பதை வலியுறுத்தப் போதுமான சான்று.

மண்ணில் வாழும் மனிதன் விண்ணில் பறக்கத் தெரிந்து கொள்ளுவதன் முன்னால் புராணகால வான ஊர்திகள் அவனுக்கு ஒரு கேலிக்கூத்தாகவே இருந்தன. அண்டவெளியில் அவன் பயணம் வரத் தலைப்படும் வரை வெண்மதி அவனுக்கு வெறும் வெளிச்சமாகவே தென்பட்டது. வானொலியும் தொலைக்காட்சியும் தந்தியும் [illegible]லக்ஸும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் பகுத்த[illegible]ற்கு அப்பாற்பட்டவைகளாயிருந்தன. ஆனால் இன்று [illegible]

மண்ணில் தோன்றியவை யாவும் என்றைக்காவது ஒ[illegible] நாள் மண்ணில் மறையுமென்பது இயற்கையின் நியதி. [illegible]ன்றிய இரண்டே நாட்களில் மறைகின்றவை சில உண்டு. இருபது ஆண்டுகளில், இருநூறு ஆண்டுகளில் மறைகின்றவைகளும் உண்டு. இரண்டாயிரம் ஆண்டுகளாகியும், இன்னும் தழைத்து வளரும் விருக்ஷங்கள் சிலவற்றையும்

இன்று காண்கிறோம். தோற்றத்துக்கும் மறைவிற்கும் இடையிலுள்ள கால எல்லையை நிர்ணயிக்கும் சக்தி, தோற்றங்களுக்கெல்லாம் மூலகாரணமான, மாற்றங்களுக்கெல்லாம் மூலாதாரமான மண்ணுக்கு உண்டு என்பதை இது நிரூபணம் செய்கின்றது.

இந்தத் தத்துவத்தை ஆதாரமாகக் கொண்டதுதான் சர்வார்த்த சித்தர் பல வருட ஆராய்ச்சிக்குப் பின் கண்டறிந்த ஜீவஜோதி. அந்த ஜோதி மலைக்கன்னியின் ஆயுளை நீடித்தது; ஆனால், அவளுக்கு அமரத்துவமளித்துவிடவில்லை. ஏன்? புராணங்களில் வரும் அமரர்களான தேவர்களுக்கும் கூட ஒரு கால எல்லையை நிர்ணயித்திருக்கிறது இயற்கை. மலைக்கன்னியிடம் உருமாற்றத்தை ஏற்படுத்திய ஜீவஜோதி இறுதியில் ஒரு அதிபயங்கரமான, மிகக் கொடூரமான சதியையும் செய்து தன் காரியத்தை முடித்துக்கொண்டது.

இனி மேலே படியுங்கள்.

கே. வி. எஸ். வாஸ்

கொழும்பு-13,
1-9-1980.


## அடுத்த வீரகேசரி பிரசுரம்:

சுதாராஜ்

அளிக்கும்

# "இளமைக் கோலங்கள்"

(சமூக நாவல்)

படிக்கத் தவறாதீர்கள்!

# ஜீவஜோதி

('மலைக்கன்னி' நாவலின் தொடர்ச்சி)

## அத்தியாயம் - 1

சங்கிலி ஊஞ்சலில் சென்ற பாலாஜிக்கு திடீரென்று எங்கிருந்தோ குளுகுளுவென்று குளிர்ந்த காற்று வீசுவதைப் போலிருந்தது. மலையின் உச்சியை நெருங்கி விட்டோமென்பதை இது அவனுக்கு அறிவுறுத்திக் காட்டியது. அவன் நினைத்ததைப்போலவே ஊஞ்சல் சட்டென்று ஒரு இடத்தில் வந்து நின்றது. அந்த இடத்தில் அவர்களைத் தவிர வேறு ஆட்கள் இருப்பதாகத் தோன்றவில்லை. அவ்வளவு அமைதியும் நிசப்தமும் அங்கு குடி கொண்டிருந்தன.

சிறிது நேரத்துக்கெல்லாம் பாலாஜி, சித்ரா, முனிசாமி ஆகிய மூவரின் கண்களும் திறந்துவிடப்பட்டன. கண்களைக் கசக்கிக் கொண்டு பாலாஜி சுற்றிப் பார்த்த பொழுது அவன் இருந்த இடமும் சுற்றிலும் தென்பட்ட காட்சியும் அவனுக்குப் பெரிய கண்கட்டு வித்தையைப் போலிருந்தன. அவனைப் போலவே சித்ராவும் முனிசாமியும் சுற்றிப் பார்த்துவிட்டு ஆச்சர்யத்துடன் பரக்கப் பரக்க விழித்தார்கள்.

அந்த இடம் சுமார் நூறு சதுர அடி விஸ்தீரணமுள்ள ஒரு முற்றவெளியைப் போலிருந்தது. அதன் மூன்று புறங்

களிலும் இரண்டு ஆள் உயரத்துக்கு மதில் சுவர்கள் நின்றன. நான்காவது பக்கத்தில் அகலமான படிக்கட்டுகள் மேல் நோக்கிச் சென்றன. மதில் சுவர்களின் ஓரமாகக் கம்பீரத் தோற்றமுடைய வீரர்கள் ஈட்டிகளுடன் ஆடாமல் அசையாமல் பதுமைகளைப்போல நின்றார்கள். ஈட்டிகளைப் பிடித்திருந்த கரங்களின் நரம்பு ஓட்டத்தையும் கண்ணிமைகளின் அசைவையும் கொண்டுதான் அவர்களை உயிருள்ள மனிதர்களென்று தீர்மானிக்கும்படியாயிருந்தது.

பளபளப்பும் வழுவழுப்புமுள்ள பளிங்குக் கற்களினால் தளவரிசை செய்திருந்த தரையில் அவர்கள் உட்கார்ந்து கொண்டு வந்த ஊஞ்சலைக் காணோம். ஊஞ்சல் போன்ற அந்தப் பகுதி முற்றவெளியின் இதர பகுதிகளுடன் கண்டு பிடிக்க முடியாத வண்ணம் அப்படிப் பொருந்தியிருந்தது.

முற்றவெளியின் நான்கு மூலைகளிலும் நடுவிலும் பெரிய தீப்பந்தங்கள் எரிந்து கொண்டிருந்தன. படிக்கட்டுகளின் மீது ஐந்து படிக்கட்டுகளுக்கு ஒரு தீப்பந்தம் வீதம் வரிசையாக வைக்கப்பட்டிருந்த காட்சி கார்த்திகைத் தீபங்கள் வைக்கப்பட்டிருப்பதைப் போன்ற நேத்திராந்தமான காட்சியாயிருந்தது. அரண்மனை வாசிகளுக்கு மின்சாரத்தின் உபயோகம் நன்கு தெரிந்திருக்குமானால் மின்சார விளக்குகள் போடாமல் தீப்பந்தங்களைக் கொளுத்தி வைக்கக் காரணமென்னவென்பதைப் பாலாஜியா[illegible] புரிந்து கொள்ள முடியவில்லை.

இதற்கிடையில் படிக்கட்டுகளின் ஓரமாக நின்ற வீரனிடம் உக்கிரசேனர் ஏதோ பேசிவிட்டு வந்தார். அவர் திரும்பியதும் நான்கு வீரர்கள் வந்து பல்லக்கைத் தூக்கிக் கொண்டார்கள்.

"பின்னால் வாருங்கள்!" என்று சொல்லிவிட்டு ஒரு வீரன் படிகளின்மீது ஏறிச் சென்றான். அவனைத் தொடர்

ந்து உக்கிரசேனர், பாலாஜி, முனிசாமி, சித்ரா ஆகிய நால்வரும் சென்றனர். இந்நால்வருக்கும் முன்னால் ஜோதி படுத்திருந்த பல்லக்குச் சென்றது. இரும்புச் சங்கிலிகளினால் பிணைத்துக் கொண்டு வரப்பட்டிருந்த கைதிகள் இப்பொழுது பின் தொடரவில்லை. அவர்கள் முற்றத்திலேயே தங்கிவிட்டார்கள்.

உயரே ஏறுகையில் பாலாஜி ஒவ்வொரு படியையும் மனதுக்குள் எண்ணிக் கொண்டே வந்தான். கடைசிப் படியை அடைந்தபொழுது 78 படிகள் ஏறிய அவனுடைய கணைக்கால்கள் வலியெடுத்துப் போய்விட்டன. உயரே இரண்டு பிரமாண்டமான இரும்புக் கதவுகள் திறந்து வைக்கப்பட்டிருந்தன. அங்கு நின்ற இரண்டு வீரர்களில் ஒருவன் பாலாஜியையும் அவனுடைய கோஷ்டியாரையும் ஒரு குறுகலான தாழ்வாரத்தின் வழியாக அழைத்துச் சென்றான். கொஞ்சத் தூரம் சென்றதும் அந்தப் பாதை ஒரு விசாலமான மண்டபத்தில் போய் முடிந்தது. அம்மண்டபத்தின் இடது பக்கத்திலிருந்த மூன்று அறைகளை, அழைத்து வந்த வீரன் சுட்டிக் காட்டி "அவற்றில் நீங்கள் தங்கியிருக்கலாம்" என்று சொல்லுவதைப் போல சமிக்ஞை செய்துவிட்டுத் திரும்பினான்.

பல்லக்கைத் தூக்கி வந்த வீரர்கள் பல்லக்கிலிருந்து ஜோதியை மெதுவாகத் தூக்கி ஒரு அறைக்குள் கொண்டு போனார்கள். அங்கிருந்த ஒரு கட்டிலில் ஜோதியை படுக்க வைத்து விட்டு அவர்களும் திரும்பிப் போய் விட்டனர்.

அந்த மூன்று அறைகளில் ஒன்றிலே உக்கிரசேனரும், இன்னொன்றில் பாலாஜியும், முனிசாமியும், மூன்றாவது அறையில் ஜோதிவர்மனுடன் சித்ராவும் இருப்பதென்று அவர்கள் தங்களுக்குள் ஏற்பாடு செய்து கொண்டார்கள். ஜோதியைவிட்டு இருக்க சித்ரா சம்மதிக்காத காரணத்தால்தான் அவ்விருவரையும் ஒரே அறையிலிருக்கச் செய்வதென்றும் அவர்கள் தீர்மானித்தனர்.

ஜோதியின் அறையிலிருந்து கொண்டு ''அடுத்தபடி என்ன? மகாராணியை எப்பொழுது நாம் பார்ப்பது?'' என்று பாலாஜி உக்கிரசேனரிடம் விசாரிக்கையில் அறைக்கு வெளியில் மண்டபத்தின் மறுபுறத்தில் இரண்டு ஆட்கள் தீவட்டிகளைத் தூக்கிக் கொண்டுவர அவர்களுக்கு மத்தியில் ஒருவர் வருவதை பாலாஜியும் உக்கிரசேனரும் கவனித்தார்கள்.

தீவட்டிகளை ஏந்திக் கொண்டு வந்த இரண்டு மனிதர்களுக்கு மத்தியில் வந்தவர் அரண்மனை வைத்தியர்தான். அவரைக் கண்டவுடன் தளபதி உக்கிரசேனர் பயபக்தியுடன் வணங்கிவிட்டு, ''இவர்கள் மகாராணியின் விருந்தாளிகள். கட்டிலில் படுத்திருக்கும் மனிதருக்கு இரண்டு தினங்களாகக் கடுமையான ஜுரமடிக்கிறது பேச்சு மூச்சு இல்லாமல் கிடக்கிறார்'' என்றார்.

அரண்மனை வைத்தியர் கையில் கொண்டு வந்திருந்த மருந்துப் பெட்டியைக் கீழே வைத்துவிட்டு ஜோதிவர்மனைச் சோதித்துப் பார்த்தார். பிறகு ''கடுமையான விஷஜுரம்போல் அல்லவா இருக்கிறது'' என்றார்.

''ஆம் அய்யா, விஷஜுரம் மாதிரித்தான் இருக்கிறது. நான் அரண்மனைக்கு வந்திருந்த சமயம் இவர்கள் காட்டில் வேட்டையாடப் போயிருக்கிறார்கள். நச்சுக் காற்றுப் பட்டு ஏற்பட்ட ஜுரமாயிருக்க வேண்டுமென்று தோன்றுகிறது!'' என்றார் உக்கிரசேனர்.

வைத்தியர் கொஞ்ச நேரம் மௌனமாக யோசித்தார். பிறகு ''நோயாளி மிகவும் கவலைக்கிடமான நிலையிலிருக்கிறார். எதற்கும் என்னால் முடிந்தவரையில் முயற்சி செய்து பார்க்கிறேன்'' என்று சொல்லிவிட்டு மருந்துப் பெட்டியிலிருந்து நான்கு குளிசைகளை எடுத்துக் கொடுத்தார். ஐந்து நாளிகைக்கு (அதாவது இரண்டு மணிக்கு) ஒரு குளிசை வீதம் தண்ணீரில் கரைத்து ஜோதி

யின் வாயில் ஊற்றும்படியும் மறுநாள் காலை மறுபடி வந்து பார்ப்பதாயும் அவர் சொல்லிவிட்டுப் போனார்.

"வைத்தியர் சொல்லுவதைப் பார்த்தால் ஜோதியின் நிலைமை மிக ஆபத்தாயிருப்பதைப் போலல்லவா இருக்கிறது? மகாராணியிடம் சொல்லி ஏதாவது செய்ய முடியாதா?" என்று கவலையுடன் கேட்டான் பாலாஜி.

"மகாராணி சொல்லித்தானே அரண்மனை வைத்தியர் வந்திருக்கிறார்? இல்லாவிட்டால் விருந்தாளிகளில் ஒருவருக்குக் கடுமையான சுகவீனமென்பது அவருக்கு எப்படித் தெரிந்து மருந்துப் பெட்டியுடன் வந்திருக்க முடியும்?" என்றார் உக்கிரசேனர்.

"ஆமாம்! உண்மையில் ஜோதிக்கு உடல் நிலை சரியில்லையென்பது ராணிக்கு எப்படித் தெரிந்தது? ஆச்சர்யமாகவல்லவா இருக்கிறது?" என்று பாலாஜி கேட்டபொழுது "மலையடிவாரத்தில் அரண்மனை உத்தியோகத்தர்களுக்கு வீரர்கள் தகவல் கொடுத்திருப்பார்கள். அவர்கள் மூலம் மகாராணிக்கு உடனே விஷயம் அறிவிக்கப்பட்டிருக்கும். எதற்கும் ஸ்நானம் செய்து மாற்று உடையணிந்து கொண்டு மகாராணியைப் பார்க்க நாம் ஆயத்தமாவோம்" என்றார் உக்கிரசேனர்.

வரும்பொழுது மாற்று உடைகளும் அத்தியாவசியமான சில சாமான்களும் ஒரு பெட்டியில் போட்டு பல்லக்கில் கட்டித் தொங்கவிட்டுக் கொண்டு வந்திருந்தார்கள். சித்ராவின் சாமான்களை மட்டும் பெட்டியிலிருந்து தனியாக எடுத்து ஜோதியின் அறையில் வைத்துவிட்டு உக்கிரசேனரும் பாலாஜியும் முனிசாமியும் அவர்களுடைய சாமான்களுடன் தங்களுடைய அறைக்குச் சென்றனர்.

பாலாஜியின் அறைக்குள் இன்னொரு அறையிருந்தது. அந்த இரண்டாவது அறையில் பளபளவென்று தேய்த்து சுத்தம் செய்த இரண்டு பெரிய பித்தளைத் தவலைகளில்

வெந்நீரும் குளிர்ந்த நீரும் நிரப்பி வைக்கப்பட்டிருந்தது. எதிரில் சுவரிலே ஆள் உயரத்துக்கு ஒரு பெரிய நிலைக் கண்ணாடியும் அதன் பக்கத்தில் சீப்பு, எண்ணெய், துவாய்கள் ஆகியவைகளும் வைக்கப்பட்டிருந்தன. நீண்ட தூரப் பிரயாணத்தின் பின்னர் வெந்நீரில் ஸ்நானம் செய்தது பாலாஜிக்குச் சுகமாக இருந்தது. தேய்த்துக் குளித்து மாற்று உடுப்பு உடுத்திக் கொண்டு அவன் ஸ்நான அறையிலிருந்து பெரிய அறைக்கு வந்தபொழுது அங்கு கிடந்த மேஜையின்மீது சாப்பாடு ஆயத்தமாகக் காத்துக் கொண்டிருந்தது.

"சாப்பாடு யார் கொண்டு வந்தார்கள் முனிசாமி?" என்று கேட்டான் பாலாஜி.

"யாரோ இரண்டு பெண்கள் கொண்டுவந்து வைத்து விட்டுப் போனார்கள்" என்று முனிசாமி சொல்லிக் கொண்டிருக்கையில் சாப்பாட்டைக் கொண்டு வந்த அதே இரண்டு பெண்கள் இரண்டு பித்தளைப் பாத்திரங்களில் ஒன்றில் பாலும் மற்றொன்றில் ஜலமும் எடுத்துக் கொண்டு வந்து மேஜையில் வைத்தார்கள்!

"அடுத்த அறையில் சித்ரா இருக்கிறாள். அவளுக்கும் சாப்பாடு கொடுத்தீர்களா?" என்று அவர்களிடம் பாலாஜி கேட்டான். அவன் கேட்டதை அந்தப் பெண்கள் காதில் வாங்கிக் கொண்டதாகவே தெரியவில்லை. பதில் பேசாமல் வந்த வழியாகவே அவர்கள் திரும்பிப் போய்விட்டார்கள்.

"நான் கேட்கிறேன். பதில் பேசாமலே போகிறீர்களே!" என்று கேட்டுக் கொண்டே அவன் கதவுவரையில் அவர்களைப் பின்தொடர்ந்து வந்தான். ஆனால் அவர்கள் அவனை திரும்பிக் கூடப் பார்க்காமல் போய்விட்டார்கள்.

"தேவதேவியின் விவகாரம் எல்லாமே பெரிய மர்மமாக இருக்கிறது. இதெல்லாம் எப்படி எங்கு போய் முடி

யப் போகிறதோ தெரியவில்லையே!'' என்று சொல்லிக் கொண்டே பாலாஜி திரும்பிய பொழுது ''ஆமாம் எசமான்! சின்ன அய்யா பேச்சைக் கேட்டுக் கொண்டு நாம் கிளம்பி வந்திருக்கவே கூடாது'' என்றான் முனிசாமி.

''இனிமேல் பேசிப் பயன் என்ன? கடவுள் விட்டவழி விடட்டும் நீ போய் ஸ்நானம் செய்துவிட்டுவா!'' என்று சொல்லி முனிசாமியை அனுப்பிவிட்டு பாலாஜி சாப்பிட உட்கார்ந்தான். வடை, பாயாசம், சகிதமிருந்த விருந்துச் சாப்பாட்டை வளைத்துக் கட்டிவிட்டு அவன் ஜோதியின் அறைக்கு வந்த பொழுது ஜோதியின் கையைத் தூக்கித் தன் மடியில் போட்டுக் கொண்டு சோகமே உருவமாக கட்டிலின் பக்கத்தில் உட்கார்ந்திருந்தாள் சித்ரா. அவளுக்காகக் கொண்டு வந்திருந்த சாப்பாடு தொடப்படாமல் வைத்தது வைத்தபடி இருந்தது.

''சித்ரா நீ உபவாசமிருந்தால் ஜோதியின் உடல் நிலை குணமடைந்துவிடுமா? போ அம்மா. ஏதாவது கொஞ்சம் சாப்பிட்டு வா! எழுந்திரு!'' என்று அனுசரணையாகச் சொன்னான் பாலாஜி.

''இல்லை அய்யா! எனக்குப் பசியேயில்லை! ஜோதி குணமடைந்து எழுந்திருக்கும் வரையில் எனக்குப் பசியே இருக்காது'' என்றாள் சித்ரா.

''நீ பசியோடு இருக்கும்வரையில் ஜோதி குணமடையவும் மாட்டான். என் பேச்சைக் கேள். மகாராணியை நான் பார்க்கும் பொழுது ஜோதியை விரைவில் குணப்படுத்த எப்படியும் நான் வழி தேடுவேன். தேவதேவி அமானுஷ்யமான சக்தி படைத்தவளென்பது உண்மையாயிருந்தால் சுயநினைவின்றிக் கிடக்கும் ஜோதியைக் குணப்படுத்தும் சக்தியும் அவளிடம் இருக்க வேண்டும்'' என்றான் பாலாஜி.

அவன் நிர்ப்பந்தம் செய்ததின் பேரில் சித்ரா சாப் பிடப்போய் சாப்பிட்டதாகப் பாவனை செய்துவிட்டு எழுந் தாள்.

''உங்களை எப்பொழுது அழைத்து வருவதென்பதைக் கேட்டுக் கொண்டுவர அய்யா மகாராணியிடம் சென்றிருக் கிருர். இன்றிரவு மகாராணி தங்களைப் பார்க்கத் தயாரா யில்லாவிட்டால் ஜோதியைப் பற்றிச் சொல்லிவிட்டு வரு வதாகச் சொன்னுர்'' என்ருள் சித்ரா.

அவள் இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கையிலேயே ஒரு பாரதூரமான செய்தியுடன் வந்திருப்பதைப்போல முகமலர்ச்சியுடனும் மிகுந்த பரபரப்புடனும் அங்கு வந்த உக்கிரசேனர் பாலாஜியைப் பார்த்து ''அய்யா! உங்களை உடனே அழைத்து வரும்படி மகாராணி ஆக்ஞாபித்திருக் கிருர். அந்நியர்களுக்கு மகாராணியின் பேட்டி கிடைப் பது மிக மிக துர்லபம். அதுவும் அரண்மனைக்கு வந்த தினத்திலேயே மகாராணியிடமிருந்து அழைப்பு வருவது ஆச்சரியத்திலும் ஆச்சரியம். நீங்கள் மிகப் பெரிய பாக் கியசாலி!'' என்று அறிவித்தார்.

மகாராணி அழைக்கிருள் என்றவுடன் அந்த அதிமுக் கியமான செய்தி பாலாஜியிடம் விசேஷ பரபரப்பை உண்டு பண்ணுமென்று தளபதி உக்கிரசேனர் எதிர்பார்த் தார். இதற்கு மாருக சிறிதும் பதட்டப்படாமல் ''அப் படியா'' என்ருன் பாலாஜி. 'இதோ வந்துவிட்டேன்' என்று அமைதியாக பாலாஜி சொல்லியது உக்கிரசேன ருக்குப் பெருத்த ஏமாற்றமாகப் போய்விட்டது.

உக்கிரசேனர் பாலாஜியை நூதனமாகப் பார்த்துவிட் டுச் சொன்னுர்:-

''தேவியின் சந்நிதியில் நீங்கள் பரம ஜாக்கிரதையாக வும் பயபக்தியுடனும் நடந்து கொள்ள வேண்டும். என் னைப் பார்த்துக் கொண்டு நான் செய்கிறபடி செய்தால்

போதும். கொஞ்சம் அஜாக்கிரதையாக நடந்து தேவி யின் கோபத்துக்குப் பாத்திரமாகிவிட்டீர்களோ, நிற்கும் இடத்திலேயே எரிந்து பிடிசாம்பலாகி விடுவீர்கள். ஏதோ நான் பயமுறுத்துகிறேனென்று எண்ணிவிடாதீர் கள். என் சொந்த அனுபவத்தைக் கொண்டு முன்கூட் டியே உங்களை எச்சரித்து வைக்கிறேன். இன்னொரு விஷ யமும் சொல்லுகின்றேன் கேளுங்கள். சென்ற நாற்பது ஆண்டுகளுக்கிடையில் தென்திசை வழியாக இந்நாட்டுக்கு வந்த சுமார் 30 பேர்களை மகாராணியின் ஆக்ஞைப்படி அரண்மனைக்கு அழைத்து வந்திருக்கிறேன். அவர்களை அரண்மனை அதிகாரிகளுடன் பேசச் செய்து மகாராணி மறைந்திருந்து கேட்டிருக்கிறாரே தவிர அவர்களில் ஒரு வருக்காவது தேவதேவி பிரத்தியட்சமாகப் பேட்டி கொடுத்துப் பேசியது கிடையாது. உங்கள் அதிர்ஷ்டமோ அல்லது துரதிர்ஷ்டமே நீங்கள் அரண்மனைக்கு வந்தவுட னேயே சமுகத்துக்கு அழைத்து வரும்படி உத்தரவாகி யிருப்பது எனக்கே அதிசயமாயிருக்கிறது'' என்று சொல்லி விட்டுக் கிளம்பினார்.

அவர்கள் வெளியே வந்து மண்டபத்தைத் தாண்டி குறுகலான ஒரு தாழ்வாரத்தின் வழியாகச் சென்றார்கள். அந்தத் தாழ்வாரம் இரத்தினக் கம்பளங்கள் விரித்த ஒரு படிக்கட்டில் போய் முடிந்தது. அரண்மனையில் இதுவரை பார்த்த இடங்களுக்கும் இனிப் பார்க்கப்போகும் இடத் துக்குமுள்ள வித்தியாசத்தை அந்தப் படிக்கட்டுகள் பாலா ஜிக்கு எடுத்துக் காட்டுவதைப் போலிருந்தது. படிக்கட் டின் இருபுறத்து கைப்பிடிச் சுவர்களிலும் தங்கத் தகடு கள் பதிக்கப்பட்டுத் தீவட்டி வெளிச்சத்தில் அவை தேஜோ மயமாகப் பிரகாசித்தன. படிக்கட்டின் மேலே ஒரு பட் டுப் படுதா பாதியளவு திறந்தபடி தொங்கியது.

உக்கிரசேனரும் பாலாஜியும் அந்தப் படிக்கட்டுகளின் வழியாக மேலே ஏறிச் சென்ற பொழுது ஒருவிசாலமான மண்டபத்தை அடைந்தார்கள். கவர்ச்சிகரமாயிருந்த

அம்மண்டபத்தில் சரம் சரமாக வெள்ளிக் குத்து விளக்குகள் சர விளக்குகள் போலத் தொங்கிக் கொண்டிருந்தன. நான்கு பக்கத்துச் சுவர்களிலும் விதம் விதமான வர்ண ஓவியங்கள் கண்ணைப் பறித்தன. பட்டு மெத்தைகளில் உட்கார்ந்து திண்டுகளில் சாய்ந்த வண்ணம் அழகான சில பெண் மணிகள் பட்டுத் துணிகளில் வர்ண நூல்களைக் கொண்டு பூவேலை செய்து கொண்டிருந்தார்கள். உக்கிரசேனரும் பாலாஜியும் மண்டபத்தில் நுழைந்த பொழுது அவர்களில் சிலர் நிமிர்ந்து பார்த்துவிட்டு மறுபடி தலையைக் குனிந்து கொண்டு தங்களுடைய வேலையைக் கவனிக்க ஆரம்பித்தனர். அந்தப் பெண்களில் ஒருவர் கூட பேசவோ அல்லது பாலாஜியைப் பொருட்படுத்தவோ இல்லை. அந்த மண்டபத்தைத் தாண்டி இன்னொரு படிக்கட்டின் வழியாக அவர்கள் மேலே போன பொழுது முன்பு பார்த்ததைப் போலவே வேறொரு மண்டபத்தை அவர்கள் அடைந்தனர். அங்கும் பெண்கள் தான் இருந்தார்கள். இவர்களில் சிலர் மட்டும் படுதாக்களில் வர்ண ஓவியங்களைத் தீட்டிக் கொண்டிருந்தனர். இரண்டு மூன்று பெண்கள் ஓலைச் சுவடிகளில் எழுத்தாணிகளை வைத்துக்கொண்டு வேகமாக எழுதிக் கொண்டிருந்தனர். இவர்களும் உக்கிரசேனரையோ அல்லது பாலாஜியையோ பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. இவ்விருவருடைய வருகையையும் முன்கூட்டியே அறிந்திருந்தவர்களைப்போல அலட்சியமாகத் தங்கள் வேலையிலே கவனமாயிருந்தனர்.

இவ்விதம் நான்கு படிக்கட்டுகளைத் தாண்டி ஐந்தாவது அடுக்கிற்கு அவர்கள் வந்த பொழுது சினிமாக்காட்சிகளில் பார்க்கும் தேவதேவேந்திரன் சபா மண்டபத்தைப் போலொத்த மிக மிக ஆடம்பரமான ஒரு அலங்கார மண்டபத்துக்கு வந்திருப்பதை அவர்கள் அறிந்தார்கள். இது வரை கீழ்த் தளங்களில் பார்த்தவைகளைப் போலல்லாமல் இந்த மணி மண்டபம் மிக மிக விசாலமானதாகவும் தர்பார் மண்டபத்தைப் போலவுமிருந்தது. நான்கு பக்

கத்துச் சுவர்களிலும் தங்க முலாம் பூசிய தகடுகள் பதிக்கப்பட்டு அவற்றிலே விதவிதமான வேலைப்பாடுகள் தென்பட்டன. இரண்டு ஆட்கள் சேர்ந்து கட்டிப் பிடித்தாலும் அணைக்க முடியாத பிரமாண்டமான பளிங்குக் கல் தூண்களிலே தேவ கன்னிகைகள் போன்ற ஆள் உயர வெண்கலச் சிலைகள் நிறுத்தி வைக்கப்பட்டு அவற்றின் கைகளில் வெள்ளி விளக்குகள் சுடர்விட்டு எரிந்து கொண்டிருந்தன.

இதே மண்டபத்தில் கால் அடியெடுத்து வைத்தவுடனேயே பாலாஜியை ஒரு விவரம் தெரியாத பீதி பலமாகப் பற்றிக் கொண்டது. தன்னையும் அறியாமல் கால்கள் தளர்ந்துபோய் தள்ளாடுவதைப் போன்ற உணர்ச்சி அவனுக்கு ஏற்பட்டது. இதுதான் மகாராணியின் சபா மண்டபமாக இருக்குமோ! தேவதேவியின் சந்நிதானத்துக்கே வந்து விட்டோமோ என்று அவன் எண்ணிக் கொண்டிருக்கையில் இவ்வளவு நேரமும் அருகில் வந்து கொண்டிருந்த தளபதி உக்கிரசேனர் திடீரென்று தலைமறைவாகிவிட்டது அவனுடைய குழப்பத்தையும் கலவரத்தையும் அதிகரித்தது. பாவி மனிதர் எங்கே தொலைந்து போய்விட்டாரென்று தன்னைத்தானே கேட்டுக் கொண்ட வண்ணம் அவன் சுற்று முற்றிலும் பார்த்தான். அதே சமயம் கொடிய விஷப்பாம்பு சீறுவதைப்போல ''உஸ் உஸ்'' என்ற ஒருமாதிரியான சப்தம் அவன் காலடியில் இருந்து கேட்டது. மூச்சுவிடும் உஷ்ணமான காற்று காலில் படுவதையும் உணர்ந்தே ''அய்யா!'' என்று அலறிய வண்ணம் அவன் இரண்டடி முன்னால் தாவிக் குதித்து கீழே பார்த்தான்.

தரையோடு தரையாக உக்கிரசேனர் கீழே விழுந்து வணங்குவதையும் வாய் பேசத் தைரியமில்லாமல் ''உஸ்! உஸ்!'' என்று லேசாகச் சமிக்ஞை செய்து தன்னை அழைப்பதையும் உணர்ந்தான். அவர் அருகில் போய் ''என்ன?'' என்று அவனும் மெதுவாகக் கேட்டான்.

"நாம் தேவதேவியின் சந்நிதியிலிருக்கிறோம். கீழே விழுந்து வணங்கும் சீக்கிரம்!" என்று பதட்டத்துடன் உக்கிரசேனர் சொன்னார். கிணற்றுக்கு அடியில் இருந்து பேசுவதைப்போல அவர் அவ்வளவுமெதுவாகவும் பயந்து கொண்டும் பேசினார்.

பாலாஜி ஒரு கணம் தயங்கினான். பிறகு "இறைவனுக்குச் செய்ய வேண்டிய மரியாதையை ஒருபெண்ணுக்குச் செய்வதா? முடியாது. மனிதனுக்கு மனிதன் மண்டியிட்டு வணங்கும் வழக்கம் எங்கள் நாட்டில் இல்லை. தாய் தகப்பனையும் ஆச்சார்யனையும் தவிர வேறு எவருக்கும் தலைகுனியமாட்டான் தமிழன்!" என்றான் பாலாஜி.

"விவாதிக்க நேரமில்லை. தயவு செய்து சொன்னபடி செய்யுங்கள். இப்பொழுது உங்கள் தேவி பார்த்துக் கொண்டிருந்தால் தலை போய்விடும். சீக்கிரம்!" என்று உக்கிரசேனர் குரல் நடுங்கப் பரபரப்புடன் சொல்லவே "முடியாது! முடியவே முடியாது!" என்று பாலாஜி உறுதியோடு பதிலளித்துவிட்டு சட்டைப்பையில் கைத்துப்பாக்கி இருக்கிறதா என்பதைத் தொட்டுப் பார்த்து உறுதிப்படுத்திக் கொண்டான்.

உக்கிரசேனர் ஒரு பெருமூச்சு விட்டார். "உங்கள் தலையெழுத்தைப்போல நடக்கட்டும். எனக்கு என்ன?" என்றார் துக்கத்துடன். தேவதேவியிடம் உக்கிரசேனரைப் போலவே பாலாஜிக்கும் கொஞ்சம் பயமிருந்ததென்றாலும் முன்பின் தெரியாத ஒரு பெண்ணுக்கு அவளுடைய அடிமைகளிலும் கேவலமான அடிமையைப் போல அந்தப்புர வாசலிலேயே சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரிக்க அவனுடைய சுயமரியாதை இடம்தரவில்லை. இறைவன் சந்நிதியில் செய்யவேண்டிய மரியாதையை கேவலம் ஒரு மனிதப்பிறவிக்குச் செய்வதா?" என்று அவன் நினைத்தான் "அய்யா! உங்களைப்போல மண்டியிட்டு வணங்க நான் தயாரில்லை. மலைக்கன்னியை என்னுடைய தெய்வ

மாகவோ, ராணியாகவோ அங்கீகரிக்கவும் தயாராயில்லை. நீங்களே சொல்லியதைப்போல் நான் உங்கள் ராணியின் விருந்தாளி. தயவுசெய்து அவளிடம் என்னை அழைத்துப் போங்கள்'' என்முன்.

பாலாஜி இப்படிச்சொல்லியபொழுது அந்த மண்டபத்தின் மற்ருெரு மூலையிலிருந்து யாரோ ஒரு பெண்மணி ''யாரர் அங்கே?''என்று அதிகாரத் தொனியில் கேட்கும் சப்தம் அவர்களுக்குக் கேட்டது.

''சாகப்போகும் விட்டில்பூச்சியே! எப்படியாவது தொலைந்துபோ!'' என்று தாழ்ந்த குரலில் பாலாஜியை நோக்கிச் சொல்லிய உக்கிரசேனர், தரையிலிருந்து எழுந்திராமலே ''தேவி! நான்தான் உக்கிரசேனன்! தங்கள் விருந்தாளியை அழைத்துவந்திருக்கிறேன்!'' என்முர்.

பிறகு பாலாஜியை விழுங்கிவிடுவதைப்போல முறைத்துப் பார்த்து பற்களை நறநறவென்று கடித்துவிட்டு ''வா! பலிபீடத்துக்கு வா! திமிரடித்தனத்திஞல் சாவைத் தழுவப்போகும் துடுக்குக்காரனே வா!'' என்று சொல்லிக்கொண்டே நிலத்திலிருந்து எழுந்திருக்காமல் கால்நடைகள் நான்கு கால்களில் நடப்பதைப்போல கையைத் தரையில் ஊன்றிக்கொண்டே உக்கிரசேனர் முன்ஞல் நகர்ந்து சென்முர். பாலாஜியும் அவனுக்குப் பின்ஞல் பிரமை பிடித்தவனைப்போல மெதுவாகச் சென்முன். மண்டபத்தின் நடுமத்தியின் வழியாக தரையில் விரித்திருந்த விலை உயர்ந்த இரத்தினக் கம்பளத்தின் மீது நடந்து செல்லுகையில் கொஞ்சத்தூரத்துக்கு அப்பால் ஒரு உயர்ந்த மேடையிருப்பதையும், மேடையின்மீது ஒரு மெல்லிய வெளிர்நீலப் படுதா தொங்கிக்கொண்டிருப்பதையும் பாலாஜி கண்டான். காற்றில் அசைந்தாடும் அந்தப் படுதா தூரத்துப் பார்வைக்கு அலைமோதும் நீலத் திரைகடலைப்போலக் காட்சியளித்தது. கிட்ட நெருங்க நெருங்க படுதாவுக்குப் பின்ஞலிருக்கும் பொருட்கள் கொஞ்சம் கொஞ்சமாகத்

தெரியவாரம்பித்தன. மேடையின் மத்தியில் மயிலாசனம் போன்ற ஒரு சிம்மாசனம் இருப்பதையும் அதன் இரண்டு புறங்களிலும் ஆள் உயரத்துக்கு நான்கு பெரிய குத்து விளக்குகள் சுடர்விட்டு எரிந்துகொண்டிருப்பதையும் பாலாஜி கண்டான். இன்னும் கொஞ்சம் நெருங்கியதும் மயிலாசனத்தின்மீது தலையில் கிரீடம் தரித்து வலது கரத்தில் சூலாயுதம் ஏந்திய ஒரு உருவம் உட்கார்ந்திருப்பது தெரிந்தது. இந்தக் காட்சி கோவில்களில் இருக்கும் காளி மாதாவின் சிலையையே பாலாஜிக்கு ஞாபகப்படுத்துவதாயிருந்தது.

மேடையை நெருங்கியதும் உக்கிரசேனர் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கி "கன்னி மாதா! தங்கள் விருந்தாளி இதோ இருக்கிறார்!" என்றார்.

"நல்லது!எழுந்திரு" என்று கட்டளை பிறந்தது திரைக்குப் பின்னாலிருந்து. வெள்ளி மணியோசையைப்போலிருந்த அந்த இனிமையான குரல், மயிலாசனத்திலிருப்பது ஒரு பெண்மணியென்பதை அறிவிப்பதைப்போலிருந்தது. பாலாஜி நிமிர்ந்து பார்ப்பதற்குள் மயிலாசனத்தில் உட்கார்ந்திருந்த தேவதேவி கீழே இறங்கி திரையின் ஓரத்தில் கம்பீரமாக நின்றுகொண்டிருந்தாள். அவள் கையிலிருந்த சூலாயுதம் குத்துவிளக்கின் வெளிச்சத்தில் பளபள வென்று பிரகாசிப்பதைக் கண்டதே பாலாஜிக்கு அவனுடைய சரீரத்தில் இரத்தஓட்டம் நின்றுவிட்டதைப்போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. அவனையறியாமலே அவனுடைய பற்கள் குளிரில் தாளம்போடுவதைப்போல தாளம்போட ஆரம்பித்தன. பிதுங்கிவிழுந்துவிடுவதைப்போல விழிகள் வெளியே வந்து நிற்க, உடல்முழுவதும் மயிர்க்கூச்சிட்டு நடுங்கியது.

திரைக்குப்பின்னால் இருந்த தேவதேவியின் தோற்றத்தில் அப்படி அரண்டுபோகும்படியாக என்ன இருந்தது? உண்மையைச் சொல்லப்போனால் தேவியின் தோற்றம்

ஒரு நிழற்படத்தைப்போல திரைக்குப்பின்னுல் தெரிந்ததே தவிர, அவளுடைய உருவம்கூடத் தெரியவில்லை. சுத்த வெள்ளியில் செய்திருந்த சூலாயுதம் ஒன்றுதான் தெளிவாக வெளியே தெரிந்தது. அதுவும் அம் மண்டபத்தின் சூன்யமும் சூழ்நிலையும் பாலாஜியின் மனோதிடத்தையெல்லாம் பறக்கடித்து உளறியடிக்கச்செய்யப் போதுமானதாயிருந்தன.

திரையில் லேசாக ஒரு சலசலப்பு ஏற்பட்டது. திரை விலகி கன்னிமாதா காட்சியளிக்கப்போவதாக எண்ணி பாலாஜி இமைகொட்டாமல் மேடையைப் பார்த்துக் கொண்டிருக்கையில் அவன் எதிர்பார்த்ததைப்போலவே படுதா இரண்டாகப் பிரிந்து கொஞ்சம் கொஞ்சமாக விலகியது.

படுதா விலகியதும் மேடையின்மீதிருந்த மயில் சிம்மாசனத்தினருகில் ஒரு பெண்மணி கம்பீரமாக நிற்பதைப் பாலாஜி கண்டான். பத்தரை மாற்றுப் பசும்பொன்னில் செய்து அதில் வைர வைடூரிய கோமேதகம் முதலான நவரத்தினக் கற்கள் வைத்து இழைத்த அந்த சிம்மாசனம் மங்கலான விளக்குவெளிச்சத்தில் மேடைமீது வர்ண ஜாலங்களைச் செய்துகொண்டிருந்தது. மயிலின் கண்களிலே பதித்திருந்த அந்த இரு நீலநிறக் கற்களிலிருந்து வீசிய ஒளி, வைரக்கற்களிலிருந்து கிளம்பிய பஞ்சவர்ணங்களுடன் போட்டியிட இடையிடையே தோன்றிய மஞ்சள், சிவப்பு, பச்சைக் கிரணங்கள் மாரிகாலத்தில் தோன்றும் வானவில்லின் சோபையை ஒத்திருந்தன.

சிம்மாசனத்தின் கீழே நின்ற பெண்மணி சில விநாடிகளுக்கு முன்னுல் உட்கார்ந்திருந்ததையும், வெள்ளி மணியோசையைப்போல இனிமையாகப் பேசியதையும் கண்டும் கேட்டுமிராவிட்டால் அந்த உருவத்தை ஒரு பதுமையென்றே அவன் தீர்மானித்திருப்பான். ஆடாமல் அசையாமல் நிலைபெயராது நின்ற அவள் உச்சந்தலையிலி

ருந்து உள்ளங்கால்வரையில் மெல்லிய மஸ்லின் துணியைப் பர்தா அணிவதைப்போல போர்த்திக்கொண்டிருந்தாள். திரிசூலத்தைப் பற்றியிருந்த கரம் மாத்திரம் முழங்கை வரையில் போர்வைக்கு வெளியே தெரிந்தது. கைதேர்ந்த சிற்பிகளைக்கொண்டு தந்தத்தில் கடைந்தெடுத்ததைப் போலிருந்த அந்தக் கரம் அதற்குரியவரின் மோகன வடிவத்தை ஓரளவிற்கு உணர்த்திக்காட்டுவதாயிருந்தது. அந்த மஸ்லின் போர்வையும்கூட அப் பெண்மணியின் காந்த சக்தியை மட்டுப்படுத்திக்காட்ட உதவியதே தவிர, அவளுடைய உருவத்தை மறைக்க உதவியதாகத் தெரியவில்லை. சிற்பி செதுக்காத சிலை போலவும், பேசும் பொற் சித்திரம்போலவும் சாமுத்திரிகா லட்சணங்களில் ஒரு அணுகூடப் பிசகாமல் பிரம்மாவின் சிருஷ்டித் தொழிலுக்கே பெருமையளித்துக்கொண்டிருந்த அம் மாதரசியே கன்னி மாதா என்றும் தேவதேவியென்றும் தெய்வப் பிரதிநிதியென்றும் செம்பவளத்தீவு மக்கள் பல பெயர்கள் சொல்லிப் போற்றும் தேவதேவியென்பதை பாலாஜி உணர்ந்துகொண்டான்.

தேவதேவியின் முக்காடிட்ட தோற்றத்தில் ஒரு புதுமையை, கலவரப்படுத்தும் ஒரு அதிசயத்தை, கண்டும் கேட்டும் படித்துமிருக்காத அமானுஷ்யமானதொரு அம்சத்தையும் அவன் கண்டான்.

போர்வையைக் கிழித்துக்கொண்டு தன்னையும் உக்கிரசேனரையும் ஊடுருவிப் பார்த்த அவ்விரு கண்களும் ஒரு சாதாரண மனிதக் கண்களைப்போலல்லாமல் அக்கினி ஜுவாலைகளைக் கிளப்பும் இரு சிறு வட்டவடிவமான தீப்பந்தங்களைப்போலிருந்தன. சுடர்விட்டுப் பிரகாசித்த அந்தக் கண்கள் எவ்வளவு திடசித்தம் படைத்தவர்களையும் அரண்டு நடுங்கி ஒடுங்கிப்போகச் செய்யுமென்பதில் சந்தேகமில்லை. அவைகளின் தீட்சண்யத்தைக் கண்டமாத்திரத்தில் பாலாஜி தன்னையறியாமல் இரு கரங்களையும் குவித்துக்கொண்டு நின்ருன். கால்களில் திடீரென்று இரத்த ஓட்

டம் நின்றுபோய் மரத்துவிட்டதைப் போல் அவனுக்குத் தோன்றியது. எவ்வளவு முயன்றும் கால்களிலும் கைகளிலும் ஏற்பட்ட விவரம்புரியாத நடுக்கத்தை அவனால் மறைத்துக்கொள்ளமுடியவில்லை.

''நண்பரே ஏன் இப்படி உடல் நடுங்குகிறது? என்னைப் பார்த்தால் அவ்வளவு பயங்கரமாகவா இருக்கிறது?'' என்று கேட்டாள் தேவதேவி.

''இல்லைத் தாயே? நான் பயப்படவில்லை! தங்களின் விருந்தாளியாக வந்திருக்கும் நான் எதற்காகத் தங்களிடம் பயப்படவேண்டும்?'' என்றான் பாலாஜி. இதைச் சொல்ல அவன் வெகுவாகப் பிரயாசைப்படவேண்டியிருந்தது. தொண்டைக்குள் ஏதோ பந்துபோன்ற ஒரு பொருள் வந்துஅடைத்துக்கொள்ளுவதைப்போலிருந்ததால் நினைத்தபடி சரளமாகப் பேசும் சக்தி தற்காலிகமாக அவனிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு போயிருந்தது.

''பயப்படாமலேயே வெடவெடவென்று நடுங்குகிறதே உங்கள் கைகள்?'' என்று கேட்டுவிட்டு அவள் இரண்டு அடி முன்னால் வந்தாள்.

''இல்லை கன்னி மாதா! நான் பயப்படவில்லை. தங்களிடம் எனக்குப் பயமேயில்லை!'' என்று சொல்லியதையே திருப்பித் திருப்பிச் சொன்னான் பாலாஜி.

தேவதேவி தனக்குள் லேசாகச் சிரித்துக்கொண்டதைப்போல பாலாஜிக்குத் தோன்றியது.

பாலாஜியைப் பார்த்துக்கொண்டு நின்ற தேவதேவி பளிச்சென்று உக்கிரசேனரின் பக்கம் திரும்பி ''உக்கிரசேனா! என் விருந்தாளிகளில் ஒருவரை உன்னுடைய ஆட்கள் மூர்க்கத்தனமாகப் படுகொலை செய்துவிட்டதாகக் கேள்விப்படுகிறேன். இது உண்மைதானே?'' என்று கேட்டாள்.

"ஆம் கன்னி மாதா! தங்கள் தரிசனத்துக்காக நான் வந்திருந்த சமயம் சில முரடர்கள் இந்தப் பாதகத்தைச் செய்துவிட்டனர். கொலை செய்யப்பட்டவன் ஒரு வெள்ளையன். கொல்வது தவறல்லவென்று நினைத்து முட்டாள் தனமான இக் காரியத்தைச் செய்துவிட்டனர் தாயே!" என்றார் உக்கிரசேனர்.

"முட்டாள்தனமாக நடந்துகொண்டுவிட்டார்கள் என்று சொன்னாய்? என் விருந்தாளிகளை உன்னுடைய ஆட்கள் கொலை செய்தது முதற் குற்றம். இப்பொழுது அவர்களுக்காக நீ பரிந்து பேசுவது இரண்டாவது குற்றம்! இவ்விரண்டு குற்றங்களுக்கும் நீ தான் ஜவாப்தாரி!" என்று தேவதேவி சொல்லுகையில் அவளுடைய தொனியிலும் தோற்றத்திலுமே ஒரு கொடூரத் தன்மை பிரதிபலித்தது. அதற்கு ஏற்றாற்போல உக்கிரசேனர் வெடவெடத்துப்போய் "கன்னி மாதா! இந்த ஏழையை மன்னிக்கவேண்டும். படுகொலை செய்த கிராதகர்களுக்காக நான் பரிந்துபேசவில்லை தாயே!" என்று நாக்குழற முறையிட்டார்.

"நீ இல்லாத சமயத்தில் உன்னுடைய ஆட்கள் பாசறைக்குள் நுழைந்து என் விருந்தாளியைக் கொலை செய்வதாயின் இதற்கு யார் ஜவாப்தாரியென்பது எனக்குத் தெரியவேண்டும். இரண்டாயிரம்பேர்களைக் கட்டி மேய்க்க உனக்குத் திறமையில்லை. உன் ஆட்களுக்கு உன்னிடமே பயமில்லை. இது போகட்டும். அரண்மனைக்கு வரும்பொழுது அகதிகளுக்குப் போதிய பாதுகாப்புச் செய்துவிட்டு வர வேண்டியது உன் கடமையல்லவா? உன் ஆட்களின் யோக்கியதை தெரிந்து விருந்தாளிகளை எப்படி நிராதரவாக விட்டு வந்தாய்? உக்கிரசேனா! இந்நாட்டில் என் ஆக்ஞையை மீறுவோருக்கு என்ன தண்டனையென்று உனக்குத் தெரியுமா? ஏன் ஆந்தையைப்போல விழிக்கிறாய்? என் கேள்விக்குப் பதில் சொல்லு. சரியான சமாதானம் சொல்லாவிட்டால் இந்த இடத்தை விட்டு உயிரோடு நீ தப்பிப்

போகமாட்டாய்!'' என்று முழங்கியவண்ணம் தேவதேவி கையில் பிடித்திருந்த சூலாயுதத்தைத் தூக்கி மேடையின் மீது ஓங்கி ஒரு தட்டுத் தட்டவே அந்த மண்டபம் முழுவதும் கிடுகிடுத்துப்போகுமளவுக்கு ஒரு அதி பயங்கரமான பேரொலி கிளம்பி சில விநாடிகள் வரை அலைஅலையாக எதிரொலியைக் கிளப்பிக்கொண்டிருந்தது.

உயிரோடு தன்னை விழுங்கவரும் ஒரு வேங்கைப் புலியின் முன்னால் நிராதரவாக நிற்கும் ஒரு மனிதன் எவ்விதம் மரணத்தின் தலைவாசலை மிதித்துவிட்டதை உணர்ந்து ஒவ்வொரு அணுவும் துடிதுடிக்கப் பரிதவிப்பானோ 'அதேபோன்ற நிலைமையில் தளபதி உக்கிரசேனர் நிற்பதைக் கண்டதே அவனிடம் பாலாஜிக்கு இரக்கமும் அனுதாபமும் ஏற்பட்டது! மேடையின்மீது தேவதேவி சூலாயுதத்தைத் தட்டியபொழுது ஏற்பட்ட பேரொலியில் உக்கிரசேனரைப்போலவே பாலாஜியும் அதிர்ந்துபோயிருந்தான். ஆயினும் உயிரைப் பறிகொடுக்கும் தறுவாயிலிருந்த உக்கிரசேனரைக் காட்டிலும் சற்று முன்னதாகவே அவன் அதிர்ச்சி தெளிந்து ''தேவி! நானும் ஒரு வார்த்தை சொல்ல அனுமதிக்கவேண்டும்'' என்று வேண்டினான்.

''என்ன? சொல்லுங்கள்' ஆனால், இந்தக் கயவனைக் காப்பாற்றுவதற்கு மட்டும் முயற்சியாதீர்கள். அவன் செய்த குற்றத்திற்கு அவனே சரியான சமாதானம் சொல்லியாகவேண்டும். இல்லாவிட்டால் அதோ அவன் நிற்கும் இடத்திலேயே அவன் பொசுங்கிப் பிடிசாம்பலாவதை நீங்கள் பார்க்கப்போகிறீர்கள்!'' என்றாள் கன்னிமாதா.

''தேவி! ஆத்திரத்தில் தயவுசெய்து நீதி தவறிவிடாதீர்கள். எங்கள் கோஷ்டியைச் சேர்ந்த வில்லியம் உயிரை இழந்ததற்கு பாவம், இந்த மனிதர் கொஞ்சமும் காரணமில்லை. போதிய பாதுகாப்புகளோடு எங்களை அவர் குகைக்குள்ளே வைத்துவிட்டுத்தான்போனார். வெள்ளையர்

களைக் கண்டால் தன்னுடைய ஜனங்களுக்கு இருக்கும் துவேஷத்தைப் பற்றிச் சொல்லி அரண்மனையிலிருந்து திரும்பும் வரையில் பரம ஜாக்கிரதையாக இருக்கவேண்டுமென்று பலமாக எச்சரிக்கையும் செய்தார். அதை அலட்சியம் செய்ததின் பலன்தான் வில்லியம் உயிரை இழக்க நேரிட்டது. இதற்கு தளபதி உக்கிரசேனர் என்ன செய்வார்?'' என்றான் பாலாஜி.

தேவதேவி ஒரு கணம் மௌனம் சாதித்தாள். பிறகு வில்லியத்தைக் கொன்றவர்கள் யார் என்பதையாவது கண்டுபிடித்தாயா?'' என்று உக்கிரசேனரைப் பார்த்துக் கேட்டாள்.

''கண்டுபிடித்துக் கட்டி இழுத்துவந்திருக்கிறேன் தாயே!'' என்றார் உக்கிரசேனர். புலியின் வாயில் தலையைக் கொடுத்துவிட்டு தெய்வ அருளினால் உயிர் தப்பியதைப் போல உணர்ந்த அவர் பாலாஜியை நன்றி நிறைந்த பார்வையுடன் நோக்கினார்.

''அவர்களை நாளை நீதி மண்டபத்துக்குக் கொண்டு வந்து நிறுத்து. அவர்கள் அணு அணுவாகத் துடித்துச் சாவதுடன் உன் ஆட்கள் அவ்வளவு பேர்களுக்கும் இது அவர்களுடைய ஆயுளில் என்றும் மறக்கமுடியாத படிப்பினையாயிருக்கவேண்டும். இனி நீ போகலாம்!'' என்றாள் தேவதேவி.

நீ போகலாம் என்று அவள் சொல்லியதுதான் தாமதம் செத்தேன் பிழைத்தேனென்று கணப்பொழுதில் உக்கிரசேனர் அவ்விடத்திலிருந்து ஓட்டம்பிடித்துவிட்டார். அவரைப் பின்பற்றிப்போக பாலாஜி திரும்பியபொழுது ''உங்களைப் போகச் சொல்லவில்லை. அந்தக் கிழவனைத் தான் போகச் சொன்னேன். வயது ஆக ஆக மனிதனுக்கு அனுபவமும், அனுபவத்துடன் அறிவும் திறமையும் வளருமென்பார்கள். உக்கிரசேனன் விஷயத்திலோ இது நேர் மாறாயிருக்கிறது!'' என்றாள் தேவதேவி.

இப்படிச் சொல்லிக்கொண்டே தேவதேவி திரிசூலத்துடன் மேடையிலிருந்து அதன் படிகள் வழியாக மெதுவாகக் கீழே இறங்கி மண்டபத்துக்கு நடந்து வந்தாள். உக்கிரசேனரும் போய்விட்டபின்னர் தன்னையும் தேவதேவியையும் தவிர வேறு யாருமில்லாத பிரமாண்டமான அம் மண்டபத்தில், அதிலும் மங்கலான விளக்குவெளிச்சத்திலே பார்த்தவிடமெல்லாம் இராட்சத உருவங்கள் நிற்பதைப் போல பெரிய பெரிய தூண்களின் நிழல்கள் படர்ந்திருந்த அந்தச் சூழ்நிலைமையில், தேவதேவியுடன் தனிமையிலிருப்பதும், அவள் மேடையை விட்டு இறங்கி அருகில் நெருங்கி வருவதும் பாலாஜியைக் கலவரத்தின் எல்லையில் கொண்டு போய் நிறுத்தியிருந்தன. அவள் நெருங்க நெருங்க அவனுடைய நெஞ்சு அதி வேகமாக அடித்துக்கொண்டது. நெற்றியில் முத்து முத்தாக வியர்வைத்துளிகள் குப்பென்று கிளம்பி நிற்க அடிவயிற்றிலும் அவனுக்கு ஏதோ என்னவோ செய்வதைப்போலிருந்தது.

பாலாஜி நின்ற நிலைமையிலிருந்தே அவனுடைய மனக் குழப்பத்தையும் மரணப்பீதியையும் ஓரளவுக்கு உணர்ந்து கொண்ட தேவதேவி "நண்பரே! உங்களுடைய நண்பருக்குத்தான் உடல் நிலை சரியில்லையென்று உக்கிரசேனன் சொன்னான். உங்களுக்கு ஒன்றுமில்லையே!" என்று கேட்டாள்.

"எனக்கு உடம்புக்கு ஒன்றுமில்லை தேவி" என்றவன் உடனே அதைத் திருத்திக்கொண்டு "இல்லையில்லை எனக்கும் உடம்பு சரியில்லை கன்னி மாதா! இங்கு வந்தது முதல் எனக்கு என்னவோ செய்கிறது! என்னவென்று எனக்கே சொல்லத் தெரியவில்லை!" என்றான் பாலாஜி.

இதைக் கேட்டதும் தேவதேவி 'களுக்'கென்று சிரித்தாள். சற்று நேரத்துக்கு முன்னால் உக்கிரசேனரைச் சுட்டுப்பொசுக்கி எரித்துவிடுவதாக அதிபயங்கரமாக முழங்கிய மலைக்கன்னிக்கு ஒரு சர்வசாதாரணப் பெண்ணைப்

போலச் சிரிக்கவும், இன்முகம் காட்டவும் தெரியுமென்பதை பாலாஜி இப்பொழுதுதான் முதன்முதலாகத் தெரிந்துகொண்டான். இது அவனுக்குச் சற்று ஆறுதலையும் தைரியத்தையும் அளிப்பதாயிருந்தது.

"இங்கு வந்ததுமுதல் உங்களுக்கு உடல்நிலை சரியில்லையென்று சொன்னீர்கள்? உண்மை. இங்கு வருகிறவர்கள் எல்லோருக்குமே அப்படித்தான். இதற்கு நீங்கள் மட்டும் எப்படி விதிவிலக்காயிருக்க முடியும்? பேய், பிசாசு பதங்களைக் கண்டு பிராணனை விடுவதைப் போல என்னைப் பார்த்துப் பயந்து ஒடுங்குகிறவர்களைக் கண்டால் நான் எவ்வளவு வெறுக்கிறேனென்பது உங்களுக்குத் தெரியுமா? என் கோபத்தைக் கிளப்புகிறவர்கள் கோழைகள்தான். அவர்கள் எனது மனிதப் பண்புகளையெல்லாம் மறக்கடிக்கச் செய்து என்னை மிக மிகக் கொடிய அரக்கியாக்கச் சதி செய்யும் துரோகிகள். நான் கேட்கிறேன், என்னைக் கண்டு காட்டுமிராண்டி ஜனங்களான குகைவாசிகள்தான் அஞ்சுகிறார்களென்றால் பட்டினவாசிகளும் ஏன் பயப்படவேண்டும்? என்னைப்பற்றி ஏதும் தெரியாத முற்றிலும் அந்நியரான நீங்கள் ஏன் பயப்படவேண்டும்? பிறர் கண்டுபயந்து நடுங்க அவ்வளவு குரூரமாகவா நான் இருக்கிறேன்? சொல்லுங்கள் நண்பரே! சொல்லுங்கள்! என்னைப்பற்றி எனக்கே தெரியாமலிருக்கும் இம் மர்மத்தை நீங்களாவது சொல்லுங்கள்!" என்றாள் தேவதேவி.

தேவதேவி இவ்விதம் மூச்சுவிடாமல் பேசிய ஒவ்வொரு வார்த்தையிலும் மமதைக்கும் அகங்காரத்துக்கும் அதிகாரத்துக்கும் பதிலாக ஏக்கமும் துயரமும் மனிதப் பண்புகளும் பிரதிபலித்ததைக் கண்டு பாலாஜிக்கு இது கனவா அல்லது நனவா என்பதே புரியவில்லை. நினைத்ததை நினைத்த இடத்திலிருந்தே கண்டுபிடித்துச் சாதிக்கும் அமானுஷ்யமான சக்தி வாய்ந்தவளென்று வர்ணிக்கப்படும் மலைக்கன்னி இவ்விதம் ஒரு சாதாரணப் பெண்ணைப்போல தன்னுடைய நிலைமைக்குத் தானே துக்கப்

படும் தொனியில் பேசுகிறுளென்பதை நினைத்தபொழுது பாலாஜிக்கு 'விர்' என்று தலை சுற்றுவதைப்போலிருந்தது. மிகவும் நெருங்கிவந்துவிட்ட அவளிடமிருந்து எதையாவது சொல்லித் தப்பிக்கொள்ளவேண்டுமென்ற சுயநலன் நெருக்கடியான இந்தக் கட்டத்தில் அவனுக்குச் சற்றுத் தைரியமளித்தது. அணையும் தறுவாயில் சுடர்விட்டு எரியும் விளக்கைப்போல உயிராபத்தை நன்கு உணர்ந்துகொண்டுவிட்ட சமயத்தில் மனிதர்களுக்கும் அவர்களையறியாமலே ஒரு தெம்பு ஏற்படுவது இயல்பு. அதுமாதிரியான ஒரு துணிச்சலுடன் ''உண்மையைச் சொல்லிவிடவேண்டுமா? நான் சொல்வதைக் கேட்டுக் கோபப்படமாட்டீர்களே!'' என்முன் பாலாஜி.

தேவதேவி ஒரு கணம் மௌனமாக அவனை உற்றுப் பார்த்தாள். பிறகு ''சொல்லுங்கள் கேட்கிறேன்! என்னைப்பற்றி எனக்கே தெரியாமலிருக்கும் விஷயங்களை பிறர் சொல்லிக் கேட்பதில் நான் ஏன் கோபப்படப்போகிறேன்? தாராளமாகச் சொல்லுங்கள்!'' என்முள் அவள்.

''தலை முதல் கால் வரையில் நீங்கள் அணிந்திருக்கும் போர்வைதான் பார்ப்பவர்களைப் பயமுறுத்துகிறது தாயே! பேய்களும் பிசாசுகளும் இப்படித்தான் உருவம் தெரியாமல் நிழல்போல நடமாடும். திரிசூலத்துடன் நிழல்போல நடமாடும் தங்களின் தோற்றம் எவ்வளவு திடசித்தம் படைத்தவர்களையும் கண்கலங்கச்செய்துவிடும் கன்னி மாதா!'' என்முன் பாலாஜி.

''ஆம்! உருவமற்ற ஆவிகள் நிழல்போல நடமாடுமென்பதை நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், என்னைப்பார்த்தால் அருவமாகவா தோன்றுகிறது? உங்களெல்லோரையும் போல எனக்கும் கை கால்களில்லையா? போர்வையணிந்திருந்த பொழுதிலும் என் உருவம் தெரியாமலா இருக்கிறது?'' என்முள் தேவதேவி.

''தெரிகிறது தேவி தெரிகிறது! இருந்தாலும்...''என்று இழுத்தான் பாலாஜி.

''இருந்தாலும் இந்தப் போர்வை எதற்கு என்று கேட்கிறீர்கள் இல்லையா? அதோ அந்த தீபத்தைப் பாருங்கள்! அது எவ்வளவு உயரமாக ஜுவாலை விட்டு எரிகிறது!'' என்று கேட்டாள் தேவதேவி.

''ஆமாம்! ஒரு சாண் உயரத்துக்கு தீபம் எரிகிறது. அதற்கும் தங்கள் போர்வைக்கும் என்ன சம்பந்தமென்று தெரியவில்லையே!'' என்றான் பாலாஜி.

''இப்பொழுது அந்த தீபத்தை நன்றாகக் கவனியுங்கள்!'' என்று சொல்லிய வண்ணம் தன்னுடைய போர்வையின் துணியை தீபத்தின் நடு மத்தியில் நீட்டிப்பிடித்த தேவதேவி ''சால்வையைத் தாண்டி அதற்கு மேலே ஜுவாலை போகிறதா? சால்வைக்கு அடியிலேயே அக்கினி ஜுவாலை குன்றிப்போய்விடுவதைக் கவனியுங்கள்!'' என்றாள்.

''தேவி! சால்வை பத்திரம்! தீப்பிடித்துவிடப் போகிறது!'' என்று பாலாஜி எச்சரிக்கையில் ''பயப்படாதீர்கள்! தீப்பிடிக்க இது பருத்தியினாலோ அல்லது பட்டினாலோ செய்ததல்ல. வெள்ளிக் கம்பியை மெல்லிய நூலாக இழைத்து செய்த சால்வை. இதை நெருப்பு ஒன்றும் செய்யாது!'' என்றாள் தேவி.

தீபத்துக்கு மேலே பந்தல் போட்டமாதிரிப் பிடித்திருந்த சால்வையைத் தாண்டி ஜுவாலை மேலே வராமல் அதற்கு அடியிலேயே அடங்கிப்போவதைக் கவனித்த பாலாஜிக்கு கல்லூரியில் விஞ்ஞானப் பாடத்தில் செய்து பார்த்த ஒரு பரீட்சை பளிச்சென்று ஞாபகத்துக்கு வந்தது.

''இதற்கு லோ ஆப் கண்டக்ஷன் ஆப் ஹீட் என்று சொல்லுவார்கள்'' என்றான்.

"என்ன? என்ன?" என்று திகைப்புடன் கேட்டாள் தேவி. ஆங்கிலச் சொற்களே அவளுக்கு ஆச்சரியத்தை உண்டுபண்ணியிருக்கவேண்டுமென்பதை ஊகித்த பாலாஜி "விஞ்ஞானப் பாடத்தில் படித்த ஒரு பாடத்தை ஆங்கிலப் பாஷையில் சொன்னேன்" என்றான்.

"அப்படி ஒரு பாஷை இருக்கிறதா?" என்றாள் தேவி.

"ஆம் அம்மா! இது வெள்ளைக்காரர்களென்னும் ஆங்கிலேயர்கள் பேசும் பாஷை. இன்று உலகத்தில் பெரும்பாலோர் பேசும் பாஷையும் இதுதான்" என்று பாலாஜி சொல்லிய பொழுது "உங்களுக்குத் தேவ பாஷையான சமஸ்கிருதம் தெரியுமென்று உக்கிரசேனர் சொன்னான். இன்னும் என்னென்ன மொழிகள் உங்களுக்குத் தெரியும்?" என்று தேவதேவி வினவினாள்.

"ஹிந்துஸ்தான், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய பாஷைகளும் சுமாராகத் தெரியும்" என்றான் பாலாஜி.

"ஓ! பன்மொழிப் புலவரா நீங்கள்?" என்று கேட்டவண்ணம் தீபத்தின் மீது காட்டிக்கொண்டிருந்த சால்வையை நகர்த்திக்கொண்டு "விஞ்ஞானப்பாடத்தில் படித்ததாக ஏதோ சொன்னீர்களே, என்ன அது?" என்று கேட்டாள்.

"எரியும் ஜுவாலையின் மீது உலோகக்கம்பிகளினால் செய்த ஒரு சல்லடையைப் பிடித்தால் அக்கினி ஜுவாலை அந்த சல்லடைக்கு அடியிலேயே தங்கிவிடும். சல்லடையைத்தாண்டி வெளியே போகாது. அக்கினியை வெளியில் விடாமல் தன்னகத்தே ஏற்று அடக்கிக் கொள்ளும் சக்தி சல்லடைக்கு உண்டு. இது பள்ளிக்கூடப் பாடம்!" என்றான் அவன்.

"ஓ! உங்கள் நாட்டில் விஞ்ஞானம் கூடச் சொல்லிக் கொடுக்கிறார்களா? அப்படியானால் நான் என் உருவத்தை

மறைத்துக்கொண்டிருக்கும் காரணமும் உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டுமே'' என்றாள் தேவி.

''அதுதானே தெரியவில்லை'' என்று பாலாஜி சொல்லிய பொழுது ''என்னைப் பார்த்து உங்கள் கண்கள் பொட்டையாகிவிடக் கூடாதேயென்றுதான் போர்வையைப் போர்த்திக் கொண்டிருக்கிறேன். என்னை போர்வையின்றிப் பார்த்தால் உங்கள் கண்கள் மட்டுமென்ன, நீங்களே பொசுங்கிவிடுவீர்கள்! ஏன் என்று கேட்காதீர்கள். அது எனக்கே தெரியாது. பிராணனை விடத் தயாராயிருந்தால் பரீட்சித்துப்பாருங்கள்!'' என்றாள் தேவதேவி.

''வேண்டாம் தாயே! வேண்டாம்! உங்கள் பேச்சில் நம்பிக்கையில்லாவிட்டால் அல்லவா பரீட்சித்துப் பார்க்க வேண்டும்!'' என்றான் பாலாஜி.

''இல்லை! மௌனமாக என் பேச்சை நீங்கள் நம்ப வேண்டாம். இதோ என் முகத்திரையைச் சற்று நீக்குகிறேன். ஒரு விநாடி, ஒரே ஒரு விநாடி பார்த்துவிட்டுக் கண்களை இறுக மூடிக்கொள்ளுங்கள். ஒரு விநாடிக்கு மேல் பார்த்து கண்களைக் குருடாக்கிக் கொண்டால் அதற்கு நான் ஜவாப்தாரியில்லை'' என்று சொல்லிவிட்டு லேசாக முகத்திரையை அகற்றினாள் தேவதேவி.

''உங்கள் பேச்சை நம்புகிறேன்'' என்று பாலாஜி உதட்டுக்கு மேலே சொல்லிய பொழுதிலும் உண்மையில் தேவதேவியைப் பார்த்தால் கண்கள் பொசுங்கிப் போய் விடுமென்ற கட்டுக்கதையை உள்ளூர அவன் நம்பவில்லை. எக்கச்சக்கமான அந்த நிலைமையில் தேவதேவிக்குத் திருப்தியாகப் பேசித் தப்பித்துக்கொண்டுவிட்டால் போதுமென்ற ஒரே ஒரு எண்ணம்தான் அவன் மனதில் மேலிட்டிருந்தது. இந்த எண்ணத்தினுடனேயே ''உங்கள் பேச்சை நம்பாவிட்டால் அல்லவா பரீட்சித்துப் பார்க்க வேண்டும்?'' என்று அவன் ஒப்புக்குச் சொல்லிவைத்தான். எனவே தேவ

தேவி முகத்திரையை லேசாகத் திறக்கவே அந்தமாய மோகினியின் சுந்தர வடிவத்தை அவன் அண்ணுந்து பார்த்தான். ஒரு விஞடியிலும் குறைவாக ஒரு கண்ணிமைப் பொழுதுதான் அந்த முகத்தை அவன் பார்த்திருப்பான். கார்மேகம் சூழ்ந்த இருண்ட வானத்தில் கண்ணைப் பறிக்கும் ஜெகஜோதியுடன் பளிச்சென்ற ஒரு மின்னல் தோன்றினல் எப்படியிருக்குமோ அப்படிப்பட்ட உணர்ச்சி அவனுக்கு ஏற்பட்டது. "ஐயோ! போதும்! போதும் கன்னிமாதா! போதும்! தயவு செய்து முகத் திரையை மூடுங்கள்?" என்று வாய் விட்டு அலறியவண்ணம் இரண்டு கைகளினலும் கண்களை இறுக்கப் பொத்திக் கொள்ளவே மணியோசையைப் போல கலகலவென்று சிரித்தாள் கன்னிமாதா என்ற தேவதேவி.

முகத்திரையை முன்போல மூடிக்கொண்டு கண்ணைத் திறந்து பார்க்கும்படி தேவதேவி சொல்லியபொழுது அவனுக்குக் கண்ணைத் திறக்கவே பயமாயிருந்தது. பிறகு அவன் லேசாகக் கண்ணை விழித்துப் பார்த்தபொழுது எதிரில் நின்ற தேவதேவியோ அல்லது பொருள்களோ ஒன்றும் தெரியாமல் ஒரே இருள்மயமாகயிருக்கவும் அவனுக்குப் பகீரென்றது. "அய்யோ கன்னிமாதா! என் கண்கள் போய்விட்டதே கன்னி மாதா! இந்த வயதில் கண் இல்லாமல் நான் என்ன செய்வேன். ஐயோ ஒன்றுமே தெரியவில்லையே. உலகமே இருண்டு போய்விட்டதே. இனி நான் என்ன செய்வேன் கன்னிமாதா? நீ தான் என்னைக் காப்பாற்ற வேண்டும்! பார்த்தவுடன் கண்களைக் குருடாக்கிவிடும் மகா சக்தி வாய்ந்த உனக்கு இழந்த கண்பார்வையைக் கொடுக்கும் சக்தியும் கண்டிப்பாக இருக்க வேண்டும்! என்னைக் காப்பாற்று தாயே!" என்று வாய்விட்டுப் புலம்பினன் பாலாஜி.

பார்வை மட்டுமல்ல, தன்னுடைய வாழ்க்கையே அவனுக்கு இருண்டு போய்விட்டதைப் போலிருந்தது. வியர்க்க விறுவிறுக்க கண்ணீர் வடித்துக்கொண்டு அவன் இவ்விதம் புலம்பவே தேவதேவி சிறிது நேரம் மௌனமாயிருந்தாள்.

அந்தச் சில நிமிட நேரத்துக்குள்ளாக ஒரு ஆச்சரியமான சம்பவம் நிகழ்ந்தது. முற்றிலும் குருடாகியிருந்த பாலாஜிக்கு கொஞ்சம் கொஞ்சமாக இருள் நீங்கி திரும்பவும் பார்வை ஏற்படவாரம்பித்தது. முதல் இருளில் களம் நீங்கியது. பிறகு எதிரிலிருந்த பொருள்கள் நிழல்போலத் தெரியவாரம்பித்தன. சிறிது சிறிதாகப்பார்வை திரும்பியதும் பாலாஜி சாஷ்டாங்கமாக தேவதேவியை விழுந்து வணங்கி "கன்னிமாதா உன் பெருமையை அற்பமாக மதித்தேன். உன்னைப் பற்றி ஜனங்கள் சொல்லுவதெல்லாம் கட்டுக் கதைகளென்று இதுவரையில் நினைத்து வந்தேன். இந் நாட்டு மக்களையெல்லாம் நீ ஏமாற்றி அடக்கியாண்டு வருவதாயும் நீ அமானுஷ்யமானவளென்பது செப்படி வித்தையென்றும் எண்ணினேன். நீ தெய்வாம்சம் பொருந்தியவளென்பது இப்பொழுதுதான் தெரிகிறது. இந்தப் பாவியை "மன்னிக்க வேண்டும் கன்னிமாதா!" என்று கண்ணீர் பெருக பாலாஜி முறையிட்டான்.

மலைக்கன்னி லேசாகச் சிரித்துக்கொண்டே "நண்பரே! நீங்கள் சொல்லுவது அவ்வளவும் தவறு. நான் அமானுஷ்யமான சக்தி வாய்ந்தவளோ தெய்வாம்சம் உடையவளோ இரண்டுமில்லை. உங்களைப்போன்ற ஒரு சாதாரண மனிதப் பிறவிதான் நானும். என்னையறியாமலே என்னிடம் சில சக்திகள் ஏற்பட்டிருக்கின்றன. அவை காலமும் விஞ்ஞானமும் அளித்த வரப்பிரசாதங்கள். உண்மையில் உங்கள் கண்கள் குருடாகப் போயிருந்தால் நிச்சயம் பார்வையை உங்களுக்கு நான் திருப்பிக் கொடுத்திருக்க முடியாது. சர்வசாதாரணமான ஒரு இயற்கை நிகழ்ச்சிக்கு தெய்வாம்சம் கொடுத்து என்னைப் புகழுகிறீர்கள்! எப்பொழுதாவது நீங்கள் சூரியனை உற்றுப் பார்த்திருக்கிறீர்களா?" என்று கேட்டாள்.

"பார்த்திருக்கிறேன்" என்று பாலாஜி பதில் சொல்லவும், "சூரியனை உற்றுப் பார்த்துவிட்டுத் திரும்பினால்

கொஞ்ச நேரத்துக்குக் கண்பார்வை சரியாகத் தெரியாமல் ஒரே இருள்மயமாயிருக்கும். பிறகு சிறிது நேரத்துக்கு எல்லாம் இருள் நீங்கி பார்வை முன்போலத் தெரியவாரம்பிக்கும். இப்பொழுது நேரிட்டதும் இதேபோன்ற ஒரு இயற்கை நிகழ்ச்சிதான். என்னை உற்றுப் பார்த்ததில் உங்கள் கண்கள் அதிர்ச்சியடைந்துபோய் சிறிது நேரம் பார்வையை இழந்திருந்துவிட்டுப் பிறகு தெளிவடைந்திருக்கின்றன. உங்களுடைய நல்ல காலம் என்னுடைய எச்சரிக்கையைப் பொருட்படுத்தி நீண்டநேரம் என்னைப் பார்க்கவில்லை. பார்த்திருந்தால் உண்மையாகவே உங்கள் கண்கள் பொத்துப்போய் குருடாயிருக்கும். சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்னுல் ஒரு வெள்ளைக்காரன் என்னை உற்றுப் பார்த்து கண்களை இழந்ததோடல்லாமல் மூளையும் கொதிப்படைந்து இரத்தக் குழாய்கள் வெடித்து விழுந்து இறந்தது எனக்கு நேற்று நடந்த சம்பவத்தைப் போலிருக்கிறது!'' என்முள் தேவதேவி.

''இருநூறு ஆண்டுகளுக்கு முன்னுல் என்று சொன்னீர்கள்?'' என்று திருப்பிக் கேட்டான் பாலாஜி.

''ஆம்! இருநூறு ஆண்டுகளுக்கு முன்புதான் அந்தச் சம்பவம் நிகழ்ந்தது! ஏன் ஆச்சரியமாயிருக்கிறதா?'' என்று கேட்டாள் தேவதேவி. பிறகு ''இங்கு நின்று கொண்டு பேச வேண்டாம். என் அறைக்குப் போய் இருந்துகொண்டு பேசுவோம் வாருங்கள்'' என்று சொல்லிவிட்டு அவள் மேடையின் மீது மறுபடியும் ஏறினுள்.

திரும்பிப் பார்த்தபொழுது பாலாஜி நின்ற இடத்தை விட்டு அசையாமல் நிற்பதைக் கண்டதே ''ஏன் தயங்குகிறீர்கள்? என்னுடன் வரப்பயமாயிருக்கிறதா? பயப்படாமல் தைரியமாக வாருங்கள்'' என்முள் தேவதேவி.

தேவியின் அரண்மனைக்கு வந்துசேர்ந்த பிறகு முற்றிலும் அவளுடைய தயவிலேயே இருப்பதையும் நினைத்தால்

எதையும் செய்யும் சக்திவாய்ந்த கன்னிமாதாவிடம் சரியாகச் சிக்கிக்கொண்டபிறகு அவள் சொல்லுகிறபடி செய்வதைத் தவிர வேறு வழியில்லையென்பதையும் உணர்ந்த பாலாஜி பதில் பேசாமல் மேடையின் மீது ஏறி மலைக்கன்னியைப் பின்தொடர்ந்து சென்றான்.

மேடையின் வலதுபுறத்திலிருந்த ஒரு வராந்தாவின் வழியாக ஒரு விசாலமான அலங்கார அறைக்கு பாலாஜியை மலைக்கன்னி அழைத்துச் சென்றாள். அந்த அறை பார்வைக்கு தேவதேவியின் சயனக்கிரகத்தைப் போலத் தென்பட்டது. அழகான சிற்ப வேலைப்பாடுகளுடன் சந்தனக்கட்டையில் செய்த ஒரு கட்டிலும் அதன்மீது பல வேலைகள் செய்த பட்டு மெத்தையும் திண்டு தலையணிகளும் கிடப்பதைக் கண்டு அது தேவியின் படுக்கையறையாகத் தான் இருக்க வேண்டுமென்று பாலாஜி தீர்மானித்துக் கொண்டான். அவ்வறையின் நான்கு பக்கச் சுவர்களிலும் அஜந்தா, எல்லோரா, சிகிரியா குகைச் சித்திரங்களைப் போல அழகான பல ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன. அவற்றின் ஒரு மூலையிலே வெள்ளிப் பீடத்தின்மீது நின்ற அலுமாரியில் கட்டுக்கட்டாக அநேகம் ஏட்டுச் சுவடிகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவற்றுக்கு மத்தியில் அத்தி பூத்தாற்போல அழகாக ''பைண்ட்'' செய்த இரண்டு பெரிய புத்தகங்களும் இருந்தன. அந்த அலுமாரியின் மேலும் கட்டிலின் கால்களிலும் அவ்வறையிலிருந்த இதர ஒவ்வொரு சாமான் மீதும் வெள்ளியில் செய்த சர்ப்பச் சின்னங்களும் பதிக்கப்பட்டிருந்தன.

கட்டிலின் அருகில் சற்று உயரமான ஒரு மேஜைமீது கானகத்தை நோக்கியவாறு தூரதர்சினிக் கருவியைப் போன்ற ஒரு பொருளும் ஒலிபெருக்கியைப் போன்ற ஒரு பொருளுமிருந்தன. பக்கத்தில் ஒரு தட்டிலே புதிதாகப் பறித்து வந்த திராட்சைப் பழங்கள் குலை குலையாக வைக்கப்பட்டிருந்தன. அதன் அருகில் ஒரு கிண்ணத்தில் திராட்சை ரசம் நிரப்பி வைக்கப்பட்டிருந்தது.

அறையில் நுழைந்த தேவதேவி கட்டிலில் உட்கார்ந்து ஒரு திண்டில் சாய்ந்தவண்ணம் எதிரில் இருந்த ஒரு ஆசனத்தில் அமருமாறு பாலாஜிக்கு சமிக்ஞை செய்தாள்.

# அத்தியாயம் - 2

பாலாஜியை தேவதேவி உட்காரச் சொல்லி ஆசனத்துக்கு நேரே திறந்த சாளரத்துக்கு அப்பால் உப்பரிகை போன்ற ஒரு விசாலமான திறந்தவெளி முற்றமிருந்தது. அதைப் பார்த்த மாத்திரத்தில் விஜயகேசரியை தேவதேவி படுகொலை செய்த இடமென்று சந்திரிகா தனது வரலாற்றில் குறிப்பிட்டிருந்த நிலாவெளி முற்றம் அதுதானே என்று பாலாஜி நினைத்தான். அதற்குத் தகுந்தாற்போல அப்பொழுது அந்த முற்றத்தில் நிலவும் பட்டப் பகல் போலக் காய்ந்து கொண்டிருந்தது. முற்றத்தின் மத்தியிலே முந்திய நாளிரவு வானவெளியில் பார்த்த அதே கருட வாகனம் இருப்பதை பாலாஜி கண்டான். கருடன் மூக்கிலிருந்து தொங்கிய பந்துபோன்ற பொருளைக் கண்ட மாத்திரத்தில் வானவீதியில் ஒளிமயமாகப் பறந்து வந்த விநோதமான விமானம் அதுதானென்பதைச் சந்தேகத்துக்கு இடமில்லாமல் உறுதிப்படுத்திக் கொண்டான்.

கருடவாகனத்தையே இமை கொட்டாமல் பார்த்த வண்ணம் பாலாஜி நிற்பதைக் கண்டதே "சங்கோசப் படாமல் தைரியமாக உட்காருங்கள்!" என்று மறுபடியும் தேவதேவி சொன்னாள்.

அவன் உட்கார்ந்த பிறகு "கருட விமானத்தை ஏன் இவ்வளவு அதிசயமாகப் பார்க்கிறீர்கள்? உங்கள் நாட்டில்

இதைப் பார்த்ததில்லையா? பாரதத்திலிருந்து வந்தது தான் இதுவும்'' என்றாள்.

''பாரத நாட்டிலிருந்து வந்த விமானமா இது? என்னைத் தயவு செய்து மன்னிக்க வேண்டும் தேவி! இது மாதிரி விமானம் எங்கள் நாட்டிலோ அல்லது உலகின் வேறு எந்த நாட்டிலுமோ கிடையாது. நேற்றிரவு தாங்கள் இந்த விமானத்திலே வானமண்டலத்தில் பவனிவந்த பொழுதே இதைப் பார்த்துவிட்டு நான் ஆச்சரியப்பட்டுப் போனேன்!'' என்றான் பாலாஜி.

''பாரத நாட்டில் இந்தமாதிரி விமானம் இல்லை என்று சொன்னீர்கள்? அந்தப் புண்ணிய பூமியைவிட்டு நான் வரநேரிட்ட காலத்தில் சிசுநாகன் பாசறையிலேயே இது போன்ற இருபது விமானங்களிருந்தன. சிசுநாகன் ராஜ்யத்திலிருந்து பிரஷ்டம் செய்யப்பட்டு செம்பவளத்தீவிற்கு வந்த சித்தர்கள் சிருஷ்டித்த விமானம்தான் அதோ நிலா முற்றத்திலிருக்கும் கருடவிமானம்'' என்றாள் அவள்.

''இது மாதிரியான விமானம் ஏதோ மகாபாரத காலத்தில் அதாவது சுமார் 4000 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. ஆனால், விஞ்ஞான அறிவு உச்ச நிலையை அடைந்திருக்கும் இக்காலத்தில் கூட இதுமாதிரியானதொரு விமானத்தை எங்களுடைய உலகத்தில் காணமுடியவில்லை'' என்றான் பாலாஜி.

''ஆச்சரியமாயிருக்கிறது. இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்குள் உலகத்தில் எத்தனை மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன?'' என்றாள் தேவதேவி.

''தாயே உங்களிடம் நான் ஒன்று கேட்டால் கோபித்துக் கொள்ள மாட்டீர்களே!'' என்று பூர்வ பீடிகை போட்டான் பாலாஜி.

''தாராளமாகக் கேளுங்கள். உங்களிடம் எனக்குக் கோபமே வராதென்பதை நீங்கள் உறுதியாக நம்பலாம்.

உங்களைப் போன்ற அறிஞர்களை நான் சந்தித்து எத்தனையோ நூற்றாண்டுகளாகி விட்டன'' என்றாள் தேவி.

''தேவி? நீங்கள் பேசுவதைக் கேட்டால் நீங்கள் 2500 ஆண்டுகளாக இதே சரீரத்துடன் இதே இடத்தில் இப்படியே இருப்பதைப் போலிருக்கிறது. ஆனால், இதை என்னால் நம்பமுடியவில்லை. மனிதரின் சராசரி ஆயுள் சுமார் 60 வயது. 100 ஆண்டுகளுக்குமேல் வாழ்ந்தவர்கள் மிக மிகச் சொற்பம். அற்பாயுளில் முடிந்து போகிறவர்கள் தான் அதிகம். இயற்கையின் நியதிகளையெல்லாம் புறக்கணித்துக் காலனை ஏமாற்றிக் கடவுளைப்போல சிரஞ்சீவியாக மனிதர் இருப்பது எப்படிச் சாத்தியம்?'' என்றான் பாலாஜி.

தேவதேவி லேசாகச் சிரித்தாள். அந்தச் சிரிப்பு பாலாஜியின் அஞ்ஞானத்தைப் பார்த்து அனுதாபப்படுவதைப் போலிருந்தது. அவள் கேட்டாள்: ''இதோ இந்த மலையைப் பாருங்கள். இது எவ்வளவு நூற்றாண்டுகளாக இதே இடத்தில் இப்படியேயிருக்கிறது தெரியுமா? இத்தீவிலுள்ள சில விருக்ஷங்கள் எனக்குத் தெரிந்து இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு அதிகமாக இருக்கின்றன. அது ஏன்? சொல்லுங்கள் பார்க்கலாம்?'' என்றாள்.

''மகான் புத்தர் ஞானோதயம் பெற்ற போதி விருக்ஷம் சென்ற 2500 ஆண்டுகளாக இன்னமும் பசுமையோடு இருக்கிறது. இந்த விருக்ஷத்திலிருந்து ஈழநாட்டுக்கு அசோகர் காலத்தில் கொண்டுபோன கன்று அந்நாட்டில் இன்னமும் அருளொளி பரப்பிக் கொண்டிருக்கிறது. மலையும் மரங்களும் காலம் கடந்து இருப்பதைக் கண்டும் கேட்டுமிருக்கிறேன். ஆனால், எலும்பும் தோலுமுள்ள மனிதர்கள் மரணத்தை வென்றதாகப் புராணக் கதைகளில் தவிர வரலாற்று நூல்கள் எதிலுமே நான் பார்த்ததுகூட இல்லை தேவி'' என்றான் பாலாஜி.

''நீங்கள் படிக்காததும் பார்க்காததும் கேட்காததும் உலகத்தில் இருக்கக் கூடாதா? இதோ இந்தக் கருடவிமானம் உங்களுடைய அஞ்ஞானத்துக்கு ஒரு அத்தாட்சி. இதைப்போன்ற விமானத்தை நீங்கள் இதற்குமுன் பார்த்ததில்லை. உங்களுக்குத் தெரியாத பொருளும் உலகத்தில் இருக்கத்தான் செய்கின்றன!'' என்றாள் தேவதேவி.

பாலாஜிக்கு என்ன பதில் சொல்லுவதென்றே புரியவில்லை. தன்னைத் தேவதேவி சரியாக மடக்கிவிட்டாளென்பதைஉணர்ந்து மௌனம் சர்வார்த்தசாதனமென்று எண்ணி அவன் சும்மாயிருந்தான்.

''ஏன் பேசாமல் இருக்கிறீர்கள்?'' என்று அவள் கேட்கவே ''எனக்கு என்ன பதில் சொல்லுவதென்றே தெரியவில்லை தேவி. கற்றது கைம் மண் அளவு. கல்லாதது உலகளவு என்பார்கள். அதைப்போல இயற்கையின் ரகசியங்களில் மனிதனுக்குத் தெரிந்தது அற்பமென்பதை நான் அறியாமலில்லை. ஆனால், இந்த மனித சமுதாயத்துக்கே நீங்கள் விதிவிலக்காயிருப்பது எப்படியென்பதுதான் எனக்கு வியப்பாயிருக்கிறது'' என்றான் பாலாஜி.

''இதில் வியப்படைய ஒன்றுமே இல்லை நண்பரே! இந்த உலகில் சர்வமும் மாறும் தன்மையுடையவை. மலைகளும் மாநதிகளும் பட்டினங்களும் கூட மாறுகின்றன. மன்னர்கள் மாறுகிறார்கள். நாடு காடாகிறது. காடு நாடாகிறது. கடல் மேடாகிறது. மேடு காடாகிறது. இப்படியான மாற்றங்கள் உலகத்தில் கல்பகோடி ஆண்டுகளாகச் சதா சர்வதா ஏற்பட்டுக் கொண்டேயிருக்கின்றன. மனிதன் இறந்து பிறந்து மறுபடி இறந்து பிறப்பதும் இம்மாதிரியான மாற்றங்களில் ஒன்றுதான். இந்த மாற்றங்கள் சில பொருள்களின் விஷயத்தில், சில மனிதர்களின் விஷயத்தில் துரிதமாக ஏற்படுகின்றன. வேறு சில சமயங்களில் தாமதித்து ஏற்படுகின்றன. அவ்வளவுதான். மாற்றத்தின் வேகத்தை, தன்மையை, அதை விளைவிக்கும்

சூட்சும சக்தியை அறிந்தால் அதை ஒத்திவைக்கவும் ஏன் முடியாது?

"இயற்கையின் லீலா விநோதங்கள், பஞ்சபூதங்களின் பரமரகசிய மாற்றங்களைப் புரிந்து கொண்டவன் தான் மெய்ஞ்ஞானி. மண்ணிலிருந்து பிறக்கும் மனிதன் மண்ணுக்கு அர்ப்பணமாகிறான். அத்துடன் அவனுடைய பிறவிச் சூழல் முடிந்து போய்விடுகிறதா? கிடையவே கிடையாது. மண்ணில் புதையுண்ட மனிதன் எங்கே எப்படித் தப்பிப் போக முடியும்? இயற்கையின் கர்ப்பத்தில் அர்ப்பணமாகும் மனிதன் திரும்பவும் பிறக்கவே செய்கிறான். மனிதன் முதற் கொண்டு ஜீவ ஜந்துக்கள் அனைத்தும் மண்ணிலிருந்தே தோன்றுகின்றன. தோன்றி மறைகின்றவை மண்ணுக்கு அர்ப்பணமாகித் திரும்பவும் தோன்றுகின்றன. இப்படி இடைவிடாமல் கல்பகோடி ஆண்டுகளாகத் தோன்றி மறைந்து தோன்றி மறைந்து கொண்டேயிருக்கின்றன. இதற்கு முடிவேயில்லை.

உயிர் கொடுக்கும் பொருள்கள், கொடுத்த உயிர்களைச் சம்ரட்சிக்கும்பொருள்கள், வாழ்வை வளப்படுத்தும் பொருள்கள், இறுதியில் வாழ்வை முடித்து வைக்கும் பொருள்கள் முதலான சர்வமும் பூமியிலிருந்து வருகின்றன. சர்வத்துக்கும் தாய் பூமாதா. உயிர் கொடுக்கும் தாய்க்கு, கொடுத்த உயிரைக் காக்க வழியளிக்கும் தாய்க்கு, உருமாற்றத்தை ஓரளவுக்கு ஒத்தி வைக்கும் சக்தி மாத்திரம் இல்லாமற் போகுமென்று எதிர்பார்ப்பது அறிவீனமில்லையா? ஜீவன்களுக்கெல்லாம் ஜீவாத்மா பூமாதா. அந்த மாதாவின் அருளினால், அவளிடம் மறைந்திருக்கும் அத்யாச்சர்யமான ஒரு சக்தியினால் ஒரு மனிதன் தனது மரணத்தை, உருமாற்றத்தை, மரித்து மறுபிறவிபெடுக்கும் நேரத்தை ஏன் ஒத்தி வைக்க முடியாது? இதில் தர்க்க சாஸ்திரங்களுக்கும் விஞ்ஞானத்துக்கும் பகுத்தறிவிற்கும் முரண்பட்ட அம்சம் என்ன இருக்கிறது? சொல்லுங்கள் கேட்கிறேன்."

தேவதேவி இப்படிப் பேசிய பொழுது திறந்தவாய் மூடாமல் கேட்டுக் கொண்டிருந்தான் பாலாஜி. தர்க்க சாஸ்திரிகள் பலரின் மேடைப் பிரசங்கங்களைக் கேட்டுள்ள அவனுக்கு தேவதேவியின் தர்க்க ரீதியான பிரசங்கம் ஆச்சர்யத்தையும் அவளிடம் அபரிமிதமான மதிப்பையும் அவனுக்கு உண்டு பண்ணியது. "நீங்கள் சொல்லுவது அவ்வளவும் உண்மை. உயிர் கொடுக்கும் பிரத்தியட்ச தெய்வமான பூதேவிக்குக் கொடுத்த உயிரை நீடித்து வைக்கும் சக்தி இல்லாமல் போய் விடாதென்பதை யாரும் ஒப்புக் கொண்டே தீரவேண்டும். ஆனால், பூதேவியின் அந்த மர்மமான ஆச்சர்ய சக்தியை உணர்ந்து ஒரு மனிதன் அதைப் பயன்படுத்திக் கொள்ள முடியுமா? என்பதை ஜனசமுதாயம் நம்பவே நம்பாது. ஏனெனில் மனித வரலாறு நூலில் இதற்கு முன்மாதிரியே கிடையாது" என்றான்.

தேவதேவி ஒரு நெடுமூச்செறிந்தாள். ஒரு கணம் அவளுடைய முகமண்டலத்தில் ஒரு கவலையும் துயரமும் பிரதிபலிப்பதைப்போல பாலாஜிக்குத் தோன்றியது. கேட்கக் கூடாத கேள்வியைக் கேட்டுவிட்டோமோ, சகஜமாகப் பேசுகிறாளேயென்று ஏமாந்து அத்துமீறிக் குறுக்கு விசாரணை செய்து விட்டோமோ என்று அஞ்சிய பாலாஜி "கன்னி மாதா! நான் கேட்டது தவறானால் தயவு செய்து மன்னித்து விடுங்கள்" என்றான்.

"இல்லை நண்பரே! இல்லை! நீங்கள் கேட்டதில் தவறொன்றுமில்லை. நூற்றாண்டுகள் எவ்வளவு கழிந்த போதிலும் மனித வர்க்கம் இன்னும் பழையபடி மாறாமலேயிருக்கிறதென்பதைத் தான் உங்களுடைய கேள்வி சுட்டிக் காட்டுகிறது. உங்களைப் போலொத்த சமஸ்கிருத விற்பன்னரைச் சந்தித்து எவ்வளவோ நூற்றாண்டுகளாயிற்றென்று நான் சொன்னேன் அல்லவா? சுமார் இருபத்தைந்து நூற்றாண்டுகளுக்கு முன்பும் இப்படித்தான் ஒருவர் என்னோடு வாதாடினார். மரணத்தை ஒத்தி வைக்கும் சக்தி மனிதர்களுக்கு இருக்கவே முடியாதென்று அவர் ஒரேயடி

யாகச் சாதித்தார். என்னைப் போலவே அழியாவரம் பெற்றிருக்கும் ரகசியத்தை அவருக்கும் கற்றுக் கொடுப்பதாகச் சொல்லி ஒரு நிபந்தனை விதித்தேன். அந்த நிபந்தனைக்கு உட்பட மறுத்ததோடல்லாமல் என்னையும் அவமதித்து அதோ அந்த நிலா முற்றத்தில் அவர் உயிரை விட்டார்'' என்ருள் தேவதேவி. இதைச் சொல்லுகையில் அவளுடைய குரல் தழுதழுத்தது.

''தேவி! அந்த மனிதரின் மரணத்துக்கு உண்மையில் நீங்கள் இவ்வளவு மனம் வருந்துவது எனக்குப்புரியவில்லை. அவமதித்த மனிதரிடம் இவ்வளவு பச்சாத்தாபமும் இரக்கமும் காட்டுவதை இப்பொழுதுதான் நான்பார்க்கிறேன்'' என்ருன் பாலாஜி. இதைச் சொல்லும் பொழுது வாழ்க்கையில் வேறு என்றும் அடைந்திராத அளவுக்கு அவன் பரபரப்படைந்திருந்தான். தேவதேவி சொல்லியதிலிருந்து சந்திரிகாவின் வரலாறு அவ்வளவும் எழுத்துக்கு எழுத்து உண்மையென்பதை இப்பொழுது அவனுல் நம்பாமலிருக்க முடியவில்லை.

தேவதேவி இன்னெரு பெருமூச்சு விட்டாள். இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்குள்ளாக இதயத்தின் அடிவாரத்திலே பதுங்கியிருந்த ஒரு நிரந்தரமான துக்கம் அந்தப் பெருமூச்சில் பிரதிபலிப்பதைப்போல பாலாஜிக்குத் தேர்ன்றியது. அவள் சொன்னுள்:

''நண்பரே! என்னுடைய மனவேதனையை எவரிடமாவது வாய்விட்டுச் சொன்னுல் கொஞ்சம் ஆறுதல் கிடைக்குமென்று அநேகம் சந்தர்ப்பங்களில் நான் எண்ணியதுண்டு. ஆனுல், என்னுடன் சரிசமதையாக அமர்ந்து உரையாடும் யோக்கியதையுடைய ஒரு அறிவாளியை பல நூற்ருண்டுகளுக்குப் பின்னர் இப்பொழுதுதான் நான் சந்திக்கிறேன். இவ்வளவு காலமும் இந்த உயிரை நான் சுமந்து கொண்டிருக்கும் ரகசியம் யாருக்குத் தெரியும்? இறவாவரம் பெற்றுப் பெருமையுடன் நான் வாழ்வதாக

அறிவற்றவர்கள் நினைப்பார்கள். உண்மையைச் சொல்லப் போனால் இந்தக் காட்டுமிராண்டி ஜனங்களுக்கு மத்தியில் பிசாசைப்போல, ஒரு பயமூட்டும் பெண் பூதத்தைப் போல வாழும் வாழ்க்கையை நான் விரும்பவேயில்லை. ஏன், யாருக்காக நான் வாழ வேண்டும் என்று எவ்வளவோ தடவை என்னை நானே கேட்டுக் கொண்டதுண்டு. அப்பொழுது எல்லாம் என் அந்தராத்மா எனக்கு என்ன சொல்லி வந்தது தெரியுமா? வாழ்க்கையில் ஒரே ஒரு மனிதரைத்தான் இதயபூர்வமாக நான் காதலித்தேன். எப்படியும் அவரைப் பதியாக அடையாமலிருப்பதில்லை என்று விரதம் கொண்டேன். ஆனால், துரதிர்ஷ்டவசமாக அந்த ஆசை நிராசையாகி விட்டது. எவருக்குச் சர்வத்தையும் நான் அர்ப்பணம் செய்ய விரும்பினேனோ அவரை என் கரத்தினாலேயே மிலேச்சத்தனமாகப் படுகொலையும் செய்ய நேரிட்டு விட்டது. அந்தப் பாபத்தைக் கழுவ அன்று தொட்டு இன்றுவரை நான் அனுஷ்டித்துவரும் கடும் விரதத்தைக் கேட்டால் நீங்கள் ஆச்சர்யப்படுவீர்கள். அது போகட்டும். விஜயகேசரி என்ற அவர் எப்படியும் திரும்பி வருவாரென்று என் அந்தராத்மா இடைவிடாமல் எனக்கு அறிவுறுத்தி வருகிறது. அவர் வருகையை எதிர்பார்த்துக் கொண்டே உயிரை நான் சுமந்து கொண்டிருக்கிறேன். என் வைராக்கியமே என் வாழ்வை நீடிக்கிறது. 2500 ஆண்டுகளுக்கு முன்னால் கொலை செய்யப்பட்ட ஒருவர் மறுபடி இந்நாட்டுக்கு வருவதாவது, என்னைப் பார்ப்பதாவது என்று எண்ணி நீங்கள் கேலி செய்யலாம். ஆனால், எனக்கு அந்தநம்பிக்கை இருக்கிறது. நம்பிக்கையே வாழ்வின் வழிகாட்டி'' என்றாள் தேவதேவி.

''உங்கள் வரலாறு ஆச்சரியமாயிருக்கிறது அம்மா! இது மாதிரியான தத்துவார்த்த வாதங்களில் மிகவும் பிரியமுடையவன் என் மகன் ஜோதிவர்மன். அவன் சகல சாஸ்திர விற்பன்னன் என்பது மட்டுமல்ல, பன்மொழிப் புலவர். ஆஹா, அவன் பேச்சைக் கேட்டாலே

ஒரு ஆனந்தமாயிருக்கும் தாயே! அந்த மகா பண்டிதன் தங்கள் அரண்மனையிலே பேச்சு மூச்சு இல்லாமல் மரணத்துடன் போராடிக் கொண்டிருக்கிறான். கிருபை செய்து அவனை நீங்கள்தான் காப்பாற்ற வேண்டும். அவன் உங்கள் அடைக்கலம்! என்றான் பாலாஜி.

தேவதேவி எதிரில் மேஜைமீது தூரதர்சினியைப் போலிருந்த ஒரு கருவியைப் பல கோணங்களிலும் திருப்பினாள். ஜோதி படுத்திருக்கும் அறையின் திசையில் அக்கருவியை அவள் திருப்பி வைக்க முயற்சிப்பதைப்போல பாலாஜிக்குத் தோன்றியது. விரும்பிய கோணத்தில் கருவியைத் திருப்பி வைத்தபின் அதன் அடியிலிருந்த ஒரு பித்தானை அவள் சுழற்றவும் சுவற்றில் ஒரு நிழல்படம் தெரிந்தது. அதை பாலாஜி கவனித்துப் பார்த்தான். கட்டிலில் மீது ஒருவர் படுத்திருப்பதைப் போலவும் அவன் அருகில் ஒரு பெண் குனிந்து பார்த்துக் கொண்டிருப்பதைப்போலவும் தெரிந்த அந்த நிழல் படத்தைக் கவனித்தவுடன் ''அதுதான் என் மகன் ஜோதி அம்மா! எப்படி நினைவு நீச்சு இல்லாமல் சுருண்டு கிடக்கிறான் பாருங்கள்'' என்றான்.

''அவன் பக்கத்திலிருக்கும் அந்தப் பெண் யார்?'' என்று கேட்டாள் தேவதேவி.

''அவள் பெயர் சித்ரா. உக்கிரசேனரின் மகள்'' என்றான் பாலாஜி.

''அவள் உங்களுடன் வரக் காரணம்? சித்ராவை அரண்மனைக்கு அழைத்துவர எவ்வளவு துணிச்சல் அந்தக் கிழவனுக்கு?'' என்று கேட்டாள் தேவதேவி.

ஜோதிக்கு சித்ரா மாலையிட்ட விவரத்தைப் பாலாஜி எடுத்துச் சொல்லிய பொழுது ''ஓ! அப்படியா? இருந்தாலும் சித்ரா வந்திருப்பதைப் பற்றி உக்கிரசேனன் என்

னிடம் ஒரு வார்த்தை கூடச் சொல்லாமலிருந்தது மன்னிக்க முடியாத பெரும் குற்றம்'' என்றாள் தேவதேவி.

''உக்கிரசேனர் தங்களிடம் மிகுந்த விசுவாசம் உடையவர் தாயே! அவரைப் போலொத்த ராஜவிசுவாசியை எங்கள் நாட்டில்கூட நான் பார்த்ததில்லை. அறியாமல் செய்த குற்றத்துக்கு எங்களை உத்தேசித்தாவது அவரை மன்னிக்க வேண்டும்!'' என்று கூறிய பாலாஜி ''கற்குகைக்குள் இருக்கும் ஜோதியை இந்தக் கருவி எப்படித் திரைப்படம்போலக் காட்டுகிறது? ஆச்சர்யமாயிருக்கிறதே! என்றான்.

''இதில் மாயமோ மந்திரமோ ஒன்றுமில்லை நண்பரே! இந்த விஞ்ஞானக் கருவிக்கு மலைகளைக் குடைந்து கொண்டு போய் உள்ளேயிருக்கும் பொருட்களைக் காட்டும் சக்தி உண்டு'' என்றாள் அவள்.

''மனித சரீரத்தைத் துளைத்துக் கொண்டு போய் உடலுக்குள் இருக்கும் எலும்புக் கூடுகளை மாத்திரம் படம் பிடிக்கும் கருவியை நான் பார்த்திருக்கிறேன். எக்ஸ்ரே கருவி என்று எங்கள் நாட்டில் அதைச் சொல்லுவது வழக்கம். ஆனால், இது மாதிரியான ஒரு அதிசயக் கருவியை நான் எங்கும் கண்டதில்லை. இதைக் கொண்டுதான் நாங்கள் இந்நாட்டில் வந்து இறங்கியதையும் பார்த்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன்'' என்றான் பாலாஜி.

''ஆம்! உங்கள் ஊகம் சரியானதுதான். இதன் உதவியைக் கொண்டு தினசரி இரண்டு மூன்று தடவை நான் தீவைச் சுற்றிப் பார்ப்பதுண்டு. நீங்கள் தென்திசைக் கரையில் இறங்கிக் காட்டைத் தாண்டிப் பொட்டல் வெளி வழியாக வந்து கொண்டிருந்த பொழுது உங்களைத் தற்செயலாகக் கண்டேன்! உடனே உக்கிரசேனருக்கு ஒலி பெருக்கியின் மூலம் தகவல் கொடுத்து உங்களை அழைத்து வர ஏற்பாடு செய்தேன். இதோ நீங்கள் கடந்து வந்த பொட்டல் வெளிப் பிரதேசத்தை நீங்களே பாருங்கள்!''

என்று சொல்லிய தேவதேவி அந்தக் கருவியை ஜன்னல் பக்கமாகத் திருப்பி அதன் மற்றொரு முனையிலிருந்த சிறு துவாரத்தின் வழியாகப் பாலாஜியைப் பார்க்கச் சொன்னாள்.

தூரதர்சினிக் கருவியை இரண்டு கைகளினாலும் பிடித்துக் கொண்டு பாலாஜி பார்க்கையில் அவனிடம் எதையோ பார்த்துவிட்டு மகா ஆக்ரோஷமடைந்த தேவதேவி "அந்நியனே! நில்! எட்டி நில்! அசையாமல் நில்! என் கேள்விகளுக்குச் சரியான பதில் சொல்லாவிட்டால் உன்னை அரைக் கணத்தில் எரித்துச் சாம்பலாக்கிவிடுவேன்!" என்று உச்சஸ்தாயியில் முழங்கிய வண்ணம் திரிசூலத்தை எடுத்துக் கொண்டு கட்டிலை விட்டுப் பளிச்சென்று எழுந்தாள்.

முற்றிலும் எதிர்பாராத விதமாகத் தேவதேவி மகா ஆக்ரோஷத்துடன் திரிசூலத்தை எடுத்துக் கொண்டு கட்டிலை விட்டு வேகமாக எழுந்திருக்கவே பாலாஜி பதைபதைத்துப் போனான். தூரதர்சினியைப் பார்த்துக் கொண்டிருந்தவன் பளிச்சென்று பின்னால் நகர்ந்து கைகட்டி வாய் பொத்திக் கொண்டு "கன்னி மாதா! இந்த ஏழையிடம் திடீரென்று இத்தனை கோபம் ஏன்? எனக்கு ஒன்றும் புரியவில்லையே? தங்கள் கோபத்துக்குப் பாத்திரமாக நான் என்ன அபசாரம் செய்தேன் தேவி?" என்று புலம்பினான்.

சில வினாடிகளுக்கு முன்புவரை சரளமாகவும், சுமுகமாகவும் பேசிக் கொண்டிருந்தவள் திடீரென்று நரசிம்மமூர்த்தியைப்போல உக்கிரமடைந்தது அவனுக்கு ஆச்சர்யமாயிருந்தது. முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கத் தீப்பொறி பறக்கும் தீட்சண்யமான பார்வையுடன் நெருங்கிய தேவதேவி அன்று தன்னைப் பழிவாங்கிவிடப் போவது நிச்சயமென்று அவன் தீர்மானித்துக் கொண்டான். அதே சமயம் அவ்வளவு கோபத்துடனிருந்த மலைக்கன்னியின்

சரீரத்திலும், திரிசூலத்தைப் பற்றியிருந்த கரத்திலும் ஒரு நடுக்கத்தையும், பதட்டத்தையும் அவன் கண்டான்.

சிறிது நேரம் வரையில் பேச்சு மூச்சு இல்லாமல் பாலாஜியின் கையையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த தேவதேவி, "அந்த விரலில் அணிந்திருக்கும் மோதிரத்தைக் கழற்றிக் கீழே வை!" என்று உத்தரவிட்டாள். அவள் இப்படிச் சொல்லிய மாத்திரத்தில் தேவியின் திடீர் கோபத்துக்கும், அவள் உணர்ச்சிப் பரவசம் அடைந்ததற்கும் உண்மையான காரணமென்ன என்பது பாலாஜிக்கு மின்னலைப் போல உதயமாயிற்று. ஜோதிவர்மனின் தகப்பனார் விஜயவர்மன் வீட்டுச் சென்ற இரும்புப் பெட்டியில் சந்திரிகா எழுதி வைத்திருந்த வரலாறுகளுடன் கூடிய சர்ப்பச் சின்னம் பதித்த ஒரு மோதிரமும் தங்கச் சங்கிலியும் இருந்ததையும், மோதிரத்தையும், சங்கிலியையும் மட்டும் ஜோதிவர்மன் எடுத்து அணிந்து கொண்டதையும் வாசகநேயர்கள் மறந்திருக்க மாட்டார்கள். செம்பவளத் தீவுக்குப் புறப்பட்டு வருகையிலும் அவற்றை ஜோதிவர்மன் அணிந்து கொண்டுதான் வந்தான். ஜோதியின் விரலுக்குப் பெரிதாயிருந்த மோதிரம் அவன் பிரக்ஞையற்ற நிலைமையில் புரண்டபொழுது நழுவிக் கீழே விழுந்துவிட்டது. கீழே விழுந்த மோதிரத்தைப் பாலாஜி தன்னுடைய விரலில் அணிந்து கொண்டிருந்தான்.

தேவதேவி பார்க்கச் சொல்லிய தூரதர்சினிக் கருவியை இரண்டு கைகளினாலும் பிடித்துக் கொண்டு பாலாஜி பார்த்தபொழுதுதான் அவன் விரலில் இருந்த சர்ப்ப மோதிரத்தைத் தேவதேவி கவனித்திருக்க வேண்டும். அந்த மோதிரத்தைப் பார்த்த மாத்திரத்தில் அவள் உணர்ச்சி பரவசமடைந்தது. "சந்திரிகா எழுதிவைத்திருக்கும் வரலாறு முழுவதும் எழுத்துக்கு எழுத்து உண்மைதான். சந்திரிகா எழுதியிருப்பதைப் போல இந்த மோதிரம் சந்திரிகாவின் கணவன் விஜயகேசரிக்கு தேவதேவி கொடுத்த அதே மோதிரம்தான். 2600 ஆண்டுகளாக தேவதேவி சிரஞ்

சீவியாயிருப்பது சாத்தியமா என்பதைச் சந்தேகிக்கிறுயே! 2600 வருடங்களுக்கு முன் சந்திரிகா எழுதிவைத்த வரலாறும் சர்ப்ப மோதிரமும் தேவதேவிக்கு எப்படித் தெரியும்? சர்ப்ப மோதிரத்தைப் பார்த்ததும் தேவதேவி பரபரப்படைந்திருப்பது அந்த வரலாறு முற்றிலும் உண்மையென்பதை ருசுப்படுத்தவில்லையா?'' என்று பாலாஜியைக்கேட்டதைப்போலிருந்தது.

பதில் பேசாமல் தேவதேவி சொல்லியபடி சர்ப்ப மோதிரத்தைக் கழட்டி மேஜையின்மீது வைத்துவிட்டு பாலாஜி ஒதுங்கி நின்ருன். அந்த மோதிரத்தைக் கையிலெடுத்து பலதடவை அதைத் திருப்பி திருப்பிப் பார்த்த மலைக்கன்னி ''இந்த மோதிரம் உனக்கு ஏது? உண்மையைச் சொல்லு!'' என்ருள்.

அவ்வளவு நேரமும் நீங்கள், உங்கள் என்று பன்மையில் மரியாதையாகப் பேசி வந்தவள் பரபரப்பில் மரியாதைகளையெல்லாம் மறந்து ஒருமையில் பேசியதைக்கண்ட பாலாஜி, அந்த மோதிரம் தேவிக்கு எவ்வளவு பெரிய அதிர்ச்சியை உண்டு பண்ணியிருக்க வேண்டுமென்பதை ஊகித்துக்கொண்டான். ''உங்களுடைய கேள்வி எனக்குப் புரியவில்லை தேவி! இது ஜோதியின் மோதிரம். அவனுடைய தாயார் செய்துபோட்டது!'' என்று அமைதியாகச் சொன்னுன்.

தேவதேவி ஒருகணம் மோதிரத்தைப் பார்த்துக் கொண்டே மௌனமாயிருந்தாள். பிறகு மோதிரத்துக்குப் பின்னுல் இருக்கும் ''ம'' என்ற எழுத்தின் அர்த்தமென்ன? என்று கேட்டாள்.

''ஜோதியின் தாயார் பெயர் மரகதம். அந்த அம்மாளின் பெயரைக் குறிக்கிறது அந்த எழுத்து'' என்று ஒரு பெரிய பொய் சொல்லிவைத்தான் பாலாஜி.

சற்று நேரம் வரையில் அந்த மோதிரத்தைப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு பாலாஜி சொல்லிய சமாதானத்தில் திருப்தியடைந்தவளைப் போல மோதிரத்தை அவனிடமே திருப்பிக்கொடுத்தாள் தேவதேவி. மீண்டும் பழைய படி கட்டிலில் போய் உட்கார்ந்துகொண்டு "நண்பரே! உங்களை ரொம்பப் பயமுறுத்திவிட்டேனு" என்றுள். சற்று முன்னுல் பேசிய அதே மலைக்கன்னியா இப்பொழுது பேசுகிருளென்று நினைக்கும்படியாயிருந்தது அவளுடைய குழைவான குரல்.

"பயமுறுத்தவா? என் உயிர் நூலிழையில் ஊசலாடிக் கொண்டிருந்தது தேவி! பெரிய இடத்து சிநேகம் உயிராபத்து என்று முதியவர்கள் சொல்லுவது எவ்வளவு உண்மையென்பதை இப்பொழுதுதான் அனுபவரீதியில் தெரிந்துகொண்டேன்!" என்றுன் பாலாஜி.

"அந்த மோதிரம் என் மூளையையே குழப்பிவிட்டது அய்யா? இருபத்தாறு நூற்றுண்டுகளுக்கு முன்னுல் நான் காதலித்த விஜயகேசரிக்கு இதே போன்ற ஒரு மோதிரமும் சர்ப்பச் சின்னம் பதித்த ஒரு தங்கச் சங்கிலியும் கொடுத்தேன். அவ்விரண்டையும் அவன் மனைவி சந்திரிகா அணிந்துகொண்டிருந்தாள். மோதிரத்திலும் சங்கிலியிலும் என் பெயரைக் குறிக்க "ம" என்ற எழுத்துப் பொறிக்கப்பட்டிருந்தது. அதேமாதிரி மோதிரத்தை உங்களிடம் பார்த்தவுடன் எனக்குப் பயித்தியம் பிடித்தமாதிரியாகி விட்டது!" என்றுள் அவள்.

"தேவி! தங்களிடம் எனக்கு ஒரேஒரு வரம் வேண்டும்!" என்றுன் பாலாஜி.

"வரமா? வரம் கொடுக்க நான் கடவுளோ அல்லது தேவனே இல்லை! ஆயினும் உங்களுக்கு என்ன வேண்டும் கேளுங்கள் பார்க்கலாம்" என்றுள் மலைக்கன்னி.

"பிரமாதமாக ஒன்றுமில்லை தேவி. நீங்கள் என்ன கேள்வி கேட்டாலும் ஒளியாமல் மறைக்காமல் உண்மையைச் சொல்லுகிறேன். ஆனால், தயவு செய்து மறுபடியும் என்னை இப்படிப் பயமுறுத்தாதீர்கள். வயதான இந்தச் சரீரம் அதிர்ச்சியைத் தாங்காது. திடீரென்று இதயம் நின்று போய்விடும்" என்று பாலாஜி சொல்லுகையில் தேவதேவி மணியோசையைப்போல கலகலவென்று வாய்விட்டுச் சிரித்தாள். நெருப்பைக் கக்கிய சில நிமிடங்களுக்குள் வாய்விட்டுச் சிரிக்கும் அந்தப் பெண்மணியின் விசித்திரமான போக்கைப் பார்த்து வியந்துகொண்டு நின்றான் பாலாஜி. அதே சமயம் ஜோதியைத் தேவதேவி பார்க்க வருவதற்குள் ஜோதியின் கழுத்திலிருக்கும் சர்ப்பச் சின்னம் பதித்த தங்கச் சங்கிலியைக் கழட்டி வைத்துவிட வேண்டுமென்றும் இல்லாவிட்டால் பெரிய விபரீதம் ஏற்பட்டுவிடுமென்றும் அவன் தனக்குள் யோசனை செய்துகொண்டுமிருந்தான்.

தேவதேவியைச் சந்திக்க பாலாஜி சபாமண்டபத்துக்கு வந்தபொழுது இரவு சுமார் எட்டு மணியிருக்கும். அவளுடன் பேசிக்கொண்டிருந்ததில் இரண்டுமணி நேரம் இரண்டு நிமிடமாகப் போய்விட்டது. ஜோதியின் அபாயகரமான நிலைமையைப் பற்றிச் சொல்லி அவனை எப்படியாவது காப்பாற்ற வேண்டுமென்று மறுபடியும் தேவதேவியிடம் அவன் கேட்டுக்கொண்ட பொழுது "அரண்மனை வைத்தியர் கொடுத்த மருந்தில் நாளை சூரியாஸ்தமனத்துக்குள் குணம் தெரிய வேண்டும். அதன் பிறகும் குணம் தெரியாவிட்டால் நான் வந்து பார்க்கிறேன். நான் கொடுக்கக்கூடிய மருந்து மிகவும் கடுமையானது. உயிரையே ஒரு உலுக்கு உலுக்கும். அவ்வளவு உக்கிரமானது. கடைசியாகவே அந்த மருந்தைப் பரீட்சிக்க வேண்டும். இனி நீங்கள் போகலாம். கவலையும் பயமும் இல்லாமல் படுத்துத் தூங்குங்கள்!" என்று தேவதேவி சொல்லியனுப்பினாள்.

பரபரப்பானதும் விசேஷ முக்கியத்துவம் வாய்ந்ததுமான இந்தப் பேட்டி முடிந்ததும் வந்த வழியாகவே திரும்

பிய பாலாஜிக்கு வழியில் ஒருவர்கூட இல்லாமல் பார்த்தவிடமெல்லாம் ஒரே சூன்யமாயிருந்தது உள்ளூர பயத்தைக் கொடுத்தது. கீழ் அடுக்குகளில் இருந்த பெண்கள் எல்லோரும் அவரவர்களுடைய வேலை முடிந்து படுக்கப்போய்விட்டார்கள். கதவு ஓரங்களில் ஈட்டியுடன் நின்ற காவலாளிகளைக்கூட அந்த நேரத்தில் காணேம். கடைசிப் படிக்கட்டைத் தாண்டி அவன் கீழே கால் அடி எடுத்துவைத்த பொழுது பின்னுல் ஏதோ கிரீச்சென்று சப்தம் செய்வதைப் போல அவனுக்குத் தோன்றியது. திரும்பிப் பார்க்கலாமா கூடாதா என்று யோசித்துக்கொண்டே கொஞ்சத் தூரம் சென்ற பிறகு அவன் மெதுவாகத் திரும்பிப்பார்த்தான். படிக்கட்டுகளின் மேலேயிருந்த இரும்புக் கதவுகள் மூடிக்கொண்டிருப்பதைக் கண்டதும் கதவு மூடப்பட்ட சப்தமே தனக்குக் கேட்டிருக்க வேண்டுமென்று அவன் தீர்மானித்துக் கொண்டான். ஆள் இல்லாத சமயத்தில் அந்தக் கதவுகள் எப்படி மூடிக்கொண்டன? பின்னுல் யாரேனும் மறைந்திருந்து கதவைத் தாழிட்டார்களா? அல்லது இயந்திர விசையினுல் தான் வெளியே வந்தவுடன் கதவு தானுக மூடிக்கொண்டதா? என்பதை பாலாஜியினுல் நிர்ணயம் செய்து கொண்டிருக்கமுடியவில்லை. அந்த மாய மாளிகையில் எல்லாமே ஒரு மந்திரசக்தியினுல் இயங்குவதைப்போல அவனுக்குத் தோன்றியது.

சுத்தசூனியமாயிருந்தவராந்தாவையும் வெளி மண்டபத்தையும் தாண்டி ஜோதிவர்மன் படுத்திருந்த அறைக்கு வந்தபொழுது அந்த அறையின் வாசலில் உக்கிரசேனர் பாலாஜியின் வரவிற்காகக் காத்திருந்தார். பாலாஜியைக் கண்டவுடன் பரபரப்போடு ஓடிவந்த அம்மனிதர் பாலாஜியின் இரு கரங்களையும் பிடித்துக்கொண்டு "நண்பரே! உங்களால் இன்று என் உயிர் தப்பியது. கன்னிமாதா இருந்த கோபத்தில் அவள் என்னைச் சுட்டுப்பொசுக்கிச் சாம்பலாக்கியிருப்பாள். நீங்கள் என்மீது கருணை வைத்து எனக்

காகப் பரிந்து பேசியிராவிட்டால் என்கதி அதோகதியாயி ருக்கும். இன்று நீங்கள் செய்த பேருதவியை என் உயிர் உள்ளவரையில் மறக்கமாட்டேன். இதற்குப் பதில் உதவி செய்யும் சந்தர்ப்பம் எப்பொழுதாவது ஒரு சமயம் எனக்கு வரும்பொழுது இந்தச் சரீரத்தை உங்களுக்குச் செருப்பாகத் தைத்துப் போடுவேன்!'' என்று உருக்கமாக வும் இதய பூர்வமாகவும் சொன்னார்.

''நீங்கள் இவ்வளவு தூரம் நன்றி தெரிவிக்க வேண் டிய அவசியமில்லை. வில்லியம் இறந்தது அவனுடைய விதி வசத்தினால். அதற்கு, பாவம், நீங்கள் என்ன செய்வீர்கள்? இன்னொரு விஷயமும் உங்களுக்குச் சொல்லி வைக்க வேண் டும். சித்ரா இங்கு வந்திருப்பதைப் பற்றி நீங்கள் ஒரு வார்த்தையும் சொல்லவில்லையேயென்று தேவதேவி பிர மாதமாகக் கோபித்தாள்! அதற்கும் சமாதானம் சொல்லி தேவதேவியைச் சாந்தப்படுத்தினேன்'' என்றான் பாலாஜி.

''தேவதேவி சுமுகமாகப் பேசினாளா?'' என்று உக்கிர சேனர் விசாரித்தார். அவர் இதைக் கேட்டமுறை தேவி யுடன் என்ன பேசினீர்களென்று கேட்பதைப் போலிருந் தது. உக்கிரசேனருக்கு எந்த அளவிற்குச் சொல்லுவது உசிதமோ அந்த அளவிற்குச் சொல்லிவிட்டு ''தேவி மகத் தான சக்திவாய்ந்தவள் என்பதில் சந்தேகமில்லை. அவள் அமானுஷ்யமானவள். நாளை மாலைக்குள் ஜோதியின் ஜுரம் குறையாவிட்டால் தானே நேரில் வந்து பார்ப்ப தாகக் கன்னிமாதா சொல்லியிருக்கிறாள்!'' என்றான்.

இதை உள்ளேயிருந்து கேட்டுக்கொண்டிருந்த சித்ரா, ''அப்படியா? தேவி மனது வைத்தால் ஜோதி நிச்சயம் பிழைத்துவிடுவான்!'' என்று சொல்லிக்கொண்டே எழுந்து வந்தாள்.

''நீ இன்னும் தூங்கவில்லையா சித்ரா! தூங்கியிருப் பாய் என்றல்லவா நினைத்துக்கொண்டிருந்தேன்'' என்றான் பாலாஜி.

"ஜோதி குணமடைந்து எழுந்திருக்கும் வரையில் சித்ரா கண்ணுறங்கமாட்டாள். அவள்படும் வேதனையை உத்தேசித்தாவது ஜோதிவர்மன் பிழைத்து எழுந்திருக்க மாட்டானு என்றிருக்கிறது?" என்ருர் உக்கிரசேனர்.

பாலாஜி ஜோதியைப் பார்த்துவிட்டு தன்னுடைய அறைக்குத் திரும்பியபொழுது அங்கு முனிசாமி நன்ருகக் குறட்டைவிட்டுத் தூங்கிக்கொண்டிருந்தான். அறையின் மத்தியில் ஒரு பெரிய குத்துவிளக்கு நான்கு முகங்கள் வைத்து எரிந்துகொண்டிருந்தது. மேஜையின் மேல் கொஞ்சப் பழமும் பாலும் வைக்கப்பட்டிருந்தன. தேவியைப் பேட்டிகண்டுவிட்டு வியர்த்து விறுவிறுக்க வந்தவனுக்கு அந்தப் பாலும் பழமும் தேவாமிர்தம் போலிருந்ததென்று கூறவேண்டும்.

பாலாஜிக்கு அன்றிரவு தூக்கம் வரும்போல் இல்லை. உடல் சோர்ந்திருந்த பொழுதிலும் பரபரப்படைந்திருந்த மனம் தூக்கத்தை நெருங்கமுடியாதபடி தடுத்துவைத்துக் கொண்டிருந்தது.

முகத்தைக் கழுவிக்கொண்டு படுக்கலாமென்று நினைத்து தீவட்டியைக் கையிலெடுத்துக்கொண்டு ஸ்நான அறைக்குள் நுழைந்தான். முகத்தைக் கழுவிக்கொண்டு அவன் தலை நிமிர்ந்தபொழுது அந்த அறையில் அதற்குமுன் காணுத ஒரு காட்சியைக் கண்டு அவன் ஒரு கணம் அப்படியே மலைத்துப்போய் நின்ருன்.

மகாராணி தேவதேவியைப் பேட்டிகாணப் போவதின் முன்னல், பாலாஜி அதே அறையில் தான் ஸ்நானம் செய்தான். அப்பொழுது இடுப்பளவு உயரத்துக்கு இரண்டு பெரிய பித்தளைத் தவலைகள் ஒன்றின் பக்கத்தில் ஒன்ருக சுவற்ருேடு ஓரத்தில் வைக்கப்பட்டிருந்தன. இப்பொழுது அவ்விரண்டு தவலைகளையும் அங்கு காணும். அவற்றுக்குப் பதிலாக ஒரு சிறிய பாத்திரத்தில் ஜலம் பிடித்து வைக்கப்

பட்டிருந்தது. தவலேகள் வைக்கப்பட்டிருந்த இடத்தில் சாதாரணமாக இரண்டு ஆட்கள் நுழையும் அளவு அகலத்துக்கு ஒரு நிலப்படியிருப்பதையும் அதில் ஒரு கதவு இருப்பதையும் பாலாஜி கண்டான். அதே இடத்தில் முன்பு தவலேகள் இருந்தபடியினுல் தான் அந்தக் கதவு தன்னுடைய கவனத்தில் படாமல் தப்பியிருக்க வேண்டுமென்று அவனுக்குத் தோன்றியது.

தீவட்டியை அருகில் கொண்டுபோய்ப் பார்த்த பொழுது அந்தக் கதவுக்கு பூட்டு ஏதுமில்லேயென்பது தெரிந்தது. அழுத்தித் தள்ளியவுடன் உட்புறமாகக் கதவு திறந்து கொண்டது. கீழ்நோக்கிப் படிக்கட்டுகள் இருப்பதைக் கண்டவுடன் அது ஒரு சுரங்கப்பாதையாயிருக்க வேண்டுமென்று பாலாஜிக்குத் தோன்றியது.

தூக்கம்தான் வருவதாயில்லே. இப்பாதை வழியாகப் போய்ச் சுரங்கம் எங்கே முடிகிறதென்பதைப் பார்த்தால் என்ன என்று அவன் நினேத்தான். அரண்மனேக்குள் அந்தரங்கங்களே உளவு பார்ப்பதாக தேவதேவிக்குத் தெரிந்து போய்விட்டால் என்ன கதியாகுமென்பதை நினேவுபடுத்திக் கொண்டபொழுது "நமக்கு ஏன் வீண் வம்பு. பேசாமல் போய்ப்படுத்துக்கொள்வோம்!" என்று தோன்றியது.

தீவட்டியுடன் சுரங்கத்துக்கு ஏழெட்டுப்படி இறங்கி நின்றுகொண்டு அவன் மறுபடியும் யோசித்தான். வெள்ளம் தலேக்குமேல் போய்விட்டது. புதிதாக ஒரு ஆபத்தும் வரப் போவதில்லே. சாவதற்கு முன்னுல் தேவதேவியின் அந்தரங்கம் முழுவதையும் தெரிந்துகொண்டாவது செத்தால் ஆத்மாவிற்குச் சற்று திருப்தியேற்படும்.

இப்படித் தனக்குள் பேசிக்கொண்டு பாலாஜி சுரங்கத்தைச் சோதித்துப் பார்த்துவிடுவதென்ற முடிவுக்கு வந்ததும் மளமளவென்று கீழே இறங்கினுன். அப்பொழுது தேவதேவியின் அரண்மனேயிலிருக்கும் வானளாவிய மலேச்

சிகரத்தின் நடுவயிற்றுக்குள் இறங்கிப் போவதைப் போன்ற உணர்ச்சி அவனுக்கு ஏற்பட்டது. மலையைக் குடைந்து அதில் ஒரு அழகான அரண்மனையைச் சிருஷ்டித்திருப்பதுடன் பல சுரங்கங்களையும் வெட்டியிருப்பதை அவன் வியந்துகொண்டே இறங்கினான்.

மொத்தம் 25 படிகள் இறங்கியவுடன் படிகள் அதோடு முடிந்துவிட்டன. படிகளின் கீழே இடதுபுறமாக சமநிலத்தில் ஒரு அகலமான பாதை சென்றது. இருபது அடி உயரமும் பத்து அடி அகலமும் உள்ள அந்தப் பாதை தோற்றத்திலே ரயில் வண்டித் தொடர்கள் செல்ல மலையைக் குடைந்து அமைத்த கணவாயைப்போலிருந்தது. அதன் வழியாகப் பாலாஜி தொடர்ந்து சென்றான். சுமார் ஐம்பதுகெஜதூரம் சென்றவுடன் கையிலிருந்த தீவட்டியில் எண்ணெய்ப்பசை முடிந்துபோய் தீவட்டி அணைந்துவிட்டது. கும்மிருட்டு அந்தக் குகைப் பாதையை மண்டிக்கொண்டது. இதன் பிறகும் தொடர்ந்துபோய் சுரங்கத்தின் முடிவைப் பார்ப்பதா அல்லது போகாமல் வந்த வழியாகவே திரும்பிவிடுவதா என்று பாலாஜி ஒருகணம் நின்று யோசித்தான். இவ்வளவு தூரம் வந்தபிறகு சுரங்கத்தின் முடிவைத் தெரிந்துகொள்ளாமல் திரும்ப அவன் மனம் ஒப்பவில்லை. முன்வைத்த காலைப் பின் வைக்காமல் முடிவுவரை போய்ப் பார்த்துவிடுவதென்ற தீர்மானத்துடன் சுரங்கத்தின் ஓரமாகப் பக்க வாட்டுச் சுவற்றைத் தடவிக்கொண்டே அவன் கவனமாக நடந்தான்.

படிகளின் மேலேயிருந்து யாரோ பேசும் குரல் வந்தது. பாலாஜி ஒருகணம் தயங்கிநின்றான். மீண்டும் அதே குரலைக் கேட்டதும் அது தேவதேவியின் குரல்தானென்பதைச் சந்தேகத்துக்கு இடமின்றி அவன் தெரிந்துகொள்ள முடிந்தது. அந்தக் குரலைக்கேட்ட மாத்திரத்தில் அவன் சப்த நாடிகளும் ஒடுங்கிப்போய் நின்றான்.

# அத்தியாயம் - 3

மேலேயிருந்து வந்தது தேவியின் குரல்தானென்பதில் அவனுக்குக் கொஞ்சமும் சந்தேகமில்லை. சிறிது நேரத்துக்கு முன்புவரை மலைக்கன்னியுடன் இரண்டுமணி நேரம் வரையில் பேசிக் கொண்டிருந்த அவனுக்கு இனிமையும் அதே சமயம் ஒரு அதிகார மனோபாவமும் பிரதிபலிக்கும் தேவியின் குரல் நன்கு பரிச்சயப்பட்டிருந்தது. இப்பொழுது கேட்கும் அதே குரலில் இனிமையையோ அல்லது அதிகாரத்தையோ இரண்டையும் காணோம். அதற்கு மாறாக வல்லமை பொருந்திய தேவதேவி தேம்பித் தேம்பி அழுவதைக் கேட்டு பாலாஜி அதிசயமும் ஆச்சர்யமும் அடைந்தான்.

''தேவதேவி அழுவானேன்? செல்வமும் செல்வாக்கும் சகல சௌபாக்கியங்களும் பெற்றுச் சாவையும் வென்று சிரஞ்சீவியாயிருக்கும் மலைக்கன்னி விம்மி விம்மி ஏன் அழவேண்டும்? அதிலும் அர்த்த ஜாமத்தில் நிம்மதியாகப் படுத்துத் தூங்க வேண்டியவள் ஏன் இப்படி வாய்விட்டுப் புலம்புகிறாள்? நினைத்ததை நினைத்த மாத்திரத்தில் சாதிக்கக் கூடிய மகாசக்தி வாய்ந்த மலைக்கன்னிக்குக் கூடவா துக்கமும் துயரமும் ஏற்பட முடியும்? அவளுக்குத் துன்பம் விளைவிக்கும் அவ்வளவு துணிச்சல் மிகுந்த ஒரு ஆண் மகன் இந்த ஜகத்தில் இருக்க முடியுமா?

இவ்விதம் யோசித்துப் பார்த்த பாலாஜிக்கு சர்ப்பச் சின்னம் பதித்த மோதிரத்தைப் பார்த்து தேவதேவி பர

பரப்படைந்ததும் விஜயகேசரி மறுபடியும் வருவானென்ற நம்பிக்கையோடு அவனுக்காகக்காத்திருப்பதாய் அவள் சொல்லியதும் ஞாபகத்துக்கு வந்தன.

''ஆம்! ஒரு சமயம் சர்ப்ப மோதிரத்தைப் பார்த்ததில் விஜயகேசரியின் ஞாபகம் வந்து அவனை நினைத்து தேவதேவி புலம்புகிருளோ? மோதிரத்தைப் பார்த்தவுடன் அவள் எப்படித் திடுக்கிட்டுப் போனுள்! அரை நொடியில் எப்படி அவள் தோற்றமே மாறிப்போயிற்று! விஜயகேசரியை இதயபூர்வமாக அவள் விரும்பியதும் பல நூற்ருண்டுகளாக அவன் வருவான் வருவானென்று நம்பி ஏக்கத்துடன் காத்திருப்பதும் உண்மையில்லாத பட்சத்தில் அந்த மோதிரத்தைப் பார்த்தவுடன் மலைக்கன்னி உணர்ச்சி மேலிட்டு உருமாறவும் இப்பொழுது இதயத்தைத் திறந்து காட்டி வாய்விட்டுப் புலம்பவும் காரணம் இல்லை. சந்திரிகா எழுதி வைத்த வரலாறுகள் அவ்வளவும் உண்மையென்பதற்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்?''

இவ்வாறு பாலாஜியின் சிந்தனைகள் ஓடின. தான் அங்கு ஒளித்துக் கொண்டிருந்து ஒட்டுக் கேட்பது தேவதேவிக்குத் தெரிந்தால் என்ன நேரிடுமென்பதைக்கூட அவன் தற்காலிகமாக மறந்து போயிருந்தான். செம்பவளத்தீவில் தேடிவந்த ரகசியத்தின் முழு ஆழத்தையும் கண்டு பிடித்துவிட வேண்டுமென்ற ஆவல் ''போ! போ! மேலே போ! பயப்படாமல் மேலே போய்ப் பார்! என்று அவனைப் பிடித்துத் தள்ளியது. என்ன செய்கிறேம்? என்ற சுயநினைவுகூட இல்லாமல் அவன் படிகளின் வழியாகத் தொடர்ந்து மேலே ஏறிச் சென்ருன்.

மேலும் பத்துப்படிகள் ஏறியவுடன் ஒரு திருப்பத்தில் லேசாக கம்பிபோன்ற வெளிச்சம் வருவதை அவன் கண்டான். ஒரு அறையின் கதவு வழியாகவே அம்மாதிரி வெளிச்சம் வரமுடியுமென்றும், அந்தக் கதவு சாற்றி வைக்

கப்பட்டிருக்க வேண்டுமென்றும் தீர்மானித்துக் கொண்டு பாலாஜி அந்தத் திருப்பத்தில் திரும்பி நடந்தான். எதிர் பார்த்ததைப் போலவே அவன் ஒரு கதவின் அருகில் வந்து சேர்ந்தான். தொட்டால்போல பொலவென்று உதிர்ந்து விழுந்துவிடும் அளவிற்கு உளுத்துப் போயிருந்த அக் கத வின் கீழே கறையான்கள் அரித்த மரத்தூள்கள் குவிய லாக விழுந்து கிடந்தன. சுலபமாகவும் தெளிவாகவும் உள்ளே பார்க்கக் கூடியவாறு கதவில் பல துவாரங்கள் இருந்தன. காலமும், கறையான்களும் செய்து கொண் டிருந்த இவ்வுதவியினல் பாலாஜி உள்ளே நடப்பதை நன்கு கவனிக்க முடிந்தது.

சந்தடி செய்யாமல் கதவின் அருகில் உட்கார்ந்து கொண்டு அவன் உள்ளே பார்த்தான். அந்த இடம் தேவ தேவி தனித்துப் பேசுவதற்காகப் பாலாஜியை அழைத்துக் கொண்டு போன அவளுடைய சொந்த அறையைப் போலவே மிகப் பெரியதாகவோ அல்லது மிகச் சிறிய தாகவோ இல்லாமல் நடுத்தரமாக இருந்தது. தேவ தேவியின் அறையில் பார்த்தமாதிரியான மஞ்சத்தையும் இதர ஆடம்பர அலங்காரங்களையும் அருகிலிருந்த நிலா முற்றத்தையும் இங்கு காணேம். அவற்றுக்குப் பதிலாக அந்த அறை சுத்தமாகவும், மிக மிகப் பிரகாசமாகவும் இருந்தது. அறையின் மத்தியில் ஒரு பெரிய கொசுவலை தொங்கியது. அதற்குள் ஒன்றுடொன்று இரண்டு கெஜ தூரம் விலகி இரண்டு கருங்கல் மேடைகளிருந்தன. ஒரு மேடையில் சர்வ சாதாரணமான ஒருபாய் விரித்துத் தலைப் பக்கம் ஒரு தலையணி வைக்கப்பட்டிருந்தது. இன்னெரு மேடையில் பிரேதப் பெட்டியைப்போலத் தோன்றிய ஒரு நீளமான பெட்டியிருப்பதை பாலாஜி கவனித்தான். அந் தப் பெட்டி தங்கத்தில் செய்யப்பட்டிருக்க வேண்டுமென் பதற்கு அடையாளமாக அதில் வைத்து இழைத்திருந்த நவரத்தினக் கற்கள் விளக்கு வெளிச்சத்தைக் கிரகித்துக் கொண்டு தவலைக்குள் சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண் டிருந்தன.

கொசுவலைக்கு வெளியில் சுவற்றின் ஓரமாக ஒரு பெரிய வெள்ளிக் குத்துவிளக்கு நான்கு முகங்கள் வைத்து ஏற்றி வைக்கப்பட்டிருந்தன. அந்த விளக்கின் வெளிச்சம் மாத்திரம் அவ்வறையை ஒளிமயமாக்கியிருக்க முடியா தென்று நினைத்த பாலாஜி அறையைச் சுற்றிலும் ஒரு கண் ணோட்டம் விட்டுப் பார்த்தான். சுவற்றின் பல இடங்களி லும் வட்ட வடிவமான கண்ணடி போன்ற பொருள்கள் பதிக்கப்பட்டிருப்பதையும் இவற்றிலிருந்து மின்சார விளக்குகள் போன்ற பிரகாசமான வெளிச்சம் வருவதை யும் கவனித்தபொழுது தேவதேவி வானத்தில் பறந்து வந்த சமயம் கருட விமானத்தின் மூக்கிலிருந்து தொங்கிய பந்து போன்ற பொருள் பாலாஜியின் ஞாபகத்துக்கு வந் தது. இருட்டில் விளக்கு ஏதுமில்லாமல் பிரகாசமான வெளிச்சத்தைக் கொடுக்கும் சூரிய காந்தக் கல்லைப்பற்றி அவன் கேள்விப்பட்டிருக்கிறன். அந்தமாதிரி அதிசயக் கற்களே சுவற்றில் பதிக்கப்பட்டிருக்க வேண்டுமென்று இப்பொழுது அவனுக்குத் தோன்றியது. அவற்றிலிருந்து வந்த வெளிச்சம் கிட்டத்தட்ட அவ்வறையைப் பட்டப் பகல் போலாக்கியிருந்ததைக் கண்டதும் ''தெய்வாதீன மாக செம்பவளத் தீவிலிருந்து நாம் தப்பிச் செல்ல முடிந் தால் போகும்பொழுது சூரியகாந்தக் கற்களில் இரண்டு மூன்றை எடுத்துச் செல்ல வேண்டுமென்று'' பாலாஜி நினைத்தான்.

கொசுவலைக்குள் பாலாஜி கூர்மையாக உற்றுக் கவ னித்த பொழுது பிரேதப் பெட்டி வைக்கப்பட்டிருந்த மேடையினருகில் ஒரு பெண்மணி முழந்தாளிட்டு உட் கார்ந்து விக்கி விக்கி அழுவது தெரிந்தது. அந்த முகம்... திரையோடிருந்த அந்த முகம்...தேவதேவியேதான். அதில் வழக்கமான கவர்ச்சியையும் சோபையையும் இப்பொழுது காணேம். இதற்கு மாருக அவள் சோகமே உருவெடுத் தாற் போலிருந்தாள். பெட்டியின் மீது ஒரு கையும் மேடையின் மீது ஒருகையும் ஊன்றிக்கொண்டிருந்த தேவ

தேவி திடீரென்று எழுந்து நின்று கொண்டு உரத்த குர லில் ஏதோ பேச ஆரம்பித்தாள். கதவின் இடைவெளியில் காதை வைத்து பாலாஜி கவனமாக அவள் பேசுவதைக் கேட்க ஆரம்பித்தான்.

''விஜயகேசரி! நீ எப்பொழுது தான் என்னை ஆட் கொள்ள வரப்போகிறாய்? இன்னும் எவ்வளவு காலத் துக்கு உன்னை எண்ணியெண்ணி இப்படியே நான் உருக வேண்டும்! எவ்வளவு இரவுகள் இந்தக் கருங்கல் மேடை யிலே நான் காலம் கழிக்க வேண்டும்? ஆண்டுகள் ஒவ் வொன்றாக பத்துப் பத்தாக, நூறு நூறாக ஓடிக்கொண்டே இருக்கின்றன. கால வெள்ளம் உன் நினைவை மறக்கடிப்ப தற்குப் பதிலாக என்னைப் பயித்தியகாரியாக்கி வருகிறது. உன் வரவிற்காக இரண்டாயிரமல்ல, கல்பகோடி ஆண்டு களுக்கு இதே இடத்தில் இதே உருவத்தில் நான் காத்திருப் பேன். சாவை வென்று சகல சுகபோகங்களையும் பெற்ற என் வாழ்வு இப்படித்தான் கண்ணீரில் கரைந்து போக வேண்டுமா? நீ எங்கிருக்கிறாய்? எங்கு எப்படியெல்லாம் பிறந்து வாழ்ந்தாய்? எவ்வளவு ஜன்மங்கள் எடுத்தாலும் நிச்சயம் என்னைத் தேடிக்கொண்டு இங்கு வருவாயென்ற நம்பிக்கையுடனேயே இந்த உயிரைப் பல நூற்றாண்டு களாகச் சுமந்து கொண்டிருக்கிறேன். சித்தர் வாக்குப் பொய்த்துவிடுமா? எப்படியும் நீ இங்கு வந்தே தீருவாய் என்று என் குருநாதர் சொல்லிய அருள் வாக்கு பொய் யாகி விடுமா?......

பாலாஜிக்குக் கேட்டதைக் கொண்டு அவன் புரிந்து கொள்ள முடிந்தது. இவ்வளவுதான். சரிவரப் புரியா மல் அவள் இன்னும் என்னென்னவோ சொன்னாள். அன்று சர்ப்ப மோதிரத்தைப் பார்த்து தன்னை ஆட்கொள்ள விஜயகேசரி வந்து விட்டதாக எண்ணி ஏமாற்றத்தையும் அவள் மறைமுகமாகக் குறிப்பிட்டாள். பிரேதப் பெட் டியை ஒருமுறை வலம் வந்து வணங்கிவிட்டு கருங்கல் மேடையில் போய்ப் படுத்துக் கொண்டாள். பட்டு

மெத்தை விரித்த மஞ்சத்தைவிட்டு இரவுதோறும் அவள் அங்கு படுத்து உறங்குகிருளென்று பாலாஜிக்குத் தோன்றியது. சுமார் அரைமணி நேரம் வரையில் பாலாஜி அங்கேயே காத்திருந்தான். தேவதேவி அங்கு தான் இரவைக் கழிக்கப் போகிருளென்பதை உறுதிப்படுத்திக் கொண்ட பின்னர் சந்தடி செய்யாமல் வந்த வழியாகவே அவன் திரும்ப ஆரம்பித்தான்.

மையிருட்டில் அவன் தட்டுத் தடுமாறிக் கொண்டு மெதுவாக நடக்க வேண்டியதாயிருந்தது. ஆனல், அவன் மனம் மட்டும் அதிவேகமாக ஓடியாடிக் கொண்டிருந்தது. தங்கப் பெட்டியில் விஜயகேசரியின் பிரேதத்தை தேவதேவி பக்குவப்படுத்திப் பத்திரமாக வைத்திருக்க வேண்டுமென்றும் அவனிடம் கொண்ட காதல் உறுதியின் பயனுக இரவு தோறும் ஒருகுரல் அழுதுவிட்டு அதன் பக்கத்திலேயே உறங்க வேண்டுமென்றும் அவனுக்குத் தோன்றியது. எவ்வளவுதான் ரசாயன முறைப்படி பக்குவம் செய்தாலும் ஒரு மனிதப் பிரேதம் 250 ஆண்டுவரையில் கெட்டுப் போகாமல் இருப்பது சாத்தியமா என்று எண்ணிய பொழுது எகிப்திய பிரமிட்டுகளில் பல ஆயிரம் ஆண்டுகளாக பரோவா மன்னர்களின் பிரேதங்கள் உருக்குலையாமல் பாதுகாத்து வைக்கப்பட்டிருப்பது அவன் ஞாபகத்துக்கு வந்தது.

தேவதேவியிடம் ஆரம்பத்திலிருந்த பக்திக்கும் பயத்துக்கும் மாருக இப்பொழுது கருணையும் பச்சாத்தாபமும் பாலாஜிக்கு ஏற்பட்டது. எவ்வளவோ செல்வாக்கும் அமானுஷ்யமான சக்தியும் படைத்த ஒரு பெண்மணி பல நூற்றுண்டுகளுக்கு முன்னல் காதலித்த ஒருவனுக்காக ஏங்கி ஏங்கி விரதமிருப்பது சவத்தின் அருகில் இரவைக் கழிப்பதும் என்ருல் அவளுடைய மன உறுதிக்கும் வைராக்கியத்துக்கும் நீண்ட மனித வரலாற்றில் முன் மாதிரி ஏது? கதைகளிலும் காவியங்களிலும் கூடக் கேள்விப்பட்டிராத அதிசயக் காதலாக அல்லவா இருக்கிறது தேவதேவியின்

காதல்! இத்தனை வைராக்கியத்துடனிருப்பவள் கைக்குளட்டிய காதலனை தனக்குக் கிட்டவில்லையென்ற ஏமாற்றத்தின் அறிவை இழந்து விஜயகேசரியைக் கொன்றிருந்தால் அதில் ஆச்சரியமில்லை. இக்குற்றம் செய்தவள் உண்மையில் அனுதாபத்துக்கு உரியவளேயன்றி அருவருப்புக்கோ அல்லது தண்டனைக்கோ உரியவளல்லவென்று பாலாஜிக்கு இப்பொழுது தோன்றியது. மனம் வரித்து ஒருவனுக்காக ஆயிர்மாயிரமாண்டுகளாகக் காத்திருக்கும் ஒரு பெண்ணுக்கு கற்பரசியென்ற பெயர் பொருத்தமில்லாமல் அவளைக் கொலைகாரியென்று அழைப்பதானல் கற்பரசி என்ற வார்த்தைக்கே மதிப்பில்லையென்று அவன் எண்ணினன். இடையிடையில் இவைகளெல்லாம் நனவா அல்லது கடுமையான பித்தத்தால் ஏற்படும் ஒரு குரூரமான கனவா என்ற சந்தேகமும் அவனுக்கு ஏற்பட்டது.

குழம்பிய மனதுடன் தட்டுத் தடுமாறிக் கொண்டு அவன் தன்னுடைய அறையை அடைந்தபொழுது விடியற்காலை நான்கு மணியாகியிருந்தது. பரபரப்பான சூழ்நிலைமையில் இரவு முழுவதும் கண் விழித்திருந்ததினல் அவன் சரீரம் முழுவதும் அணு அணுவாக வலித்தது. கட்டிலில் படுத்த சிறிது நேரத்துக்கெல்லாம் அவன் கண்ணயர்ந்து விட்டான்.

அறையில் முனிசாமி குய்யோ முறையோவென்று ஒப்பாரி வைக்கும் சத்தத்தைக் கேட்டு பாலாஜி கண் விழித்த பொழுது காலை எட்டரைமணியாயிருந்தது. எழுந்ததும் "ஜோதிவர்மனுக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டிருக்குமோவென்ற பயத்துடன் என்ன முனிசாமி! சின்ன எஜமானுக்குப் புதிதாக ஒன்றுமில்லையே!" என்று அவன் கேட்டான்.

ஜோதிவர்மன் நிலைமை மிகவும் கவலைக்கிடமாகி விட்டதாயும் இன்னும் சில மணி நேரத்துக்குமேல் அவன் பிழைக்கமாட்டானென்று அரண்மனை வைத்தியர் சொல்லி

விட்டுப் போனதாயும் முனிசாமி ஒரு துக்ககரமான செய்தியைச் சொல்லிவிட்டுப் புலம்பினான்.

"அப்படியா? அரண்மனை வைத்தியர் அப்படியா சொன்னார்?" என்று கேட்டுக் கொண்டே பாலாஜி ஜோதிவர்மனுடைய அறைக்கு வந்த பொழுது மரக்கட்டைபோல மல்லாந்து படுத்திருந்த ஜோதிவர்மனின் முகத்தைப் பார்த்ததும் "அய்யோ ஜோதி! உன்கதி கடைசியில் இப்படியா முடியவேண்டும்!" என்று வாய்விட்டு அலறினான் பாலாஜி.

"ஜோதி இனிப் பிழைக்கமாட்டானென்று அரண்மனை வைத்தியர் சொல்லிவிட்டார் அய்யா! கை கால்களெல்லாம் சில்லிட்டுப் போய்விட்டன. நாடியும் ஒடுங்கிப்போய் விட்டது. இனி மகாராணி தேவி ஒருவளால்தான் என் ஜோதியை உயிர்ப்பித்து எழுப்ப முடியும். தயவு செய்து தேவியிடம்போய் முறையிடுங்கள் அய்யா. ஒவ்வொரு விநாடியும் இவர் இறந்து கொண்டேயிருப்பது உங்களுக்குத் தெரியவில்லையா? சீக்கிரம் போங்கள் அய்யா?" தேவ தேவியின் கையில் காலில் விழுந்து எப்படியாவது அவளை இங்கு அழைத்துவராவிட்டால் உங்கள் பிள்ளையை உயிரோடு பார்க்கமாட்டீர்கள்?" என்று அழுகையும் விக்கலுமாக மன்றாடினாள் சித்ரா.

"ஆமாம் சித்ரா! இதோ போகிறேன். இப்பொழுதே போய் தேவியை அழைத்து வருகிறேன்! என்று சொல்லிவிட்டு பாலாஜி எழுந்திருக்கையில் "எங்கே போகிறீர்கள்" என்று கேட்டுக் கொண்டு உள்ளே வந்தார் உக்கிரசேனர்.

உக்கிரசேனரைக் கண்டதும் ஜோதியின் பக்கத்தில் உட்கார்ந்திருந்த சித்ரா பாய்ந்து போய் தகப்பனைக் கட்டிக் கொண்டு "இனி ஜோதி பிழைக்கமாட்டாராம் அப்பா!" என்று சொல்லிவிட்டு சிறு குழந்தைபோல தேம்பித் தேம்பி அழுதாள்.

''ஜோதி இனிப் பிழைக்கமாட்டானென்று அரண்மனை வைத்தியர் சொல்லிவிட்டுப் போனராம். இதைத் தேவியிடம் சொல்லி அவளை அழைத்து வருவதற்குத்தான் புறப்பட்டுக் கொண்டிருந்தேன்!'' என்றான் பாலாஜி.

''தேவதேவியின் சந்நிதானத்துக்கு அழைத்துப் போகவே நானும் வந்தேன். உங்களை உடனே அழைத்து வர வேண்டுமென்பது தேவியின் ஆக்ஞை. மகாராணி அந்தப்புரத்திலிருந்து இறங்கி வந்திருக்கிறாள்'' என்றார் உக்கிரசேனர். பிறகு தனது பெண் சித்ராவை ஆதரவாகத் தடவிக்கொடுத்து ''கவலைப்படாதே சித்ரா!ஜோதியை நிச்சயம் தேவதேவி பிழைக்க வைத்துவிடுவாள். உனக்காக இல்லாவிட்டாலும் நமது நண்பர் பாலாஜியை முன்னிட்டாவது ஜோதிவர்மனை மகாராணி குணப்படுத்துவது நிச்சயம்! தேவி நினைத்தால் நடக்காதது ஒன்றுண்டா?'' என்றார்.

சித்ராவைத் தைரியமாக இருக்கச் சொல்லிவிட்டு உக்கிரசேனருடன் பாலாஜி வெளியே வந்தார். அவருக்காகக் கொடுத்திருந்த மூன்று அறைகளையும் மறைத்தவாறு யிருந்த சுவற்றைத் தாண்டி அவர்கள் மண்டபத்தை அடைந்ததும் அங்கே பாசறைகளிலே அணிவகுத்து நிற்கும் சிப்பாய்களைப்போல ஈட்டிவீரர்கள் இரண்டு வரிசைகளாக பிரிந்து நின்றார்கள். பக்கத்துக்கு நூறு பேர்கள் வீதமிருந்த அந்த வீரர்கள் ஆடாமல் அசையாமல் சுவற்றில் எழுதிய வர்ண ஓவியங்களைப்போல தலைநிமிர்ந்தும் மௌனமாகவும் நின்றது அவர்களுடைய பாராட்டத் தகுந்த கட்டுப்பாட்டைச் சிறப்பித்துக் காட்டுவதைப் போலிருந்தது! இந்த வீரர்களுக்குப் பின்னால் ஆண்களும் பெண்களுமாக சுமார் நானூறு பேர்களுக்குமேல் நின்று கொண்டிருந்தார்கள். மண்டபத்தில் அவ்வளவு பெரிய கூட்டமிருந்தும் அவர்கள் மூச்சுவிடும் சப்தம்கூடக் கேட்காமல் பரிபூரண அமைதி நிலவியது பாலாஜிக்கு எங்கும் கண்டிராத ஆச்சர்யமாயிருந்தது.

மண்டபத்தைத் தாண்டி அதன் இடதுபுறமிருந்த ஒரு அறையின் வாசலை அடைந்ததும் "கன்னிமாதா தங்கள் விருத்தாளி வந்திருக்கிறார்" என்று வெளியிலிருந்து கொண்டே உக்கிரசேனர் சொன்னார்.

தேவதேவி கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள் உக்கிரசேனரைப் பார்த்து "நீ போகலாம்! கைதிகள் கொலுமண்டபத்துக்குக் கொண்டு வரப்படட்டும்" என்றாள். உக்கிரசேனர் போன பிறகு நேற்றிரவு நிம்மதியாகத் தூங்கினீர்களா?" என்று பாலாஜியிடம் அவள் விசாரித்தாள்.

முந்திய நாளிரவு நெடுநேரம் வரையில் கண்விழித்திருந்த தேவதேவி சிறிதும் வாட்டமின்றி அன்றலர்ந்த செந்தாமரையைப்போல பொலிவு குன்றாமலிருந்தது பாலாஜிக்கு வியப்பாயிருந்தது.

பிரேதப் பெட்டியினருகில் கண்ணீரும் கம்பலையுமாக உட்கார்ந்திருந்து புலம்பிய அதே மலைக்கன்னியைத்தான் இப்பொழுது கண்ணெதிரில் காண்கிறோமா என்றுகூட அவன் சந்தேகித்தான்.

"இரவு நல்ல தூக்கமில்லை தேவி" ஏதேதோ பயங்கரமான கனவுகள் வெருட்டிக் கொண்டிருந்தன. விடியற்காலையில்தான் சற்று கண்ணயர்ந்தேன்" என்று உண்மையை வெளியிடாமலும் அதே சமயம் முழுப்பொய் சொல்லாமலும் அவன் மழுப்பினான்.

"இரவு நானும் உறங்கவேயில்லை. உங்கள் விரலில் பார்த்த சர்ப்ப மோதிரம் நேற்றிரவு என் மன அமைதியை அடியோடு குலைத்துவிட்டது" என்றாள் தேவதேவி. இந்த விஷயத்தைப் பற்றி மேற்கொண்டு பேசவிரும்பாமல் "வாருங்கள் கொலுமண்டபத்துக்குப் போவோம்! உங்கள் நண்பரைப் படுகொலை செய்த மகாபாவிகள் விசாரிக்கப்படுவதை நீங்களும் பார்க்க வேண்டுமென்று

சொல்லிவிட்டு தேவதேவி அறைக்கு வெளியில் வரவே, பாலாஜியும் அவள் பின்னால் வந்தான்.

கொலுமண்டபத்தில் தேவதேவி நுழைந்த மாத்திரத்தில் அங்கிருந்த ஈட்டி வீரர்களைத் தவிர பாக்கி அவ்வளவு பேர்களும் தரையில் விழுந்து வணங்கிவிட்டு மாதா கோவிலில் தொழுகை நடத்தும் பக்தர்கள் மண்டியிட்டு உட்காருவதைப்போல உட்கார்ந்திருந்தனர். மண்டபத்தின் மத்தியிலிருந்த ஒரு மேடையின்மீது வைக்கப்பட்டிருந்த பீடத்தில் திரிசூலத்துடன் தேவதேவி நின்ற காட்சியை பாலாஜி அவனுடைய வாழ்க்கையில் என்றுமே மறக்க முடியாது. விரிந்த தாமரைபோல இருந்த அந்தப் பீடத்தில் தேவதேவி ஒரு கையில் திரிசூலத்தை வைத்துக் கொண்டும், மற்றொரு கையை இடையில் ஊன்றிக் கொண்டும் கம்பீரமாக நின்றது ஆலயத்தின் அழகான ஒரு அம்மன் விக்கிரகத்துக்கு நேத்திரானந்தமாக அலங்காரம் செய்து வைத்திருப்பதைப் போலிருந்தது.

மேடையின் ஒரு பக்கத்தில் வயதான ஒரு மனிதர் வாய்பொத்தி கை கட்டிக் கொண்டு நின்றார். மற்றொரு புறத்தில் ஒருவீரன் உருவிய வாளுடன் சிலைமாதிரி நின்றான். தேவதேவி பாலாஜியைப் பார்த்து "மேடையின் கீழ் உட்கார்ந்து பாருங்கள். இந்த நாட்டில் தர்ம பரிபாலனம் எப்படி நடக்கிறதென்பதைக் கவனியுங்கள்; என்று சொல்லிவிட்டு மறுபக்கம் திரும்பி, மகாமந்திரி! குற்றவாளிகளைக் கொண்டு வரச் சொல்லுங்கள்" என்றாள்.

மந்திரியென்று வர்ணிக்கப்பட்ட வயோதிப மனிதர் இரண்டு தடவை கையைத் தட்டினார். தளபதி உக்கிரசேனர் முன்னால்வர, அவருக்குப் பின்னால் இரும்புச் சங்கிலிகளினால் பிணைக்கப்பட்ட ஐவரை இரண்டு ஈட்டி வீரர்கள் சங்கிலியைப் பிடித்து இழுத்துக் கொண்டு வந்து தேவதேவியின் முன்னால் நிறுத்தினார்கள். உக்கிரசேனர் குகையிலிருந்து கட்டி இழுத்து வரப்பட்ட அதே மனிதர்கள்

தான் இப்பொழுது சபையில் கொண்டு வந்து நிறுத்தப்பட்டிருப்பவர்களென்பதை பாலாஜி பார்த்தவுடனேயே தெரிந்து கொண்டுவிட்டான். குற்றவாளிகளைக் கொண்டு வரச் சொல்லியவுடன் உக்கிரசேனரும் சபைக்கு வரவேண்டும்? அவர் மீதும் குற்றஞ் சாட்டி தண்டிக்கப் போகிறார்களா என்று பாலாஜி யோசித்தான்.

இதை மகாராணியிடம் கேட்பதற்கு அவன் வாயெடுத்த பொழுது தேவதேவி பேச ஆரம்பித்துவிட்டாள். அவள் உக்கிரசேனரைப் பார்த்து "உக்கிரசேனா? கைதிகளின் மீதுள்ள குற்றச்சாட்டுகளை சபைக்கு எடுத்துச் சொல்லு" என்றாள்.

"மகாராணியின் விருந்தினர்களில் ஒருவரை இவர்கள் தூரத்கிரமாகத் தூக்கி ஈட்டிகளினால் குத்திக் கொலை செய்து மரத்தில் தொங்கவிட்டார்கள். கொலை செய்யப்பட்ட மனிதர் மகாராணியின் விருந்தினர் என்பதுதெரிந்து அவர் மீது துவேஷம் பாராட்டியது முதல் குற்றம். ஈட்டிகளினால் தாக்கியது இரண்டாவது குற்றம். கொலை செய்து மரத்தில் தொங்கவிட்டது மூன்றாவது குற்றம். இம்மூன்று குற்றங்களுக்கும் உரிய தண்டனையைப் பெறவே இவர்கள் தேவியின் முன் ஆஜர் செய்யப்பட்டிருக்கின்றனர்! என்று உக்கிரசேனர் சொன்னார்.

மலைக்கன்னி குற்றவாளிகளைப் பார்த்து "இம்மூன்று குற்றச் சாட்டுகளுக்கும் உங்கள் பதில் என்ன என்று வினவினாள்.

கைதிகளில் யாரும் பேசவில்லை. மரணத்தின் தலைவாசலை மிதித்துக்கொண்டிருந்த அவர்களுக்குப் பேச நாவெழவில்லை.

"குற்றச்சாட்டுகளுக்கு உங்கள் பதில் என்னவென்று கேட்கிறேன்!" என்று மலைக்கன்னி மீண்டும் உரத்த தொனியில் கேட்டாள்.

ஐந்து கைதிகளில் ஒருவன் மனதைத் திடப்படுத்திக் கொண்டு பேசினன். "குற்றச்சாட்டுக்களை நாங்கள் மறுக்க வில்லை கன்னிமாதா! வெள்ளை மனிதனை நாங்கள் கொலை செய்தது உண்மைதான். வெள்ளைக்காரர்கள் நம்முடைய ஜன்மப் பகைவர்கள் என்பது பொதுவான அபிப்பிராயம். ஆகையால் அந்த மனிதர் தங்கள் விருந்தாளியாயிருக்க முடியாதென்ற எண்ணத்தில் தவறு இழைத்துவிட்டோம். எங்களை மன்னித்துக் காத்தருளவேண்டும்!" என்ருன் அவன்.

"மன்னிப்பா? என் விருந்தாளியைத் துடித்துத் துடித்துச் சாகடித்தவர்களுக்கு மன்னிப்பா? இல்லை! உயிருக்கு உயிர்! இரத்தத்திற்கு இரத்தம்! இதுதான் என் நீதி. இந்த நாட்டில் உயிரைப் போக்கும் அதிகாரம் யாருக்கும் இல்லை. வெள்ளையனுயினும் கறுப்பனுயினும் அல்லது வேறு எந்த நிறத்தவனுயினும் சந்தேகப்படுவோர்களை திக்குப் பாலகர்களிடம் ஒப்படைப்பது பிரஜைகளின் கடமை. நீதி செலுத்த நாம் இருக்கிறோம். இதைத் திக்குப் பாலகர்கள் மீண்டும் தங்கள் பகுதி ஜனங்களுக்கு அறிவுறுத்தட்டும். நாட்டு நடப்பை மீறி சட்டத்தைத் தங்கள் கையிலெடுத்துக் கொண்டு படுகொலைசெய்யத் துணிந்த இந்தக் கயவர்கள் என்ன தண்டனையடைந்தார்கள் என்பதையும் திக்குப் பாலகர்கள் பறைசாற்றட்டும். குற்றவாளிகள் ஐவரையும் புலிக் குகைக்குள் தள்ளுங்கள். நரமாமிசத்தை ருசித்துப் பல வருடங்களாகிய புலிகள் இவர்களை அங்கம் அங்கமாகப் பிய்த்துத் தின்னட்டும்!" என்று உத்தரவிட்டாள் மலைக்கன்னி.

இந்த உத்தரவு பிறந்தபொழுது அந்த மண்டபத்தில் குண்டூசி கீழே விழுந்தால் கிணீரென்று சப்தம் கேட்கும்படி அவ்வளவு நிசப்தம் நிலவியது. மரண தண்டனை விதிக்கப்பட்ட ஐவரும் ஏற்கனவே குற்றுயிராகிவிட்டவர்களைப் போல தரையில் விழுந்தார்கள். அவர்களில் முன்பு பேசிய அதே மனிதன் மாத்திரம், "கன்னி மாதா! தெரியாமல்

தவறு இழைத்துவிட்டோம்! இந்த ஒரு தடவை மாத்திரம் எங்களை மன்னித்து உயிர்ப் பிச்சை கொடுக்கவேண்டும் தாயே!'' என்று அழுதுகொண்டே புலம்பினான்.

இதற்குமேல் பாலாஜியினால் பொறுக்க முடியவில்லை. அவன் பளிச்சென்று எழுந்து, ''தேவி! தவறு இழைப்பது மனித சுபாவம். ஏதோ தெரியாத்தனமாக வில்லியத்தை இவர்கள் கொன்றுவிட்டார்கள். இவர்களுடைய உயிர்களைப் பலிவாங்குவதினால் வில்லியம் பிழைத்து எழுந்து விடப்போவதில்லை. கருணைகூர்ந்து இவர்களை மன்னித்து விடுங்கள்'' என்று மன்றாடினான்.

''இல்லை! இவர்களை மன்னிப்பதற்கில்லை. கொண்டு போங்கள் குற்றவாளிகளை! சபை கலைந்துபோகலாம்!'' என்று கண்டிப்புடன் சொன்னாள் தேவதேவி.

மறு நிமிடமே ஈட்டி வீரர்கள் குற்றவாளிகளைத் தர தரவென்று இழுத்துக்கொண்டு போய்விட்டார்கள். மண்டபம் நிறைய இருந்த ஜனங்களும் சிப்பாய்களும் ஒழுங்காக ஒருவர் பின் ஒருவராகச் சென்றபின் மந்திரியும் தலை குனிந்து வணங்கிவிட்டு அவ்விடத்தைவிட்டு அகன்றார். எல்லோரும் மண்டபத்தைக் காலிசெய்துவிட்டுப் போகும் வரையில் பீடத்தின்மீது அசையாமல் நின்ற தேவதேவி பிறகு கீழே இறங்கிவந்தாள். அந்தக் காட்சி சினிமாப் படங்களில் கடவுள் சிலையிலிருந்து தெய்வம் பிரசன்னமாகி மனித உருவில் இறங்கிவரும் காட்சியைப்போலிருந்தது பாலாஜிக்கு.

தேவதேவி பாலாஜியைப் பார்த்து, ''நண்பரே! உங்கள் பேச்சைக் கேட்கவில்லையென்று வருத்தமா?'' என்றாள்.

''தேவி! நீங்கள் சர்வ வல்லமை பொருந்திய மகாராணி! என் வருத்தமும் கோபமும் உங்களை என்ன செய்யும்?'' என்றான் பாலாஜி.

''உங்களுக்குத் தெரியாது இநதக் காட்டு ஜனங்களை அடக்கியாளுவது எவ்வளவு கஷ்டமென்று! இரத்த வெறி பிடித்த இவர்களைப் பயமுறுத்திவைக்காவிட்டால் இந்த நாட்டில் அராஜகம் தலைவிரித்து ஆடும். சில சமயங்களில் என்னுடைய நீதி பரிபாலனம் எனக்கே அருவருப்பாகவும் மனக்கஷ்டமாகவும் இருப்பதுண்டு. ஆயினும் ஆட்சிப் பொறுப்பை வகிப்பவர்கள் தவிர்க்க முடியாத சில கடமைகளைச் செய்யத்தான் வேண்டியிருக்கிறது. கண்டிப்பு இல்லாவிட்டால் மகா முரடர்களான இத்தீவு மக்களை ஒரு சிறு பட்டாளத்தை வைத்துக்கொண்டு என்னால் ஆட்சிபுரிய முடியுமென்று நீங்கள் நினைக்கிறீர்களா?'' என்றாள் தேவ தேவி.

''கண்டிப்பு இல்லாத இடத்தில் கட்டுப்பாடும் ஒழுங்கும் இருக்காதென்பது உண்மைதான் தேவி. அதற்காக இந்த ஐந்து குற்றவாளிகளையும் இவ்வளவு கொடுமையாகத் தண்டித்திருக்கவேண்டாம்!'' என்று பாலாஜி சொல்லவே, ''கொலைகாரனுக்கு மரண தண்டனைக்குக் குறைந்த எந்தத் தண்டனையும் சரியான தண்டனையாகாது. இந்த ஐவருடைய உயிர்களையும் போக்குவது வருங்காலத்தில் அநேகருடைய உயிர்களுக்குப் பாதுகாப்பாயிருக்குமென்பதையும் நீங்கள் மறந்துபேசுகிறீர்கள்!'' என்றாள் அவள்.

''தேவி! என் மகன் ஜோதிவர்மன் படுகிடையாகக் கிடக்கிறான். இன்னும் சில நாழிகை நேரத்துக்கு மேல் அவன் பிழைக்கமாட்டானென்று அரண்மனை வைத்தியர் சொல்லிவிட்டுப் போயிருக்கிறாராம். என் மகனுக்கு உயிர்ப் பிச்சை கொடுக்கவேண்டும் கன்னிமாதா! நீங்கள் மனது வைத்தால் அவன் குணமடைந்துவிடுவானென்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. தயவுசெய்து அவனை வந்து பார்க்கவேண்டும்'' என்றார் பாலாஜி.

''அரண்மனை வைத்தியர் என்னிடமும் சொன்னார்கள். கவலைப்படாதீர்கள். நீங்கள் முதலில் போங்கள். நான்

விரைவில் மருந்து தயாரித்துக்கொண்டு வருகிறேன்'' என்று சொல்லிவிட்டுச் சென்ருள் தேவதேவி.

தேவதேவி நேரில் வந்து ஜோதியைக் குணப்படுத்தப் போகிருள் என்ற சந்தோஷச் செய்தியை சித்ராவுக்குச் சொல்ல ஓட்டமும் நடையுமாக ஜோதி படுத்திருக்கும் அறையை நோக்கிச் சென்ருன் பாலாஜி.

ஜோதியின் அறைக்கு பாலாஜி வந்தபொழுது சித்ரா, உக்கிரசேனர், முனிசாமி ஆகிய மூவரும் முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு மூலைக்கொருவராக உட்கார்ந்திருந்தார்கள். அவர்கள் இருந்த நிலையைக் கண்டவுடனேயே ஜோதியின் காரியமெல்லாம் முடிந்துபோயிருக்க வேண்டுமென்று பாலாஜிக்குத் தோன்றியது தன்னையும் அறியாமல், ''ஐயோ ஜோதி! கடைசியில் உன் கதி இப்படியா ஆகவேண்டும்?'' என்று வாய்விட்டு அலறிக்கொண்டே ஜோதியின் அருகில் சென்று அவன் நெற்றியைத் தொட்டுப் பார்த்தார். தொட்டுப் பார்த்தவர் சட்டென்று அழுகையை நிறுத்திக்கொண்டு பரபரப்புடன் ஜோதியின் நாடியைப் பிடித்துப் பார்த்துவிட்டு, ''ஜோதி இறக்கவில்லை. என் ஜோதி இறக்கவில்லை! அவன் பிழைத்து விடுவான்!'' என்று ஆனந்தக் கண்ணீர் பெருக உணர்ச்சி வசப்பட்டுக் கத்திஞர்.

''பாவம், மனிதன் கொஞ்சம் கொஞ்சமாகச் செத்துக்கொண்டேயிருக்கும் பொழுது என்ன ஆனந்தம் ஐயா உங்களுக்கு? பிள்ளையென்ற பாசம்கூட இல்லாமல் இவ்வளவு நேரம் எங்கே போயிருந்தீர்கள்?'' என்று சீறிஞள் சித்ரா. அழுது அழுது வீங்கிப்போயிருந்த அவள் முகம் இப்பொழுது பார்ப்பதற்கே பயங்கரமாயிருந்தது.

''நான் எங்கே போயிருந்தேன் என்ரு கேட்டாய். என் ஜோதியைப் பிழைக்கவைக்கப் போயிருந்தேன். மகாராணியிடம் இங்கிதமாகப் பழகி நயமாகப் பேசி அவளை

இங்கு அழைத்துவரப் போயிருந்தேன். மகத்தான சக்தி வாய்ந்த கன்னிமாதா ஜோதியை நிச்சயம் பிழைக்க வைத்துவிடுவாள். ஔஷதம் தயாரித்துக்கொண்டு அவள் இதோ வந்துவிடுவாள்'' என்று சொல்லிய வண்ணம் ஜோதியின் கழுத்திலிருந்த சர்ப்பச் சின்னம் பதித்த தங்கச் சங்கிலியை பாலாஜி மெதுவாகக் கழற்றினான்.

''அந்தச் சங்கிலியை ஏன் கழட்டுகிறீர்கள்?'' என்று கேட்டாள் சித்ரா.

''காரணம் பிறகு சொல்கிறேன். தேவதேவி வரும் பொழுது அவ்விடம் இந்தச் சங்கிலியைப்பற்றி ஒன்றும் சொல்லாதே!'' என்று சொல்லிய வண்ணம் அந்தச் சங்கிலியைச் சட்டைப் பைக்குள் போட்டுக்கொண்டார் பாலாஜி.

''ஏன்?'' என்று கேட்டார் தளபதி.

''உங்கள் பெண்ணின் புருஷன் பிழைக்கவேண்டுமானால், ஏன், எதற்கு என்றெல்லாம் கேட்காமல் நான் சொல்லுகிறபடி செய்யுங்கள்'' என்றார் பாலாஜி.

''மகாராணி உடனே வருவதாகச் சொன்னார்களா?'' சித்ரா கேட்டாள்.

''ஆமாம்! மருந்து தயாரித்துக்கொண்டு வருவதாகக் கூறி என்னை முதலில் போகச் சொன்னாள். அவள் வந்து பார்த்தால் ஜோதி பிழைத்துவிடுவானென்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. மூலிகைகளின் ஆச்சரியமான சக்திகளையெல்லாம் தேவதேவி தெரிந்து வைத்துக்கொண்டிருக்கிறாள்.''

''கன்னிமாதா வந்து பார்த்தால் ஜோதி பிழைப்பதில் சந்தேகமேயில்லை. ஆனால், மகாராணி இங்கு வரவேண்டுமே!'' சந்தேகப்படுவதுபோல சித்ரா கூறவும், ''இன்

னும் ஏன் சந்தேகப்படுகிருய். கொஞ்ச நேரத்தில் மகாராணி இங்கு வருகிருளா இல்லையா என்று நீயே பாரேன்!'' என்று பாலாஜி சொல்லிக்கொண்டிருக்கையில் அறைக்கு வெளியில் திரிசூலத்தைக் கீழே தட்டிக்கொண்டு கன்னி மாதா வரும் சப்தம் அவர்களுக்குக் கேட்டது. அவர்கள் திரும்பிப் பார்ப்பதற்குள் வெழுக்கமான முகத்திரையுடனும் ஒரு கையில் சூலாயுதமும் மற்ருெரு கையில் மண் கலயமுமாக உள்ளே நுழைந்தாள் தேவி.

''கன்னிமாதா! தக்க சமயத்தில் வந்தீர்கள். இன்னும் கொஞ்சம் தாமதித்திருந்தால் என் மகன் மறுபடி நான் பார்த்திருக்கமுடியாத இடத்துக்குப் போய்ச் சேர்ந்திருப்பான். விடிைக்கு விடிை அவன் உயிர் தத்தளித்துக்கொண்டிருக்கிறது. மரணத்துடன் கடுமையாகப் போராடிக் கொண்டிருக்கிருன் தாயே!'' என்ருர் பாலாஜி எழுந்து நின்றுகொண்டு.

''நான் வந்துவிட்டபிறகும் உங்களுக்கு ஏன் கவலை? உங்கள் மகன் இறக்காமலிருந்தால் நிச்சயம் அவனை நான் காப்பாற்றுவேன். இறந்துபோயிருந்தால் அவனுக்குத் திரும்ப உயிர்கொடுக்க என்னுல் முடியாது. வேறு எவராலும் முடியாது'' என்று சொல்லிவிட்டு அந்த இடத்தை அவள் சுற்றிப் பார்த்தாள்.

அறையின் ஒரு மூலையில் சித்ராவும் உக்கிரசேனரும் தரையில் படுத்து கரங்குவித்துக்கொண்டிருந்தார்கள். இன்னொரு மூலையில் வெட வெடவென்று உடல் நடுங்க முனிசாமி ஒடுங்கி உட்கார்ந்திருந்தான்.

''உக்கிரசேனு! எழுந்திரு!'' என்ருள் தேவதேவி. அவன் எழுந்ததும், ''அது உன் மகளா?'' என்ருள் தேவதேவி.

''ஆமாம் தாயே! என் மகள் சித்ரா!'' என்று நாக்குழறப் பதிலளித்த உக்கிரசேனருக்கு சித்ரா வந்திருப்பதை

ஏன் அறிவிக்கவில்லையென்று மலைக்கன்னி மறுபடியும் சீறி விழுவாளோ என்று பயமாயிருந்தது.

''உன் மகள் அரண்மனைக்கு வந்திருப்பதை எனக்குத் தெரிவிக்காதது எவ்வளவு பெரியகுற்றம் தெரியுமா? இந்த மனிதர் மாத்திரம் உனக்காகப் பரிந்து பேசியிராவிட்டால் இப்பொழுது உன் தலை உன் கழுத்திலிருக்காது. மறுபடியும் இதுமாதிரித் தவறு செய்தால் நீ பிழைக்கமாட்டாய். ஞாபகமிருக்கட்டும்'' என்றாள் தேவதேவி. பிறகு பாலாஜியைப் பார்த்து, ''அந்த மூன்று பேர்களையும் வெளியே போயிருக்கச் சொல்லுங்கள். என் சிகிச்சை முறை எவருக்கும் தெரியக் கூடாது'' என்று சொல்லிவிட்டு ஜோதிவர்மன் படுத்திருந்த கட்டிலின் விளிம்பில் உட்கார்ந்துகொண்டாள் மலைக்கன்னி.

''உங்களையெல்லாம் தேவி வெளியே போகச் சொல்லுகிறாள்'' என்று பாலாஜி சொல்லியமாத்திரத்தில் முனிசாமி எப்படியாவது அந்த இடத்தைவிட்டுப் போனால் போதுமென்று நினைத்து விழுந்தடித்துக்கொண்டு ஓடினான். அவனைப் பின்பற்றி உக்கிரசேனரும் சென்றார். சித்ராவோ தரையிலிருந்து எழுந்து ஒரு மூலையில் ஒடுங்கி நின்றுகொண்டிருந்தாள்.

''சித்ரா! நீயும் போ! தேவதேவி உன்னையும்தான் போகச் சொல்கிறாள்'' என்றார் சித்ராவிடம் பாலாஜி.

''நான் மட்டும் இருக்கிறேனே'' என்று சித்ரா மன்றாட்டமாகச் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்த தேவதேவி பளிச்சென்று அவள் பக்கம் திரும்பி, ''என்ன? என்ன சொன்னாய்? என் உத்தரவுக்குப் பதில் பேச்சா?'' என்று கண்களில் தீப்பொறி பறக்க முழங்கினாள்.

தேவியின் குரலைக் கேட்ட மாத்திரத்தில் சித்ரா அங்கிருந்து ஓட்டம்பிடித்துவிட்டாள்.

''இந்தக் காட்டு ஜனங்களிடம் கண்டிப்பாயில்லாவிட்டால் அரைக்கணம் இங்கு நான் வாழ முடியாது என் உத்தரவை உதாசீனம் செய்தால் என்ன கதி ஏற்படுமென்பதற்கு இன்று காலையில்தான் இவர்களுக்கு நல்ல பாடம் படித்துவைத்தேன். அதற்குள் இந்த நாய் என் ஆக்ஞையை மீற முயற்சிக்கிறது'' என்று சொல்லிக்கொண்டே எழுந்து போய் திரிசூலத்தை சுவற்றின் ஓரமாகச் சாற்றிவைத்து விட்டு மீண்டும் ஜோதியின் கட்டிலில் வந்து உட்கார்ந்தாள் தேவதேவி. பிறகு கையிலிருந்த ஔஷதக் கலயத்தைப் பாலாஜியிடம் கொடுத்துவிட்டு ஜோதியின் கையைப் பிடித்து நாடியைப் பரிசோதித்தாள்.

''நல்ல நேரத்தில் நான் வந்தேன். நாடி ரொம்பவும் விழுந்துபோய்விட்டதே'' என்று சொல்லியவள் ஜோதியின் கையைப் பிடித்துப் பார்த்துவிட்டு, ''எவ்வளவு அழகான கை! உங்கள் மகன் நல்ல அழகாயிருப்பான்போலிருக்கிறதே'' என்று சொல்லிக்கொண்டே மறு பக்கமாகத் திரும்பியிருந்த ஜோதிவர்மன் முகத்தை அவள் லேசாகத் தன்னுடைய பக்கமாகத் திருப்பிப் பார்த்தாள்.

ஜோதியின் முகத்தை அவள் பார்த்ததுதான் தாமதம், படம் விரித்தாடும் கொடிய சர்ப்பத்தை மிதித்தவள் எப்படி அலறியடித்துக் குதிப்பாளோ அதேபோல அந்த மலை முழுவதும் திடுதிடுத்துப்போகும்படியான கூச்சலிட்டுக்கொண்டு துள்ளியெழுந்தாள் மலைக்கன்னி. எங்கும் எந்தக் காலத்திலும் கேட்டிராத அந்த அதிபயங்கரமான கூச்சல் அமரகிரி மலை முழுவதிலும் எதிரொலித்திருக்கவேண்டும் திரிசூலத்தைக் கையிலெடுத்துக்கொண்டு மாகாளியைப் போல ரௌத்ராகாரத்துடன் பாலாஜியை நெருங்கி வந்தாள் தேவதேவி. திடீரென்று அவள் இவ்விதம் ஆக்ரோஷமடைந்து அடியோடு உருமாறிப்போனது பாலாஜிக்குப் பெரிய அதிர்ச்சியாயிருந்தது. முன்கோபத்தில் மலைக்கன்னி என்ன செய்வாளோ என்று அவன் பதைபதைத்துப்போய் நின்றான்.

''தேவி கன்னிமாதா! இந்த ஏழையை ஏன் இப்படிப் பயமுறுத்துகிறீர்கள்? என் நினைவு தெரிந்து நான் உங்களுக்கு ஒரு அபசாரமும் செய்யவில்லையே அம்மா!'' என்று வாய்விட்டுக் குழறி ஒன்றும் புரியாமல் புலம்பினர் பாலாஜி.

''ஒரு அபசாரமும் செய்யவில்லை? நீ ஒரு அபசாரமும் செய்யவில்லை? அடபாவி! என் ஜீவனை என்னிடமிருந்து பிடுங்கிக்கொண்டுவிடப் பார்த்தாயே மகா பாவி! இதைவிட எனக்கு இன்னும் வேறு என்ன அபசாரமும், துரோகமும் நீ செய்யவேண்டும்? எவருக்காக இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளாக இங்கு நான் கடும் தவமிருக்கிறேனே, எவர் ஒருவருக்காக பல நூற்றாண்டுகளாக ஏங்கி ஏங்கிப் புழுவாகத் துடித்துக்கொண்டிருக்கிறேனே இந்த உத்தம புருஷன், ஆணழகன், என் உயிருக்கினியவன் இங்கு வந்திருப்பதை ஏன் முன்பே எனக்குச் சொல்லவில்லை?'' என்று ரௌத்ராகாரத்துடன் முழங்கிய தேவதேவி பாலாஜியைக் குத்திப் பிளந்து அங்கமங்கமாகப் பிய்த்தெறியத் திரிசூலத்தைச் சுழற்றிக்கொண்டு நெருங்கினாள்.

பாலாஜியின் நாக்கு உலர்ந்துபோய் அவரின் வாயிலிருந்து வார்த்தைகள் வெளிவரவில்லை. உடல் வெலவெலத்து விழிகள் பிதுங்க, அவர், ''ஐயோ ஜோதி!'' என்று அலறினர். அவர் மீது பட்டதும் படாததுமாக நின்ற திரிசூலத்தைத் தேவதேவி பளிச்சென்று தூரத்தில் வீசியெறிந்தாள். கருங்கல் தரையில் சூலம் விழுந்து கணீரென்று சப்தம் கேட்டபொழுதுதான் பாலாஜிக்குப் போன உயிர்திரும்பி வந்ததைப்போலிருந்தது.

''கன்னிமாதா! அரைக்கணத்தில் எவ்வளவு பெரிய அநியாயம் செய்துவிடப் பார்த்தீர்கள்? ஒரு பாபமுமறியாத என்னைக் கொன்றுவிடப் பார்த்தீர்களே! இது தர்மமா தேவி?'' என்று கண்களில் கண்ணீர் பெருக முற்றிலும் பயம் தெளியாமல் பாலாஜி கேட்டார்.

அவரின் முறையீடு தேவியின் செவிகளில் பட்டதாகவே தெரியவில்லை. உச்சந் தலையிலிருந்து உள்ளங் கால் வரையில் அவளுடைய மிருதுவான சரீரம் கடுமையான குளிர்க்காய்ச்சல் கண்டதைப்போல நடுங்கியது. கண்களிலிருந்து மாலை மாலையாகக் கண்ணீர் வடித்துக்கொண்டே, ''என்னை மன்னித்துவிடுங்கள் ஐயா! திடீரென்று ஏற்பட்ட அதிர்ச்சியில் அறிவைப் பறிகொடுத்துவிட்டேன். பாவம்! உங்களுக்கு என்ன தெரியும்? இருபத்தைந்து நூற்றாண்டுகளுக்கு முன்னால் வெறியிலே மிலேச்சத்தனமாக நான் படுகொலைசெய்த அதே விஜயகேசரிதான் உங்களுடைய வளர்ப்புப் பிள்ளை என்பதை நீங்கள் எப்படி அறிவீர்கள்? ஐயோ கேசரி! சர்வ வல்லமை படைத்தவளென்று பெருமிதத்துடனிருக்கும் எனக்கு, காலத்தையும் கடல்களையும் கடந்து சித்தரின் சத்தியவாக்கை மெய்ப்பிக்க நீ இங்கு வந்திருப்பதை அறியாமல் போனேனே! ஐயோ! நீ வந்தவுடன் இங்கு வந்து பார்த்திருக்கக்கூடாதா? கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போய்விடுமோ? என் தெய்வங்களே! மறுபடியும் சதிசெய்து என் பதியை என்னிடமிருந்து பிரித்துவிடாதீர்கள்! காத்துக் காத்துக் கணக்கில்லாத ஆண்டுகளாகக் காத்திருக்கும் என்னை மறுபடியும் கைவிட்டுப் போய்விடாதே கேசரி! ஐயோ நான் என்ன செய்வேன்? என் அன்பரின் முகத்தைப் பாருங்கள் ஐயா! பால் வடியும், நிஷ்களங்கமான அந்த முகத்தைப் பாருங்கள் ஐயா! கடுமையான நோயிலும் கோடி சூரியப் பிரகாசத்துடன் விளங்கும் விஜயகேசரியின் முகத்தை நன்றாகப் பாருங்கள் ஐயா! என் அரண்மனையில், என் அருகிலேயே என் பதி வந்திருந்தும் அவரை அறியாமலும் கவனியாமலும் இருந்துவிட்ட இந்தப் பாபியை, நீங்களாவது வலுக்கட்டாயப்படுத்தி இங்கே அழைத்து வந்திருக்கக்கூடாதா? ஐயோ என் விஜயகேசரி! என் விஜயகேசரி!''

தேவதேவி தன்னை மறந்து உணர்ச்சி வெறியில் உலகத்தையே மறந்து முகத்திலும் மார்பிலும் பளார் பளார்

என்று ஓங்கி அடித்துக்கொண்டு அலறித் துடித்தாள். அகங்காரமும் அதிகார மமதையும் அமானுஷ்யமான சக்தியும் படைத்த கன்னிமாதா பச்சைக் குழந்தையைப்போல அவ்விதம் தேம்பித் தேம்பி அழுவதைப் பார்த்து ஒன்றும் புரியாமல் கலங்கிப்போய் நின்ற பாலாஜிக்கு ஜோதிவர்மன் உயிர் விநாடிக்கு விநாடி ஊசலாடிக்கொண்டிருக்கும் ஞாபகம் வந்தது.

"கன்னிமாதா! நீங்கள் இப்படி மனம் தளர்ந்து புலம்பிக்கொண்டிருந்தால் என் மகன் பரலோகம் போய்ச் சேர்ந்துவிடுவான். நீங்கள் நினைப்பதைப்போல என் மகன் ஜோதி விஜயகேசரியாகவே இருந்தாலும் முதலில் அவனைப் பிழைக்கவைத்துவிட்டுப் பிறகு மற்றதைக் கவனியுங்கள் தேவி" என்றான்.

"ஆம்! ஆம்! காலத்தையெல்லாம் கடந்து வரவேண்டிய இடத்துக்கு வந்து சேர்ந்திருக்கும் என் பிராணபதியை முதலில் உயிர்ப்பிக்கவேண்டும். என் கைக்கு எட்டாததூரத்திற்குப்போவதன் முன்னால் கடவுளின் அருளோடுஅவரைக் குணப்படுத்தவேண்டும். அதை இந்தப் பேதைக்கு நல்ல நேரத்தில் ஞாபகப்படுத்தினீர்கள் ஐயா!" என்று சொல்லிக்கொண்டே கயிற்றுக் கட்டிலின் தலைப் பக்கத்தில் போய் உட்கார்ந்துகொண்டு, "அந்த மருந்துக் கலயத்தைத் தயவு செய்து இப்படிக் கொடுங்கள்!" என்றாள்.

மருந்துக் கலயத்தைக் கையில் வாங்கிக்கொண்டவுடன் ஒரு கையினால் ஜோதியின் உதடுகளைப் பிரித்துக்கொண்டு இன்னொரு கையினால் கலயத்திலிருந்த மருந்தை அவன் வாயில் ஊற்ற முயற்சித்தாள் தேவதேவி. ஆனால், அவள் முயற்சி பலிக்கவில்லை. கலயத்தைப்பிடித்திருந்த கரம் வெடவெடவென்று நடுங்க உள்ளேயிருந்த திராவகமும் ததும்பி ஜோதியின் மேலெல்லாம் சிந்தியது.

வெடவெடவென்று நடுங்கும் அவளுடைய விரல்கள் மலைக்கன்னியின் பதட்டத்தை எடுத்துக் காட்டுவதாயிருந்

தது. குமுறிக்கொண்டு அனல் கக்கும் கோரமான எரிமலையைப்போல சில நிமிடங்களுக்கு முன் நெருப்பைக் கக்கிய அதே மலைக்கன்னி இப்பொழுது ஒரு சாதாரண கிராமியப் பெண்ணைப்போல அஞ்சி நடுங்கிக் கலங்கிப்போயிருந்தது பாலாஜிக்கு ஆச்சர்யமாயிருந்தது உணர்ச்சியின் பிம்பமாக உட்கார்ந்திருந்த தேவதேவியையும் உணர்ச்சியற்ற மரக்கட்டையைப்போல உயிருக்கு மன்றாடிக்கொண்டு படுத்திருக்கும் ஜோதிவர்மனையும் இமைகொட்டாமல் பாலாஜி பார்த்துக்கொண்டு நின்றார்.

"ஐயா! கொஞ்சம் இப்படி என் அருகில் வாருங்கள்" என்று அழைத்தாள் தேவதேவி. விக்கலுடனும் விம்மலுடனும் அழைத்த அந்தக் குரல் ஜீவனை இழந்து கிணற்றுக்குள் இருந்து பேசுவதைப் போலிருந்தது.

"இந்த மருந்தைத் தயவுசெய்து இவர் வாயில் ஊற்றுங்கள் ஐயா! என்னால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. என் ஸ்வாமிக்கு மருந்து கொடுக்கக்கூட என்னால் முடியவில்லை. என் கை பதறுகிறது. சீக்கிரமாக இந்த மருந்தை அவர் வாயில் ஊற்றுங்கள் ஐயா!" என்று சொல்லிய பொழுது மாலை மாலையாக அவள் கண்களின் வழியாகக் கண்ணீர் வழிந்து ஜோதியின் நெற்றியிலும் முத்து முத்தாக விழுந்தது. நான் எவ்வளவு சக்திவாய்ந்த மகாராணியாயிருந்தாலும் சாகாவரம் பெற்ற சிரஞ்சீவியாயிருந்தாலும் எல்லாப் பெண்களையும் போல நானும் ஒரு சாதாரண பெண்தான் என்று தேவதேவி சொல்லாமல் சொல்லிக்காட்டி பாலாஜியின் உதவியை நாடுவதைப் போலிருந்தது அவளுடைய கம்மிய தொனியும் கண்களிலிருந்து வடிந்த கண்ணீரும்.

பாலாஜி, அவள் கரத்திலிருந்த கலயத்தைத் தன்னுடைய கையில் வாங்கிக்கொண்டான். ஜோதியின் இரு உதடுகளையும் தேவதேவி லேசாகப் பிரிக்க சொட்டுச் சொட்டாக ஔஷதத்தை ஜோதியின் வாயில் பாலாஜி ஊற்றினர். சுமார் முப்பது சொட்டு ஊற்றியவுடன்.

"போதும் ஐயா! கலயத்தை அப்படிக் கீழே வைத்துவிட்டு வெளியேபோய் உக்கிரசேனனைக் கொஞ்சம் அழைத்து வாருங்கள்" என்றாள் மலைக்கன்னி.

பாலாஜி அறைக்கு வெளியே வந்தபொழுது அங்கு உக்கிரசேனரும் சித்ராவும் மட்டுமல்ல ராஜகுருவும் அரண்மனையைச் சேர்ந்த வேறு பல முக்கியஸ்தர்களும் ஒரு டஜன் ஈட்டி வீரர்களும் கவலை தோய்ந்த முகத்துடன் கூடியிருந்தார்கள். கொஞ்ச நேரத்துக்கு முன்னால் அந்த மலைச் சிகரமே கிடு கிடுத்துப் போகும்படி மலைக்கன்னி போட்ட கூக்குரலைக் கேட்டு அவர்கள் அங்கு கூடியிருக்கவேண்டுமென்று பாலாஜிக்குத் தோன்றியது. கூச்சலைக் கேட்டு அவர்கள் பரபரப்போடு வந்து கூடியபொழுதிலும் தேவியின் உத்தரவில்லாமல் உள்ளே நுழையக்கூடாதென்பதற்காக வெளியிலேயே கலவரத்துடனும் கவலையுடனும் காத்திருந்தார்கள். பாலாஜியைக் கண்டவுடன், "என்ன ஐயா! என்ன நடந்தது? கன்னிமாதா ஏன் அப்படிச் சப்தம்போட்டாள்?" என்று ராஜகுரு முதலில் வினவினார்.

"தயவுசெய்து என்னிடம் ஒன்றும் கேட்காதீர்கள். தேவியின் சொந்த விஷயங்களைப்பற்றி அவளுடைய அனுமதியில்லாமல் நான் ஏதும் பேசக்கூடாது. சொல்லவேண்டிய நேரம் வரும்பொழுது தேவதேவி தானாகவே எல்லாம் சொல்லுவாள்!" பிறகு உக்கிரசேனரைப் பார்த்து தேவி உங்களை அழைக்கிறாள் என்றார் பாலாஜி.

பாலாஜியுடன் உக்கிரசேனர் உள்ளே நுழைந்தபொழுது ஜோதியின் கட்டிலில் அவள் கண்ணீர் சிந்தியவாறு உட்கார்ந்திருப்பதையும் அவள் உடுப்பெல்லாம் கண்ணீரில் தொப்பலாக நனைந்துபோயிருப்பதையும் பார்த்து உக்கிரசேனர் திகைத்துப்போனார். அந்த நிலைமையில் தேவதேவியை அவர் பார்ப்பது இதுவே முதன் முறையாதலால் அவருக்கு ஒன்றுமே விளங்கவில்லை. தூரத்தில் மண்டியிட்டு

வணங்கியவண்ணம் ''கன்னிமாதா! இதோ உங்கள் ஊழியன் வந்திருக்கிறேன்'' என்றார் உக்கிரசேனர்.

''எழுந்திரு உக்கிரசேனா! இனி என் முன் நீ மண்டியிட்டு வணங்கவேண்டாம். இந்த வினாடியிலிருந்து நீ என்னுடைய ஊழியனுமில்லை. நீ என் ஆப்த நண்பன். உன் மகாராணிக்கு நீ எவ்வளவு பெரிய உபகாரம் செய்திருக்கிறாய் என்பது உனக்குத் தெரியுமா? நொந்து போய்க் கிடந்த என் வாழ்வில் ஒரு புதிய ஒளியை ஏற்படுத்தி மலரச் செய்த உத்தம நண்பன் நீ. போ! சீக்கிரம் என் அந்தப்புரத்துக்கு ஓடிப்போய் மயில் விசிறியை எடுத்துக்கொண்டு ஓடிவா!' என்றாள் தேவதேவி.

தன்னுடைய 60 வயது வாழ்க்கையிலே கனிவான மொழியை தேவதேவியின் வாயிலிருந்து கேட்டறியாத உக்கிரசேனருக்குத் தான் காண்பது கனவா அல்லதுநனவா என்றே புரியவில்லை. ''நீ என் ஊழியனில்லை. என் ஆப்த நண்பன்'' என்று தேவதேவி சொல்லியது உக்கிரசேனருக்கு சொப்பனம் போலிருந்தது. மண்டியிட்டு உட்கார்ந்திருந்தவர் ஒன்றும் புரியாமல் அப்படியே ஸ்தம்பித்துப் போய் உட்கார்ந்திருந்தார்.

''கன்னிமாதா சொல்லுவது காதில்விழவில்லை? சீக்கிரம் போய் விசிறியைக்கொண்டுவாருங்கள்'' என்றுஉக்கிரசேனர் அருகில் வந்து பாலாஜி சொல்லிய பொழுது தான் உக்கிரசேனருக்கு கனவிலிருந்து கண் விழித்ததைப் போலிருந்தது. அவருடைய திக்பிரமையின் காரணத்தை உணர்ந்து கொண்ட தேவதேவி ''என்னிடம் ஏற்பட்டிருக்கும் இந்த ஆச்சரியமான மாறுதலைக் கண்டு திகைத்துப் போயிருக்கிறான். பாவம் அவனுக்குஎன்ன தெரியும்!''என்றாள். பிறகு உக்கிரசேனர் பக்கம் திரும்பி ''பிறகு எல்லாம் சொல்லுகிறேன் உக்கிரசேனா! முதலில் மயில் விசிறியை சீக்கிரம் எடுத்து வா!'' என்றாள்.

இந்த சமயம் பார்த்து "வெளியே ராஜகுருவும் அரண் மனைப் பிரதானிகளும் கவலையோடு கூடியிருக்கிறார்கள் தேவி!" என்றான் பாலாஜி.

"அவர்கள் யார்? இங்கு அழைத்துவா உக்கிரசேனா! போகும் பொழுது வெளியில் கூடியிருப்பவர்களையும் நான் போகச் சொன்னதாகச் சொல்லிவிட்டுப் போ! அழையாம லிருக்கும் பொழுது அவர்களுக்கு இங்கு என்ன வேலை!" என்றாள் தேவதேவி.

தளபதி உக்கிரசேனர் மயில் விசிறியைஎடுத்துவரதேவி யின் அந்தப்புரத்துக்கு விழுந்தடித்துக் கொண்டு ஓடினார். போகும் பொழுது ராஜகுருவையும் மற்றவர்களையும் போகச் சொல்லி விட்டு அவர் தலைதெறிக்க ஓடுகையில் மற்றவர்கள் ஆச்சரியத்துடன் அவர் ஓடுவதை இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள். சித்ரா ஜோதிக்கு ஏதேனும் அபாயம் நேரிட்டிருக்க வேண்டுமென் றெண்ணி விஷயம் தெரிந்து கொள்ளுவதற்காக உக்கிர சேனரைப் பின்பற்றி ஓடினாள்.

## அத்தியாயம் 4.

தளபதி உக்கிரசேனர் தேவதேவியின் அந்தப்புரத் துக்குப் போவதின் முன்னால் பலரிடம் அனுமதி வாங்கிக் கொண்டே ஐந்தாவது அடுக்கிலிருந்த தேவதேவியின் சொந்த அறைக்குள் நுழைய முடிந்தது. அழகான வேலைப் பாடுகளுடன் கூடிய தந்தப் படியில் பொருத்தியிருந்த மயில் விசிறியை எடுத்துக் கொண்டு அவர் திரும்பி வந்த

பொழுது உயரே போவதற்கு அனுமதிக்கப்படாத சித்ரா கீழ்த் தளத்தில் கவலையோடு நின்று கொண்டிருந்தாள்.

தகப்பனைக் கண்டதும் "அவர் எப்படியிருக்கிறார் அப்பா? தேவி மருந்து கொடுத்தாளா?" என்று சித்ரா கேட்டாள்.

"மருந்து கொடுத்திருப்பாள் சித்ரா. இன்னும் ஜோதிக்கு அறிவு திரும்பவில்லை. தேவி போனபிறகு நீ வந்து பார்க்கலாம். கவலைப்படாமல் கொஞ்சம் பொறுமையோடு இரு!" என்று சொல்லிக் கொண்டே ஓடினார் உக்கிரசேனர்.

"நானும் உள்ளே வருகிறேனே அப்பா! நான் வந்தால் என்ன?" என்று கேட்டுக் கொண்டு சித்ராவும் அவர் பின்னால் ஓடிவந்தாள்.

"தேவியின் போக்கு உனக்குத் தெரியாது குழந்தை. அவள் அழைக்காவிட்டால் உள்ளே வரக்கூடாது. உத்தரவு மீறப்படுவதை அவள் ஒரு கணமும் பொறுக்கமாட்டாள். அவள் போனபிறகு நீ வரலாம் சித்ரா" என்று நல்ல வார்த்தை சொல்லி அவளைச் சமாதானப்படுத்தி வெளியிலிருக்கச் சொல்லிவிட்டு உக்கிரசேனர் மாத்திரம் ஜோதியின் அறைக்குத் திரும்பினார்.

உக்கிரசேனர் கொண்டு வந்த மயில் விசிறியை தேவதேவி வாங்கிக் கொண்டு "சரி, நீ போகலாம் உக்கிரசேனா! அழைக்கும் பொழுது வருவதற்கு நீ வெளியே இரு!" என்று உத்தரவிட்டாள். உக்கிரசேனர் வெளியேறிய பின் மயில் விசிறியைக் கையிலெடுத்துக் கொண்டு எஜமானுக்குப் பணிவிடை செய்யும் ஒரு பணிப் பெண்ணைப் போல பேச்சு மூச்சு இல்லாமல் கிடந்த ஜோதிவர்மனுக்கு அவள் மெதுவாக விசிறினாள்.

நான் வரத் தயங்கினாலும் என்னைச் சற்று கட்டாயப் படுத்தியேனும் நேற்று இங்கு அழைத்து வந்திருக்கக்

கூடாதா? என் பிரபு இவ்வளவு அருகிலிருந்தும் கூட அவர் தவிப்பது தெரியாமல் நான் வராதிருந்துவிட்டேன். எவ்வளவு பெரிய பாவி நான்! என்று தனக்குள் பேசிக் கொண்டாள் தேவதேவி.

''உங்களை நான் எப்படிக் கட்டாயப்படுத்தி அழைத்து வர முடியும் கன்னிமாதா!'' என்றான் பாலாஜி.

''கன்னிமாதா! தயவு செய்து என்னை இனிமேல் இப்படி அழைக்காதீர்கள் அய்யா? தங்களுக்கு நான் கன்னிமாதாவும் இல்லை, மகாராணியும் இல்லை. எனக்கு நீங்கள் மரியாதை கொடுக்க வேண்டிய அவசியமும் இல்லை! நான் உங்களுடைய மருமகள். என் பெயர் தேவதேவி!'' என்றாள் தேவதேவி.

''நீங்கள் ஏதோ ஒரு பெரிய தவறு செய்கிறீர்கள் தேவதேவி! இவன் என் வளர்ப்பு மகன் ஜோதிவர்மன். ஜமீன்தார் விஜயவர்மனின் ஒரே மகன்'' என்றார் பாலாஜி.

''இருக்கலாம். இந்த ஜன்மத்தில் இவர் பெயர் ஜோதிவர்மனுயிருக்கலாம். முந்திய ஜன்மங்களிலே இன்னும் எவ்வளவோ பெயர்கள் இவருக்கு இருக்கலாம். எந்த நாட்டில் எந்த ஜன்மமெடுத்திருந்தாலும் என்னுடைய விஜயகேசரியை எனக்குத் தெரியும்! கோடானு கோடி ஜனங்களுக்கு மத்தியில் இருந்தாலும் அவரை என் அந்தராத்மா கண்டு பிடித்துவிடும்! இவர் முகத்தைப் பாருங்கள் அய்யா! நன்றாக உற்றுப் பாருங்கள் அய்யா! இவ்வளவு நிஷ்களங்கமான முகம் உலகத்தில் வேறு யாருக்கு உண்டு என்று சொல்லுங்கள் பார்க்கலாம்! விஜயகேசரி வருவார் வருவார் என்று எத்தனை நூற்றாண்டுகளாக இந்தக் காட்டுமிராண்டி ஜனங்களுக்கு மத்தியில் ஏகாங்கியாக நான் காலம் கழித்து வந்தேன்! சர்வஞானசித்தரின் வாக்கு சத்தியவாக்கு என்று நம்பி எத்தனை பொறுமையோடு காத்திருந்தேன். என் பொறுமைதந்த பரிசைப் பாருங்கள் அய்யா! என் பதியை என்னிடம் கொண்டு

வந்து சேர்ந்த உங்களுக்கும் உக்கிரசேனனுக்கும் நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்?என்ன கைம்மாறு செய்தாலும் நீங்கள் செய்த இந்தப் பேருதவிக்கு ஈடு இணையாகுமா?

இப்படிச் சொல்லிக் கொண்டே தேவதேவி ஜோதிவர் மனுக்கு விசிறுகையில் பாலாஜியின் மனம் சந்திரிகா எழுதி வைத்திருந்த வரலாறுகளை ஒரு தடவை ஞாபகப் படுத்திப் பார்த்துக் கொண்டிருந்தது. செம்பவளத் தீவுக்கு வந்து சேர்ந்தது முதல் நடக்கும் ஒவ்வொரு சிறு சம்பவமும் கூட அந்தப் பழைய நம்பமுடியாத வரலாற்றை மேலும் மேலும் ஊர்ஜிதப்படுத்தி வருவதையும் கடைசியாக ஜோதிவர்மனைப் பார்த்த மாத்திரத்தில் அவன் விஜயகேசரியின் சந்ததியைச் சார்ந்தவன் தானென் பதை தேவதேவி தெரிந்து கொண்டுவிட்டதையும் எண்ணி யெண்ணி குழம்பிக் கொண்டிருந்தான் பாலாஜி.

பாலாஜி இப்படிக் குழம்பிக் கொண்டிருக்கையில் தேவதேவி பரபரப்புடன் ''வாருங்கள் அய்யா! சீக்கிரம் வந்து பாருங்கள் அய்யா!'' விஜயகேசரி பிழைத்துக் கொண்டுவிட்டார்! அதோ நெற்றியின் நடுவில் ஒரு சிறு நரம்பு துடிப்பதை நன்கு கவனித்துப் பாருங்கள். அந்த நரம்பு வெளியில் தெரிந்தால் மருந்து பிடிக்க ஆரம்பித்து விட்டதென்று அர்த்தம். இனிக் கொஞ்சம் கூடப் பய மில்லை. சரியாக இன்னும் இரண்டரை நாழிகையில் விஜய கேசரி தூங்கி விழித்துக்கொண்டதைப்போல எழுந்து உட் கார்ந்து விடுவார்! அவர் எழுந்திருப்பதற்குள் அவசர மாகக் கவனிக்க வேண்டிய வேலை ஒன்று இருக்கிறது. வெளியே நிற்கும் அந்தப் பெண் சித்ரா இவருக்கு என்ன வேண்டுமென்று சொன்னீர்கள்? என்று கேட்ட வண்ணம் கட்டிலை விட்டு எழுந்தாள் தேவதேவி.

சித்ரா ஜோதிவர்மனுக்கு என்ன வேண்டும்? என்று தேவதேவி வினவியபொழுது பாலாஜி ஒரு கணம் தயங்கி விட்டு ''அவள் ஜோதியின் மனைவி!'' என்றான்.

"மனைவி! சித்ரா விஜயகேசரியின் மனைவி! அது எப்படி முடியும்? சித்ரா உக்கிரசேனர் மகள் என்றல்லவா சொன்னீர்கள்?" என்று கேட்டாள் தேவதேவி.

"ஆமாம் தேவி! சித்ரா உக்கிரசேனர் மகள்தான். நாங்கள் உக்கிரசேனரின் குகைக்கு வந்தவுடன் இந்நாட்டு சம்பிரதாயப்படி சித்ரா ஜோதிவர்மனுக்கு மாலையிட்டு முத்திரை மோதிரத்தையும் முத்தமிட்டு கணவனாக அவனை வரித்துக் கொண்டாள்! வரும் வழியெல்லாம் ஜோதி நோயில் அவதிப்பட்ட பொழுது அவள் இரவு பகலாக விழித்திருந்து அவனுக்குப் பணிவிடை செய்தாள்" என்றான் பாலாஜி.

"இருக்கட்டுமே! பணிவிடை செய்பவர்களெல்லாம் என் பிரபுவின் பத்தினிகளாகிவிட முடியுமா?" என்றாள் தேவதேவி.

"நாட்டு நடப்பின்படி ஜோதியை மணந்தவள் சித்ரா!" என்றான் பாலாஜி சித்ராவை விட்டுக் கொடுக்காமல்.

"நாட்டு நடப்பு இங்கு வரும் அந்நியர்களைக் கட்டுப் படுத்தாதென்பது அவளுக்குத் தெரிந்திருக்க வேண்டும். தெரியாவிட்டால் அதை அவள் தகப்பன் தெரியும்படி அவளுக்குச் சொல்லியிருக்க வேண்டும். எப்படியானாலென்ன? விஜயகேசரி என் கணவர். எனக்கும் அவருக்குமிடையில் இருப்பவர் எவராயிருந்தாலும் அவருக்கு உயிரோடு இருக்க உரிமை கிடையாது. சித்ரா மடிந்து மறைய வேண்டியவள். மேலே உட்கார்ந்து கடிக்கவரும் கொசுவை நசுக்கிக் கொல்வதைப்போல சித்ராவையும் அழித்து ஒழிப்பதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை?" என்று சொல்லியபொழுது மலைக்கன்னியின் கண்களில் குரோதமும் பொறாமையும் பிரதிபலிப்பதை பாலாஜி கவனித்தான். சொல்லுவதைப்போல செய்வதற்கும் அவள் திட்டமிட்டிருக்கிறாளென்பதை ஒருவாறு அவன் புரிந்து

கொண்டு "பாவம்! சித்ரா என்ன குற்றம் செய்தாள் அவளைக் கொலை செய்வதற்கு?" என்றார் அங்கலாய்ப்புடன்.

"என்ன குற்றம் செய்தாள்? சித்ரா என்ன குற்றம் செய்தாள் என்று கேட்கிறீர்கள்? எனக்கும் என் பிரபுவுக்குமிடையில் இருப்பதைவிட அவள் இன்னும் என்ன குற்றம் செய்ய வேண்டும் அய்யா! காத்திருந்தவள் கணவனை நேற்று வந்தவள் தட்டிக் கொண்டு போகப் பார்ப்பது குற்றமில்லையா? ஆயிரமாயிரம் ஆண்டுகளாக இந்தத் தீவாந்திரத்தில் நான் கடுந்தவம் செய்து கொண்டிருக்கிறேன். தவத்தின் பலனையடையும் தருணத்தில் அதை இன்னொருவள் வந்து பறித்துக் கொண்டு போகப் பார்ப்பது குற்றமில்லையா அய்யா? விஜயகேசரி எப்படியும் என்றைக்காவது ஒருநாள் என்னைத் தேடிவருவார். எல்லோரையும்போல என் வாழ்க்கையும் மலரும் என்று எத்தனை காலமாக நான் ஏங்கி ஏங்கிச் சாகாமல் செத்துக் கொண்டிருக்கிறேன்! போகபாக்கியங்களை எல்லாம் துறந்து எவ்வளவு கடுமையான விரதத்தை நான் கைக்கொண்டிருக்கிறேனென்பது உங்களுக்குத் தெரியுமா? விரதத்தின் பலன் கைமேல் கிட்டும் தருணத்தில் அதை இன்னொருவள் அபகரித்துக் கொண்டுபோக ஒருபோதும் நான்விடமாட்டேன். என் பிரபு பிரக்ஞை தெளிந்து கண் விழித்துப் பார்த்தால் அந்தக் காட்டுமிராண்டியை உதறித் தள்ளிவிட்டு என்னை அங்கீகரிப்பாரென்பது எனக்குத் தெரியும். நான் எங்கே அவள் எங்கே! என் ரூபலாவண்யத்துக்கும் குப்பை மேட்டில் புரளும் சித்ராவின் தோற்றத்துக்கும் மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசம்! ஆயினும் அவள் உயிருடனிருந்தால் எப்பொழுதாவது ஒரு சமயம் என்பிரபு அவளை நினைக்கலாம். நோயுற்றிருந்த காலத்தில் அன்புடன் ஆதரித்துப் பணிவிடை செய்தவள் என்ற பரிவினாலாவது அவள் ஞாபகம் என்றைக்காவது ஒருநாள் என் பிரபுவின் நினைவுக்கு வரலாம். அதுவும்

கூடாது. என் பிரபு எனது ஏகபோக உரிமையுடைய என் ஏகாதிபத்தியம். அதில் என்னைத் தவிர, என் ஒருவளைத் தவிர வேறு எவருக்கும் எந்தக் காலத்திலும் என்ன காரணத்தை முன்னிட்டும் அணுவளவுகூட இடம்கிடையாது. எனக்குப் போட்டியாக முளைத்தவள், என் வாழ்வைச் சீர் குலைக்கத் தோன்றியவள் மறைந்து ஒழியத்தான் வேண்டும்! இதில் கருணைக்கும் யோசனைக்கும் இடமுமில்லை. அவகாசமுமில்லை!'' என்று மளமளவென்று வார்த்தைகளைச் சிந்தினள் மலைக்கன்னி.

''கொஞ்சம் யோசித்துச் செய்யுங்கள் தேவி! தீமையினால் தீமைதான் விளையும். நன்மை விளையாது. கத்தி கொண்டு ஜயிப்பவன் அதே கத்தியினால் மடிவான் என்ற பழமொழியை நீங்கள் கேட்டதில்லையா? உங்கள் நன்மையை உத்தேசித்தே சொல்லுகிறேன். மன எழுச்சி தணிந்தபின் ஆற அமர நிதானமாகச் சற்று சிந்தித்துப் பார்த்துவிட்டு எதையும் செய்யுங்கள்'' என்று முறையிட்டான் பாலாஜி.

''தீமை! எது தீமை? கடிக்க வரும் பாம்பை நசுக்கி அழிப்பதா தீமை? கொல்லவரும் காண்டாமிருகத்தை அடித்துக் கொன்று அழிப்பதா தீமை? அப்படியானால் மனிதன் இவ்வுலகிலேதான் வாழச் செய்யும் ஒவ்வொரு சிறுகாரியமும் தீமைதான்! தினே தினே தெரிந்தும் தெரியாமலும் கோடிக்கணக்கான தீமைகளைப் புரிந்து பாவமூட்டையைச் சுமக்க வேண்டியவனுகி விடுவான் மனிதன்! அவன் நடக்கும்பொழுது எவ்வளவு கோடிக்கிருமிகள் அவன் காலடியிலே மிதிபட்டுச் சாகின்றன? இது தீமையில்லையா அய்யா? பசித்த வயிற்றை நிரப்ப எவ்வளவு ஆட்டையும் மாட்டையும் அடித்துக்கொன்று சமைத்து விழுங்குகிருன் மனிதன்? இது தீமையில்லையா? வாய் விட்டு அழத்தெரியாத மரம் செடி கொடிகளிலிருந்து காய்கனிகளைச் சிதைத்துப் பறித்து உண்கிருனே அது தீமையில்லையா? நீங்கள் வர்ணிக்கும் தீமையென்ற சொல்லுக்கு

அர்த்தமேயில்லை. வாழப்பிறந்தவர்கள் மனிதர்கள். சாகப்பிறந்தவர்களல்ல. வாழ்க்கை வளம்பெற முட்டுக் கட்டையாயிருப்பவைகளை அழித்து ஒழித்து வெற்றி கொண்டு வாழ்வதுதான் உலகம் தோன்றிய நாள் முதல் இன்றுவரை இருந்துவரும் இயற்கையின் நியதி!'' என்றாள் தேவதேவி.

''விசித்திரமாயிருக்கிறது அம்மா உங்கள் வேதாந்தம்! கொலை செய்வது பாபமில்லையென்றால் வேறு எது பாபமென்பதுதான் எங்களுக்குப் புரியவில்லை! மனிதன் தனது வாழ்வு வளம்பெற, பசித்த வயிறு நிரம்ப ஆடு மாடு பறவை இனங்களைக் கொன்று புசிப்பதும் காய் கனி கிழங்குகளை வெட்டிப் புசிப்பதும் தொன்று தொட்டு இருந்துவரும் வழக்கம். இதற்கும் நிரபராதியான சித்ராவைக் கொடுமையாகப் படுகொலை செய்வதற்கும் வித்தியாசமில்லையா? ஒவ்வொருவரும் தனது மனோரதம் நிறைவேற அதற்குக் குறுக்கே நிற்பவர்களையெல்லாம் அழித்து துவம்சம் செய்வதுதான் தர்ம நியாயமென்றால் இந்த உலகமே நடைபெறாது! எவ்வளவோ நூற்றாண்டுகளுக்கு முன் இப்புவியில் மானிடப் பூண்டு அற்றுப்போயிருக்கும்!''

பாலாஜி சித்ராவுக்காகப் பரிந்து கொண்டு தர்ம நியாயங்களை எடுத்துச் சொல்லி வாதித்தபொழுது மலைக்கன்னி ஆடாமல், அசையாமல் மௌனமாயிருந்தாள். அந்த மௌனம் அதிபயங்கரமாக வெடிக்கப் போகும் எரிமலையைப் போலிருந்தது. மௌனமாயிருந்தாலும் அவள் மனதில் ஏற்பட்டுக் கொண்டிருந்த சூறாவளியை அவளுடைய முகம் பாலாஜிக்குத் தெளிவாக எடுத்துக் காட்டியது.

''ஜோதிவர்மன், சித்ராவுக்கே உரியவன். தூயமனதுடன் செய்த சேவையினால் அவள் பெற்ற பரிசை துராகிருதமாக நீ அபகரிக்கப் பார்க்கிறாய்! என்று தேவதேவியிடம் சொல்வதா? அல்லது கலக்கில்லாத ஆண்டு

களாகக் காத்திருக்கும் உனக்கே என்மகன் உரியவன். எங்கிருந்தோ முளைத்தவள் சித்ரா! அவளை அழித்து உன் பதியை நீ அடைவதுதான் நியாயம்! என்று தேவதேவியிடம் பகிரங்கமாகச் சொல்லாமல் அவள் இஷ்டம்போல் செய்யட்டுமென்று விட்டு சும்மா இருந்துவிடுவதா?'' இப்படிப் போராடிக் கொண்டிருந்தது பாலாஜியின் மனம். சித்ரா ஜோதியை அடைய முடியாவிட்டாலும் அவள் உயிரையாவது காப்பாற்றிவிட்டால் அதுவே பெரிய விஷயமென்று பாலாஜி நினைத்தார். தேவதேவிக்கு ஏற்பட்டிருந்த கொலை வெறியில் சித்ராவின் உயிர் தப்புமா? என்பது அவருக்குப் பெரும் பிரச்சினையாகவும், சந்தேகமாகவும் இருந்தது.

பிறகு சித்ராவின் உயிரை எப்படியும் காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணத்துடன் ''தேவதேவி, உங்களுக்குக் கருணையென்பதே கொஞ்சம்கூட இல்லையா தேவி? சற்று நேரத்துக்கு முன்புவரை எந்தப் பெண் ஜோதியைத் தூய உள்ளத்துடன் நேசித்து இராப்பகலாகப் பணிவிடை செய்தாளோ அவளிடமிருந்து அவள் விரும்பிய புருஷனை நீங்கள் பறித்துக் கொள்ளுகிறீர்கள். அந்தப் பெண்ணின் ஆசையை நிராசையாக்குவதோடு நில்லாமல் அவளைக் கொடுமையாகக் கொலை செய்யவும் வேண்டுமா? சித்ராவின் ஸ்தானத்தில் உங்களை வைத்துக் கொண்டு பாருங்கள்! வாழ வேண்டும், மனம் விரும்பிய வாலிபனை மணந்து ஆனந்தமாக வாழ வேண்டுமென்று நீங்கள் நினைப்பதைப்போல அவளும் நினைப்பது ஒரு குற்றமா? அந்தக் குற்றத்துக்கு மரணம்தான் தண்டனையா? தயவு செய்து என் வார்த்தையைக் கேளுங்கள். இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்குப் பின்னால் காத்திருந்த கணவனை நீங்கள் அடையப்போகும் மங்களமான தருணத்தில் அதன் புனிதத் தன்மையை மாசுபடுத்த ஒரு கொலை நடக்க வேண்டாம்! சித்ரா எங்கேயாவது தப்பிப் பிழைத்து ஓடிப் போகட்டும். அவளை உயிரோடு விட்டுவிடுங்கள். உங்

களை மன்றாடிக் கேட்கிறேன். என் மகன் கல்யாணம் ஒரு படுகொலையை அடுத்து, அவனை உள்ளன்போடு நேசித்தவளின் பிரேதத்தின் முன்னிலையில் நடக்க வேண்டாம். உங்களுக்கு இன்னொன்றும் சொல்லுகிறேன். ஜோதியின் போக்கை நீங்கள் அறியமாட்டீர்கள். சிறு குழந்தையில் இருந்து அவனை வளர்த்த எனக்குத் தெரியும் பண்பட்ட அவன் மனோபாவம். சித்ராவை நீங்கள் படுகொலை செய்தது தெரிந்தால் உங்களை அவன் ஏறெடுத்தும் பார்க்கமாட்டான். அவனைப் பயமுறுத்த முடியாது. என் மகன் ஜோதி சாவுக்குப் பயந்தவனில்லை. வெறியில் ஒருமுறை விஜயகேசரியைக் கொன்றீர்கள். அதன் பலன் இருபத்தைந்து நூற்றாண்டுகள் வரையில் மனம் புழுங்கி நொந்து உள்ளூரத் தண்டனையனுபவித்தீர்கள். மீண்டும் அதேபயங்கரமான தவறைச் செய்தால் கைக்குக் கிட்டிய கனி வாய்க்குக்கிட்டாமல் போய்விடும்! நான் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டேன். பிறகு உங்கள் இஷ்டம்'' என்றார் பாலாஜி.

தேவதேவி பாலாஜி சொல்லுவதைக் கேட்டு அப்படியே சிலைபோலச் சமைந்து நின்றாள்.

சிறிது நேரத்துக்குப் பின் ''உங்கள்யோசனையை நான் ஏற்றுக் கொள்ளுகிறேன். என் பிரபுவை நான் திரும்பப் பெறும்பொழுது அந்தச் சந்தோஷமான சமயத்தில் ஒரு கொலை நடக்க வேண்டாம். கொடுமைப்படுத்த வேண்டுமென்பதற்காக நான் யாரையும் இம்சிப்பதில்லை அய்யா! உங்களுக்காக சித்ராவுக்கு நான் உயிர்ப்பிச்சை அளிக்கிறேன். அவளை உடனே இங்கு வரச் சொல்லுங்கள். என் பிரபு பிரக்ஞை தெளிந்து எழுந்திருப்பதற்குள் அவளுடைய விவகாரம் தீர்ந்துபோய்விட வேண்டும்!'' என்றாள் தேவதேவி.

தன்னுடைய முறையீடுகள் ஓரளவு வெற்றியளித்து விட்டதென்ற மகிழ்ச்சியோடு பாலாஜி வெளியே சென்று

சித்ராவை மாத்திரம் மகாராணி அழைப்பதாகச் சொல்லி உள்ளே வரச் சொன்னான். ஜோதிவர்மன் பிரக்ஞை தெளிந்து "சித்ரா எங்கே!" என்று கேட்டிருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் அவள் ஆவல் துடிக்க உள்ளே ஓடி வந்தாள். ஆசையோடு ஜோதியின் கட்டிலை அவள் நெருங்கிய பொழுது "நில்! கட்டிலை நெருங்காதே! அப்படியே நில்! என்று அதிகார தோரணையில் தேவதேவி உத்தரவிடுவதைக் கேட்டு அவள் அசந்துபோய் அப்படியே ஸ்தம்பித்து நின்றாள்.

"உக்கிரசேனன் மகள் சித்ரா தானே நீ!"

"ஆம் கன்னிமாதா!" என்று கைகட்டி வாய் பொத்தி பயந்து நடுங்கிக் கொண்டு பதில் சொன்னாள் சித்ரா. அவளுடைய வாய்தான் பேசியதே தவிர அவள் கவனமெல்லாம் கட்டிலில் படுத்திருந்த ஜோதிவர்மன் மீதே பதிந்திருந்தது!

"யாருடைய அனுமதியின் மீது நீ என் அரண்மனைக்கு வந்தாய்? என் உத்தரவில்லாமல் அமரகிரியின் சுற்றுடல்களுக்குக்கூட யாரும் வரக்கூடாதென்பது உனக்குத் தெரியுமா தெரியாதா? கேட்ட கேள்விக்குப் பதில் சொல் என்றாள் தேவதேவி! அவளுடைய குரலில் கொடூரம் தொனிப்பதைக் கண்டு நடுநடுங்கிப்போன சித்ரா "தெரியும் கன்னிமாதா!" என்றாள்.

"என் அனுமதியின்றி இந்த அரண்மனைக்கு வந்தது நீ செய்த மன்னிக்க முடியாத முதல் குற்றம். போகட்டும், கட்டிலில் கடும் நோயுடன் படுத்திருக்கும் இந்த மனிதர் யார்? இவர் உனக்கு என்ன உறவினர்?" என்று கேட்டாள் மலைக்கன்னி.

"இவர்...இவர்...இந்நாட்டுக்கு வந்த விருந்தாளி...!" என்று சித்ரா சொல்லி முடிப்பதற்குள் "இந்த நாட்டுக்கு வந்த விருந்தாளியா? அல்லது உன்னுடைய மகாராணி

யின் விருந்தாளியா? இவர்கள் என் விருந்தாளிகளென்பதை உன் தகப்பன் உனக்குச் சொல்லியிருக்க வேண்டுமே!'' என்ருள் தேவதேவி.

''தெரியும் கன்னிமாதா! இவர்கள் உங்களுடைய விருந்தாளிகளென்பது எனக்குத் தெரியும். நோயுடன் படுத்திருக்கும் ஜோதி என்னுடைய கணவர்!'' என்று தடுமாறிக் கொண்டு சொன்ஞள் சித்ரா.

''உன் கணவர்! நோயுடன் படுத்திருப்பவர் உன் கணவர்! என் விருந்தாளியை உனது கணவராக்கிக் கொள்ள யார் உனக்கு அனுமதி கொடுத்தது?'' என்ருள் தேவி.

''நம்நாட்டு நடப்பின்படி அவருக்கு மாலையிட்டு மணந்தேன் கன்னிமாதா!'' என்ருள் சித்ரா.

''நம்நாட்டு நடப்பின்படி நம் நாட்டுக்கு அந்நியரான ஒருவரை அதிலும் என் விருந்தாளியான ஒருவரை நீ எப்படி மணக்கலாம்? இந்தத் தேசத்தின் சம்பிரதாயங்கள் ஒரு அந்நியரை எப்படிக் கட்டுப்படுத்தச் செய்யும்? இதுதான் போகட்டும். உன் குலமென்ன, இவர் குலமென்ன? சந்திரகுலத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணுக்கு சூரியகுலத்தைச் சேர்ந்த ஒரு வாலிபனை மணக்க எவ்வளவு மனத்துணிச்சல் இருக்க வேண்டும்? இவருக்கு மாலையிட்டதிஞல் சூரியகுலம் முழுவதையுமே நீ அவமதித்து விட்டாய், இந்த நாட்டுச் சட்டதிட்டங்களையெல்லாம் மீறிவிட்டாய். நீ செய்த இந்த மன்னிக்க முடியாத குற்றத்துக்கு மரணதண்டனை ஒன்றுதான் பொருத்தமான தண்டனை. என் உத்தரவை அலட்சியம் செய்தவர்களுக்கு இன்று காலை என்ன தண்டனை விதித்தேனென்று உனக்குத் தெரியுமா?'' என்று கேட்டாள் தேவதேவி.

''தெரியும் கன்னிமாதா''

''உன்னையும் அவர்களோடு சேர்த்து புலிக்குகைக்குள் தள்ளச் சொல்லியிருக்க வேண்டும். ஆயினும் என்னைப் போல நீயும் ஒரு பெண் என்பதற்காக, இதோ நிற்கும் இந்த மனிதர் உனக்காகப் பரிந்து வாதாடியதற்காகஇன்று உன்னை மன்னிக்கிறேன். ஓடிப்போ! இந்த இடத்தைவிட்டு உடனே ஓடிப்போ! மறுபடியும் என் கண்ணிலோ அல்லது ஜோதியின் கண்ணிலோ நீ பட்டால் உன் உயிர் நிலைக்காது. உடனே இங்கிருந்து ஓடிப்போய்விடு!'' என்று கட்டளையிட்டாள் தேவதேவி.

இவ்வளவு நேரமும் பயந்து தலைகுனிந்து கொண்டிருந்த சித்ரா இவ்விடத்தைவிட்டு உடனே ஓடிப்போய்விடு! என்று தேவதேவி சொல்லிய பொழுது பளிச்சென்று நிமிர்ந்து பார்த்தாள். மகாகவி கம்பன், காளிதாசன் போன்றவர்கள் அப்பொழுதே அங்கிருந்தால் சித்ராவின் நிமிர்ந்து நின்ற அந்தக் கம்பீரத்தோற்றத்தையும் அவள் பார்வையையும் வைத்து ஒரு பெரிய மகாகாவியமே எழுதித் தள்ளியிருப்பார்கள். அவ்வளவு அர்த்த புஷ்டி நிரம்பியதாயிருந்தது, சித்ராவின் தீட்சண்யமான பார்வை. ஒரு கணம் தேவதேவியே திகைத்துப்போய் நின்றாள்.

''என்ன பார்க்கிறாய்? நான் சொல்லியது உன் காதில் விழவில்லை?'' என்று சிறிது நேரத்துக்குப் பிறகு கேட்டாள் தேவி.

''விழுந்தது கன்னிமாதா! நீங்கள் சொல்லியது என் காதில் விழுந்தது. என்னைப் போகச் சொல்லும் காரணமும் எனக்குப் புரிந்தது. இவர் என் கணவர்: என் கணவரைவிட்டு என்னைப் போகச் சொல்ல யாருக்கும் அதிகாரமில்லை. இங்கிருந்து நான் போகப்போவதில்லை!'' என்று உறுதியாகவும் கணீரென்று கம்பீரமாகவும் சொன்னாள் சித்ரா.

பெண் சினந்தால் புலி என்றபழமொழிக்கு ஒப்ப சித்ரா ஆக்ரோஷத்தோடு தேவதேவியையே எதிர்க்கத் தலைப்

பட்டுவிட்டதையிட்டு பாலாஜி அதன் விளைவு என்ன விபரீதத்தில் போய் முடியுமோ என்று அஞ்சினார்.

''என்ன சொன்னாய்? இங்கிருந்து போகமாட்டேனென்றா சொன்னாய்? யாரிடம் இப்படிப் பேசுகிறாயென்பது உனக்குத் தெரிகிறதா?'' என்று தேவதேவி முழங்கிய பொழுது அவள் கண்களில் தீப்பொறி பறந்தது.

''தேவி! அவள் சிறுமி, ஒன்றுமறியாதவள். அவளை ஒன்றும் செய்துவிடாதீர்கள்!'' என்று மன்றாடினான் பாலாஜி.

''சிறுமிக்கு இவ்வளவு வாய்த் துடுக்கா! இதோ பார் சித்ரா! நினைத்தால் உன்னை நீ நிற்குமிடத்திலேயே எரித்துச் சாம்பலாக்கிவிடுவேன். இருந்தாலும் அறியாச் சிறுமியென்பதற்காக உன்னை மீண்டும் மன்னிக்கிறேன். உயிரிடம் ஆசையிருந்தால் ஓடிப்போய் பிழைத்துக் கொள்!'' என்று மீண்டும் உத்தரவு பிறப்பித்தாள் மலைக்கன்னி.

''உயிரிடம் ஆசையிருப்பதால்தான் என் உயிரை இங்கு வைத்துவிட்டுப்போக மறுக்கிறேன். என் புருஷனிடம் ஆசைப்பட்டு அவரை கவர்ந்து கொள்ளப் பார்க்கிறீர்கள். இதுதான் உங்கள் ராஜதர்மமா தேவி? சாவுக்கு நான் அஞ்சவில்லை. தர்மத்தின் பெயரினால் கேட்கிறேன். என் புருஷனிடமிருந்து என்னைப் பிரிக்க உங்களுக்கு என்ன அதிகாரம்?'' என்று உச்சதொனியில் கத்தினாள் சித்ரா.

பாலாஜி எதிர்பார்த்ததற்கு முற்றிலும் மாறாக மலைக்கன்னியின் முகத்தில் கோபத்துக்கும் குரோதத்துக்கும் பதிலாகப் பரிவும் பணிவும் பிரதிபலிப்பதைப்போலத் தோன்றியது. தேவியின் அநீதியான போக்கைத் தன்னால் உணர்த்திக்காட்ட முடியாமலிருக்கையில் சின்னஞ் சிறுமியான சித்ரா மனதில் பதியும்படி நன்கு உணர்த்திக் காட்டி வெற்றி பெற்றுவிட்டாளோ என்று எண்ணி பாலாஜி பெருமிதம் அடைந்து கொண்டிருக்கையில் ''பாவம்! அறியாச்

சிறுமி!'' என்று கனிவுடன் சொல்லிக் கொண்டே திரி சூலத்துடன் சித்ராவை நெருங்கினுள் தேவதேவி.

அவள் எதற்காக அருகில் வருகிருள், என்ன செய்ய வருகிருள் என்பதை சித்ரா உணர்ந்து கொள்ளுவதற்குள்ளாக திரிசூலத்தின் ஒரு முனையை தேவதேவி லேசாகச் சித்ராவின் தலைமீது வைத்தாள். திரிசூலம் தலையில் பட்டதுதான் தாமதம், சித்ரா மின்னலினுல் தாக்கப்பட்டவளைப்போல பிரமை பிடித்துப்போய் பரக்கப் பரக்க விழித்துக் கொண்டு செயலற்று நின்ருள். திரிசூலம் பட்ட இடத்தில் நாமம் போட்டதைப்போல தலைமுடி எரிந்து வழுக்கைத் தலை வெள்ளை வெளேரென்று தெரிந்தது. கண்ணிமைப் பொழுதில் இது நடந்து விட்டது.

பரிவு காட்டுவதைப்போல நடந்து சித்திராவிடம் பழி வாங்கிய தேவதேவி சித்ராவை கூர்மையாகப் பார்த்த வண்ணம் ''போ! மரியாதையாகப் போய்விடு! மறுபடி எப்பொழுது என் கண்ணில் பட்டாலும் உன் தலையில்போட்டிருக்கும் திரிசூல அடையாளம் உன்னைக் காட்டிக் கொடுத்துவிடும். என் கண்ணில் படாமல் தப்பிப் பிழைத்துக் கொள்'' என்ருள்.

சித்ரா பதில் பேசவில்லை. ஓவென்றலறிக் கொண்டே அந்த இடத்திலிருந்து அம்புபோல் பாய்ந்து ஓடிவிட்டாள்.

''பார்த்தீர்களா? இந்தக் காட்டு ஜனங்களுக்குப் பலாத்காரம் ஒன்றுதான் புரியும் பாஷை. சாந்தமாகப் பேசினுல் அவர்களுக்குப் புரியாது. என் ஆணையை மீறி செத்துமடியப் பார்த்தாள் அந்தச் சிறுமி! இனி அவள் எப்பொழுது என் கண்களில் மறுபடி பட்டாலும் திரிசூலத்தின் அடையாளம் அவளை எனக்குக் காட்டிக் கொடுத்து விடும்!'' என்று பாலாஜியிடம் சொன்னுள் தேவதேவி.

திரிசூலத்தின் சக்தியைக் கண்டு வியந்து பயந்து கொண்டிருந்த பாலாஜி ''பாவம்! சித்ரா பிரமைபிடித்தவளைப்போல ஓடுகிருள்!'' என்ருர்.

''ஓடட்டும்! நன்ருக ஓடட்டும். மறுபடி என் வாழ்வில் குறுக்கிடாமல் உலகத்தின் மறுகோடிக்கே ஓடட்டும்! என்ருள் தேவதேவி. பிறகு ''என் பிரபு இனி இங்கிருக்க வேண்டாம். என் அந்தப்புரத்துக்கே வந்துவிடட்டும். தூக்கிச் செல்ல என் பணிப் பெண்களை அனுப்புகிறேன். உங்களுக்கு இன்னென்றும் முன்கூட்டியே சொல்லி வைக்கிறேன். சரியாக இன்னும் ஐந்து நாழிகை (இரண்டு மணி) நேரத்தில் விஜயகேசரி பிரக்ஞை தெளிந்து எழுந்து விடுவார். அப்பொழுது அவரிடம் சித்ராவைப் பற்றியோ அல்லது என்னைப் பற்றியோ கண்டிப்பாக நீங்கள் ஏதும் சொல்லக் கூடாது. சொல்ல வேண்டியதைப் பக்குவமாக எப்பொழுது எப்படிச் சொல்ல வேண்டுமென்பது எனக்குத் தெரியும். இது என் கண்டிப்பான உத்தரவு. ஞாபகமிருக்கட்டும். இந்த அறையில் நடந்த விஷயங்கள் உக்கிரசேனனுக்கும் இப்பொழுது தெரிய வேண்டாம்!'' என்று சொல்லிவிட்டு தேவதேவி அங்கிருந்து போய்விட்டாள்.

அவள் தலை மறையும்வரையில் காத்திருந்துவிட்டு அவசரம் அவசரமாக உள்ளே வந்த உக்கிரசேனர் ''சித்ரா ஏன் அபபடி ஓடுகிருள் அய்யா! என்னிடம் கூடச் சொல்லிக் கொள்ளாமல் பரபரப்போடு ஓடுகிருளே!'' என்று கவலையோடு விசாரித்தார்.

''அனுமதியில்லாமல் ராணியின் அரண்மனைக்கு வந்ததற்காக மகாராணி அவளைக் கடிந்து கொண்டாள். ராணிக்குப் பயந்துதான் அப்படி ஓடுகிருள்'' என்று வார்த்தையை மென்று விழுங்கிக் கொண்டு சொன்னுன் பாலாஜி!

''இப்படி நடக்குமென்று எனக்குத் தெரியும். நான் செய்த புண்ணியம் என் மகள் உயிர் தப்பியது. ஜோதி அரண்மனைக்குப் போய்விட்டுத் திரும்பி வருவான். நீ அரண்மனைக்கு வராதேயென்று படித்துப் படித்துச் சொன்னேன். என் பேச்சைக் கேட்காமல் சித்ரா இங்கு வந்து தேவியின் கோபத்துக்குப் பாத்திரமானுள். நல்லவேளை

இதோடு போயிற்றே!'' என்று சொல்லிவிட்டு ஒரு பெருமூச்சுவிட்டார் உக்கிரசேனர். பிறகு, தேவி என்னிடம் என்னென்னவோ சம்பந்தமில்லாமல் சொன்னாளே அதன் பொருள் என்ன அய்யா! எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே! என்றார் அவர்.

ஜோதியை அரண்மனைக்கு அழைத்து வந்ததற்காக தேவதேவி நன்றி தெரிவித்ததைக் குறிப்பிட்டே உக்கிரசேனர் இவ்விதம் கேட்டாரென்பதைப் புரிந்து கொண்ட பாலாஜி, ''தயவு செய்து இப்பொழுது என்னிடம் ஒன்றும் கேட்காதீர்கள். இது ஒரு பெரிய தேவரகசியம். சமயம் வரும்பொழுது தேவதேவியே எல்லாவற்றையும் உங்களிடம் சொல்லுவாள்!'' என்றான் பாலாஜி.

''அப்படியா?'' என்று உக்கிரசேனர் சொல்லி வாய் மூடுவதற்குள் இரண்டு பணிப் பெண்களும் நான்கு ஆட்களும் அங்கு வந்தார்கள். பணிப் பெண்கள் சமிக்ஞை செய்து காட்டியபடி அந்த ஆட்கள் நால்வரும் ஜோதி படுத்திருந்த கட்டிலை மெதுவாகத் தூக்கிக் கொண்டு நடந்தார்கள். கட்டிலின் பின்னால் பாலாஜியும் முனுசாமியும் சென்றனர். உக்கிரசேனர் ஒன்றும் புரியாமல் விழித்துப் பார்த்துக் கொண்டு நின்றார்.

மலைச் சிகரத்தின் நான்கு அடுக்குகளையும் தாண்டி தேவதேவியின் அந்தப்புரத்திலிருக்கும் இடத்துக்கு அவர்கள் வந்த பொழுது அவர்களுடைய வருகைக்காக தேவதேவி அங்கு காத்திருந்தாள். தேவியின் சயனக்கிரகம் போன்ற அறைக்குப் பக்கத்திலிருந்த இன்னொரு அறைக்கு ஜோதியைக் கட்டிலோடு தூக்கிக் கொண்டு போனார்கள். அந்த அறை கிட்டத்தட்ட தேவியின் சொந்த அறையைப் போலவே ஆடம்பரமிக்கதாயிருந்தது. பட்டுமெத்தைகள் விரித்த ஒரு சந்தனக் கட்டிலின்மீது ஜோதிவர்மனைத் தூக்கிக் கொண்டு வந்தவர்கள் மெதுவாகத் தூக்கிப் படுக்க

வைத்துவிட்டு கயிற்றுக் கட்டிலை எடுத்துக் கொண்டு போனார்கள்.

கூடவந்திருந்த பணிப் பெண்களையும் தேவதேவி வெளியே போகச் சொல்லிவிட்டு பாலாஜியின் பக்கம் திரும்பி "இவரை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள் ளுங்கள் அய்யா! அவர் கண்விழிக்கும் சமயத்தில் நான் வருகிறேன்!" என்று சொல்லிவிட்டுப் போனாள்.

சரியாக ஐந்து நாழிகை நேரத்துக்குப் பின்னர் சுய நினைவு இல்லாமல் மூன்று தினங்களாகப் படுத்த படுக்கையாய்க் கிடக்கும் ஜோதிவர்மனின் கண்ணிமைகள் லேசாக அசைவதைப் போலிருந்தன. ஜோதி பிரக்ஞை தெளிந்து எழுந்திருக்கப் போகிறானென்று ஆவலோடு அவன் முகத்தின் மீது வைத்த விழியை நகர்த்தாமல் பாலாஜி பார்த்துக் கொண்டிருக்கையில் சந்தடி செய்யா மல் அவன் பின்னால் வந்து நின்ற தேவதேவி "என் பிரபு இதோ எழுந்திருக்கப் போகிறார். நான் உங்களை எச்சரித் தது ஞாபகமிருக்கட்டும். சித்ராவையோ அல்லது என் னையோ பற்றி இப்பொழுது அவரிடம் நீங்கள் ஒன்றும் சொல்லக் கூடாது!" என்று சொல்லிவிட்டு கட்டிலில் ஜோதியின் பக்கத்தில் போய் உட்கார்ந்து கொண்டாள்.

## அத்தியாயம்- 5

"ஜோதிவர்மன் எழுந்திருந்தவுடன் சித்ரா எங்கே என்றுதான் கேட்பான். ஆகையால் நீங்கள் சற்று மறைந் திருப்பது நல்லது தேவி!" என்று பாலாஜி தேவதேவியிடம் சொன்னான்.

அந்த யோசனை தேவிக்கும் நல்லதென்றே பட்டது. ஜோதியின் தலைமாட்டுப் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு கட்டிலின் மீது ஒரு கையை ஊன்றியவண்ணம் இமைகொட்டாமல் அவனை அவள் பார்த்துக் கொண்டிருந்தாள்.

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் நன்றாக அயர்ந்து தூங்கியவன் உடம்பை முறித்து சோம்பல் கழித்துக்கொண்டு கண் விழிப்பதைப்போல ஜோதிவர்மன் இரண்டு மூன்று தடவை கட்டிலில் புரண்டுவிட்டு பளிச்சென்று கண்களை விழித்துப்பார்த்தான். ஆடம்பரமான அறையில் மிருதுவான ஹம்ஸதுவிகா மஞ்சத்தில் ஆனந்தமாகப் படுத்திருப்பது கனவா அல்லது நனவா என்ற சந்தேகம் அவனுக்கு ஏற்பட்டிருக்கவேண்டும்.

படுக்கையை விட்டு எழுந்திருக்காமலே அவன் லேசாக சிறிது புரண்டபொழுது தூய வெண்ணிற யானைத் தந்தத்தில் கடைந்தெடுத்த ஒரு அழகுப் பதுமையின் கரத்தைப் போல தேவதேவியின் கை மட்டும் கட்டிலில் ஊன்றிக் கொண்டிருப்பது ஜோதிக்குத் தெரிந்தது. ஆவலோடு அந்தக் கரத்தைப் பற்றிக்கொண்டு ''சித்ரா! நாம் எப்பொழுது இங்கே வந்தோம்? எப்படி மலையை ஏறி இந்த அரண்மனைக்கு வந்தோம்?'' என்று கேட்டான் ஜோதி.

தேவதேவி பதிலே சொல்லவில்லை. மௌனமாக அவள் உட்கார்ந்திருந்தாள். பெரியப்பா பாலாஜி பக்கத்திலிருப்பதனால்தான் சித்ரா வெட்கத்துடன் பேசாமடந்தையாகியிருக்க வேண்டுமென்று ஜோதிவர்மன் நினைத்தான் போலிருக்கிறது. கட்டிலில் அவன் எழுந்து உட்கார்ந்ததும் ஆனந்தக் கண்ணீர் பெருக்கிக்கொண்டிருந்த பாலாஜியை அவன் பார்த்தான். பாலாஜி கண்களில் கண்ணீர் ததும்பி நிற்பதன் காரணம் அவனுக்குப் புரியவில்லை.

''என்ன பெரியப்பா! ஏன் அழுகிறீர்கள்? என்ன நடந்தது? என் சித்ராவுக்கு ஒன்றுமில்லையே!'' என்று கேட்டுக்

கொண்டே சித்ரா எங்கேயென்று பார்க்க ஜோதிவர்மன் அறையைச் சுற்றி ஒரு கண்ணோட்டம் விட்டான். இதற்குள் கட்டிலில் உட்கார்ந்திருந்த தேவதேவி கட்டில் கால்களி லொன்றைப் பிடித்துக்கொண்டு நின்றுகொண்டிருந்தாள்.

''ஏன் இப்படி மௌனம் சாதிக்கிறீர்கள் பெரியப்பா? இப்பொழுது நாம் எங்கேயிருக்கிறோம்? உக்கிரசேனரும், சித்ராவும் எங்கே? முக்காடிட்டுக் கொண்டிருக்கும் அந்தப் பெண் யார்?'' என்று கேள்விகளை அடுக்கினான் ஜோதிவர் மன்.

பாலாஜி பதில் சொல்ல வாயெடுப்பதற்குள் ''சித்ரா வெளியே போயிருக்கிறாள். அவளுக்குப் பதிலாக வந்திருக் கும் பணிப்பெண் நான்!'' என்று சொன்னாள் மலைக்கன்னி. வெள்ளி மணியோசையைப்போல மிகமிக இனிமையா யிருந்த அந்தக் குரலைக் கேட்டுவிட்டு ஜோதிவர்மன் ஒரு கணம் அவளை ஏறத்தாழப் பார்த்தான். பிறகு ''ஓ! பணிப் பெண்ணின் அலங்காரம்தானா இந்த முக்காடு? பேயோ பிசாசோ என்று பயந்தேபோனேன்!'' என்று கிண்டலாகச் சொல்லிவிட்டு பாலாஜியின் பக்கம் அவன் திரும்பிய பொழுது ''அந்தப் பெண்ணைப் பார்த்து அப்படி நையாண்டியாகப் பேசாதே ஜோதி. அவள்தான் உனக்கு உயிர்கொடுத்த தெய்வம்!'' என்றான்.

''எனக்கு உயிர்கொடுத்த தெய்வமா? யார்? அந்தப் பணிப்பெண்ணா எனக்கு உயிர்கொடுத்ததெய்வம்?ஏன் பெரி யப்பா அவள் உயிர்கொடுக்கும்படி எனக்கு அப்படி என்ன வந்துவிட்டது?'' என்று கேட்டுக்கொண்டே ஜோதிவர்மன் கட்டிலைவிட்டு எழுந்திருக்க முயற்சித்தான். எழுந்து நின்ற வன் தள்ளாடிக்கொண்டு கீழே விழுந்த தருணத்தில் அவனை லாகவமாகப் பிடித்துக் கட்டிலில் திரும்ப உட்கார வைத்த தேவதேவி ''இன்னும் நீங்கள் பூரண குணமடைய வில்லை. நாளைக் காலைவரையில் படுக்கையை விட்டு எழுந் திருக்கக் கூடாது'' என்றாள்.

ஜோதிவர்மன் ஒரு விஷமச் சிரிப்புச் சிரித்துக் கொண்டே "ஏது, மகாராணி தேவதேவி மாதிரியல்லவா இவள் உத்தரவு பறக்கிறது?" என்றான். பிறகு பாலாஜியைப் பார்த்து "எனக்கு என்ன உடம்புக்கு பெரியப்பா? ஏன் முழங்கால் இரண்டும் விண்விண் என்று வலிக்கிறது?" என்று கேட்டான்.

"உனக்கு என்ன உடம்புக்கு என்று நான் எதைச் சொல்லுவது ஜோதி? குகையிலிருந்து நாம் புறப்பட்ட பொழுதே உனக்குக் காய்ச்சலாயிருந்தது. அன்றிரவு முதல் மூச்சு இல்லாமல் படுத்தபடுக்கையாகிவிட்டாய். இன்று காலை உன் நிலைமை மிகவும் மோசமடைந்துவிட்டது. இனி பிழைக்கமாட்டாயென்று அரண்மனை வைத்தியரும் கைவிட்டுவிட்டார்......!"

"எந்த அரண்மனை வைத்தியர்?" என்று ஜோதிவர்மன் இடைமறித்துக் கேட்டான்.

"எந்த அரண்மனை வைத்தியர்? தேவதேவியின் அரண்மனை வைத்தியர்தான். நேற்று மாலை நாம் அரண்மனைக்கு வந்து சேர்ந்தோம். மரணத்துடன் உக்கிரமாகப் போராடிக் கொண்டிருந்த உன்னை தேவதேவி கருணைவைத்துக் காப்பாற்றினாள். அவள் நேரடியாக வந்து ஔஷதம் கொடுத்திராவிட்டால் இப்பொழுது என் எதிரில் இப்படி உட்கார்ந்திருக்கமாட்டாய் ஜோதி!"

பாலாஜி இப்படிச் சொல்லுகையில் அவன் கண்களிலே மறுபடியும் கண்ணீர் நிறைந்துவிட்டது.

"என் உடல் நிலைமை அவ்வளவு மோசமாகவா இருந்தது? எனக்கு ஒன்றுமே தெரியவில்லையே பெரியப்பா. நன்றாகத் தூங்கி எழுந்தமாதிரித்தானே இருக்கிறது!" என்று ஜோதிவர்மன் சொல்லவும், அதுதான் தேவதேவி கொடுத்த ஆச்சரியமான ஔஷதத்தின் விசேஷம்.

மரணத்தின் வாயிலிருந்து உன்னைத் தேவதேவி திருப்பியழைத்து வந்திருக்கிறாள். உடல் சில்லிட்டு நாடி விழுந்துபோன பிறகு தேவதேவியினால் கூட உன்னைக் காப்பாற்ற முடியுமென்று நான் நினைக்கவில்லை. அமானுஷ்யமான அவளுடைய சக்தியும் ஔஷத்தின் அதிசயத் தன்மையும் சில மணி நேரத்துக்குள் சாகக்கிடந்தவனை எழுந்து உட்காரவைத்துவிட்டது'' என்றான் பாலாஜி.

''அப்படியா? இது கிடக்கட்டும் பெரியப்பா! சித்ரா எங்கே போனாள்? என்னை விட்டுவிட்டு ஏன் போனாள்? தனக்குப்பதில் இன்னொரு பெண்ணை வைத்துவிட்டு அவள் போகமாட்டாளே!'' என்று குடைந்து குடைந்து விசாரித்தான் ஜோதி.

''தயவு செய்து உடம்பை அலட்டிக்கொள்ளாதீர்கள் அய்யா! உங்களுக்கு வந்த கொடிய விஷ ஜுரம் திரும்பிக் கொண்டால் மறுமுறை தேவதேவியினால் கூட உங்களைக் குணப்படுத்த முடியாது'' என்று சொல்லிவிட்டு இரண்டு கைகளையும் சேர்த்து மூன்றுதடவை ஏதோ சமிக்ஞை கொடுக்கும் பாவனையில் தேவதேவி தட்டினாள். அவள் கை தட்டுவதின் பொருள் விளங்காமல் அவளையும் அதிகாரத் தோரணையில் அவளைப் பேச அனுமதித்துவிட்டுச் சும்மாயிருக்கும் பாலாஜியையும் மாறிமாறிப் பார்த்தான் ஜோதிவர்மன்.

ஒரு பணிப்பெண் ஸ்வர்ணத்தட்டில் இரண்டு வெள்ளிக் கிண்ணங்களை வைத்துக்கொண்டு வந்தாள். கட்டிலின் பக்கத்திலிருந்த சிறு கருங்காலி மரமேஜையின் மீது அதைப் பணிப்பெண் வைத்துவிட்டுப் போனபின் கஞ்சியிருந்த ஒரு கிண்ணத்தையெடுத்து ஜோதியின் கையில் கொடுத்து ''இதைக் குடியுங்கள். இரண்டு தினங்களாக அன்ன ஆகாரமில்லாமல் சோர்ந்துபோயிருக்கிறீர்கள்!'' என்றாள் தேவதேவி.

ஜோதிவர்மன் கஞ்சியைக் கையில் வாங்கிக்கொண்டு "தேவதேவிக்குத் திடீரென்று என்னிடம் இவ்வளவு கரிசனை எப்படிவந்தது பெரியப்பா? காட்டுமிராண்டி ஜனங்களின் ராணியும் பெரிய காட்டுமிராண்டியாயிருப்பாளென்று அல்லவா நினைத்தேன்! நம்மைப் போல அவளுக்கும் கொஞ்சம் நாகரிகம் தெரிந்திருக்கிறதே" என்று சொல்லிக்கொண்டே கஞ்சியைக் குடித்தான்.

தேவியின் முன்னிலையில் சொல்லவும் மெல்லவும் முடியாமல் பாலாஜி விழித்த விழி பெரிய கண்ருவியாயிருந்த தென்றே கூறவேண்டும்.

"எங்கள் மகாராணி உங்களைப்போன்ற அளவுக்கு நாகரிகமில்லாவிட்டாலும் அகதிகளை அலட்சியம் செய்யும் அளவிற்குப் பண்பு கெட்டவள் இல்லை அய்யா! மகாராணியை நீங்கள் நேரில் சந்திக்கும் பொழுது அவளுடைய இங்கிதமான சுபாவத்தை நீங்களே தெரிந்து கொள்ளுவீர்கள்!" என்ருள் தேவதேவி.

"பலேபலே! பணிப்பெண்ணென்ருல் இப்படியல்லவா எஜமான் விசுவாசத்துடனிருக்க வேண்டும்! ஆமாம், நான் ஒன்று கேட்டால் சரியாகப் பதில் சொல்லுவாயா?" என்று வினவினன் ஜோதிவர்மன்.

"கேளுங்கள் என்ன வேண்டுமானுலும் கேளுங்கள். தெரிந்தவரையில் சொல்லுகிறேன்" என்ருள் தேவதேவி.

இப்பொழுது கஞ்சி கொண்டுவந்தாளே அந்தப் பெண் மாத்திரம் முகத்திரையிட்டுக் கொள்ளாமலிருக்கும் பொழுது நீ மட்டும் ஏன் அழகான தேகத்தைத் திரையிட்டு மூடிக்கொண்டிருக்கிருய்?" என்று கேட்டான் ஜோதி.

"அதுவா... ஊம்... அதுவா அவள் வேறு ஜாதி. நான் வேறு ஜாதி! இது எங்கள் ஜாதி வழக்கம்!" என்று மழுப்பினுள் தேவதேவி. இதைச் சொல்லுகையில் அவள் பாலா

ஜியை அர்த்த புஷ்டியுடன் பார்த்துக்கொண்டே சொல்ல வும் "ஆமாம் ஜோதி! இந்த அரண்மனை வழக்கமே அலாதி. இதை நாம் புரிந்துகொள்ள மாதக் கணக்கிலாகும்!'' என்ருன் பாலாஜி.

''ஓ! உங்கள் ஜாதி வேற்றுமைகளெல்லாம் உடையில் தான் தங்கியிருக்கிறதென்று சொல்லு!'' என்று ஜோதி வர்மன் சொல்லிவிட்டு ஏளனமாகச் சிரித்தான். அவன் செய்யும் கிண்டலேயும் கேலியையும் தேவதேவி மௌன மாகப் பொறுத்துக்கொண்டிருந்தது பாலாஜிக்கு ஆச்சரிய மாயிருந்தது.

பிறகு திராட்சைரசம் நிறைந்த இரண்டாவது கிண் ணத்தை தேவதேவி ஜோதியிடம் எடுத்துக்கொடுத்துக் குடிக்கச் சொல்லவே "இது பழரசம் மாதிரியல்லவா இருக் கிறது? படுகிடையாகக் கிடந்தவன் பழரசம் குடிக்க லாமா?'' என்று அவன் கேட்டான்.

''தெரியாமல் மகாராணி கொடுத்தனுப்பமாட்டாள். தயவுசெய்து சாப்பிடுங்கள்'' என்ருள் தேவதேவி.

''ராணி சொல்லிவிட்டால் அதற்கு மறுபேச்சு ஏது?'' என்று சொல்லிக்கொண்டே பழரசத்தைக் குடித்துவிட்டு ஜோதிவர்மன் கட்டிலில் படுத்துக்கொண்டான். சிறிது நேரத்துக்கெல்லாம் அவன் மறுபடி தூங்கிவிட்டான்.

''உங்களிடம் கொஞ்சம் பேசவேண்டும் வாருங்கள்'' என்று சொல்லி பாலாஜியை அழைத்துக் கொண்டு தேவ தேவி தன்னுடைய அறைக்குத் திரும்பினுள். அறையை அடைந்ததும் ''என்னைப்பற்றி உங்கள் நண்பர் எவ்வளவு மோசமான அபிப்பிராயம் வைத்திருக்கிருர் பார்த்தீர் களா? நான் பெரிய காட்டுமிராண்டியாயிருப்பேனென்று அவர் எதிர்பார்த்தாராமே!'' என்று துக்கத்துடன் சொன் னுள் தேவதேவி.

"செம்பவளத்தீவுக்கு வந்ததும் நாங்கள் முதலில் பார்த்தது நாகரிக வாசனையை அறியாத காட்டுமிராண்டி ஜனங்களைத்தான் அம்மா! அவர்களை வைத்துக் கொண்டு அவர்களுடைய ராணியும் அப்படித்தானிருப்பாளென்று ஜோதி தீர்மானித்துக் கொண்டிருக்கிறான். மகாராணி தேவதேவி எவ்வளவு பெரிய பண்டிதை என்பதையும் பேரழகி என்பதையும் அறியும் பொழுது அவன் மலைத்துப்போவான்" என்றான் பாலாஜி.

"ஐயா! உங்களை உண்மையாகத்தான் கேட்கிறேன். தயவுசெய்து முகஸ்துதிக்காக ஒன்றும் சொல்லாதீர்கள். வயதில் நான் கிழவிதான். என்னைவிட வயதான கிழவி இந்த உலகத்தில் எந்தக்காலத்திலுமே எவருமே இருந்திருக்கமுடியாது. ஆயினும் என் வயதின் கோலம் முகத்தில் தெரிகிறதா? வயதில் கிழவியாயினும் தோற்றத்தில் குமரியாயில்லையா? சித்ராவைவிட நான் மோசமாகவா இருக்கிறேன்?" என்றாள் தேவதேவி அங்கலாய்ப்புடன்.

இப்படிக் கேட்டபொழுது அவள் குரலில் ஒரு கனிவும், ஏமாற்றமும், பரிதவிப்பும் ஏககாலத்தில் தொனிப்பதைப் போலிருந்தது. சித்ராவிடம் கொண்ட மயக்கத்தில் என்னை ஜோதிவர்மன் நிராகரித்து விடுவானா? சந்திரிகாவிடம் கொண்ட பிரேமையினால் விஜயகேசரி என்னை உதாசீனம் செய்ததைப்போல ஜோதிவர்மனும் உதாசீனம் செய்து விடுவானா? பழைய நாடகம்தான் திரும்ப நடிக்கப்படப் போகிறதா? அல்லது என் வாழ்வு மலரப்போகிறதா? என்று பரிதாபமான தொனியில் தேவதேவி கேட்காமல் கேட்பதைப்போலிருந்தது. தேவதேவியின் கேள்வியும், அந்தக் கேள்வியைக்கேட்ட மாதிரியும் அவளிடம் பாலாஜிக்கு இரக்கத்தையும், பட்சாதாபத்தையும் உண்டுபண்ணியதென்றே கூறவேண்டும்.

"கிழவியா? யார் கிழவி? நீங்களா கிழவி? உங்களுக்கு யார் அப்படிச் சொல்லியது அம்மா? வயதில் கிழவியென்று

சொல்லிவிட்டாய். அதைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. சாதாரணமாகவே பெண்களின் வயதை யாரும் மதிப்பிட்டுச் சொல்லமுடியாதென்பார்கள். உங்கள் யௌவன சௌந்தர்யத்துக்கு இந்த வையகத்தில் ஈடு இணை ஏது?'' என்ருன் பாலாஜி தேவதேவிக்கு ஆறுதலாக.

''அப்படியிருந்தும் என்னைப் பார்த்தபிறகு கூட என் பிரபு ஏன் சித்ரா சித்ரா என்று ஜபிக்கிருர்?'' என்ருள் தேவதேவி.

''அவன் இன்னும் சரியாக உங்களைத் தெரிந்து கொள்ளவில்லை தேவி. தவிர சித்ராகூட இருந்து பணிவிடை செய்தவளல்லவா? அவளிடம் ஜோதியின் மனம் ஓரளவு ஈடுபட்டிருப்பது இயற்கைதானே?''

பாலாஜி இப்படிச் சொல்லிக்கொண்டிருக்கையில் செம்பவளத்தீவின் சர்வவல்லமை பொருந்திய மகாராணியான தேவதேவி பளிச்சென்று கீழேவிழுந்து பாலாஜியின் இரு கால்களையும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டாள்.

''என் அதிகாரமும் அகந்தையும் அழித்து உங்கள் கால்களைப் பிடித்துக்கொண்டு கெஞ்சுகிறேன் அய்யா! எனக்கு நல்வாழ்வு கொடுப்பது உங்கள் கையில்தானிருக்கிறது. இருபத்தைந்து நூற்றுண்டுகளாக சுமக்கமுடியாத துக்கத்தைச் சுமந்துகொண்டு ஏங்கி ஏங்கித் தவிக்கும் என் துன்பத்தைத் துடைக்கும் சக்தி உங்கள் ஒருவரிடம்தான் இருக்கிறது. அபயமளித்து ஆதரிக்க வேண்டுமென்று இந்நாட்டின் ராணி உங்கள் பாதங்களைப் பிடித்துக்கொண்டு மன்ருடுகிருள். என்னைக் கைவிட்டுவிடாதீர்கள் அய்யா!'' என்று தேவதேவி துக்கம் தொண்டையை அடைக்க விக்கி விக்கி அழுது புலம்பிஞள். அவளுடைய கண்ணீர் பாலாஜியின் பாதங்களில் உதிர்ந்தது.

முற்றிலும் எதிர்பாராதவிதமாக செம்பவளத்தீவின் மகாராணி தனது கால்களைப்பிடித்துக் கொண்டு கெஞ்சுவதைப் பார்த்து செயலற்று நின்ருர் பாலாஜி.

''எழுந்திரு அம்மா! உங்கள் மனவேதனை எனக்குப் புரியாமலில்லை. நேற்று வந்த சித்ராவே ஜோதியை விட்டுப்போக உயிரைப் பணயம் வைத்து உங்களை எதிர்க்கத் தயாராயிருந்தால், பல ஆயிரம் ஆண்டுகளாக வைராக்கியத்துடனிருக்கும் நீங்கள் கைக்கு எட்டியது தவறிப் போய்விடுமோ என்று அஞ்சுவதில் ஆச்சரியமில்லை!'' என்றார் பாலாஜி.

''பேச்சளவில் நீங்கள் அனுதாபம் காட்டினால் மட்டும் போதாது அய்யா! என் பிரபுவை நான் அடைய மனதார உதவிபுரிய வேண்டும். இந்தச் சிறு உதவியைச் செய்வேனென்று எனக்கு வாக்களித்தால் மட்டுமே நான் உங்கள் கால்களை விடுவேன்! இந்த ராஜ்யமும் ஐசுவரியங்களும் அதிகாரமும் ஒன்றுமே எனக்கு வேண்டாம். என் பிரபு விரும்பினால் அவ்வளவையும் சித்ராவுக்கு நஷ்டஈடாக நான் தியாகம் செய்துவிடுகிறேன். அவர் கண்ணெதிரிலேயே சித்ராவை இந்நாட்டின் ராணியாகப் பட்டம் சூட்டி வைத்துவிடுகிறேன். எனக்குத் தெரிந்த ரகசிய சக்திகளையெல்லாம் அவளுக்கே தாரைவார்த்துவிடுகிறேன். இவ்வளவுக்கும் ஈடாக என் பிரபு எனக்குக் கிடைத்தால் அது ஒன்றே போதும்! நீங்கள் மனது வைத்தால் எனக்கு நிச்சயம் உதவி புரியலாம். என் பிரபு தகப்பன் சொல்லை மீறி நடக்கும் பஞ்சாமியில்லை! அவர் மனதை மாற்றி என் வாழ்க்கை இலட்சியம் ஈடேற வகைசெய்ய வேண்டும் அய்யா!'' என்று மன்றாடினாள் தேவதேவி.

ஜோதியைக் கணவனாக அடைவதற்காக தேவதேவி செய்வதாகக் கூறிய தியாகம் பாலாஜியின் இதயத்தைத் தொட்டு கண்களிலே கண்ணீரைத் தருவித்தது. சொந்த மகளை ஆதரவுடன் தொட்டு அரவணைப்பதைப் போல தேவதேவியை அவர் இரண்டு கைகளினாலும் தூக்கி நிறுத்தி ''தேவி! ஆச்சரியகரமான உன் வைராக்கியம் நிச்சயம் உனக்கு வெற்றியையளிக்கும். என் உதவி உனக்குப் பரிபூரணமாக இருக்குமென்பதை நீ உறுதியுடன் நம்பலாம்.

ஜோதியிடம் சித்ரா வைத்திருந்த பாசத்தைப் பார்த்த பொழுது அவளிடம் எனக்கு ஒரு பரிவு ஏற்பட்டிருந்தது உண்மைதான். ஆனுல், உன்னுடைய வைராக்கியத்தையும், தியாகத்தையும் பார்க்கும்பொழுது இதற்கு உவமை கவிதைகளிலும், காவியங்களிலும் கூடக் கிடையாதம்மா! நீ எவ்வளவு சக்திவாய்ந்தவளென்ருலும் எல்லோரையும் போல நீயும் ஒரு பெண்ணென்பதை உன்னையறியாமலே காட்டிக்கொள்கிருய். உத்தமப் பெண்களிடம் இதுமாதிரியான நெருக்கடியான தருணங்களிலே தங்களுடைய சக்தியும், செல்வாக்கும் மறைந்து பெண்மைக்குரிய பயமும், ஏக்கமும், கலவரமும் தோன்றுவது இயற்கைதான். காரியம் கைகூடிவரும் சமயத்தில் மனேதிடத்தையும், நம்பிக்கையையும் இழந்து விடாமல் உறுதியுடனிருந்தால் உன் ஜீவிய இலட்சியம் நிறைவேருமல் போகாது. சமயம் வரும் பொழுது பக்குவமாக ஜோதியை நான் சரிப்படுத்துகிறேன்'' என்ருன் பாலாஜி.

முதன்முதலாக ''நீங்கள் உங்கள்'' என்ற மரியாதைப் பதங்களைவிட்டு ஒருமையில் தேவியைக் குறிப்பிட்டது அவருக்கு உள்ளூர நம்பிக்கையை அளித்ததுபோலிருந்தது. அவ்வளவே போதும். உங்கள் அனுதாபம் என்பக்கத்திலிருக்குமாஞல் நான் வெற்றிபெறுவதில் எனக்குச் சந்தேகமேயில்லை. அவர் இன்றிரவு முழுவதும் நன்ருகத் தூங்குவார். காலையில்தான் கண் விழிப்பார். அப்பொழுது நான் வருகிறேன். தற்சமயத்துக்கு அவரிடம் என்னைப்பற்றியும், சித்ராவைப் பற்றியும் ஒன்றும் சொல்லாதீர்கள். என்ன கேட்டாலும் சரியான பதில் சொல்லாமல் ஒருமாதிரி மழுப்பிவிடுங்கள். துக்கம்தோய்ந்த என் நீண்ட வரலாற்றைக் கேட்டால் நம்பாமலிருப்பதுடன் ஒரு சமயம் அவர் பயந்தும் போகலாம். சமயம் வரும்பொழுது நானே பக்குவமாகச் சொல்லுகிறேன்'' என்று தேவதேவி சொல்லி பாலாஜியை அனுப்பிவைத்தாள்.

ஜோதிவர்மன் படுத்திருந்த அறைக்கு பாலாஜி வந்த பொழுது அறுசுவையுடன் அவருக்கு சாப்பாடு காத்திருந்தது. பாலாஜியைக் கண்டதும் மூலையில் ஒடுங்கி உட்கார்ந்திருந்த முனிசாமி எழுந்து வந்து "எசமான்! இதையெல்லாம் பார்க்கும்போது எனக்கு ரொம்பப் பயமாயிருக்கிறது எசமான்! ராஜாவீட்டு அரண்மனை மாதிரியல்லவா இருக்கிறது இந்த இடம்?" என்றான் அகலவிழித்துக் கொண்டே.

"போடா முட்டாள்! அரண்மனை மாதிரியென்ன? இது அரண்மனையேதான்" என்ற பாலாஜி அறையில் இன்னொரு மூலையில் கட்டில்போட்டு மெத்தை விரித்திருப்பதைப் பார்த்துவிட்டு "அடேடே! இது எப்ப வந்தது?" என்றார்.

"நீங்கள் போனபிறகு இரண்டு பெண்கள் தூக்கிக் கொண்டு வந்து போட்டார்கள்." அவர்கள் தான் சாப்பாடும் கொண்டு வந்து வைத்தார்கள். அடுத்த அறையில் எனக்குக்கூட கட்டில் மெத்தையெல்லாம் போட்டு வைத்து என்னை அழைத்துக் கொண்டு போய்க் காட்டினார்கள் எசமான்! ஆமாம் இவங்களெல்லாம் ஏன் ஒரு வார்த்தை கூடப் பேசமாட்டேனென்கிறார்கள்? இந்த அரண்மனையிலிருக்கும் பெண்களெல்லாம் ஊமைகளா எசமான்?" என்றான் முனிசாமி.

"யார் கண்டார்கள்? நிஜ ஊமையோ அல்லது காரிய ஊமையோ!" என்று சொல்லிவிட்டுச் சாப்பிட உட்கார்ந்தான் பாலாஜி. அடுத்த அறையில் தனக்குச் சாப்பாடு வைக்கப்பட்டிருப்பதாக முனிசாமி சொல்லிவிட்டுப் போனான்.

பாலாஜி சாப்பிட்டு விட்டுக் கட்டிலில் போய்ப் படுத்ததும் சுகமான வெல்வெட்டு மெத்தையும் சாளர வழியாக அடித்த குளுமையான மலைக்காற்றும் அவரை விரைவில் கண்ணயரச் செய்தன. என்றாலும் பாலாஜிக்கு நல்ல

தூக்கமேயில்லை. பயங்கரமான கனவுகள் அவரை வெருட்டிக் கொண்டே இருந்தன. கண்ணீரும் கம்பலையுமாக சித்ரா அவரின் கனவில் தோன்றி உருக்கமாக வாதாடினுள். ''பரிசுத்தமான என்னுடைய காதல்எங்கே, பில்லி சூனியக்காரியான தேவதேவியின் காதல் எங்கே? மலைக் கன்னி மந்திர தந்திரங்கள் தெரிந்த ஒரு பெரிய சூனியக்காரி! ஏதோ ஒரு காரணத்துக்காக அவள் ஜோதியை மயக்கப் பார்க்கிருள். அவள் சொல்லுவது அவ்வளாவும் பொய். பித்தலாட்டம், புனைசுருட்டு! அவளை நம்பவே நம்பாதீர்கள். ஜோதியிடம் நான் வைத்திருக்கும் அன்பு தெய்வீகமானது! என் கணவனை துர்க்கிரதமாக அபகரித்துக் கொள்ள முயற்சிக்கும் இந்த மலைப் பிசாசுக்கு நீங்கள் உடந்தையாயிருக்கப் போகிறீர்களா? வேண்டாம். என் பாபத்தைக் கொட்டிக் கொள்ளாதீர்கள்!'' இப்படி உருக்கமாகவும் ஓவென்று அழுது கொண்டும் புலம்பி முறையிட்டாள் சித்ரா.

''என் காதல் எங்கே! நேற்று முளைத்த சித்ராவின் காதல் எங்கே? அவள் காதல் இன்று முளைத்தது. ஜோதி கட்டழகன் என்ற காரணத்தினுல் பிறந்த மோகம், காதல் அல்ல அதன் பெயர்! என் காதல் அப்படியா? என்றே எப்பொழுதோ நேசித்த ஒரு மனிதருக்காக எத்தனை ஆண்டுகளாக நான் தவமிருக்கிறேன்? செத்தவர் பிழைத்து வருவார். எவ்வளவு யுகாந்திரங்களானுலும் என்னைத் தேடிக் கொண்டு வருவார் என்று நம்பி பிணத்தைக் கட்டிக் கொண்டு அழுகிறேனே இதைவிட வேறு என்ன அத்தாட்சி வேண்டும். என் காதலின் தூய்மைக்கும் உறுதிக்கும் ஏன் அய்யா பாலாஜி! நான் தான் கேட்கிறேன். நீங்கள் சர்வ சாஸ்திர மகா பண்டிதனைப்போல தர்ம சாஸ்திரம் பேசுகிறீர்களே, ஒருவர் சொத்தை இன்னெருவர் அபகரிப்பது குற்றமில்லையா அய்யா! விஜயகேசரி என் சொத்து. இருபத்தையாயிரம் ஆண்டுகளாக என் இதயத்துக்குள் வைத்து நான் பூஜிக்கும் என் தெய்வம். அவரிடம் உரிமை பாராட்ட சித்ராவுக்கு ஏது பாத்தியதை?

விஜயகேசரியை நான் மறுபடியும் இழந்தால் திரும்பவும் அவரை நான் சந்திக்க இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் இந்த உயிரைச் சுமந்து கொண்டிருக்க நேரிடுமோ தெரியுமா? மீண்டும் ஏமாற்றம் ஏற்பட்டால் அது என்னை அதி பயங்கரமான பயித்தியக் காரியாக்கிவிடும். அந்த வெறியில் என்ன செய்வேனென்பது எனக்கே தெரியாது. அதன் விளைவு இந்த உலகத்துக்கே சர்வ நாசமாக முடியலாம். சிம்மேந்திர பூபதி தயாரித்த சர்வநாச திராவகத்தைப் பற்றி நீர் கேள்விப்பட்டிருக்கிறீரா? அதைத் தயாரிக்க எனக்குத் தெரியும். அதைக் கொண்டு இந்த ஜகத்தையே நான் அழித்து நாசமாக்கி விடுவேன். அதற்கு முன்னால் உங்களை ஆம் என் வாழ்வைக் குலைப்பதற்கு நீங்கள் சதி செய்தால் உங்களை............குத்திப் பிளந்து பிய்த்து கடலில் வீசி விடுவேன்! தெரியுமா?'' இப்படிச் சொல்லிக் கொண்டே தேவதேவி திரிசூலத்துடன் ஆவேசத்தோடு வருவதைப் போலிருந்தது.

''அய்யய்யோ! இல்லை தேவி! உனக்குச் சதி செய்யவில்லை தேவி!'' என்று உளறியடித்துக் கொண்டு கட்டிலில் இருந்து கீழே விழுந்தார் பாலாஜி.

விழுந்தவருக்கு களுக்கென்று யாரோ பக்கத்தில் சிரிக்கும் சப்தம் கேட்டது. அவர் கண்களை விழித்துப் பார்த்த பொழுது அருகில் மயில் விசிறியுடன் தேவதேவி நிற்பது கனவல்ல காண்பது நனவுதான் என்று அறிவுறுத்தி எச்சரிப்பதைப் போலிருந்தது. சில மணி நேரத்துக்கு முன்னால் எந்த தேவதேவி அவன் காலைப் பிடித்துக் கொண்டு கண்ணீர் விட்டாளோ அவளுடைய கால்களை இறுகப் பற்றிக் கொண்டு ' தேவி! என்னை ஒன்றும் செய்யாதே! உனக்கு நான் சதி செய்யவில்லை! தூய்மையான உன் காதலை நான் உணருகிறேன் கன்னி மாதா!'' என்று கதறினான் பாலாஜி.

''உஸ்! இங்கே சப்தம் போட்டுப் பேசாதீர்கள்! என் பிரபு விழித்துக் கொண்டு விடுவார்! வெளியே வாருங்

கள்!" என்று சொல்லிவிட்டு திரிசூலத்தை வழக்கமாக ஏந்தியிருக்கும் கையிலே மயில் விசிறியுடன் அவள் வெளியே சென்றாள். கதவின் அருகில் போய் நின்று திரும்பிப் பார்த்த தேவதேவி கலவரத்துடன் பாலாஜி தரையிலேயே கிடப்பதைக் கண்டதும் உங்களைத் தான் கூப்பிடுகிறேன். எழுந்து வாருங்கள்! என் அறைக்கு வாருங்கள்" என்று சொல்லிவிட்டுப் போனாள்.

இதற்குள் கண்டது கனவுதான் என்பதை நிச்சயப்படுத்திக் கொண்டு தெளிவடைந்த பாலாஜி வெட்கத்துடன் தேவதேவியின் முன்னால் போய் நின்றான்.

"ஏன் இப்படி உளறியடித்துக் கொண்டு கட்டிலிலிருந்து விழுந்தீர்கள்? ஏதாவது பயங்கரமான கனவு கண்டீர்களா? சாப்பாடு பலம் போலிருக்கிறது. வயிற்றில் கடுமையான அஜீரணமிருந்தால் தான் மோசமான கனவுகள் வருமென்பார்கள்!" என்று சொல்லிவிட்டுச் சிரித்தாள் தேவதேவி. பாலாஜியின் உதவியினால் ஜோதிவர்மன் இனி தன்னுடையவன்தான் என்பதை நிச்சயப்படுத்திக் கொண்டிருந்த தேவியின் முகாரவிந்தத்தில் முன்பு எப்பொழுதும் பார்த்திராத ஒரு புதிய கவர்ச்சியும் சோபையும் சாந்தியும் தோன்றின.

பாலாஜி தன்னுடைய கனவை ஒளிக்காமல் மறைக்காமல் அப்படியே சொன்னான்!

"சித்ரா கனவில் கூடவா எனக்குச் சதிசெய்ய வருகிறாள்? அவளை அப்பொழுதே தீர்த்துக் கட்டியிருக்க வேண்டும்! நச்சுப் பாம்பிடம் கருணை காட்டச் சொன்னீர்கள்! யார் கண்டார்கள்? அவள் என் பழைய வைரி சந்திரிகாவின் புனர்ஜென்மமோ என்னவோ!" என்றாள் தேவதேவி.

"ஜோதிவர்மனை விஜயகேசரியின் புனர்ஜன்மமென்று தெரிந்து கொண்ட உங்களின் ஞானக் கண்களுக்கு சித்ரா

வின் பூர்வோத்திரம் தெரியவில்லையா?'' என்று கேட்டான் பாலாஜி.

''தெரிந்திருந்தால் சித்ராவை உயிரோடுவிட்டிருப்பேனென்று நினைக்கிறீர்களா? ஜோதியை பார்த்தவுடன் என் அந்தராத்மா எனக்குச் சொல்லிவிட்டது. எவர் ஒருவரை அகோரமாக நினைத்துக் கடும் விரதம் அனுஷ்டிக்கிறேமோ அவர் எப்பொழுது எந்த உருவத்தில் வந்த பொழுதிலும் அவரை அந்தராத்மா காட்டிக் கொடுத்து விடும். விஜயகேசரியிடம் கொண்ட அன்பை வளர்த்ததைப்போல சந்திரிகாவிடம் கொண்டிருந்த துவேஷத்தையும் நான் வளர்த்திருந்தால் இன்று சித்ராவையும் அடையாளம் கண்டு கொண்டிருப்பேன். விதியின்மீது பழியைப் போட்டு சந்திரிகாவை மறந்துவிட்டது ஒருவிதத்தில் தவருகிவிட்டது!'' என்று தேவதேவி சொன்னுள்.

''நிச்சயம் அது தவறில்லை தேவி! அன்பை வளர்த்ததால்தான் அதன் பலன் உங்களுக்கு நிச்சயப்படுகிறது. அந்த அன்போடு துவேஷமும் குரோதமும் கலந்திருந்தால் ஏமாற்றமே நீங்கள் காணும் பலனுயிருக்கும்'' என்ருர் பாலாஜி.

''உண்மை அய்யா! உங்களுக்கு மறுபடியும் இது மாதிரியான கெட்ட கனவுகள் ஏற்படாமலிருக்க ஒரு உறுதிமொழி அளிக்கிறேன். விதிப்பயனுக என் பிரபுவை நான் அடைய முடியாவிட்டாலும் அவர் வளர்ப்புத் தகப்பனை உங்களுக்கு என்மூலம் எவ்வித ஆபத்துமே ஏற்படாது. இதுஎன் காதலின் மீது ஆணையாகச் சத்தியம். ஜோதி நன்ருகத் தூங்குகிருரா என்று பார்ப்பதற்காகத் தற்செயலாக அந்த அறைக்கு வந்து சற்று நேரம் அவருக்கு விசிறிக் கொண்டிருந்தேன். திடீரென்று நீங்கள் அலறிக் கொண்டு விழுந்த கலவரத்தில் நல்ல வேளையாக அவர் எழுந்திருக்கவில்லை. இதோ பொழுது புலரும் நேரமாகி விட்டது. அவர் இனி எப்பொழுதும் விழித்துக் கொள்ள

லாம். நீங்கள் போங்கள். பிறகு நான் வருகிறேன்!'' என்று தேவதேவி சொல்லியனுப்பினுள்.

பாலாஜி திரும்பி வந்து கட்டிலில் படுத்து சோம்பல் முறித்துக் கொண்டிருக்கையில் ஜோதிவர்மன் ''முனியா! டேய் முனியா! என்று முனிசாமியைக் கூவியழைத்துக் கொண்டே ஒரு பெரிய கொட்டாவி விட்டுக் கொண்டு எழுந்தான். அவனுடைய குரலைக் கேட்டு முனியன் வருவதற்கும் பாலாஜி கட்டிலைவிட்டு எழுந்திருப்பதற்கும் முன்னதாக உதய சூரியனைப்போல விசேஷமான கவர்ச்சியுடன் தேவதேவி வாசற்படியில் தோன்றினுள்.

கண்களை விழித்தவுடன் எதிரே கதவினருகில் உதய சூரியனைப்போல மலர்ந்த முகத்துடன் தேவதேவி நிற்பதைக் கண்டு ஜோதிவர்மன் ஒரு கணம் திகைத்துப் போனுன். ஏனெனில் ஜன்னல்வழியாக வந்த காலைக் கதிரவனின் மஞ்சள் வெயிலில் கடைந்தெடுத்த தந்தப் பதுமையைப்போல அவள் இன்முகம் காட்டி அனுயாசமாக நின்றநிலை அவ்வளவு கவர்ச்சிகரமாயிருந்தது.

முகத் திரையைக் கொண்டு முந்திய நாளிரவு பார்த்த அதே பணிப் பெண் தான் வந்திருக்க வேண்டுமென்று தீர்மானித்த ஜோதிவர்மன் ''ஓ! நீதானு? யாரோ என்றல்லவா நினைத்து மலைத்துப் போனேன்!'' என்று சொல்லியவண்ணம் கட்டிலில் எழுந்து உட்கார்ந்தான்.

''ஏன்? யாரென்று நினைத்தீர்கள்? இந்தநாட்டு ராணியென்று நினைத்து ஏமாந்து போய்விட்டீர்கள் போல் இருக்கிறது?'' என்று இளமுறுவலுடன் சொல்லிக் கொண்டே உள்ளே நுழைந்தாள் தேவி.

''மகாராணி வந்து பள்ளியெழுச்சிபாட நான் மகாராஜா இல்லையம்மா! நாங்களெல்லாம் சாதாரணப் பிரஜைகள்!'' என்று சொல்லிவிட்டு பாலாஜியின் பக்கம்

திரும்பிய ஜோதிவர்மன் ''ஏன் பெரியப்பா! நீங்கள் ராணியைப் பார்த்தீர்களா? அவளும் இப்படித்தான் முகத்தை மூடிக்கொண்டிருப்பாளோ?'' என்றான்.

''ஆமாம் ஜோதி! இவர்கள் முகத்தைத் திறந்து காட்டிக் கொண்டிருப்பதைவிட முகத்தை மூடிக் கொண்டிருந்தால் தான் உலகத்துக்கு க்ஷேமம்!'' என்று பாலாஜி சொல்லிக் கொண்டிருக்கையில் தேவதேவிக்குத் தன்னுடைய முகத்தை ஒரே ஒருகணம் பாலாஜி பார்த்துவிட்டுப் பட்டபாடு ஞாபகத்துக்கு வந்தது. தன்னையுமறியாமல் அவள் ''களுக்''கென்று சிரித்துவிட்டாள்.

''ஏன் அம்மா சிரிக்கிறாய்?'' என்று கேட்டான் ஜோதி.

''உங்கள் பெரியப்பாவையே கேளுங்கள்! பாவம்! தேவியின் முகத்தை அரைக்கண நேரம் பார்த்துவிட்டு அவர் பட்டபாடு எனக்கல்லவா தெரியும்!'' என்றாள் தேவதேவி. இப்படிச் சொல்லுகையில் ''பரவாயில்லை. பிள்ளை கேட்டதற்குப் பதில் சொல்லுங்கள்'' என்று அனுமதிப்பதைப்போல அவள் பாலாஜிக்கு சமிக்ஞை கொடுத்தாள்.

''என்ன பெரியப்பா இவள் என்ன உளறுகிறாள்?'' என்று கேட்டான் ஜோதிவர்மன்.

''உளறுகிறாளா? நான்பட்ட அவஸ்தை உண்மையில் எனக்குத்தான் தெரியும் ஜோதி! தன்னைப் பார்த்தால் கண் எரிந்துபோய் விடுமென்று தேவதேவி என்னை எச்சரித்தாள். அவள் கூற்று வெறும் பித்தலாட்டமென்று எண்ணினேன். கண்மூடிக் கண் திறக்கும் நேரம்தான் அவள் முகத்திரையை விலக்கிக் காட்டினாள். அந்த சொற்ப நேரம் பார்த்ததில் என் கண் பூத்துப்போய் அரைமணி நேரம்வரையில் ஒன்றுமே தெரியவில்லை. முட்டாள்தனமாகத் தேவியின் முகத்தைக் கொஞ்சம் கூர்மையாகப்

பார்த்திருந்தால் உன் பெரியப்பா இப்பொழுது இரண்டு கண்களையும் இழந்த குருடனுகியிருப்பார்!'' என்முன் பாலாஜி.

''ஆச்சரியமாயிருக்கிறதே! ஏன் அம்மா, உன் முகத்தைப் பார்த்தாலும் கண் குருடாகிவிடுமோ!'' என்று நையாண்டியாக தேவதேவியிடம் ஜோதிவர்மன் கேட்ட பொழுது பாலாஜி பரபரப்புடன் தேவியின் பக்கம் திரும்பி ''இந்த அசட்டுப்பிள்ளை ஏதோ சொல்லுகிறுனேயென்று முகத்திரையை எடுத்துவிடாதே அம்மா! உனக்குப் புண்ணியமுண்டு!'' என்முன்.

பாலாஜியின் பதட்டத்தைப் பார்த்து மறுபடியும் சிரித்த தேவதேவி ''உங்கள்பிள்ளைக்குத் தகப்பன்பேச்சில் நம்பிக்கையில்லையென்ருல் பரீட்சித்துப் பார்க்கட்டும். எனக்கு ஆட்சேபனையில்லை. ஆனுல், இந்த இளம் வயதில் அவர் கண்களை இழக்க வேண்டும் என்று நான் விரும்பவில்லை!'' என்முள்.

''இதெல்லாம் வெறும் பித்தலாட்டம். உங்களைச் சரியாக தேவதேவி ஏமாற்றியிருக்கிருள் பெரியப்பா! ஏய் பெண்ணே! என் கண்கள் போனுல் பரவாயில்லை! ஆடு நனைகிறதேயென்று ஓநாய் ஒப்பாரி வைத்தமாதிரி நீ எனக்கு அனுதாபப்பட வேண்டாம்! உன் முகத்திரையை எடு பார்க்கலாம்!'' என்று சொல்லிக் கொண்டு எழுந்தான் ஜோதி. அவன் எழுந்த வேகத்தில் தேவதேவியின் முகத்திரையை அவனே இழுத்து எறிந்து விடுவான்போல் இருந்தது.

''இளம்பிள்ளை பயமறியாது!'' என்று சொல்லிவிட்டு இரண்டடி பின்னுல் நகர்ந்த தேவதேவி, ''உங்கள் கண்களைப் பறிக்க எனக்கு அனுமதியில்லை நீங்கள் மகாராணியின் விருந்தாளி. தேவதேவியின் விருந்தாளிகளில் ஒருவரை இம்சித்தவர்கள் என்ன கதியடைந்தார்கள் என்று உங்கள் பெரியப்பாவிடம் கேளுங்கள்!'' என்முள்.

''ஓ! வில்லியத்தைக் கொன்றவர்களையா சொல்லுகிறுள் பெரியப்பா! அவர்கள் என்ன ஆனுர்கள்?'' என்று விசாரித்தான் பாலாஜி.

''அந்த ஐவரையும் புலிக்குகைக்குள் தள்ளுமாறு தேவதேவி உத்தரவிட்டாள். இதற்குள் அவர்களைப் புலிகள் பிய்த்துத் தின்றிருக்கும்!'' என்ருன் பாலாஜி.

''அய்யோ, பாவம்!'' என்று அவன் அங்கலாய்த்த பொழுது ''அதே கதி எனக்கும் ஏற்பட வேண்டுமென்று ஆசைப்பட்டால் என் முகத்திரையை நீக்கச் சொல்லுங்கள்!'' என்ருள் தேவதேவி.

''உங்கள் ராணி ஈவு இரக்கமில்லாத ராட்சஸியா?'' என்று கேட்டான் ஜோதிவர்மன்.

''ராட்சஸியில்லை. ஆனுல், நாட்டில் நல்லாட்சியும் ஒழுங்கும் கட்டுப்பாடும் நிலவுவதைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பு உடையவள். இந்நாட்டுக்கு வந்த ஒரு அந்நியரை மிலேச்சத்தனமாகப் படுகொலை செய்தவர்களுக்கு அவள் சரியான தண்டனை கொடுத்தாள். அநியாயமாக ஐவரை அவள் கொன்று விட்டாளேயென்று நீங்கள் நினைக்கலாம். ஆனுல், அந்த ஐவர் கொல்லப்பட்டதின் மூலம் வருங்காலத்தில் இந்நாட்டுக்குப் பல காரணங்களை முன்னிட்டும் வரக்கூடிய எத்தனை பேர்களின் உயிர்களுக்குப் பாதுகாப்பு ஏற்படுமென்பதை நீங்கள் மறந்துவிட்டீர்கள். நீதிபதிகள் சந்தோஷப்பட்டுக் கொண்டு மரண தண்டனை விதிப்பதில்லை. எவ்வளவோ மன வேதனையோடு தான் குற்றவாளிகளைத் தண்டிக்கிருர்கள். மனக் கசப்பான காரியமாயினும் நீதி நிர்வாகம் சரிவர நடக்காவிட்டால் ராஜ்யமேது, ராஜாங்கமேது? அராஜகம்தான் தலைவிரித்தாடும்!'' என்ருள் தேவதேவி.

''சபாஷ்! ஒரு பணிப் பெண்ணே இப்படிச் சட்ட நுட்பங்களை அலசியெடுத்துப் பேசுவதென்ருல் இவருடைய

ராணி மகா கெட்டிக்காரியாக அல்லவா இருக்கவேண்டும்!'' என்று ஜோதிவர்மன் சொல்லுகையில் ''தேவதேவி மகா பெரிய பண்டிதை ஜோதி! வடமொழி இலக்கியங்களைக் கரைத்துக் குடித்தவள். தர்க்கத்தில் நீ கூட அவளுடன் பேசி வெல்ல முடியாது!'' என்றான் பாலாஜி. இதைக் கேட்டு தேவதேவி பெருமிதத்துடனும் நன்றியுடனும் ஒரு புன்முறுவல் செய்தாள்.

''அந்த மகா பண்டிதையை நான் பார்க்க வேண்டாமா? ஏனம்மா, உன் ராணியின் பேட்டி எனக்கு எப்பொழுது கிடைக்கும்?'' என்றான் ஜோதி தேவதேவியைப் பார்த்து.

''நேற்றிரவு முழுவதும் மகாராணி உங்கள் அறையில் தானே இருந்தாள்'' என்றாள் தேவதேவி.

''இந்த அறையிலா?'' என்று ஜோதி கேட்கவும் ''ஆமாம் ஜோதி! நீ மயக்கமாகத் தூங்கிக் கொண்டிருந்தாய்'' என்றான் பாலாஜி.

''நான் மகாராணியிடம் போய்ச் சொல்லுகிறேன். நீங்கள் காலைச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு பேட்டிக்கு வரத் தயாராகுங்கள்'' என்று சொல்லிவிட்டுத் தேவதேவி கிளம்புகையில், ''உன்னைத்தானே! இன்னும் ஒரே ஒரு விஷயம்! என்னுடன் ஒரு பெண் வந்தாளே அவள் எங்கே போனாள்?'' என்று கேட்டான் ஜோதி.

''யார் சித்ராவா? மகாராணியைப் பார்க்கும்பொழுது அவளிடமே இதைக் கேளுங்கள்! நேற்றுக் காலை சித்ரா எங்கு போனாள் ஏன் போனாள் என்பது எனக்குத் தெரியாது. ஒரு சமயம் மகாராணிக்குத் தெரிந்திருக்கலாம்!'' என்று சொல்லிவிட்டு அர்த்த புஷ்டியுடன் பாலாஜியைப் பார்த்து ஒரு விஷமச் சிரிப்புச் சிரித்துவிட்டு அவ்விடத்தை விட்டு அகன்றாள் தேவதேவி.

''ஏன் பெரியப்பா! இந்த தேவதேவி சந்திரிகா குறிப்பிட்டிருக்கும் அதே ஆசாமிதானு? அல்லது சித்ரா சொல்லியதைப்போல அவளுடைய அமரத்துவம் பெரிய பித்தலாட்டமா?'' என்று விசாரித்தான் ஜோதி.

''உஸ்! அதையெல்லாம் இப்பொழுது ஒன்றும் பேசாதே! தேவதேவி அடுத்த அறையில்தான் இருக்கிருள். நாம் இங்கு பேசுவது கூட அவளுக்கு ஒரு சமயம் கேட்டாலும் கேட்கலாம். தேவதேவி மகாசக்தி வாய்ந்தவள் ஜோதி! மனித சிருஷ்டிக்கே அவள் ஒரு பெரிய புதிர் போலிருப்பவள். ஒன்றுமட்டும் சொல்லி வைக்கிறேன் கேள். அவள் நினைத்தால் உன்னையும் என்னையும் இருந்த இடத்திலிருந்து கொண்டே எரித்துச் சாம்பலாக்கிவிடும் அதிசயமான சக்தி அவளிடமிருக்கிறது. அவள் வேறு ஒன்றும் செய்ய வேண்டாம். சில நிமிட நேரம் முகத் திரையை விலக்கிக் கொண்டு நின்ருலே நாம் பொசுங்கி விடுவோம்!'' என்ருன் பாலாஜி.

''அந்தத் தாதிப் பெண் சொல்லியது நிஜம்தானு? தேவியின் முகத்தைப் பார்த்து நீங்கள் புலம்பினீர்களென்று அவள் சொல்லியது உண்மையென்கிறீர்களா?'' என்று கேட்டான் ஜோதி.

''உண்மை, உண்மை, உண்மை! போதுமா! இந்தப் பேச்சு இதோடு போதும் ஜோதி. சந்தர்ப்பம் கிடைக்கும் பொழுது பிறகு விபரமாகச் சொல்லுகிறேன். ஆனுல், ஒரு விஷயத்தில் பட்டும் எச்சரிக்கையாயிரு. தேவதேவி அமானுஷ்யமானவள். அவளிடம் ஏதாவது தாறுமாருகப் பேசிவிடாதே நாம் இங்கு எப்படி வந்தோம் ஏன் வந்தோமென்பதைப் பற்றி வாய்விட்டுக்கூட ஒன்றும் சொல்லி விடாதே!'' என்று பாலாஜி எச்சரித்தான்.

''சந்திரிகா எழுதி வைத்த வரலாறு உண்மையாயிருந்தாலும் இருக்கலாம் என்று நான் சொல்லியபொழுது என்

ளைக் கேலி செய்தீர்கள். இப்பொழுது என்னடாவென்ருல் என்னைவிட அதிகமாக அந்தக் கதையை நீங்கள் நம்புகிறீர்கள்'' என்று ஜோதி சொல்லியபொழுது பாலாஜி பலவந்தமாக அவன் வாயைப் பொத்தி ''இந்தப் பேச்சு போதுமென்ருல் நீ கேட்கமாட்டாய். நாம் நெருப்புடன் விளையாடுகிருேம்!'' என்று மறுபடியும் எச்சரித்தார்.

ஜோதிவர்மன் ஸ்நானம் செய்துவிட்டு தேவதேவி அனுப்பிய பட்டு வஸ்திரங்களுக்குப் பதிலாகத் தான் கொண்டு வந்திருந்த ஐரோப்பிய உடைகளை அணிந்து கொண்டான். அவன் தலை சீவிப் பவுடர் போட்டுக் கொள்ளுவதற்குள் பாலாஜியும் ஸ்நானம் செய்து முடித்துக் கொண்டு வந்தார்.

அவர்கள் காலைச் சாப்பாட்டுக்குத் தயாராயிருக்கிருர்களென்பதைச் சரியாகத் தெரிந்து வைத்துக் கொண்ட மாதிரி அவர்கள் மேஜையில் உட்கார்ந்ததும் அந்த அறைக்கு அடிக்கடி வந்து போகும் அதே பணிப் பெண்கள் தங்கத் தட்டுகளில் பலகாரமும் இரண்டு வெள்ளிக் கோப்பைகளில் சுடச்சுட ஆவிவரும் கோப்பியும் கொண்டு வந்து வைத்தார்கள்.

கோப்பியைப் பார்த்தவுடன் ஜோதியும் பாலாஜியும் அடைந்த ஆச்சரியத்துக்கு அளவேயில்லை. காலையில் கோப்பி குடிக்காவிட்டால் தலைவலி வந்துவிடுமென்று பயந்து அவர்கள் செம்பவளத்தீவில் இறங்குகையில் ஒரு மாதத்துக்குத் தேவையான அளவு கோப்பிப் பவுடரும் டின்பாலும் கூடவே கொண்டு வந்திருந்தார்கள். உக்கிரசேனர் குகையிலிருந்து புறப்பட்டு அரண்மனைக்கு வருகையிலும் அதில் ஒரு பகுதியை அவர்கள் கையில்கொண்டு வந்திருந்தனர். முனிசாமியிடம் சொல்லி கோப்பி போடச் சொல்ல வேண்டுமென்று அவர்கள் எண்ணிக் கொண்டிருக்கையில் பணிப் பெண்கள் சூடான கோப்பியைக் கொண்டு வந்து வைத்தது ஜோதிக்கும் பாலாஜிக்கும் ஆச்சரியமா

யிருந்தது. சாப்பிட்டு முடித்து முனிசாமி அடுத்த அறையி லிருந்து வந்தபொழுது தான் அவர்களுக்கு உண்மை புலப் பட்டது.

''உங்களுக்கு முன்னுல்நான் எழுந்துவிட்டேன். எனக் குப் பால் கொண்டு வந்து கொடுத்தார்கள். எஜமா னுக்கு கோப்பி வேண்டுமென்றேன். கோப்பியென்ருல் பணிப் பெண்களுக்கு என்னவென்று புரியவில்லை. அவர் கள் மகாராணியிடம் போய் சொல்லியிருக்க வேண்டும் போலிருக்கிறது. ராணியே நேரில் வந்து என்னிடம் விசா ரித்தாள். கோப்பிப் பொடியை எடுத்துக் கொடுத்து கோப்பிபோடும் முறையையும் சொன்னேன்!'' என்ருன் முனிசாமி.

''ராணி தேவிக்கு நம்மிடம் ஏன் இவ்வளவு அக்கறை? நமக்கு முன்னுல் எழுந்து நம்முடைய செளகரியத்தை இத் தனை சிரத்தையோடு அவள் கவனிப்பது ஆச்சரியமா யில்லை?'' என்று கேட்டான் ஜோதிவர்மன்.

''இந்தக் கேள்வியை மகாராணியிடமே கேட்டுவிட் டால் போச்சு''' என்று பாலாஜி சொல்லிக் கொண்டிருக் கையில் ஒரு பணிப்பெண் அங்கு வந்து தேவதேவி அழைப் பதாக ஜாடையாகச் சொன்னுள்!

## அத்தியாயம் - 6

ஜோதியும் பாலாஜியும் அடுத்த அறைக்குப் போனுர் கள். கட்டிலில் அனுயாசமாக அமர்ந்து குளுமையாகப் பார்த்த வண்ணம் இன்முகம் காட்டி அவர்களை தேவதேவி வரவேற்ருள். அன்று காலை பணிப்பெண்ணென்று தன்னை வர்ணித்துக்கொண்ட அதே முக்காடிட்ட பெண்மணி ஆடம் பரமான சூழ்நிலைமையில் கட்டிலில் அமர்ந்து வரவேற்

பதைக் கண்டதும் ஜோதிவர்மனுக்கு சற்று திகைப்பாகப் போய்விட்டது.

"இன்று காலையில் நான் பார்த்தது உங்களைத்தானே? ஆம், சந்தேகமேயில்லை! மகாராணியின் பணிப்பெண் ணென்று தங்களைச் சொல்லிக் கொண்டீர்கள்! என்று ஒரு அசட்டுச் சிரிப்புடன் ஜோதிவர்மன் சொல்லியபொழுது "ஆம். காலையில் நீங்கள் பார்த்தது என்னையேதான். இந் நாட்டின் அரசி தேவதேவியும் நானேதான்!" என்று சொல்லிவிட்டு ஒரு இளமுறுவல் பூத்தாள் மலைக்கன்னி!

"இந்நாட்டின் அரசி தேவதேவி நானேதான்" என்று மலைக்கன்னி சொல்லியபொழுது பாலாஜியின் பக்கம் திரும் பிய ஜோதிவர்மன், "மலைக்கன்னிதான் என்னை ஏமாற்றி ஞளென்றல் நீங்கள்கூடவா உண்மையை என்னிடமிருந்து மறைக்கவேண்டும் பெரியப்பா?" என்றான்.

"எய்தவள் நானிருக்க அம்பை நொந்துகொள்ளு வானேன்? உங்கள் பெரியப்பா மீது தவறில்லை. நீங்கள் மிக வும் துர்லபமான நிலைமையிலிருக்கும்பொழுது நாம் யார் என்பதைச் சொல்லவேண்டாமென்று உங்கள் பெரியப்பா விடம் நான்தான் கேட்டுக்கொண்டேன்" என்றாள் தேவி. இதை அவள் சொல்லிய முறை சிலமணி நேரத்துக்கு முன் ஞல் மரணத்துடன் போராடிக்கொண்டிருந்த உங்களை நான்தான் காப்பாற்றினேன். கிட்டத்தட்டச் சுடுகாட்டுக் குக் கொண்டுபோய் வைத்த பிணத்துக்கு உயிர்கொடுத்து திருப்பியழைத்து வந்தேன்! என்று சொல்லாமல் சொல்லிக் காட்டுவதைப்போலிருந்தது.

"கன்னிமாதா! உங்களுக்கு நான் மிகவும் கடமைப்பட் டிருக்கிறேன்! என்று ஜோதிவர்மன் தன்னுடைய நன்றியறி தலைத் தெரிவித்துக்கொள்ள ஆரம்பித்தபொழுது, என் பெயர் தேவதேவி. சுருக்கமாகச் சொல்வதானல் 'தேவி!', என்றாள் மலைக்கன்னி.

"தங்கள் பெயர் எனக்குத் தெரியும்! என்று ஜோதி வர்மன் சொல்லுகையில் பெயர் தெரிந்திருக்கும்பொழுது கன்னிமாதா எதற்கு? இந்நாட்டு மக்களுக்கு நான் அரசி. என் அரண்மனைக்கு வந்திருக்கும் விருந்தாளிகளுக்கு அரசியில்லை. சிநேகிதி!" என்றாள் மலைக்கன்னி.

"நீங்கள் செய்த உதவிக்கு எவ்விதம் நன்றி தெரிவிப்பதென்றுதான் புலப்படாமல் தவிக்கிறேன் தேவ தேவி!" என்றான் ஜோதி.

"என் விருந்தாளிகளில் யாருக்கும் தவிக்கும் கஷ்டநிலைமையை வைக்க நான் விரும்புவதேயில்லை. நன்றிதெரிவிக்க வேண்டுமென்ற எண்ணம் உங்களுக்கு உண்மையாகவே இருந்தால் அதற்கு நானே ஒரு சுலபமான வழி சொல்லுகிறேன்" என்று கூறிவிட்டு ஒரு குறுநகை செய்தாள் தேவ தேவி.

"சொல்லுங்கள் தேவி! நான் எந்தவிதத்தில் நன்றி தெரிவிக்க முடியுமென்பதைச் சொல்லுங்கள்" என்றான் ஜோதிவர்மன்.

"பிரமாதமான காரியம் ஒன்றுமில்லை. நீங்கள் நோயுற்றிருந்ததை அடியோடு மறந்து இந்த அரண்மனையிலிருக்கும் வரையில் வேறு எவ்விதச் சிந்தனையுமில்லாமல் சந்தோஷமாயிருக்க வேண்டும்" என்றாள் தேவதேவி.

"உங்கள் சித்தம் என் பாக்கியம்" என்றான் ஜோதிவர்மன். இந்த வார்த்தைகள் தேவதேவியை இன்பலோகத்துக்கு இட்டுச்செல்வதைப்போலிருக்க வேண்டுமென்று பாலாஜி தனக்குள் நினைத்துக்கொண்டான்.

"நீங்கள் என்ன சொன்னீர்கள்? இன்னொருதரம் சொல்லுங்கள்!" என்றாள் தேவி.

"உங்கள் சித்தம் என் பாக்கியம் என்றேன்!" என்று திருப்பிச் சொன்னன் ஜோதி.

"இல்லை! நீங்கள் பிழைத்து எழுந்தது உண்மையில் என் பாக்கியம். உங்களைப் போன்ற ஒரு அழகனும் அறிவாளியும் இந்நாட்டுக்கு விஜயம் செய்தது இந்நாட்டு மக்கள் செய்த பெரும் பாக்கியம்!" என்றாள் தேவி.

"என்னை மன்னிக்க வேண்டும் தேவி! எனக்கு இன்னும் உடம்பு பூரணகுணமாகவில்லையென்றே தோன்றுகிறது. கடுமையாக அடித்த ஜுரம் என் செவிகளையும் மூளையையும்கூட பாதித்துவிட்டதென்று நினைக்கிறேன்" என்றான் ஜோதி. மகாகொடிய அரக்கியென்று சந்திரிகா வர்ணித்த தேவதேவி இவ்வளவு சரளமாகவும் அன்பு ததும்பவும் பேசுவதை அவனால் நம்பவே முடியவில்லை. தேவதேவியை நேரில் பார்ப்பதுகூட துர்லபமென்றும் அரண்மனைக்குப் போன அந்நியர்களில் யாருமே உயிரோடு திரும்பிவந்ததில்லையென்றும் சித்ரா சொல்லிய விவரங்களும் ஜோதியின் ஞாபகத்துக்கு வந்தன. மனதினால் நினைத்தாலே பிரஜைகள் நடுநடுங்கும் அவ்வளவு பயங்கரத்தன்மை வாய்ந்த ஒரு ராணியா சரளமாகவும் சுமுகமாகவும் பேசுகிறாளென்பதை நினைத்தபொழுது ஜோதிவர்மனுக்கு அவனுடைய செவிகளையே அவனால் நம்பமுடியவில்லை.

ஜோதி சொல்லியதைக் கேட்டதும் "உண்மைதான் ஜோதி! உனக்கு ஏற்பட்டிருந்த விஷஜுரம் நீங்கி ஒரு புதிய மாதிரியான நோய் இப்பொழுது உன்னைப் பற்றிக்கொள்ளப் பார்க்கிறது! விஷஜுரத்திலிருந்து நீ தப்பிவிட்டாய். தேவதேவியின் மூலமாகத் தொத்திக் கொள்ளவிருக்கும் காதல் ஜுரத்திலிருந்து நீ எப்படித் தப்பப்போகிறாயோ ஆண்டவனுக்குத்தான் தெரியும்! என்று சொல்லவேண்டும் போல் தோன்றியது பாலாஜிக்கு. ஆயினும் தேவதேவியின் பிரசன்னமும் ஜோதி சொல்லியதைக்கேட்டு அவள் கலகல

வென்று சிரித்ததும் பாலாஜியை வாய்மூடி மௌனியாக்கி விட்டன.

''ஏன்? உங்கள் செவிகளுக்கும் மூளைக்கும் என்ன வந்து விட்டது?'' என்று கேட்டுவிட்டு மறுபடியும் சிரித்தாள் தேவி.

''என்னை மன்னிக்கவேண்டும் தேவி! இந்நாட்டு மக்களைப் பார்த்தவுடன் அவர்களுடைய ராணியும் அவர்களைப் போலவே இருப்பாளென்று நினைத்தேன். நீங்கள் இவ்வளவு அன்பாக அந்நியர்களை நடத்துவது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது!''என்றான் ஜோதி.

''ராணியென்றால் கொம்பு முளைத்திருக்குமென்று நினைக்காமலிருந்தீர்களே, அந்த மட்டில் உங்களுக்கு நான் நன்றிசெலுத்த வேண்டும்! நீங்கள் நினைப்பதைப் போல நான் இந்நாட்டுக்கு ராணியே தவிர அவர்களைப்போல இந்நாட்டில் பிறந்து வளர்ந்தவளில்லை. உண்மையைச் சொல்லப்போனால் அவர்களுடன் நெருங்கிப் பழகுகின்றவளுமில்லை. பண்பு மிக்க பாரத புண்ணிய பூமியில் பிறந்தவள் தான் நானும்!'' என்றாள் தேவி.

''இந்நாட்டு மக்களைப் பண்பில்லாதவர்களென்று நான் சொல்வதாக நினைத்துவிடக் கூடாது தேவி! இதுவரை இந்நாட்டில் சில காட்டு ஜனங்களை மட்டுமே நாங்கள் பார்த்திருக்கிறோம். அவர்களை வைத்துக்கொண்டு தேச மக்கள் அனைவரையும் நாங்கள் மதிப்பிடுவது மாபெரும் தவறு. தவிர காட்டு இனங்களுக்கிடையிலேயே மிகவும் நல்லவர்களும் அநேகர் இருக்கிறார்கள். அடடா, மறந்தே போனேனே! சித்ரா எங்கே தேவி!'' என்று கேட்டான் ஜோதி!

சித்ராவைப் பற்றி அவன் விசாரித்ததும் தேவியின் முகத்தில் ஒரு சிறு மாறுதல் ஏற்பட்டதை பாலாஜி மட்டும் கவனித்தார்.

''சித்ரா! யார் சித்ரா! உக்கிரசேனன் மகளையா கேட்கிறீர்கள்?'' என்ருள் தேவி.

''ஆமாம் தேவி! அந்தப் பெண் என்னிடம் மிகுந்த அன்பு செலுத்தி வந்தாள். ஒரு கணம் கூட என்னைவிட்டுப் பிரியாமலிருந்து பணிவிடை செய்தாள். அரண்மனைக்கு நாங்கள் புறப்பட்டு வருகையில் எங்களோடுகூட அவளும் வந்தாள்!'' என்ருன் ஜோதி.

''அப்படியா? ஆனல், அவளை நான் பார்க்கவில்லையே!'' என்று ஒரு பெரிய போடுபோட்டாள் தேவதேவி.

''நீங்கள் பார்க்கவில்லையா? சித்ரா எங்கே என்று நான் கேட்டபொழுது அவள் வெளியே போயிருப்பதாயும் அவளுக்குப் பதிலாக நீங்கள் பணிவிடை செய்வதாயும் நீங்கள் தானே சொன்னீர்கள்! இதில் ஏதோ சூது இருக்கிறது. என் சித்ரா எங்கே? தயவுசெய்து என் சித்ரா எங்கேயென்று சொல்லுங்கள் தேவி?'' என்று பதட்டத்துடன் கேட்டான் ஜோதிவர்மன்.

சித்ராவைப் பற்றி உணர்ச்சியோடு ஜோதிவர்மன் விசாரித்தபொழுது மலைக்கன்னி என்ன பதில் சொல்லுவதென்று ஒரு கணம் தயங்கினுள், பிறகு அவள் சொன்னுள்:

''சித்ரா என்னை வைத்துவிட்டு வெளியேபோயிருப்பதாக நான் சொல்லியது உண்மைதான். ஆனல், சித்ரா யார் என்பது இப்பொழுது உண்மையில் எனக்குத் தெரியாது. பிறகுதான் உங்கள் பெரியப்பாவிடமிருந்து அந்தப் பெண் யார் என்பதையும் அவளைப்பற்றி ஆவலோடு நீங்கள் விசாரித்த காரணத்தையும் தெரிந்துகொண்டேன். உங்

களுடன் அரண்மனைக்குப் புறப்பட்டு வந்தவள் பாதிவழி யிலேயே திரும்பிப் போய்விட்டாளாம். இந்தக் காட்டுப் பெண்களே பெரும்பாலும் இப்படித்தான். அழகான ஒரு இளைஞனைக் கண்டால் அவனைச் சுற்றிக்கொண்டு அலைவார் கள். அவனுக்கு ஏதாவது கொஞ்சம் உடம்பு சுகமில்லை யென்றால் அழுகிய பழத்தை வீசியெறிவதைப்போல உதறித் தள்ளிவிட்டுப் போய்விடுவார்கள். அதிலும் உங் களுக்கு வந்திருப்பது விஷஜுரமென்று தெரிந்த பின் சித்ரா உங்கள் பக்கத்திலிருப்பதற்குக்கூடப் பயந்திருப் பாள். பாவம். விஷஜுரமென்றால் காட்டு ஜனங்களுக்கு அவ்வளவு பயம்'' என்றாள் தேவி. பிறகு பாலாஜின் பக்கம் திரும்பி, ''ஏன் அய்யா! பாதிவழியிலேயே சித்ரா திரும் பிப்போய்விட்டதை உங்கள் மகனுக்கு நீங்கள் சொல்ல வில்லையா?'' என்று அர்த்தபுஷ்டியுடன் ஒரு கேள்வி கேட் டாள்.

பாலாஜி: ''சொல்லவில்லை! சித்ராவைப் பற்றி ஜோதி விசாரித்தபொழுது மகாராணியிடமே கேட்டுத் தெரிந்து கொள்!'' என்றேன்.

தேவதேவி: சித்ரா பாதி வழியில் திரும்பிப்போய்விட் டது நீங்கள் சொல்லித்தானே எனக்கே தெரியும்? உங்கள் மகன் மனதைக் கவர்ந்த பேரழகியை நான் பெட்டிக்குள் வைத்து பூட்டியிருப்பதாக அவர் நினைக்கிறார் போலிருக் கிறது.

''ஆமாம் ஜோதி! சித்ரா பாதிவழியிலேயே திரும்பிப் போய்விட்டாள்!'' என்று வேறுவழியில்லாமல் நெஞ்சு அறிய பாலாஜி ஒரு பொய் சொல்லவேண்டியதாயிற்று.

''இதை ஏன் அப்பொழுதே என்னிடம் சொல்லவில்லை யென்பதுதான் எனக்குப் புரியவில்லை என்று ஜோதிவர்மன் ஒரு சந்தேகப்பார்வையுடன் பாலாஜிடம் கேட்டபொழுது ''உண்மையைச் சொல்லுகிறேன் ஜோதி! நீ சரியாக குண

மடையும் வரையில் உன்னுடன் யாரும் அதிகமாகப் பேசக்கூடாதென்றும் அதிலும் உணர்ச்சி வசப்படுத்தக் கூடிய விஷயங்களைப் பற்றி பேசவே கூடாதென்றும் மகாராணி சொல்லியிருந்தாள். உனக்கு அதிர்ச்சியைக் கொடுத்து வியாதி திரும்பிவிட்டால் என்ன செய்வது என்ற பயத்தில் மகாராணியிடமே நீ எதையும் கேட்டுக் கொள்ளுவது நல்லதென்று நினைத்துக்கொண்டேன் ஜோதி. சித்ராவைப் பற்றியோ அல்லது வேறு யாரைப்பற்றியுமோ அதிகமாக நீ சிந்திக்கக்கூடாது. பயங்கரமான உன் வியாதி திரும்பிக்கொண்டால் பேராபத்தாகிவிடும்! சித்ரா எங்கே போய்விடுவாள்? உக்கிரசேனரின் குகையில்தானே இருப்பாள்? இங்கிருந்து திரும்பிப்போகும் பொழுது அவளைப் பார்த்துவிட்டுப் போனால் போகிறது!'' என்று நிலைமையைச் சமாளிக்க சாதுர்யமாகப் பேசினன் பாலாஜி.

தனக்கு சாதகமாகப் பாலாஜி இவ்விதம் சொல்கையில் அவரை நன்றி நிறைந்த பார்வையுடன் கவனித்துக்கொண்டிருந்த தேவதேவி, பாலாஜி பேசிமுடிந்ததும் ''நோய்வாய்ப் பட்டவரைத் திரஸ்கரித்துவிட்டுப்போனவளை மறுபடியும் துரத்திக்கொண்டு போகவேண்டாமென்று உங்கள் பிள்ளைக்கு உபதேசம் செய்யுங்கள். எவர் எப்படிப் போனல் எனக்குஎன்ன? யார் யாரைத் துரத்திக்கொண்டுபோனல் தான் என்ன?'' என்ருள். இப்படிச் சொல்லி வாய் மூடியவுடன் அவள் இரண்டு கைகளையும் பலமாகத் தட்டினுள்.

ஒரு பணிப் பெண் உள்ளே வரவும் ''உக்கிரசேனனை உள்ளே வரச் சொல்!'' என்று தேவதேவி உத்தரவு பிறப்பித்தாள். தேவதேவியின் அழைப்பை எதிர்பார்த்து வெளியே காத்திருந்தவரைப்போல் உக்கிரசேனர் உள்ளே நுழைந்து வழக்கம்போல தரையில் விழுந்து வணங்கவும் தேவதேவிக்கு திக்கு பாலகர்களும் அந்நாட்டு மக்களும் வணக்கம் தெரிவிக்கும் முறையை முதன் முதலாகப்

பார்த்த ஜோதிவர்மன் உக்கிரசேனரையே இமை கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தான்.

"எழுந்திரு! உன் மகள் சித்ரா எங்கே?" என்று கேட்டாள் தேவதேவி. இதுவரையில் சுமுகமாகப் பேசிக்கொண்டிருந்த தேவியின் குரலில் ஒரு அதிகாரமும் கடுமையும் தொனிப்பதைக் கவனித்த ஜோதிவர்மன் தேவதேவியின் கேள்வி முன்னேற்பாடான ஒரு நாடகமென்பதைக் கொஞ்சம் சந்தேகிக்க இடமில்லாமலிருந்தது.

"என் மகள் குகையிலிருக்கிருள் கன்னிமாதா!" என்ருர் உக்கிரசேனர்.

"சித்ரா தங்களோடுகூட அமரகிரிக்கு வந்ததாக இவர்கள் கூறுகிருர்களே, அது உண்மைதானு?" என்று கேட்டாள் தேவதேவி.

"ஆமாம் கன்னிமாதா! ஆனுல், பாதி வழியில் அவள் திரும்பிப்போய்விட்டாள்" என்ருர் உக்கிரசேனர்.

"ஏன் திரும்பிப்போனுள்?" என்று தேவதேவி மறுபடி கேட்டபொழுது உக்கிரசேனர் சற்றுத் தயங்கிவிட்டு, "எனக்குத் தெரியாது தேவி! போகும்போது என்னிடம் சொல்லிக்கொண்டு போகவில்லை" என்ருர் உக்கிரசேனர்.

"நல்லது! நீ சற்று நேரம் வெளியே இரு! இந்த அரண்மனையின் சுற்றுப்புறங்களையெல்லாம் நமது விருந்தாளிகளுக்குக் காண்பிக்கப்போகிறேன். அப்பொழுது நீயும் எங்கள் கூட வரலாம்" என்று மலைக்கன்னி சொல்லவே உக்கிரசேனர் பயபக்தியுடன் மறுபடியும் விழுந்து வணங்கிவிட்டு புறமுதுகு காட்டாமல் பின்னுடியே நகர்ந்து சென்று அறையைவிட்டு வெளியேறினுர்.

உக்கிரசேனர் சென்ற பிறகு "சித்ராவின் தகப்பன் சொல்லியதைக் கேட்டீர்களல்லவா?போகும்பொழுது தகப்

பனிடமே சொல்லிக்கொண்டு போகவில்லையாம் சித்ரா'' என்று ஜோதியைப் பார்த்துச் சொன்னாள் தேவதேவி.

''சித்ராவின் போக்கு ஆச்சர்யமாயிருக்கிறது. அவள் என்னுடன் பழகிய முறையைக் கவனிக்கையில் அவளா இவ்விதம் நடந்துகொண்டாளென்று சந்தேகமாயிருக்கிறது'' என்று ஜோதிவர்மன் சொல்லுகையில், ''அவள் மட்டுமல்ல; இந்தக் காட்டு ஜனங்களில் எல்லோருமே அப்படித்தான். இது கிடக்கட்டும், இந்த அமரகிரி அரண்மனை அதிசயங்களில் சிலவற்றை உங்கள் பெரியப்பா ஏற்கனவே பார்த்துவிட்டார். அவற்றையும் அவர் பார்க்காதவைகளையும் உங்களுக்குக் காட்டுகிறேன் வாருங்கள்'' என்று சொல்லிவிட்டு திரிசூலத்தைக் கையிலெடுத்துக்கொண்டு கிளம்பினாள் தேவதேவி.

''வானமண்டலத்திலிருந்து இறங்கிவந்த ஒரு தேவ கன்னிகை நிலத்தில் நடப்பதைப் போலல்லவா இருக்கிறது தேவதேவியின் கம்பீரமான செளந்தர்யம். அதிலும் அவள் திரிசூலத்தை லாகவமாக எடுத்துச் செல்லும் தோற்றம் எவ்வளவு ரம்மியமாயிருக்கிறது!'' என்று ஜோதிவர்மன் தேவதேவிக்குத் தான் சொல்வது தெரியக் கூடாதென்பதற்காக பாலாஜியிடம் வடமொழியில் சொல்லிக்கொண்டு புறப்பட்டபொழுது பளிச்சென்று திரும்பிப் பார்த்த தேவதேவி ஒரு மோகனப் புன்முறுவலைப் படரவிட்டுக்கொண்டு ஜோதியைக் குளுமையாகப் பார்த்து ''ம்! அப்படியா?'' என்றாள்.

வடமொழியில் தான் சொல்லியதை தேவதேவி புரிந்துகொண்டுவிட்டாளென்பதை உணர்ந்ததும் ஜோதிவர்மன் வெட்கிப்போனான்.

''என்னை மன்னிக்கவேண்டும் தேவி! மனதில் பட்டதை அப்படியே சொல்லிவிட்டேன்'' என்று அவன் சொல்லவும் ''இல்லை! உங்களை மன்னிக்க முடியாது! நீங்கள் செய்ததும்

மன்னிக்கக்கூடிய சாதாரண குற்றமில்லை'' என்று சொல்லிக்கொண்டே நடந்தாள் தேவதேவி.

''உலகம் கண்டிராத ஒரு பேரழகியை அழகியென்று வர்ணிப்பது உங்கள் நாட்டில் குற்றமானல் உண்மையில் நான் குற்றவாளிதான் தேவி! இந்த நாட்டுப் பழக்கம் தெரியாமல் செய்துவிட்ட பிழையை மன்னிக்கவேண்டும்'' என்றான் ஜோதிவர்மன்.

''அழகியை அழகியென்று வர்ணித்திருந்தால் அது குற்றமில்லை. ஒன்று நீங்கள் நினைப்பதைப்போல நான் தேவகன்னிகைகளுக்கு ஒத்த அழகில்லை. நீங்கள் சொல்வது எனக்குத் தெரியப்படாதென்பதற்காக, எனக்குத் தெரியாத பாஷையில் பேசுவதாக நினைத்துக்கொண்டு பேசியது இரண்டாவது பெரிய குற்றம்'' என்றாள் தேவி.

''ஜோதி! வடமொழியில் உன்னையும் என்னையும்விட அதிக பாண்டித்தியமுடையவள் தேவி. அதுமட்டுமில்லை. பெரும்பாலான பண்டிதர்களிடமிருந்தும் பொறுமையும் அசூசையும் இன்றி பிறருடைய ஞானத்தை ரசிக்கும் மேலான பண்பும் உடையவள் இந்நாட்டு ராணி'' என்றான் பாலாஜி.

''இதைக் கேட்க உண்மையில் நான் சந்தோஷப்படுகிறேன்'' என்று ஜோதிவர்மன் சொல்லுகையில் ''உங்களைபோன்ற அறிஞர்களைச் சந்திக்கும் பாக்கியம் கிடைத்ததற்கு உங்களைவிடப் பன்மடங்கு நான் பரமானந்தமடைகிறேன்'' என்றாள் தேவி.

இதற்குள் அவர்கள் அமரகிரியின் புராதன வரலாறுகளை சிலாசாசனங்களாக எழுதிவைத்திருக்கும் சித்திரக் கலாமண்டபத்துக்கு வந்துசேர்ந்தார்கள். அங்கு பிரம்மி லிபியில் எழுதியிருந்த பல ஆயிரம் வருடப் பழமையான வரலாறுகளை தேவதேவி ஜோதிவர்மனுக்கும் வாசித்துக்

காட்டினாள். அவற்றை உலக சரித்திரத்துடன் ஒப்பிட்டு அரிய ஆராய்ச்சிக் கருத்துக்களை ஜோதிவர்மனும் தேவ தேவிக்குச் சொல்லிக்கொண்டு வந்தான்.

பிரேதச் சாலைகள், சிற்பக்கூடம், சித்திரமண்டபம் முதலான பலஇடங்களையும் தேவிகாட்டிவிட்டுக்கடைசியில் மலை உச்சியிலே ஒரு பெரிய மைதானம் போன்றிருந்த விசால மான திறந்த வெளிக்கு அவர்களை அழைத்துக்கொண்டு போய் ''இங்குதான் இன்றிரவு ஒரு நடன விருந்து நடக்கப் போகிறது. உங்களைக் கௌரவிப்பதற்காக நடனவிருந் துக்கு ஏற்பாடு செய்திருக்கிறேன்'' என்றாள்.

மலை உச்சியிலிருந்து பார்த்தபொழுது அமரகிரியை அடுத்து அமரபுரி நகரத்தின் அழகான தோற்றம் ஜோதி யின் கவனத்தைக் கவர்ந்தது.

''இவ்வளவு அழகான பட்டினங்களும் செம்பளவத் தீவில் இருப்பதை இப்பொழுதுதான் நான் பார்க்கிறேன்'' என்றான் அவன்.

''இதேபோல இன்னும் பல பட்டினங்களிருக்கின் றன. அவைகளை நானே சரியாகப் பார்த்ததில்லை'' என் றாள் தேவி.

''நீங்கள் சொல்லுவது ஆச்சர்யமாயிருக்கிறதே! நாட்டின் மகாராணி தன்னுடைய நகரங்களைப் பார்த்த தில்லையென்று சொல்லுவதை இப்பொழுதுதான் முதல் தடவையாக நான் கேட்கிறேன்'' என்றான் ஜோதி.

''ஆம்! ஆச்சர்யமானதுதான். என் வாழ்க்கையே யாரும் சுலபமாக நம்பமுடியாத அதிசயமான வாழ்க்கை. உலகத்தில் என்னைப்போன்ற ஒரு அதிசயமான பெண் பிறந்ததில்லை. அபாக்கியவதியான பெண்ணும் பிறந்த தில்லை'' என்றாள் தேவி.

''உங்களை அபாக்கியவதியென்று சொல்லிக் கொள்ளு வதாயிருந்தால் இந்த உலகத்தில் பாக்கியவதியென்று

சொல்லிக்கொள்ள யாருமே இருக்கமாட்டார்கள்'' என்ருன் ஜோதி.

''என் வரலாற்றைக் கேட்கும் வரையில் இப்படித் தான் சொல்லுவீர்கள் ஊம்... என் துயரம் என்னோடு இருக்கட்டும்'' என்று சொல்லிவிட்டு ஒரு நெடுமூச்செறிந்தாள் தேவி.

''உங்கள் மனதை அப்படித் துன்பப்படுத்தும் விஷயம் என்ன?'' என்ருன் ஜோதி.

''ஏன் அதைக் கேட்கிறீர்கள்?'' என்ருள் தேவி.

''அதைப் போக்க எங்களால் ஏதாவது செய்ய முடியுமானுல் செய்யலாமென்பதற்குத் தான் கேட்கிறேன்'' என்ருன் ஜோதி.

தேவி ஒரு கணம் மௌனமாக ஜோதியை ஏறத்தாழப் பார்த்தாள். பிறகு, ''ஆம்! முடியும்! என் மனத்துயரைப் போக்க உங்களால் முடியும்'' என்று அவள் அழுத்தம் திருத்தமாகச் சொன்னுள்.

''அப்படியானுல் அதைச் சொல்லத் தயங்குவானேன்?'' என்று கேட்டான் ஜோதி.

''உங்களை நன்கு புரிந்துகொள்வதன் முன்னுல் என் அந்தரங்கத்தை உங்களிடம் வெளியிட நான் விரும்பவில்லை. தேவைப்படும் பொழுது எனக்கு உதவி புரிவதாக வாக்களித்தீர்களானுல் அதுவே போதும்'' என்ருள் தேவி.

''நிச்சயம் உங்கள் துயரத்தைத் தீர்க்க என்னுல் முடிந்ததைச் செய்வேன். இதில் உங்களுக்குச் சந்தேகமே வேண்டாம்'' என்று ஜோதி கூறியபொழுது, ''இது நிச்சயம் தானு?'' என்று கேட்டாள் தேவி.

"நான் கொடுத்த வாக்கை ஒருபோதும் புறக்கணித்த தில்லை. என் பெரியப்பாவைக் கேட்டுப்பாருங்கள்" என்ருன் ஜோதி.

"நல்லது! பிறகு ஒரு சமயம் என் வரலாற்றைச் சொல்கிறேன். இன்று வேண்டாம். சாப்பாட்டுக்கு நேர மாகிறது. போவோம் வாருங்கள்!" என்று சொல்லிவிட்டு ஜோதியையும் மற்றவர்களையும் அழைத்துக்கொண்டு கீழே இறங்கினுள் தேவி.

ஜோதியையும் பாலாஜியையும் மாத்திரம் தேவியின் அறையில் விட்டு மற்றவர்கள் திரும்பினுர்கள்.

மத்தியானச் சாப்பாடு முடிந்ததும் தேவியின் அறையி லிருந்த புராதன ஏட்டுச் சுவடிகளில் சிலவற்றை எடுத்துக் கொண்டு ஜோதி தன்னுடைய அறைக்குத் திரும்பினுன்.

பக்கத்தில் ஒருவருமில்லையென்பதை உறுதிப்படுத்திக் கொண்டு, "ஏன் பெரியப்பா! இந்த தேவதேவி உண்மை யாகவே சந்திரிகாவின் காலத்திலிருந்த தேவதேவிதானு? அல்லது சித்ரா சொல்லியதைப்போல தேவியின் அமரத் துவம் வெறும் பித்தலாட்டமா? தேவியின் முகத்தைப் பார்த்தால் கண் குருடாகிவிடும் என்று சொன்னீர்களே அதுவும் நிஜம்தானு? அல்லது தேவி அருகில் இருக்கிரு ளென்பதற்காக அவளுடைய முகதாட்சண்யத்துக்காக அப் படிச் சொன்னீர்களா? விவரமாகச் சொல்லுங்கள் பெரி யப்பா! நாம் என்ன காரண துக்காக இந்தத் தீவுக்கு வந் தோமோ அந்த இலட்சியத்தில் எவ்வளவு தூரம் நாம் வெற்றிபெற்றிருக்கிருேமென்பது எனக்குத் தெரியவேண் டாமா? நான் சுகவீனமாயிருக்கையில் என்னென்ன நடந் தது? யார் யாரைப் பார்த்தீர்கள்? என்னென்ன பேசினீர் கள்? ராணி தேவதேவியின் பெயரைக் கேட்டாலே இந்த நாட்டு மக்கள் நடு நடுங்க அவள் நம்மிடம் ஏன் இவ்வளவு சரளமாகப் பழகுகிருள்? எல்லாவற்றையும் விவரமாகச்

சொல்லுங்கள் பெரியப்பா! இந்த விவரங்களைக் கேட்க நான் எவ்வளவு ஆவலுடனிருக்கிறேன் தெரியுமா?'' என்ருன் ஜோதிவர்மன்.

ஜோதிவர்மன் சரமாரியாகக் கேள்விகளை அடுக்கிய பொழுது அவனுக்கு என்ன சொல்லி சமாதானப்படுத்துவதென்று பாலாஜிக்குப் புரியவில்லை.

''ஜோதி! நம்முடைய அறைக்கும் தேவதேவியின் அறைக்குமிடையில் ஒரு கருங்கல் இருந்த பொழுதிலும் இப்பொழுது நாம் என்ன செய்கிருேமென்பதைத் தேவ தேவி பார்த்துக்கொண்டுதானிருப்பாள். கல்லையும், மண்ணையும், மலையையும் துளைத்துக்கொண்டு பார்க்க உதவும் ஒரு அதிசயமான தூரதர்சனிக் கருவி இங்கு இருக்கிறது. பேசுவதைக்கூட அவள் கேட்டுக்கொண்டிருக்கிருளோ என்னவோ கடவுளுக்குத்தான் வெளிச்சம். மறுபடியும் ஏட்டுச் சுவடிகளையும் சந்திரிகாவையும் பற்றிப்பேசாதே. ஏட்டுச் சுவடிகளைப் பார்த்துவிட்டுத்தான் நாம் இங்கு வந்திருக்கிருேமென்பது தெரிந்தால் நம் உயிர் நிலைக்காது. நான் சொல்வதைக் கவனமாகக் கேள். நாம் எதிர்பார்த்து வந்த அதே தேவதேவிதான் இந்தத் தேவதேவி. அவள் அமரத்துவம் வாய்ந்தவளென்பதில் அணுவளவு சந்தேகமும் இல்லை!'' என்ருன் பாலாஜி.

''இதை நீங்களா சொல்கிறீர்கள் பெரியப்பா?'' என்ருன் ஜோதி.

''ஆம் ஜோதி! ஒரு பெண் சாவை ஏமாற்றிக்கொண்டிருப்பது கட்டுக் கதையென்று முன்பு நான் கேலி செய்தது உண்மைதான். ஆனல், இப்பொழுது சந்திரிகாவின் கதையை முற்றுக நான் நம்புகிறேன். சந்திரிகாவின் புருஷன் விஜயகேசரி கொலை செய்யப்பட்ட நிலா முற்றத்தை நான் நேரில் பார்த்தேன். அம்மட்டல்ல, இதைத் தேவியே ஒப்புக்கொண்டாள். தேவி மகத்தான சக்தி

வாய்ந்தவள். அவளால் செய்ய முடியாத காரியம் ஏது மிருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. அவள் முகம் திரை யிடப்பட்டிருந்ததால்தான் பெண்மையின் சோபையோடு பொலிவுடன் விளங்குகிறது. திரையை நீக்கினல் கண்கள் கருகிக் குருடாகிவிடும்படி ஓராயிரம் சூரியன்களின் தேஜஸ் பிரகாசிக்கிறது. அவள் கூற்றைப் பரீட்சிப்பதற்காக அரைக்கண நேரம் அந்த முகத்தைப் பார்த்துவிட்டு நான் பட்டபாடு எனக்குத்தான் தெரியும். இன்னென்றும் சொல் கிறேன். தேவி ஏதோ நம்மிடம் சாந்தமாகப் பேசுகிருளே என்று எண்ணி ஏமாந்துவிடாதே. அவள் கோபம்கொண் டாளோ இந்த மலைச்சிகரமே கிடு கிடுவென்ருடும். மாகாளி யின் தமக்கையைப் போலாகிவிடுவாள். அவள் கையில்வைத் திருக்கும் திரிசூலம் மேலே பட்டால் போதும். அந்த இடத் திலேயே நாம் கருகிப் பிடிசாம்பலாகிவிடுவோம். ஆத லால் அவளிடம் நீ மிக மிக எச்சரிக்கையாகவும், மிதமாக வும் நடந்துகொள்ளவேண்டும்'' என்ருன் பாலாஜி.

''இத்தனை பயங்கரமானவளா தேவி? பார்த்தால் மிக வும் சாதுவாக இருக்கிருளே?'' என்ருன் ஜோதி.

''தேவியிடம் நல்ல பண்புகளும் இல்லாமலில்லை. மகா மேதையான தேவிக்கு அறிவாளிகளிடம் ஒரு அலாதியான அன்பும், பரிவும் இருக்கிறது. நம்மை அவள் கௌரவிக்க மிக முக்கியமான காரணம் நாம் வடமொழியில் நல்ல பாண்டித்தியம் பெற்றிருப்பதுதான். சமஸ்கிருதம் மட்டும் நமக்குத் தெரியாமலிருந்தால் தேவியின் பேட்டிகூடக் கிடைக்காமல் பரலோகத்துக்குப் பார்சல்செய்து அனுப்பப் பட்டிருப்போம். இப்பொழுது மேற்கொண்டு ஒன்றும் கேட்காதே. சமயம் வரும்பொழுது நானே சொல்லு கிறேன். தேவி சற்று முன்கோபக்காரியென்ருலும் உத் தமமான குணம் படைத்தவளென்பது என்அபிப்பிரா யம்'' என்ருன் பாலாஜி.

"இந்த தேவதேவி பழைய தேவதேவிதான் என்றால் இன்னொருவள் கணவனிடம் ஆசைப்பட்டு அந்த வெறியில் ஆளையே கொன்று வீழ்த்தியதுதான் உத்தமமான குணமா பெரியப்பா? உங்கள் வேதாந்தம் நன்றாயிருக்கிறதே!" என்றான் ஜோதி.

"விஜயகேசரியை தேவி கொலைசெய்தது உண்மை தான். அது பாபமாயிருந்தால் அந்தப் பாபத்துக்கு அவள் எப்பொழுதோ பரிகாரம் தேடிக்கொண்டும்விட்டாள். அவளுடைய நிலைமையில் நீயோ அல்லது நானோ இருந்திருந்தால் விஜயகேசரியை மட்டுமல்ல சந்திரிகாவையும் சேர்த்துக் கொலை செய்திருப்போம்! தன் ஆசை நிராசையானதற்காகத் தன்னைப்போன்ற ஒரு பெண்ணையும் கொல்லக் கூடாதென்றெண்ணி சந்திரிகாவை விடுதலை செய்தாள் பார்! அதற்குத் தேவியைப் பாராட்டவேண்டும். தேவியின் காதல் தெய்வீகமானது. அதற்கு மாசு கற்பிப்பதைவிடப் பெரிய பாவம் வேறில்லை!" என்றான் பாலாஜி.

ஒரு சமயம் தேவதேவி தங்களுடைய சம்பாஷணையை ஒட்டுக்கேட்டுக்கொண்டிருந்தால் அவள் திருப்தியடையட்டுமென்றெண்ணியே இதைப் பாலாஜி அழுத்தம் திருத்தமாகச் சொன்னான்.

பொழுதுபோவதே தெரியாமல் இவர்கள் இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில் இருட்டிவிட்டது. நடன விருந்துக்கு அவர்களை அழைத்துச் செல்ல ராஜரீக உடைகளுடன் ஜாஜ்வல்யமாக அங்கு வந்தாள் தேவதேவி.

வைர வைடூரியங்கள் வைத்து இழைத்த கிரீடத்துடனும் திரிசூலத்துடனும் அவளைப் பார்த்தபொழுது சாதாரண மனிதப் பெண்ணென்று யாரும் அவளைத் துணிந்து சொல்ல முடியாது. ரம்பை, ஊர்வசி, திலோத்தமை முதலான தேவலோக மங்கையர்களில் ஒருவள் காற்றில் மிதந்து வருவதைப்போலிருந்தது அவளுடைய எழிலுருவம்.

வாசற்படியில் நின்றுகொண்டே ''நடனத்துக்கு நேர மாகிவிட்டது! போவோம் வருகிறீர்களா?'' என்று இனி மையாக ஜோதியைப் பார்த்துக் கேட்டாள் தேவி. அன்று சற்று முன்னல் பாலாஜி வர்ணித்த அதே தேவிதான இப் பொழுதேனினும்இனிமையாகப்பேசுகிருளென்று ஜோதி வர்மன் திகைத்தான். அவன் திகைப்பை உணர்ந்த பாலாஜி, ''ஏன் ஜோதி புறப்படுவோம் கிளம்பு!'' என்று அவனை அவசரப்படுத்திஞன்.

ஒரு புறம் பாலாஜியும் மற்றொருபுறம் ஜோதியும் நடு வில் தேவதேவியுமாக அவர்கள் நடன விருந்துக்காக மலை யுச்சியை நோக்கி நடந்தார்கள்.

அன்று நடுப்பகல் மலையுச்சியில் பார்த்த மைதானம் போன்ற ஒரு விசாலமான இடத்தை அவர்கள் அடைந்த பொழுது, அதன் நடுவில் ஒரு மேடை அமைத்து அதன் மீது மூன்று சோபாக்களைப் போட்டிருந்தார்கள். மேடை யின் அருகில் மாத்திரம் ஒரு பெரிய தீவட்டி நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்தது. அந்தத் தீவட்டியின் சுற் றுப் புறத்தைத் தவிர மைதானத்தின் இதர பகுதிகளில் ஒரே இருட்டாயிருந்தது. இருட்டில் எப்படி நடனக் கச் சேரி நடக்கப்போகிறதென்று ஜோதியும் பாலாஜியும் திகைத்துக்கொண்டிருக்கையில் தேவியின் மகா மந்திரி அங்கு வந்து சேர்ந்தார்.

மந்திரியைப் பார்த்தவுடன் ''நடனம் ஆரம்பமாக லாம்!'' என்று உத்தரவு பிறப்பித்தாள் தேவி. மந்திரி சற்று எட்டிச் சென்று மூன்று தடவை கையைத் தட்டி ஞர். மூன்ருவது தட்டலின் சப்தம் ஒய்வதற்குள் புற்றீசல் போல தீவட்டிகள் சகிதம் ஏராளமான ஆடவர்கள் மைதா னத்தின் பல திசைகளிலிருந்தும் பாய்ந்து வந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவருடைய கைகளிலும் ஒரு ஆள் உய ரத்துக்கு தீவட்டிகளிலிருந்தன. அவற்றிலிருந்து தீ சுடர்

விட்டுக் கொண்டும் பட்டாசு வெடிப்பதைப்போல வெடித்துக்கொண்டும் எரிந்தது. தீவட்டிகளைக் கொண்டு வந்தவர்களில் ஒருவருடைய முகம்கூடச் சரியாகத் தெரிய வில்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரியான மிருகங் களின் தலைகளைப் போல முகமூடிகள் அணிந்திருந்தார் கள். யானை, குதிரை, கழுதை, மான், சிங்கம், புலி, கரடி முதலான சகலவிதமான மிருகங்களின் முகமூடிகளும் அவர் களிடம் தென்பட்டன. தீவட்டி வெளிச்சத்தில் அந்த உரு வங்கள் பார்ப்பதற்கு அதிபயங்கரமாயிருந்தன வென்று கூறவேண்டும்.

''முகமூடி மனிதர்கள் அதோ குதிக்கிறுர்களே! அது தான் நடனமா?'' என்று கேட்டான் ஜோதி.

''இல்லை! நடனம் இன்னும் ஆரம்பமாகவில்லை. இறந்த வர்களின் ஆன்மாக்கள் முக்தியடைய அவர்கள் பிரார்த்த னைத் தாண்டவமாடுகிறுர்கள்'' என்று தேவதேவி சொல்லி வாய் மூடுவதற்குள் தூரத்தில் எங்கோ சதங்கை ஒலி கலீர், கலீர் என்று கேட்டது. ஜோதி அந்த சப்தம்வந்த திசையில் திரும்பிப் பார்த்தான். கண்களை மூடிக்கொண்டு ராம நாமத்தை ஜபித்துக் கொண்டிருந்த பாலாஜியும் கண்களைத் திறந்து சதங்கை ஒலி பிறந்த திசையில் திரும்பிப் பார்த் தான்.

சதங்கை ஒலி கேட்ட சில விஞடிகளுக்கெல்லாம் அந் தத் திசையிலிருந்து முகமூடியணிந்த ஏராளமான பெண் கள் அணி அணியாக வந்தார்கள். ஆடவர்களைப்போலவே அவர்களும் மிருகங்களைக் குறிக்கும் முகமூடியணிந்திருந் தார்கள். ஒரே குரலில் அவர்கள் மிக மிக இனிமையாகப் பாடிக்கொண்டு வந்தார்கள்.

அரண்மனைக்குள் இருக்கும்பொழுது ஊமைகளைப் போல நடிக்கும் அந்தப் பெண்கள் இப்பொழுது இனிமை யாகப் பாடிக்கொண்டு வந்தது ஜோதிவர்மனுக்கு ஆச்சரிய

மாயிருந்தது. தன்னுடைய சந்தேகத்தை அவன் தேவ தேவியிடமே கேட்டான்.

''அவர்களில் யாரும் ஊமைகளில்லை. பேசக்கூடா தென்று உத்தரவிடப்படும் சந்தர்ப்பங்களில் அவர்களைச் சித்திரவதை செய்தாலும் பேசமாட்டார்கள்'' என்றாள் தேவி.

''பணிப் பெண்கள் ஜாடை செய்து பேச மறுத்த பொழுது நானும் இப்படித்தான் நினைத்தேன். இவ்வளவு அழகான பெண்கள் உண்மையில் ஊமைகளாய் இருந்தால் எவ்வளவு பரிதாபம்'' என்று அங்கலாய்த்தான் ஜோதி.

''உங்களுடைய அனுதாபத்தை வீணாகச் செலவிட்டு விடாதீர்கள்! பிறகு ஒரு சமயம் உங்கள் அனுதாபம் எவ ருக்கேனும் தேவைப்படலாம். அதோ அவர்கள் பாடுவ தைக் கேளுங்கள்'' என்றாள் தேவி.

பாடிக்கொண்டே நடு மைதானத்துக்கு வந்த பெண்களை ஆடவர்கள் வட்ட வடிவமாகச் சுற்றி நின்றுகொண்டு குதிக்க நடுவில் பெண்கள் பாடிக்கொண்டே ஆடினார்கள். சிறிது நேரத்திற்குப் பின்னர் ஆண்களும், பெண்களும் சேர்ந்து ஆடினார்கள். அவர்களுடைய நடனம் பரத நாட் டியமென்றோ, மணிபுரி, கதகளி நடனமென்றோ, மேல் நாட்டு ஜோடி நடனமென்றோ எவ்விதமாகவும் வர்ணிக்க முடியாமல் அலாதியான ஒரு மாதிரி நடனமாயிருந்தது. அதேசமயம் பார்ப்பதற்கு ரம்மியமாகவும், அர்த்தபுஷ்டி நிறைந்ததாயுமிருந்தது. சில கட்டங்கள் பாலி, ஹவாய் நடனங்களை ஒத்திருந்தன. வேறு சில கட்டங்கள் பரதநாட் டியத்தைப் போலிருந்தன. பலமாதிரியான நடனங்களின் கதம்பம் போலிருந்தது அவர்களுடைய நாட்டியமும், மிரு தங்கமும்.

நடனம் நடந்துகொண்டேயிருக்கையில் தேவதேவி மேடையிலிருந்திறங்கி மைதானத்தைச் சுற்றிவரப் புறப்

பட்டாள். போகும்பொழுது "நீங்களும் தாராளமாகப் போய்ச் சுற்றிப் பாருங்கள்" என்று அவள் சொல்லிவிட்டுப் போனாள்.

ஜோதியும் பாலாஜியும் மைதானத்தைச் சுற்றிக் கொண்டு சற்று இருட்டாயிருந்த ஒரு இடத்தை நெருங்கிய பொழுது "ஜோதி ஜோதி" என்று யாரோ அழைப்பதைப் போல அவர்களுக்குக் கேட்டது. ஜோதிவர்மன் ஒரு கணம் அப்படியே ஸ்தம்பித்து நின்றான்.

"யாரோ அழைத்தமாதிரியில்லை ஜோதி!" என்றான் பாலாஜி.

"ஆமாம்! பழக்கப்பட்ட குரல் மாதிரியுமிருந்தது!" என்றான் ஜோதி.

"ஜோதி! நான்தான் சித்ரா! தயவுசெய்து இங்கே வாருங்கள்!" என்று மறுபடியும் அதே குரல் அழைத்தது.

"சித்ரா அல்லவா அழைக்கிறாள்!" என்று சொல்லிக் கொண்டு அந்த சப்தம் பிறந்த திசையில் சென்றான் ஜோதி.

"ஜோதி! ஜோதி! போகாதே! நில்லு! ஆபத்து! அங்கே போகாதே!" என்று பயத்துடனும் பீதியுடனும் எச்சரித்தான் பாலாஜி.

பாலாஜியின் வார்த்தைகள் ஜோதியின் செவிகளில் விழவேயில்லை. சப்தம் பிறந்த இருட்டான இடத்தை நோக்கி அவன் வேகமாகச் சென்றான். ஒரு புதற்றின் அருகில் புலிவேஷம் தரித்த பெண்ணொருவள் நிற்பதைக் கண்டதும் "சித்ரா! என் சித்ராவா நீ?" என்று கேட்டான் ஜோதி.

"ஆமாம் ஜோதி! உங்கள் சித்ராவேதான்" என்று துக்கம் தோய்ந்த குரலில் அவள் சொல்லியபொழுது

ஜோதிவர்மன் அவளுடைய கரங்களை ஆவலோடு பற்றிக் கொண்டு, ''சித்ரா! நீ என்னைவிட்டுப் போய்விட்டாயென் றல்லவா தேவதேவி சொன்னாள்! நோயில் கஷ்டப்படும் என்னைப் பார்த்து அருவருப்புடன் நீ ஓடிவிட்டாயென்றல் லவா அவள் சொன்னாள்?'' என்று வினவினான் ஜோதி.

''பொய்! பொய்! அவ்வளவும் முழுப் பொய் ஜோதி! இரவு பகலாக என் கண்ணிமைகளைப்போல உங்களைக் கவ னித்துக்கொண்டு வந்தேன் ஜோதி. நேற்று மாலை உங்களுக் குச் சுயநினைவு வருவதற்குச் சற்று நேரத்திற்கு முன்பு தான் அந்த ராட்சசி என்னைப் பயமுறுத்தி விரட்டிவிட்டாள் ஜோதி!'' என்று சொல்லிவிட்டுத் தேம்பித் தேம்பி அழவா ரம்பித்தாள் சித்ரா.

''நிஜமாகவா? தேவியா உன்னை விரட்டினாள்? உன்னை விரட்டிவிட்டவளா என்னிடம் அருவருப்புக்கொண்டு நீ ஓடிவிட்டதாக உன் மீது ஒரு அபாண்டப் பழியையும் சுமத்தினாள்? இது நிஜம்தானா? சொல்லு சித்ரா?'' என்று பதட்டத்தோடு கேட்டான் ஜோதி.

''ஆமாம் ஜோதி! இதை உங்கள் பெரியப்பா சொல்ல வில்லை? தேவி என்னை மிரட்டி விரட்டியபொழுது அவரும் அவள் கூடத்தானே இருந்தார்?'' என்று விக்கலும் அழுகையு மாகச் சொன்னாள் சித்ரா.

''என் பெரியப்பா உன் பக்கத்திலிருந்தாரா? அப்படி யானால் தேவதேவி சொல்லியது உண்மைதானென்று அவர் ஏன் என்னிடம் பொய் சொன்னார்? நீ அரண்மனைக்கு வரவேயில்லையென்றும், பாதி வழியிலேயே சொல்லிக் கொள்ளாமல் குகைக்குத் திரும்பிப் போய்விட்டாயென்று உன் அப்பா உக்கிரசேனரும் சொன்னாரே! அதுவும் பொய்யா? வளர்ப்புப் பிள்ளையாயிருந்தும் பெற்ற பிள்ளை யைப்போல என்னை நடத்திய ஒரு தகப்பனும், அருமை பெருமையாக உன்னை வளர்த்த உன் தகப்பனும் தேவ

தேவிக்கு உடந்தையாயிருக்கவா அபாண்டமான பொய் சொன்னூர்கள்? அது அக்கிரமம். தெய்வம் சகிக்காத அநியாயம்!'' என்று ஆவேசத்தோடு சொல்லிய ஜோதிவர்மன் அதற்குள் அருகில் வந்து நின்ற பாலாஜியைப் பார்த்து, ''சித்ரா சொல்லுவது நிஜம்தாஞ பெரியப்பா? அவளைத் தேவதேவி பயமுறுத்தி விரட்டியடித்தது உண்மைதாஞ பெரியப்பா? அந்த அநியாயத்துக்கு நீங்களும் உக்கிரசேனரும் உடந்தையாயிருந்து ஒரு பெண்ணின் மனதைப் புண்ணுக்கும் படுபாதகத்தைச் செய்தது உண்மைதாஞ பெரியப்பா?'' என்று கேட்டான் ஜோதி.

உணர்ச்சி வேகத்தில் ஆவேசத்தோடு ஜோதிவர்மன் கேள்விகளை அடுக்கியபொழுது பாலாஜி என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் திக்குமுக்காடிப்போஞன். என்றைக்காவது ஒருநாள் திடீரென்று இப்படி சித்ராவும் ஜோதிவர்மனும் மறுபடியும் சந்திக்க நேரிடுமென்று அவர் எதிர்பார்க்கவேயில்லை. ''என் சித்ராவை விரட்டியடிக்க நீங்களும் உடந்தையாக இருந்தீர்களா பெரியப்பா? ஒரு பெண்ணின் இளகிய இதயத்தைப் புண்ணுக்கும் படுபாதகத்துக்கு நீங்களுமா உடந்தையாயிருந்தீர்கள்?'' என்று ஜோதிவர்மன் குத்திக்காட்டிக் கேட்டது பாலாஜியின் நெஞ்சை ஈட்டியினுல் குத்திப் பிளப்பதைப் போலிருந்தது. குற்றம்சாட்டும் பிள்ளைக்கு என்ன மறுமொழியளிப்பதென்று புரியாமல் பாலாஜி மௌனமாகத் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு நின்ருர்.

ஏன் இந்தப் பயங்கர மௌனம் பெரியப்பா? உண்மையை இப்பொழுதாவது சொல்ல மாட்டீர்களா? உயிருக்கு உயிராக என்னை நேசித்து அன்பும் ஆதரவுமாகப் பணிவிடை செய்த சித்ரா உங்களுக்கும் தேவதேவிக்கும் என்ன அபராதம் செய்தாள்?'' என்று கேட்டான் ஜோதிவர்மன், கண்ணீர் ததும்பத் தேம்பியழுது சித்ராவை ஆதரவாக அணைத்துக் கொண்டு.

பாலாஜி தட்டுத் தடுமாறிப் பதில் சொல்ல ஆரம்பிப்பதற்குள் "அவரிடம் ஒன்றும் கேட்க வேண்டாம்! சர்வ வல்லமை பொருந்திய தேவதேவி என்னைக் கொலை செய்யாமல் விட்டதே உங்கள் பெரியப்பா தலையிட்டதனுல் தான்! அவர் வேண்டிக் கொண்டதால்தான் என்னை உயிரோடு ஓடிவிடும்படி தேவதேவி விரட்டியடித்தாள். இல்லாவிட்டால் இந்நேரம் என் பிணத்தைக்கூட நீங்கள் பார்க்க முடியாமல் எரித்துச் சாம்பலாக்கியிருப்பாள். போனது போகட்டும் மேற்கொண்டு ஆகவேண்டியதைக் கவனிப்போம். எப்படியாவது அரண்மனையிலிருந்து நாம் தப்பிவிட வேண்டும். மறுபடியும் தேவியின் கண்ணில் நான் பட்டால் என்னை உயிரோடு விடமாட்டாள்!" என்று சித்ரா சொன்னுள்.

அவள் இப்படிச் சொல்லி வாய்மூடுவதற்குள் அருகில் யாரோ கலகலவென்று வாய்விட்டுச் சிரிப்பதைப் போல் இருந்தது. சிரிப்பது யார் என்று அவர்கள் திரும்பிப் பார்ப்பதற்குள் இரண்டு ஈட்டி வீரர்கள் சகிதம் தேவதேவி திரிசூலத்துடன் அவர்கள் முன்னிலையில் வந்து நின்றுள்.

தேவியைக் கண்ட மாத்திரத்தில் ஜோதிவர்மன் கரங்களில் கட்டுண்டிருந்த சித்ரா தன்னை விடுவித்துக் கொண்டு ஓடப் பார்த்தாள்.

"அவளைப் பிடித்து நிறுத்துங்கள்" என்று தேவதேவி உத்தரவிடவே இரண்டு ஈட்டி வீரர்கள் ஓடிச் சென்று கொண்டிருந்த சித்ராவைக் குண்டுக் கட்டாகத் தூக்கிக் கொண்டு வந்து தேவியின் முன்னிலையில் நிறுத்தினுர்கள். தேவியின் அந்த எதிர்பாராத வருகை எவ்வளவு பெரிய விபரீதத்தில் முடியப்போகிறதோ என்று பயந்து நடுங்கிக் கொண்டு நின்றுர் பாலாஜி.

தேவதேவி சினமடைவதற்குப் பதிலாக மிக அமைதியாக சித்ராவை நெருங்கி அவள் முகத்திலிருந்த புலித்

தோல் முகமூடியைக் கழற்றிவிட்டுத் தலையைப் பார்த் தாள். தலையில் திரிசூலத்தினுல் ஏற்படுத்திய வழுக்கை அடையாளங்களைக் கவனித்துவிட்டு ''ஆம்! நீ சித்ராவே தான்! நேருக்கு நேராக நான் பிறப்பித்த ஆணையை மீறும் ஒரு பெண்ணை இப்பொழுதுதான் முதல் தடவை யாக நான் பார்க்கிறேன். இருக்கட்டும்!'' என்ருள். பிறகு ஜோதியின் பக்கமாகத் திரும்பி ''நடனக் கச்சேரி முடிந்து விட்டது. காற்றும் சில்லென்று வீசுகிறது. திறந்த வெளி யில் வெகுநேரம் நின்ருல் உடம்புக்கு ஆகாது. அரண் மனைக்குத் திரும்புவோம் வாருங்கள்'' என்ருள் தேவ தேவி.

''சித்ரா! சித்ராவை என்ன செய்யப் போகிறீர் கள்? சித்ராவைவிட்டு நான் வரமுடியாது. வரப் போவதுமில்லை!'' என்று உறுதியாகச் சொன்னுன் ஜோதி.

''சித்ராவும் அரண்மனைக்குத்தான் வருகிருள். என் நண்பருக்குப் பிரியமானவர்கள் எனக்கும் பிரியமானவர் கள் தான்! பாக்கியை அரண்மனைக்குப் போயிருந்து பேசு வோம் வாருங்கள்!'' என்று சொல்லிய தேவதேவி தனது வீரர்களைப் பார்த்து அந்தப் பெண்ணையும் அரண்மனைக்கு அழைத்து வாருங்கள். சாப்பாட்டுக்குப் பிறகு என் முன் னிலையில் ஆஜர் செய்யுங்கள்!'' என்று சொல்லிவிட்டுப் போனுள்.

தேவதேவி சென்றவுடன் சித்ராவையும் ஈட்டி வீரர் கள் தூக்கிக் கொண்டு போய்விட்டார்கள். அவர்கள் தூக் கிச் செல்லுகையில் அவள் ''ஓ''வென்று அலறியடித்துக் கொண்டு போனது ஜோதிவர்மனுக்குப் பொறுக்க முடி யாத மனவேதனையைக் கொடுத்தது. அவ்விரு வீரர்களை யும் அடித்து வீழ்த்தி சித்ராவை விடுவித்துக் கொண்டு ஓடி விட வேண்டுமென்ற ஆவலும் ஆத்திரமும் அவன் நெஞ் சில் துடித்ததென்ருலும் அப்போதைய நிராதரவான

நிலைமை அவனைக் கபோதியைப்போல நிலை குலைந்து செய லற்றுப் போகச் செய்திருந்தது.

"நீங்கள் செய்த இந்தக் குற்றத்துக்கு மன்னிப்பே கிடையாது பெரியப்பா! இதற்குமேல் நான் என்ன சொல்ல!" என்று மனம் உடைந்து சொல்லிவிட்டுக் கண் ணீர் வடித்தான் ஜோதி.

"ஜோதி! குழந்தை!" நான் செய்தது மாபெரும் தவறுதான் அப்பா! ஆயினும் சித்ராவின் உயிரைக் காப் பாற்ற வேண்டும். உனக்கும் ஒரு தீமையும் ஏற்படாமல் இருக்க வேண்டும் என்ற ஒரே எண்ணத்தினால்தான் சித்ரா அரண்மனையிலிருந்து விரட்டியடிக்கப்பட்டதை உன்னிட மிருந்து மறைத்தேன். உன் க்ஷேமத்தைத் தவிர வாழ்க் கையில் எனக்கு வேறு இலட்சியமே கிடையாது. உன் நன் மைக்குப் பாதகமாக நான் ஏதும் செய்தறியேன். என்னை நீ நம்பினாலும் சரி, நம்பாவிட்டாலும் சரி, என் மனச் சாட்சி நான் செய்தது சரியென்று எனக்குச் சொல்லுகிறது. நான் தவறு இழைத்திருந்தால் என்னை மன்னித்துவிடு!" என்று உருக்கமாகப் பாலாஜி சொல்லியபொழுது ஜோதி வர்மன் பதிலே சொல்லாமல் அரண்மனையை நோக்கி நடந்தான்.

"எவ்வளவோ வாதாடி சித்ராவின் உயிரை நான் காப்பாற்றினேன். இப்பொழுது விட்டில் பூச்சி நெருப் பில் வந்து விழுந்ததைப்போல அவள் மறுபடி தேவதேவி யிடம் சிக்கிக் கொண்டுவிட்டாள். இம்முறை சித்ராவை யாராலும் காப்பாற்ற முடியாது! பாவம் பிரேமையின் துடிப்பு அவளை மரணத்தின் வாயில் கொண்டு வந்து தள்ளிவிட்டது!" என்று பாலாஜி அங்கலாய்த்தார்.

"அதைத்தான் நானும் பார்க்கிறேன். என் உயிர் போனாலும் சித்ரா மீதுள்ள ஒரு சிறு உரோமத்தை அகற்ற வும் நான் அனுமதிக்க மாட்டேன். சித்ராவைக் கொல்லு

வன் முன்னால் அந்த ராட்சஸி தேவதேவி என்னைக் கொலை செய்தாக வேண்டும். இப்படித்தான் அன்றொருநாள் விஜயகேசரியிடம் காம இச்சை கொண்டு அவனை அவன் மனைவியிடமிருந்து பிரிக்கச் சதி செய்தாள். இச்சதி பலிக்காமல் போகவே மனம் வரித்த காதலனையே கொடூரமாகக் கொலை செய்தாள். இப்பொழுது நடிக்கப் போவதும் அதே சோக நாடகம்தான் போலிருக்கிறது. சரித்திரம் திரும்புமென்ற பழமொழி உண்மையாகிறது. ஆகட்டும்.'' நன்றாக அப்படியே நடக்கட்டும். ஆனால்...ஆனால் சித்ராவை உண்மையாகவே என் மனைவியாக்கிக் கொள்ளாமல் சற்று தூரத்தில் விலக்கி வைத்திருந்ததற்கு இப்பொழுது மனப்பூர்வமாக துக்கப்படுகிறேன். அவளை நிஜமாகவே என் மனைவியாக்கிக் கொண்டிருந்தது அவள் கருவுற்றிருந்தால் என் வம்சத்தின் நீண்ட சந்ததியில் என்றைக்காவது ஒருநாள் ஒரு மகாவீரன் ஜனித்து இந்த மனித அரக்கியை அமரகிரி சிகரத்திலிருந்து உருட்டித் தள்ளிக் கொன்று பழி தீர்க்காமலிருக்க மாட்டான். விதிவசத்தினால் என்னுடைய 2500 வருடப் பழமை வாய்ந்த வம்சம் என்னோடு முடிந்து போகிறதே என்பதை நினைக்கும் பொழுதுதான் துக்கம் துக்கமாக வருகிறது...!''

இப்படி வாய்க்கு வந்த வண்ணம் சப்தம் போட்டுக் கொண்டும் துக்கம் தெரிவித்துக் கொண்டும் நடந்தான் ஜோதிவர்மன்.

பாலாஜியும், ஜோதிவர்மனும் அவர்களுடைய அறைக்குத் திரும்பியபொழுது அங்கு சாப்பாடு காத்திருந்தது. சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் பாலாஜி நயமாகப் பேசி ஜோதியைச் சாந்தப்படுத்த வெகுவாக முயற்சித்தார்.

தேவியின் பூர்வீக விருத்தாந்தங்களையும், விஜயகேசரியின் பிரேதத்தை வைத்துக் கொண்டு புதிய ஜன்மத்தில் விஜயகேசரி திரும்பி வருவானென்ற நம்பிக்கையுடன்

தேவதேவி கடுமையான விரதம் அனுஷ்டித்து வருவதை யும் உருக்கமாகச் சொன்னால் ஜோதியின் மனம் மாறக் கூடுமென்றுபாலாஜிக்குத் தோன்றியது. ஆயினும் தேவி யின் உத்தரவை மீறி அவளுடைய விருத்தாந்தங்களை வெளியிட பாலாஜிக்குத் தைரியமில்லை. அதே சமயம் தேவியிடம் ஜோதிவர்மன் முரட்டுத்தனமாக நடந்து விப ரீதம் நடந்துவிடாமலிருக்க வேண்டுமேயென்றும் அவர் உள்ளூரப் பயந்து கொண்டிருந்தார்.

இவ்விதம் இருதலைக் கொள்ளி எறும்பைப்போல் தவித்த பாலாஜிக்குச் சில நிமிட நேரமாவது மலைக்கன்னி யைத் தனிமையில் சந்தித்துப் பேச வேண்டும் போலிருந் தது. ஜோதியுடன் வாதாடுவதைக் காட்டிலும் தேவ தேவியிடம் பேசி முன் கோபத்தில் பகுத்தறிவைப் பறி கொடுத்து விபரீதம் செய்து விடாதேயென்று எச்சரித் தால் நன்மை ஏற்படுமென்று அவர் நினைத்தார்.

சாப்பாடு முடிந்ததும் தேவியைப் பேட்டிகாண முடி யுமா? என்பதைப் பார்த்துக் கொண்டு வருவதாகச் சொல்லிக் கொண்டு புறப்பட்ட பாலாஜி மலைக்கன்னியின் அறையை அடைந்த பொழுது அவள் தீவிரமான சிந்தனை யில் ஆழ்ந்திருந்தாள். பாலாஜி வந்ததைக்கூட அவள் கவ னிக்கவில்லை.

"எந்தக் கோட்டையைப் பிடிக்கத் திட்டம் போடு கிறாய் தேவி! என்று பாலாஜி கேட்ட பொழுதுதான் அவள் தலையை நிமிர்ந்து பார்த்தாள்.

"கோட்டையைப் பிடிப்பதற்கு இல்லை அய்யா! காத் திருந்து கிடைத்த கனி கைநழுவிப்போய் விடாமலிருக்க வேண்டுமேயென்றுதான் கவலைப்படுகிறேன். என் பிரபு விற்காக இருபத்தைந்து நூற்றாண்டுகள் வரையில் நான் காத்திருந்தது போதாதா? நீங்களே சொல்லுங்கள் அய்யா!" என்று தழு தழுத்த குரலில் கேட்டாள் தேவ தேவி.

''இதைப் பற்றிப் பேசவே நானும் வந்தேன் தேவி! சித்ராவைத் திரஸ்கரிப்பதில்லையென்று ஜோதிவர்மன் ஒரே பிடிவாதமாயிருக்கிறான். உன்னுடைய பூர்வோத்திரமும் மன உறுதியும் கடும் விரதமும் தெரிந்தால் அவன் மனம் மாறிவிடுமென்பதில் எனக்குச் சந்தேகமில்லை. ஆகையால் ஆத்திரத்தில் அறிவைப் பறிகொடுத்துவிடாமல் பொறுமையோடு காரியத்தைச் சாதித்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லவே நான் வந்தேன். என்னால் இயன்றவரை உனக்கு உதவிபுரிவேனென்பதை நீ உறுதியாக நம்பலாம். ஜோதியிடம் நீ வைத்திருக்கும் அன்பின் ஆழம் அவனுக்குத் தெரியாவிட்டாலும் எனக்குத் தெரியும்'' என்றார் பாலாஜி.

''அப்படியானால் என் வரலாற்றை நீங்களே ஓரளவு விஜயகேசரிக்குச் சொல்லுங்கள். அதைக் கேட்ட பிறகாவது அவர் பிடிவாதம் தளருகிறதா என்று பார்க்கலாம். முதல் முறையாக அவரை நான் சந்தித்த காலத்தில் எனக்கு மனோவசியம் தெரியாது. இப்பொழுது விரும்பினால் மனோவசியத்தின் மூலம் விஜயகேசரியை நான் வசப்படுத்திக் கொள்ள முடியும். என் சக்திகளில் எதையும் உபயோகியாமல் இதயபூர்வமாகவும் நிர்ப்பந்தமில்லாமலும் அவர் என்னை அங்கீகரிக்க வேண்டுமென்பதுதான் என் அவா. கட்டாயத்தின் பேரிலும் விலைகொடுத்து வாங்கும் இன்பம் நிலையான இன்பமாக மாட்டாது. ஒரு நாழிகை நேரம் கழித்து உங்களை மறுபடி அழைக்கிறேன். அதற்குள் விஜயகேசரியைச் சாந்தப்படுத்த முயற்சியுங்கள்'' என்று மலைக்கன்னி பாலாஜிடம் சொல்லியனுப்பினாள்.

பாலாஜி திரும்பி வந்ததும் ''சித்ரா எங்கே இருக்கிறாள் பெரியப்பா? அவளைப் பார்த்தீர்களா?'' என்று விசாரித்தான் ஜோதி.

''சித்ரா சாப்பிட்டுக் கொண்டிருக்கிறாள் போலிருக்கிறது. இன்னும் ஒரு நாழிகை நேரம் கழித்து அவள்

தேவியின் முன்பு அழைத்து வரப்படும் பொழுது நம்மை யும் அழைப்பதாக தேவி சொல்லியிருக்கிருள்'' என்ருர் பாலாஜி. பிறகு ஜோதி! இன்று காலே பிரேதச்சாலேகளே யெல்லாம் மலேக்கன்னி நமக்குக் காட்டிஞளல்லவா?'' என் ருன்.

''ஆமாம்! அதற்கு என்ன?'' என்ருன் ஜோதி.

''தன்னுடைய வாழ்க்கை ரகசியம் அடங்கியிருக்கும் ஒரே ஒரு இடத்தைமட்டும் நமக்கு அவள் காட்டவில்லே. தற்செயலாக அதை நான் திருட்டுத்தனமாய்ப் பார்க்க நேரிட்டது. சந்திரிகாவின் கணவன் விஜயகேசரியை மலேக் கன்னி கொலே செய்ததாக ஏட்டுச் சுவடிகளில் விஜய கேசரியின் பிரேதத்தை 2500 ஆண்டுகளாகத் தேவதேவி பாதுகாத்து வைத்து பூஜை செய்கிருள். அம்மட்டல்ல, எவ்வளவோ ஆடம்பரமாக வாழ்க்கை நடத்த வசதிகள் இருந்தும் அவற்றைத் துறந்து இரவு தோறும் இந்தப் பிரே தத்தின் அருகில் ஒரு கருங்கல் மேடையின் மீது அவள் படுத்துஉறங்குகிருள். இதை நான் நேரிலேயே பார்த் தேன் ஜோதி!'' என்ருர் பாலாஜி.

''இந்த தேவதேவி விஜயகேசரியைப் படுகொலே செய்த அதே ராட்சசிதானென்பதை உறுதியாக நம்புகிறீர் களா பெரியப்பா?'' என்ருன் ஜோதி.

''நீ சொல்லியதில் ஒன்று உண்மை. இன்ஞென்று தவறு. சந்திரிகா குறிப்பிட்ட தேவதேவிதான், இந்த தேவதேவி என்பதில் சந்தேகத்துக்கு இடமேயில்லே. இதை உறுதியாக நான் தெரிந்து கொண்டிருக்கிறேன். அவள் ராட்சசியென்ருயே அது மட்டும் சுத்தத் தவறு. தேவியை அவ்வளவு கொடூரமாக வர்ணிப்பது பாபமும்கூட. இரண் டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்குமுன் ஞல் இறந்தவனிடம் கொண்ட பிரேமையில் கொஞ்சமும் தளராமல் மன உறுதி யுடனும் கடும் விரதத்துடனும் இருக்கும் ஒரு பெண்ணேச்

சரித்திரம் இதற்கு முன் சந்தித்ததேயில்லை. தேவியின் தன்மையை நீயே நேரில் அறியும் பொழுது ஆச்சரியப்பட்டுப் போவாய்!'' என்றான் பாலாஜி.

அவர்கள் இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில், தேவ தேவியின் அழைப்பு அவர்களுக்கு வந்தது. என்ன நடக்கப் போகிறதோ என்ற கவலையுடனும் பீதியுடனும் பாலாஜி செல்ல அவரைப் பின்தொடர்ந்து ஜோதியும் அவர் பின்னால் சென்றான்.

அவர்கள் தேவியின் அறையில் பிரவேசித்தபொழுது மலைக்கன்னி திரிசூலத்துடன் கட்டிலில் அமர்ந்திருந்தாள்.

கதவின் ஓரமாகக் கூர்மையான ஈட்டிகளுடன் இரண்டு முரட்டு வீரர்கள் சிலைபோல நின்று கொண்டிருந்தார்கள். ஒரு மூலையில் சித்ரா அழுது அழுது வீங்கிய முகத்துடன் மண்டியிட்டு உட்கார்ந்திருந்தாள்.

ஜோதியைக் கண்டவுடன் மலைக்கன்னி ஈட்டி வீரர்களைப் பார்த்து ''நீங்கள் வெளியிலிருங்கள். அழைக்கும் போது உள்ளே வரலாம்!'' என்று உத்தரவிட்டாள். ஈட்டி வீரர்கள் போன பிறகு ''சித்ரா எழுந்திருந்து இப்படி என் முன்னால் வா! உன் ராணியின் சுபாவம் உனக்குத் தெரியுமல்லவா? நான் கேட்கும் கேள்விகளுக்கு உண்மையான பதில் சொல்ல வேண்டும். ஏய்க்கப் பார்த்தால் உயிர் பிழைக்க மாட்டாய்!'' என்று எச்சரித்து விட்டு திரிசூலத்துடன் கட்டிலைவிட்டு எழுந்து கம்பீரமாக நின்றாள் மலைக்கன்னி.

சித்ரா பயபக்தியுடன் எழுந்து கரம் குவித்து நின்றவுடன் ''அமரகிரியில் நீ தலைகாட்டக் கூடாதென்று நான் உத்தரவு பிறப்பித்திருந்தும் மறுபடி இங்கேவர உனக்கு எவ்வளவு துணிச்சல்? என் விருந்துக்கு உன்னை யார் அழைத்தது? எவருடைய அனுமதியின் மீது நீ இன்றிரவு நடனவிருந்துக்கு வந்தாய்?'' என்று கேட்டாள் தேவதேவி.

''தேவி! அந்தக் கேள்விக்கு சித்ரா பதில் சொல்ல வேண்டாம். அவளுக்குப் பதிலாக நான் பதில் சொல்லுகிறேன். சித்ரா என் மனைவி. உங்கள் நாட்டு சம்பிரதாயப்படி அவள் என்னை மணந்தவள். கற்பை மதிக்கும் பெண்களுக்குக் கணவன் இருக்குமிடமே சொர்க்கம். ஆகையால் நான் இருக்கும் இடத்தைத்தேடி அவள் வந்ததில் என்ன குற்றம்? என்னோடு அரண்மனைக்கு வந்த சித்ராவை நீங்கள் பயமுறுத்தி விரட்டியடித்திருக்கிறீர்கள் என்பது இப்பொழுதுதான் தெரிகிறது. நான் பிரக்ஞை தெளிந்து எழுந்தவுடன் சித்ரா எங்கேயென்று கேட்டதற்கு நீங்கள் தயக்கத்துடன் பதில் சொல்லியதன் அர்த்தம் இப்பொழுதுதான் எனக்குப் புரிகிறது. என்ன நோக்கத்துடன் சித்ராவை என்னிடமிருந்து நீங்கள் பிரிக்க முயற்சிக்கிறீர்களென்பது எனக்குத் தெரியாது. அதைத் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமும் எனக்கு இல்லை. ஆனால், ஒன்றுமட்டும் சொல்லுகிறேன். சித்ரா என் மனைவி. நாங்கள் ஒருவரையொருவர் பரஸ்பரம் உள்ளன்போடு நேசிக்கிறோம். வாழ்விலும் சாவிலும் இனி எங்களை யாரும் பிரிக்க முடியாது. அவள் மீது யாராவது கைவைத்தால் லேசில் விடமாட்டேன். என் சித்ராவைக் காப்பாற்றும் முயற்சியில் என் உயிர் போனாலும் சரி கவலையில்லை. மனிதன் ஒருதடவைதான் சாகிறான். வாழ்வில் ஒரே ஒரு முறை வரும் சாவு வீரச்சாவாகவும், தியாகச் சாவாகவும் இருந்தால் அதில் என் ஆத்மா சாந்தியடைந்துவிடும். உங்களிடம் அமானுஷ்யமான சக்திகளிருப்பதைப்பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். நீங்கள் செய்த ஒரு அநியாயமான படுகொலை இன்று கிட்டத்தட்ட சரித்திர வரலாறு ஆகிவிட்டது. அன்று சந்திரிகாவின் கணவன் விஜயகேசரியை மட்டும் கொன்றீர்கள். இன்று அதே வம்சவழியில் வந்த என்னையும் என் மனைவி சித்ராவையும் கொன்று உங்களுடைய வெறியைத் தணித்துக் கொள்ளுங்கள். உலக சரித்திரத்தில் உங்களைப்போலொத்த இரத்தவெறி பிடித்த ராட்சஸி வேறு யாருமில்லை என்ற பெயர் நிலைத்

துப்போக வேண்டுமென்று விரும்பினால் உங்கள் கையில் இருக்கும் திரிசூலம் எங்க இருவருடைய உயிர்களையும் ஏககாலத்தில் போக்கட்டும்!'' என்றான் ஜோதிவர்மன்.

உணர்ச்சி வேகத்தில் ஜோதிவர்மன் இப்படி மளமள வென்று பேசிய பொழுது மலைக்கன்னி குறுக்கிடாமல் அவனையும் சித்ராவையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

பிறகு மிக மிக அமைதியுடன் சித்ராவின் பக்கம் திரும்பி, ''சித்ரா! ஜோதி சொல்லியதைக் கேட்டாயா? விஜயகேசரியின் வம்சத்தில் வந்த ஜோதி எனக்கு உரியவர். அவரை நீ நேற்றுக் காதலித்தாய்! நானோ இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளாக அவர் நினைவாகவே காத்திருக்கிறேன். உன் காதல் பெரிதா? அல்லது காலத்தினால் கரையாத உறுதியான என் காதல் பெரிதா? அவரிடம் யாருக்கு உரிமை அதிகம்? நீயே சொல்? பல நூற்றாண்டுகளுக்கு முன்னால், உலக சரித்திரத்தை எழுத ஆரம்பித்த காலத்துக்கு முன்னால் கொண்ட காதலில் உறுதியுடனும் வைராக்கியத்துடனுமிருந்து, அந்தக் காதல் நிறைவேறக் கடுமையான விரதங்களை அனுஷ்டித்துக் கடைசியில் என் ஆசை பூர்த்தியடையவிருக்கும் தருணத்தில் அதை நிராசையாக்க நீ முயற்சிப்பது தர்மமா? சொல்லு சித்ரா! இந்நாட்டின் ராணியென்ற முறையில் உன்னிடம் நான் அதிகாரம் செய்து கேட்கவில்லை. உன்னைப்போன்ற ஒரு பெண் என்ற முறையிலேயே கேட்கிறேன். நேற்றுக் காதலித்த ஒருவரைவிட்டுப் பிரிய உனக்கு மனமில்லை; அவரை அடைவதற்காக உயிரையும் பணயம் வைத்து என் உத்தரவையும் மீறும் துணிச்சல் உனக்கு ஏற்பட்டிருக்கிறது. அப்படியானால் 2500 ஆண்டுகளாகக் காத்திருக்கும் என் உணர்ச்சி வேகம் எப்படி இருக்க வேண்டும்?'' என்றாள் தேவி.

சித்ரா இதற்குப் பதில் சொல்லவில்லை. மனக்குழப்பத்துடன் அவள் மௌனமாக தலைகுனிந்து நிற்கையில், "கதை! கட்டுக் கதை! விஜயகேசரியைக் காதலித்து அந்தக் காமவெறியில் அவனைப் படுகொலை செய்த அதே தேவதேவிதான் நீங்களென்பது உலகத்தை ஏமாற்றும் மாபெரும் செப்படி வித்தை! பகுத்தறிவுக்குப் பொருத்தமில்லாத இந்தக் கட்டுக் கதையை நாங்கள் நம்பத் தயாராயில்லை!" என்று கத்தினன் ஜோதி.

"அந்தக் கட்டுக் கதையை உண்மை வரலாற்றைப் போல எடுத்துக் காட்டியது நான் அல்லவே! நீங்கள் தானே அதை ஆரம்பித்தீர்கள்!" என்றுள் தேவதேவி. பிறகு மீண்டும் சித்ராவைப் பார்த்து "சித்ரா" விஜயகேசரி என் கணவர் கணக்கற்ற பிறவிகளெடுத்து காலத்தைக் கடந்து என்னிடம் திரும்பி வந்த என் கணவரை அநியாயமாக நீ பறித்துக் கொள்ளாதே. என் வரலாறு உனக்குத் தெரியாது. தெரிந்தால் உண்மையில் என்னிடம் நீ அனுதாபப்படுவாய். 2500 ஆண்டுகளுக்கு முன்ஞல் விஜயகேசரி இந்நாட்டுக்கு வந்து என் இதயத்தில் இடம் பெற்றுர். அப்பொழுது உன்னைப்போலத்தான் ஒரு பிடிவாதக்காரி என் பதியை என்னிடம் ஒப்படைக்க மறுத்து எனக்கும் அவருக்கும் குறுக்கே நின்றுள். அவளிடம் கொண்ட கோபத்தில் பகுத்தறிவை இழந்து என் பதியை என் பாபக் கரங்களிஞலேயே கொன்றுவிட்டேன். புனர்ஜென்மமெடுத்து அவர் என்னிடம் எப்படியும் திரும்பி வருவாரென்று முக்காலமும் உணர்ந்து ஒரு சித்தரின் வாக்குக்காக இவ்வளவு நூற்றுண்டுகளும் நான் காத்திருந்தேன். ஆஞல், என் வினைப்பயன் மறுபடி உன் உருவத்தில் வந்து சதி செய்கிறது சித்ரா.! என் விஜயகேசரிக்காக நான் எதையும் தியாகம் செய்யச் சித்தமாய் இருக்கிறேன். இந்த ராஜ்யத்தை நீயே எடுத்துக் கொள். எனக்குத் தெரிந்த சகல சக்திகளையும் உனக்குச் சொல்லிக் கொடுத்துவிட்டு என் பதியுடன் இந்த நாட்டைவிட்டே

நான் போய்விடுகிறேன். சகல போக பாக்கியங்களுடன் நீ இந்நாட்டின் மகாராணியாக வாழலாம். என்னைப் போல நீயும் சாகாவரம் பெற்ற அமர கன்னியாக வாழலாம். மறுபடி இந்த நாட்டின் பக்கம் நான் தலைகாட்டினால் என் தலையைச் சீவியெறிந்துவிடு. உன்னைக் கேட்பதெல்லாம் என் பதியை என்னிடம் திரும்ப ஒப்படைத்துவிடு என்ற ஒரே கோரிக்கைதான், உன் நாட்டு மகாராணி உன்னிடம் யாசகம் கேட்கிறாள். அவளுக்கு உன் பதில் என்ன சித்ரா?'' என்று மிக மிக நிதானமாகவும் உருக்கமாகவும் மன்றாடிக் கேட்டாள் தேவதேவி.

அவள் இப்படிப்பேசி முடிந்தவுடன் சோவென்று மழை கொட்டிவிட்டு ஓய்ந்ததைப் போலிருந்தது.

# அத்தியாயம் - 7

தேவதேவி சொல்லியதைப் பொறுமையோடு கேட்டுக்கொண்டிருந்த சித்ரா, ''மகாராணி! என் அன்பு விலை கொடுத்து வாங்கியதாயிருந்தால் அதைத் தயங்காமல் உங்களுக்குத் தானம் கொடுத்துவிடுவேன். உங்களுடைய ராஜ்யமும், போகபாக்கியங்களும் எனக்கு வேண்டாம். என் ஜோதியை என்னிடம் திரும்பக் கொடுத்துவிடுங்கள். நாங்கள் உங்களுடைய தேசத்தைவிட்டே போய்விடுகிறோம். உங்கள் ஆணையை மீறி ஏன் அமரகிரியில் நான் தங்கினேன் என்று கேட்டீர்கள். உங்கள் ஆணையை மீறுவோர்களுக்கு என்ன தண்டனை கிடைக்குமென்பது எனக்குத் தெரியும். தெரிந்துதான் அமரகிரியிலேயே நான் தலைமறைவாயிருந்தேன். என் கணவர்மீது நீங்கள் ஒரு கண்

வைத்திருப்பதை நான் அறிந்த வினடி முதல் என் உயிர் ஊசலாடிக்கொண்டிருப்பது எனக்குத் தெரியாததில்லை. என் காதல் பரிசுத்தமானது. பட்டம் பதவிகளுக்காக என் இதயத்திலிருந்து என் கணவரை விலக்க நான் தயாரா யில்லை. அது முடியக்கூடியதுமில்லை. உங்கள் சக்தியைப் பிர யோகித்து என்னை அழித்துவிட்டு உங்கள் எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ளுங்கள். மனம் விரும்பிய கணவ னுடன் நான் வாழமுடியாவிட்டாலும் கணவனுக்காக உயிரையே தியாகம் செய்தவளென்ற பெயராவது எனக் குக் கிடைக்கட்டும்'' என்றுள்.

சித்ரா இவ்விதம் சொல்லுகையில் சாந்தமாகவும், அமைதியாகவுமிருந்த தேவதேவியின் முகம் கொஞ்சம் கொஞ்சமாக மாறுதல் அடைவதையும், திரிசூலத்தைப் பற்றிக்கொண்டிருந்த அவளுடைய கரம் கோபத்தில் பதறு வதையும் பாலாஜி கவனித்துக்கொண்டிருந்தான். தன்னு டைய பேச்சுக்கு எவரும் ஒருவார்த்தை பதில் பேசுவதை பொறுத்து அறியாத தேவதேவி சினந்து எழுந்தால் என்ன நடக்குமென்பதை ஏற்கனவே இரண்டுமூன்று சந்தர்ப்பங் களில் பார்த்திருந்த பாலாஜிக்கு சித்ராவின் மரணம் சமீ பித்துவிட்டதைப் போலத் தோன்றியது.

''என்ன சொன்னுய்? நயமாகப் பேசியும் என் கோரிக் கைக்கு இணங்கமுடியாதென்று சொல்லுகிறுய்? நன்றுக யோசித்துச் சொல்லு!'' என்றுள் தேவி. இவ்வார்த்தைகளை அவள் பேசினளென்று சொல்லுவதைவிட படபடப்புடன் சிந்திஞளென்று சொல்லுவதே பொருத்தமாயிருக்கும். வேகமாக அடிக்கும் காற்றில் இளம் மாந்துளிர் எப்படித் துடிக்குமோ அவ்விதம் தேவியின் உதடுகளும் கரங்களும் துடிப்பதை பாலாஜியும் ஜோதிவர்மனும் கவனித்தார்கள்.

''இதில் யோசிப்பதற்கு ஒன்றுமேயில்லை தேவி! உங்கள் அதிகாரமும் அகங்காரமும் என் பதியை என்னிடமிருந்து பறித்துக்கொண்டுவிடமுடியாது. சாவுக்குப் பயந்தாலல்

லவா உங்களுடைய மிரட்டலுக்கும் உருட்டலுக்கும் நான் பயப்பட வேண்டும்? சாவுக்குப் பயந்திருந்தால் உங்கள் ஆணையை மீறி அமரகிரியில் அரைக்கணம் நான் தாமதித்திருப்பேன்? நீங்கள் என்ன வேண்டுமானுலும் செய்யுங்கள். ஜோதியை உள்ளன்புடன் காதலித்ததற்கு திருமணப் பரிசாக எனக்குச் சாவு கிடைக்கட்டும். பிறருடைய புருஷனைத் துராகிருதமாகக் கைப்பற்றிக்கொண்ட கீர்த்தி உங்களுக்குக் கிடைக்கட்டும்! ஏன் நிற்கிறீர்கள் மகாராணி? நடத்துங்கள் உங்கள் கொலைத் தொழிலை!'' என்று கிணீரென்று சொல்லிவிட்டு ஜோதிவர்மன் நின்ற இடத்தை நோக்கி அம்புபோலப் பாய்ந்து ஓடினுள்.

ஆனுல், சித்ரா ஜோதியை நெருங்குவதற்குள் ''நில்! அப்படியே நில்! என்று அதிபயங்கரமான தொனியில் முழங்கிய தேவதேவி திரிசூலத்தைச் சுழற்றிக்கொண்டு பாய்ந்து வந்தாள். ஜோதிக்கும் சித்ராவுக்குமிடையில் தேவதேவி நீட்டிய திரிசூலத்தை சித்ரா அலட்சியமாகப் பற்றி உதறிய பொழுது மின்சாரத்திஞல் தாக்கப்பட்டவளைப் போல சித்ரா அதே இடத்தில் தொப்பென்று சுருண்டு விழுந்தாள். இரண்டே இரண்டு விஞடிகள் வரை, இரண்டு முறை கண்மூடித்திறக்கும் நேரம்வரை சித்ராவின் கைகளும் கால்களும் வாயும் கண்களும் வலிப்பு ஏற்பட்டு இழுப்பதைப் போல இழுத்தன. மறுகணம் அவள் அசைவற்றுச் சவமாகி விட்டாள்.

சித்ரா விழுந்ததும் ஜோதிவர்மன் ''அய்யோ சித்ரா!'' என்று அலறிக்கொண்டே அவள் அருகில் ஓடிஞன். விழுந்து கிடந்த சித்ராவைத் தன் மடியில் தூக்கிவைத்துக்கொண்டு ''சித்ரா! சித்ரா நான்தான் உன் ஜோதி! விழித்துப் பாரேன்!'' என்று அவன் அலறிஞன்.

''உங்களுடன் சித்ரா இனிப் பேசமாட்டாள். இனி எந்தக்காலத்திலும் உங்களோடு பேசமுடியாத இடத்துக்கு அவள் போயே போய்விட்டாள். பாவம் விட்டில் பூச்சி

நெருப்பை முத்தமிட்டு சாவை மணந்துகொண்டுவிட்டது. நன்றிகெட்ட இந்த நாயிடம் கொண்ட பச்சாத்தாபத்தினுல் அவளுக்கு உயிர்ப் பிச்சையளிக்க விரும்பினேன்! என் ராஜ்யத்தையே தாரைவார்ப்பதற்குக் கூடத் தயாராயிருந்தேன். ஆனுல், ''பதவி பூர்வபுண்யானும்'' என்ற பழமொழி எப்படிப் பொய்யாகும்? பூர்வஜென்ம வினைப் பயன் அவளை என் திரிசூலத்துக்குப் பலியாக்கிவிட்டது. திரிசூலத்தைத் தீண்டி மரணத்தை அவளே வலுவில் தழுவிக்கொண்டாள்?'' என்ருள் தேவதேவி.

''ராட்சசி! நீயும் ஒரு பெண்ணு? நிரபராதியான என் மனைவியைப் பலிவாங்கிவிட்டாயே! உனக்கு அவள் என்ன அபசாரம் செய்தாள்?'' என்று தழுதழுத்த குரலில் கேட்டான் ஜோதி. அவன் பேசிய வார்த்தையின் ஒவ்வொரு சொல்லிலும் துவேஷமும் வெறுப்பும் பிரதிபலித்தன.

''அவள் என்ன அபசாரம் செய்தாள்? சித்ரா எனக்கு என்ன அபசாரம் செய்தாள்? எனக்கும் பல நூற்ருண்டுகளாக நான் காத்திருக்கும் என் பிரபுவுக்குமிடையில் குட்டிச் சுவரைப்போல நிற்பதைவிட அவள் இன்னும் என்ன அபசாரம் செய்யவேண்டும்? அவள் உங்களுடைய கண்களில் படாமல் நேற்றே அழிக்கப்பட்டிருக்க வேண்டும். உங்கள் பெரியப்பாவின் கருணை உள்ளம் நேற்று அவளைக் காப்பாற்றியது. இன்று அவளுடைய திமிரடித்தனமும் துடுக்கும் அவளைமாய்த்துவிட்டது. இதற்கு யார் ஜவாப்தாரி?'' என்ருள் தேவி.

''யார் ஜவாப்தாரியா? நீதான் ஜவாப்தாரி! காமாந்தகாரப் பிசாசே நீதான் ஜவாப்தாரி! நான் யார் தெரியுமா? உன்னைப் படுகொலைசெய்து சந்திரிகாவின் சபதத்தை நிறைவேற்றப் பிறந்தவன்! விஜயகேசரியின் வம்சத்தில் தோன்றி உன் ரத்தத்தைப் பிழிந்து ருசிபார்க்கக் கடல் கடந்து வந்தவன்! என் கண்மணியைக் கொன்ற உன்னை இதோ என்ன

செய்கிறேன் பார்?" என்று சொல்லிக்கொண்டு எழுந்த ஜோதிவர்மன், பாலாஜி ஒன்றும் புரியாமல் அதிர்ச்சியில் பிரமை பிடித்துப்போய் நிற்பதை அலட்சியமாகப் பார்த்துவிட்டு இடுப்பில் சொருகிக் கொண்டிருந்த பிச்சுவாக் கத்தியுடன் தேவதேவியை நோக்கிப் பாய்ந்தான்.

அவ்வளவு நேரமும் அதிர்ச்சியில் செயலற்றுப் போயிருந்த பாலாஜிக்கு நிலைமை எல்லைமீறிப் போய்விட்டதென்ற ஞானோதயம் பிறந்தது. அவர் ஜோதிக்கும் தேவதேவிக்கும் மத்தியில் போய் நின்றுகொண்டு "என்ன முட்டாள்தனமான காரியம் செய்கிறாய் ஜோதி! தெய்வாம்சம் பொருந்திய தேவியைக் கொல்லுவதன் முன்னால் என்னைக் கொன்று போட்டுவிட்டுப்போ! படாத பாடுபட்டு வளர்த்த உன் பெரியப்பனைக் கொன்றுவிட்டு தேவியிடம் போ!" என்றான்.

ஜோதிவர்மன் ஒரு கணம் தயங்கினான். என்னைக் கொன்று போட்டுவிட்டு தேவியிடம் போ என்று பாலாஜி சொல்லியதைக் கேட்டதும் ஜோதிக்குத் தலைசுற்றுவதைப் போலிருந்தது. "இப்படி நீங்களா சொல்லுகிறீர்கள் பெரியப்பா! உலகத்தை ஏமாற்றும் இந்தப் பில்லி சூனியக்காரி சரியாக உங்களையும் ஏமாற்றியிருக்கிறாள். இவள் தேவ அம்சமில்லை. மிகமிகக்கொடிய ராட்சத அம்சம். ரத்தவெறி பிடித்த இந்தப் பிசாசு உலகத்திலிருப்பதை அனுமதிக்கக் கூடாது. சித்ராவைத் தொடர்ந்து இவளையும் மேலோகத்துக்கு அனுப்பினால்தான் என் ஆத்மா சாந்தியடையும். சந்திரிகாவின் ஆணையை ஏற்று விஜயகேசரியின் மரணத்துக்கு வஞ்சம் தீர்ப்பதற்காக இந்தக் காட்டுமிராண்டித் தேசத்துக்கு நான் வந்தேன். வந்த இடத்தில் இந்த ராட்சசியைக் கொன்று பழிவாங்க இன்னொரு காரணமும் கிடைத்துவிட்டது. காமவெறி பிடித்த அவளைச் சும்மா விடக் கூடாது. நகருங்கள் பெரியப்பா! ஒரே குத்தில் இவள் இதயத்தைப் பிளந்துபோட்டு விடுகிறேன்!" என்று முழங்கினான் ஜோதி.

பாலாஜி தன்முழுப்பலத்தையும் பிரயோகித்து ஜோதியைக் கட்டிப் பிடித்துக் கொண்டு "ஜோதி! வேண்டாம். தேவியிடம் பலப் பரிசோதனை செய்யாதே. அவள் சற்றுப் பலமாக மூச்சுவிட்டாலே நீ பஸ்மீகரமாகி விடுவாய். உன்கத்தியும் கோடரியும் அவளை ஒன்றும் செய்யாது. என் பேச்சைக் கேள்!" என்று கதறினர். அவரின் பிடியில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்ள ஜோதிவர்மன் வெறி பிடித்தவனைப்போல திமுறுவதையும் அவன் கையில் கூர்மையான பிச்சுவாக் கத்தி பளபளவென்று பிரகாசிப்பதையும் அமைதியாகப் பார்த்துக் கொண்டு சற்றுத் தூரத்துக்கப்பால் நின்ருள் மலைக்கன்னி.

அவள் பிறகு சொன்னுள்:- "அய்யா பெரியவரே! விஜயகேசரியை விட்டுவிடுங்கள். சந்திரிகாவின் கணவனைக் கொன்றதற்காகவும் சற்று முன்னுல் என் பிரஜைகளில் ஒருவளான சித்ராவைக் கொன்றதற்காகவும் என்னைப் பழிவாங்க அவர் விரும்புகிருர். அவருடைய விருப்பத்தை யாரும் தடைசெய்ய வேண்டியதில்லை. விஜயகேசரியிடம் கொண்ட தூய்மையான காதலுக்காக நான் இரண்டு படுகொலைகளைச் செய்ய வேண்டி நேரிட்டது என்னவோ உண்மைதான். அதை நான் மறுக்கவில்லை. எவரிடம் கொண்ட பிரேமைக்காக நான் கொலைகாரியாக மாற வேண்டியிருந்ததோ அவருடைய கையினுலேயே சாவதை விடப் பெரிய பாக்கியம் வேறு ஒன்றும் எனக்கு இருக்க முடியாது. விஜயகேசரியை அடைவதற்காக எனது ராஜ்யத்தையும் செல்வாக்கையும் சக்திகளேயும் சித்ராவுக்குத் தியாகம் செய்துவிடுவதாகச் சற்று முன்புதான் சொன்னேன். இப்பொழுது அவை எல்லாவற்றையும்விட உயர்ந்த எனது உயிரையே தியாகம் செய்யவும் சித்தமாக இருக்கிறேன். சென்ற 2500 ஆண்டுகளாக என் உயிரைச் சந்தோஷத்துடன் சுமந்து கொண்டிருக்கிறேனென்று நீங்கள் நினைக்கிறீர்களா? எனக்கிருக்கும் செல்வ சுகங்களைச் சிறிதளவேனும் நான் அனுபவித்து ஆனந்தமாக வாழ்ந்

திருப்பேனென்று நீங்கள் எண்ணுகிறீர்களா? விஜயகேசரி யிடம் லயித்துப்போன என் மனம் போக பாக்கியங் களையெல்லாம் உதறித் தள்ளி எவ்விதம் என்னைத் துற வறத்தில் ஈடுபட்டிருந்ததென்பதை என்றைக்காவது ஒரு நாள் அறியும்பொழுது காதல் உணர்ச்சி ஒரு பெண்ணை இந்த நிலைமைக்கும் உட்படுத்துமா என்று எண்ணி ஆச்சரி யப்பட்டுப் போவீர்கள். என்றைக்காவது ஒருநாள் சர்வ ஞான சித்தரின் வாக்குப்படி என் பிரபு என்னைத் தேடிக் கொண்டு இங்கு வருவார். என்னை ஆட்கொள்ளுவார் என்ற ஒரு நம்பிக்கையுடன் சுமக்க முடியாமல் இந்த உயிரை 25 நூற்றாண்டுகள்வரை சுமந்து கொண்டிருந்தது எனக்குப் போதும். முடிவில்லாமல் நீண்டு கொண்டிருக் கும் என் வைராக்கிய வாழ்க்கைக்கு இன்றுடன் ஒரு முடிவு ஏற்பட்டுவிடட்டும். மரித்துப் பிறந்தாலாவது என் பிர புவை அடுத்த ஜன்மங்களில் ஒன்றில் அடையமுடிகிறதா என்று பார்க்கிறேன். நான் சந்திரிகாவின் கணவனைக் கொன்றது யாரை உத்தேசித்து? இப்பொழுது சித்ரா வைக் கொலை செய்ய நேரிட்டதும் யாரை உத்தேசித்து? சரித்திரம் அறிந்திரா ஆண்டுகள்வரை ஜீவனை வைத்துக் கொண்டு அநாகரிக ஜனங்களின் மத்தியில் நான் வாழ் வது யாருக்காக? அவரே என்னைக் கொலை செய்து வஞ் சம் தீர்த்துக் கொள்ள விரும்பினால் அதன் பிறகு நான் யாருக்காக உயிர் வாழவேண்டும்? வேண்டாம்? போதும் இந்த வாழ்க்கை! என் அன்புக் காதலன் கையினாலேயே என் வாழ்க்கைக்கு ஒரு முடிவு ஏற்பட்டுவிடட்டும். தயவு செய்து விஜயகேசரியை விடுங்கள்!''

தேவதேவி இவ்விதம் உணர்ச்சி வேகத்துடன் சொல்லி விட்டு கையிலிருந்த திரிசூலத்தைத் தூர வீசியெறிந்தாள். தலையில் தரித்திருந்த நவரத்தின மகுடத்தைச் சுழற்றி அவள் தரையில் எறிந்தபொழுது ''கிணீர்'' என்ற சப்தத் துடன் விழுந்து, மகுடத்திலிருந்து முத்துக்களும் நவரத் தினங்களும் உடைந்து தெறித்து சிதறின. கைகள் இரண்

டையும் கட்டிக் கொண்டு கண்களையும் இறுக்க மூடிக் கொண்டு ''சாவைத் தழுவ நான் தயார்! உள்ளன்புடன் பல நூற்றுண்டுகளாகப் பூஜித்த கணவனைத் தழுவமுடியாத இந்தச் சரீரம் சாவைத் தழுவி மண்ணுடன் மண்ணுவதற்குத் தயாராயிருக்கிறது! இன்றேடு என் வாழ்வும் அந்தஸ்தும் அரசும் சர்வமும் நசிந்து நாசமாகட்டும்! என் பிரபுவின் விருப்பத்தை எதிர்ப்பின்றி நிறைவேற்றிய திருப்தியாவது எனக்கு ஏற்படட்டும்!'' என்று தழுதழுத்த குரலில் சொன்னுள் தேவதேவி.

''தேவி! இதென்ன பேச்சு?'' என்றுன் பாலாஜி ஒன்றும் புரியாமல்.

''இது எங்கள் சொந்த விஷயம். எனக்கும் என் பிரபுவுக்குமிடையில் யாரும் குறுக்கே நிற்க வேண்டாம். தயவு செய்து அவரை விருப்பம்போலச் செய்யவிட்டுச் செல்லுங்கள்! என் உயிரில் என்னைவிட உங்களுக்கு ஏன் இவ்வளவு அக்கறை? தயவு செய்து அவரை விடுங்கள்'' என்று தேவதேவி வற்புறுத்தவும் ஜோதியைக் கட்டிப் பிடித்துக் கொண்டிருந்த பாலாஜி அவனைவிட்டு சற்று விலகி நின்றுன்.

பாலாஜி தனது பிடியைவிட்டு விலகியதும் ஜோதிவர்மன் சற்று நேரம்வரையில் தேவதேவியின் மீது வைத்த விழியை எடுக்காமல் செயலற்றுப்போய் பிரமை பிடித்த மாதிரி நின்றுன். அவனைத் தேவதேவி விழித்துப் பார்க்கவேயில்லை. இரண்டு கண்களையும் மூடிக் கொண்டு அவள் அசைவற்று நின்றுள். பாலாஜியோ தனது வெறிபிடித்த மகனையும் மலைக்கன்னியையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டு நின்றுன்.

சிறிது நேரத்துக்குப்பின் கண்களை விழித்துப் பார்த்த தேவதேவி, ''ஏன்? ஏன் சமைந்துபோய் நிற்கிறீர்கள் பிரபு? உங்கள் கொலை வெறியையும் வஞ்சத்தையும்

தீர்த்துக் கொள்ள இப்பொழுது யாரும் உங்களுக்குக் குறுக்கே நிற்கவில்லையே! கதையிலும் கவிதைகளிலும் காலவெள்ளத்தின் கோடானுகோடி ஆண்டுகளிலும் மனித சமுதாயம் கண்டும் கேட்டுமிராத வைராக்கியம் நிறைந்த எனது சோக நாடகத்துக்கு முற்றுப் புள்ளி வைத்த பெருமையை ஈட்டிக் கொள்ளுங்கள்! நேற்று வந்த ஒரு காட்டுப் பெண்ணுக்காக யுகயுகாந்திரங்களில் எப்பொழுதுமே கேட்டிராதபடி, ஆயிரமாயிரமாண்டுகளாக மனம் விரும்பியவனைப் பூஜித்த ஒரு அபலைப் பெண்ணைக் குத்திக் கொன்று வீழ்த்தி வெறியைத் தணித்துக் கொண்ட பெருமை உங்களுக்குச் சேரட்டும்! மனம் வரித்த காதலனுக்காக சர்வ வல்லமை பொருந்திய ஒரு ராணி சற்றும் எதிர்பார்க்காமல் உயிரைத் தியாகம் செய்தாளென்ற பெருமை எனக்குக் கிடைக்கட்டும்! ஏன் தயங்குகிறீர்கள் பிரபு?'' என்றாள்.

தேவியின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் ஜோதியின் மனதைக் குத்திப் பிளப்பதைப் போலிருந்தன. பல நூற்றாண்டுகளுக்கு முன்னால் விஜயகேசரியை அவள் கொன்றதும் சற்று முன்னால் தனது கண்ணெதிரிலே சித்ராவைக் கொலை செய்ததும் உண்மைதானென்றாலும் ''இந்தக் கொலைகளுக்கு யார் ஜவாப்தாரி? எவரை முன்னிட்டு இவ்விரு கொலைகளையும் நான் செய்ய நேரிட்டது?'' என்று தேவதேவி இடித்துக் காட்டிக் கேட்டது ''குற்றவாளி நீ தான்! நீயேதான்!'' என்று ஜோதிக்கு அவன் அந்தராத்மா உணர்த்திக் காட்டுவதைப் போலிருந்தது.

''தேவதேவி சொல்லுவதைப்போல நேற்று முளைத்த சித்ரா தன் காதலுக்காகத் தனது ராணியையே எதிர்த்துச் சாவைத் தழுவத் தயாராயிருந்தால் பல நூற்றாண்டுகளாக இதயத்தின் அடிவாரத்திலே தனது காதல் தெய்வத்தை வைத்துக் கொண்டு புழுங்கும் தேவதேவி கொலைத் தொழிலில் இறங்கியதில் என்ன ஆச்சரியம்? நம் எல்லோரையும்போல உணர்ச்சிகளுக்கு அடிமைப்பட்ட ஒரு

மனிதப் பிறவிதானே அவளும்? இதுதான் போகட்டும்! உண்மையில் சித்ராவை தேவதேவி கொன்ருளென்று தான் சொல்ல முடியுமா? சித்ராவுக்கு சர்வத்தையும் தியாகம் செய்துவிடுவதாக அல்லவா அவள் சொன்னுள்? சித்ரா சற்று முரட்டுத்தனமாக நடந்து கொண்டதால் அவளாகவே தேவதேவியின் திரிசூலத்தை ஸ்பரிசித்து உயிரை விட்டாள்? இதை எப்படிக் கொலையென்று சொல்லி அதற்கு தேவியைக் குற்றம் சாட்ட முடியும்.

தேவதேவி சர்வவல்லமை பொருந்தியவளென்பதில் சந்தேகமேயில்லை. அவளிடம் அமானுஷ்யமான சக்திகள் இருக்கின்றன. பெரியப்பா சொல்லுவதைப்போல விரும்பினுல் அவள் நம்மைப் பொசுக்கி அழித்துவிட முடியும் அப்படிப்பட்ட ஒரு ராணி திரிசூலத்தையும் மணிமுடியையும் வீசியெறிந்துவிட்டு ஒரு சாதாரணக் குற்றவாளியைப்போல ஏன் என் எதிரில் நிற்க வேண்டும்? என் கையினுல் உயிரை விடுவதற்கும் அவள் தயாராயிருப்பதில் அவளுடைய இதய சுத்தியும் காதலின் தூய்மையும் விளங்கவில்லையா? நான் விஜயகேசரியின் சந்ததியைச் சேர்ந்தவனென்பது எனக்குத் தெரியும். அது தேவிக்கும் தெரிந்திருப்பது ஒன்றே அவளுடைய அமானுஷ்யமான சக்திக்கும் புனிதமான காதலுக்கும் அத்தாட்சியில்லையா? அப்படிப்பட்ட ஒரு புனிதவதியையா நாம் குத்திக் கொல்லுவது?''

இவ்விதம் ஜோதியின் மனத்திற்குள் ஒரு பெரிய போராட்டம் நடந்து கொண்டிருந்தது. அதே சமயம் அவனையும் அறியாத ஒரு மயக்க சக்தி, விவரம் புரியாத ஒரு அந்தரங்க உணர்ச்சி அவனை ''போ! போ! தேவியின் அருகில்போ! ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக உன்னை நினைத்து நினைத்துத் தவம் புரியும் காதலியை ஏற்றுக் கொள்ளப் போ!'' என்று அவனைப் பிடித்துத் தள்ளுவதைப் போலிருந்தது. தனது மனப்போராட்டம் மட்டுமல்ல, அதற்குவெளியேயிருந்து ஒருமர்மமான சக்தி தன்னை இழுக்கி தேவியிடம்

நெருங்கித் தள்ளுவதைப்போல அவன் உணர்ந்தான். அவன் கையிலிருந்த பிச்சுவாக் கத்தி அவன் கையிலிருந்து நழுவி கிணீரென்ற சப்தத்துடன் கீழே விழுந்தது. மெது வாக அடிமேல் அடியெடுத்து வைத்து, தூக்கத்தில் சுய நினைவின்றி நடப்பதைப்போல அவன் தேவியை நோக்கி நடந்தான். கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பெருக முகமலர்ச்சியுடன் இரண்டு கரங்களையும் ஆவலோடு நீட்டிக் கொண்டு நின்ற மலைக்கன்னியின் இருதயம் அதிவேகமாக அடித்துக் கொண்டது.

"வாருங்கள் பிரபு! வாருங்கள்! உங்கள் அடிமையை அங்கீகரிக்க வாருங்கள்! ஆஹா! இந்த இன்பமயமான நாளுக்காக எவ்வளவு இரவும்பகலும் நான் ஏங்கிக் கொண்டிருந்தேன். சித்தர் வாக்கு சூரிய சந்திரர்கள் திசை மாருமலிருக்கும் வரையில் ஒருபோதும் பொய்க்காதென்ற திடநம்பிக்கையுடன் எவ்வளவு பொறுமையோடு காத்திருந்தேன் பொறுத்தவர் பூமியாள்வார் என்பார்கள். என் பொறுமையின் பரிசு இதோ! இதோ, இதோ எனக்குக் கிடைக்கப் போகிறது. ஜனசமூகமே! அகண்ட பிரமாண்ட சராசரங்களே! தேவகாந்தர்வ கின்னர கிம்புருடர்களே! என் பிரபு என்னை ஏற்பதைக் கண்குளிரப் பாருங்கள். என் வைராக்கியமும் விரதமும் திக்கெட்டும் கொட்டி முழங்கிக் கொண்டு வெற்றி பெறுவதைக் கண்டு களியுங்கள். காதல் புனிதமானது, தெய்வீகமானது, காலத்திஞல் கரையாதது, செந்தணலில் எரியாதது என்ற பழைய தத்துவத்தை நான் நிலை நிறுத்துவதை எல்லோரும் பாருங்கள்! என் விஜயகேசரி எனக்குக் கிடைத்து விட்டார்! என்னை ஏற்றுக் கொண்டு விட்டார். இப் பார் முழுவதிலும் இனி என்னைவிடப் பெரிய பாக்கியசாலி வேறு யார்" என்று தன்னையே மறந்து மளமளவென்று பேசியவாறு ஜோதியை ஸ்வீகரித்துக் கொள்ள இரண்டு கரங்களையும் அகல விரித்துக் கொண்டு முன் வந்தாள் மலைக்கன்னி.

சற்று நேரத்துக்கு முன்புவரை வெறிபிடித்ததைப் போல முழங்கிய ஜோதிவர்மன் பேச்சுக் காட்டாமல் மந்திர சக்தியினுல் மயக்கப்பட்டதைப்போல தேவதேவியிடம் செல்லுவதைப் பார்த்து பிரமித்துப்போய் நின்முன் பாலாஜி.

அருகில் வந்த ஜோதியை ஆவலுடன் ஆலிங்கனம் செய்து கொண்ட மலைக்கன்னி பாலாஜியைப் பார்த்து "அய்யா! உங்கள் முன்னிலையில் லஜ்ஜையின்றி என் பிரபுவை ஆலிங்கனம் செய்வதற்கு என்னை மன்னியுங்கள். உங்கள் உதவியில்லாவிட்டால் உங்களுடைய ஆசியும் அனுதாபமும் இல்லாவிட்டால் இந்த மங்களகரமான நேரம் என் வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கப் போவதில்லை. இருள் அடைந்துபோயிருந்த என் வாழ்வில் ஒளியை ஏற்றி வைத்தீர்கள்" என்று கூறிவிட்டு "இதற்கு எந்தவகையில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுவதென்பதுதான் எனக்குத் தெரியவில்லை!" என்று சொல்ல விரும்பியவள் அதைச் சொல்லாமல் உடல் நடுங்க உதடுகள் துடிக்க மிகுந்த பரபரப்புடன் ஜோதிவர்மனை லேசாகப் பிடித்துத் தள்ளி விட்டு நகர்ந்து கொண்டாள். மலைக்கன்னியின் இந்த விசித்திரமான திடீர் மாறுதலின் காரணம் தெரியாமல் பாலாஜியும் ஜோதிவர்மனும் திகைத்துப் போனுர்கள்.

"என்ன முட்டாள்தனம் செய்துவிடப் பார்த்தேன்! எத்தனையோ நூற்றுண்டுகள் வரையில் பொறுமையுடன் காத்திருந்து பெற்ற பிரபுவை அறியாமையினுல் நானே கொன்றுவிடப் பார்த்தேனே!" என்முள் அவள். இதைச் சொல்லியபொழுது அவள் அடைந்திருந்த பரபரப்பில் அவளுடைய வாய்கூடக் குழறியது.

"நீ என்ன சொல்லுகிருய் தேவி! என் ஜோதியை நீயா கொல்லப் பார்த்தாய்?" என்முன் பாலாஜி. ஜோதியோ பேசும் சக்தியையே கிட்டத்தட்ட இழந்து

போயிருந்தபடியினால் மௌனமாக நின்று கொண்டிருந்தான்.

"ஆம், அய்யா! ஆசைவெட்கமறியாதது என்பார்கள். என் விஷயத்தில் அது ஆபத்தைக் கூட அறியாமல் இருந்து விட்டது. என் அரவணைப்பில் என்பிரபு இன்னும் கொஞ்ச நேரம் இருந்திருந்தால் என் உஷ்ணம் தாளாமல் பொசுங்கிப் போயிருப்பார். என் பிரபுவை நான்அடைந்து விட்ட மதிமயக்கத்தில் என் விசேஷத்தன்மையைக் கூட மறந்து என்னையுமறியாமல் அவரை ஆபத்துக்கு உட்படுத்தவிருந்தேன். எவ்வளவு பெரிய முட்டாள்தனம் செய்துவிடப் பார்த்தேன் அய்யா! என் வாழ்வில் நீங்கள் ஒளியை ஏற்றிவைத்தீர்களென்று சொல்லியபொழுது தான் என் சரீரத்தின் ஒளிமயமான தன்மையும் எனக்கு ஞாபகம் வந்தது. தக்க தருணத்தில் கடவுள்தான் என் பிரபுவைக் காப்பாற்றினார்!" என்றாள் மலைக்கன்னி.

பிறகு ஜோதியைப் பார்த்து "சுவாமி! தீண்டக் கூடாதவரும் தீண்ட முடியாதவருமான ஒரு பெண்ணை மனைவியாகப் பெறுவதா என்று யோசிக்கிறீர்களா? ஆம்! நான் இப்படி எப்பொழுதும் உங்களுக்குத் தீண்டத்தகாதவளாக இருந்தால் நீங்கள் என்னை மணப்பதில் அர்த்தமில்லை. ஏன் நமது காதலே அர்த்தமற்றதாகிவிடும். ஒன்று நீங்களும் என்னைப் போலாக வேண்டும். அல்லது நான் உங்களைப்போல ஒரு சர்வ சாதாரண மானிடப் பெண்ணாக மாறவேண்டும். துரதிர்ஷ்டவசமாக ஜீவ ஜோதியின் மகிமையினால் அமரத்துவம் பெற்ற எனக்கு ஒளிமயமான இந்தச் சரீரத்தை உதறித்தள்ளி ஒரு சாதாரணப் பெண்ணாகும் சக்தி இல்லை. ஜீவஜோதியும் காலத்தின் திருவிளையாடலும் என்னை அமரனாக வைத்திருப்பதுடன் அக்னிமயமாகவும் மாற்றியிருக்கின்றன. இந்த நிலைமைக்கு உங்களை மாற்றும் சக்தி எனக்கு இருக்கிறது. என்றும் இறவாமல் என் மனம்போலவே நித்திய இளமை

யுடன் சிரஞ்சீவியாயிருக்கும் தன்மையை உங்களுக்கு ஏற்படுத்த முடியும். நீங்கள் அந்த நிலைமையை அடைந்த பிறகுதான் என்னைத் தீண்டலாம். என் முகத்தையும் நேரடியாகப் பார்க்கலாம். அந்தச் சக்தியை உங்களுக்கு அதிவிரைவில் அளிக்கிறேன். நித்திய யுவன், யுவதியாக, நோய் நொடி மூப்புகள் நெருங்காத சரித்திர தம்பதிகளாக ஆயிரமாயிரம் ஆண்டுகள்வரை ஜீவஜோதியின் சக்திக்கு முடிவு ஏற்படும்வரை சிரஞ்சீவிகளாக நாம் வாழ்வோம். இந்தப் பேரின்பத்தை நமக்கு அளிக்க உதவியவர்கள் உங்கள் பெரியப்பாவும் என் தளபதி உக்கிரசேனனும்தான். அவர்களையும் அவர்களது மூப்பை உதறித் தள்ளிவிட்டு கட்டழகர்களாக்குகிறேன். நான் ஏதேதோ பிதற்றுகிறேனென்று நினைக்கிறீர்களா? நான் சாவை வென்ற சிரஞ்சீவியென்பது பித்தலாட்டமென்று எண்ணுகிறீர்களா? இல்லை! நீங்கள் அப்படி நினைக்கமாட்டீர்கள். சந்திரிகாவின் ஆணையை ஏற்று என்மீது வஞ்சம் தீர்க்க வந்ததாக சற்று முன்னல் நீங்கள் தானே சொன்னீர்கள்? சந்திரிகாவின் காலத்திலிருந்து நான் இன்னமும் சிரஞ்சீவியாக செம்பவளத் தீவில் இருப்பேன் என்ற நம்பிக்கை இல்லாவிட்டால் நீங்கள் இங்கு ஏன் வந்திருக்கப் போகிறீர்கள்? சித்தர் வாக்குப்படி வந்த நீங்கள் விதியின் தூண்டுதலினல் உண்மையை உணராமல் நீங்களாக இங்கு வந்திருப்பீர்களென்று தான் நான் இதுவரையில் எண்ணிக் கொண்டிருந்தேன். சந்திரிகாவின் சபதத்தை நிறைவேற்ற வலுவில் என்னைத் தேடிக்கொண்டு நீங்கள் வந்திருப்பதை இப்பொழுதுதான் நான் அறிகிறேன். இந்த ரகசியத்தை உங்கள் பெரியப்பாகூட என்னிடமிருந்து மறைத்துவிட்டார். ஆம்! அவர் விரலில் சர்ப்பச் சின்னம் பதித்த மோதிரத்தைக் கண்ட மாத்திரத்தில்

நான் சந்தேகித்ததும் சரியான பதில் சொல்ல முடியா மல் அவர் சிறிது நேரம் தயங்கியதும் இப்பொழுதுதான் என் ஞாபகத்துக்கு வருகிறது. அந்த மோதிரத்துடன் கூட ஒரு தங்கச் சங்கிலியையும் விஜயகேசரிக்குக் கொடுத்ததாக ஞாபகம். மோதிரத்தையும் சங்கிலியையும் அவர் சந்திரி காவிற்குக் கொடுத்திருந்தார்.''

தேவதேவி இவ்விதம் சொல்லிக்கொண்டிருக்கையில் உண்மையை இனி மறைப்பதில் பயனில்லை என்பதை உணர்ந்த பாலாஜி சட்டைப் பையிலிருந்த அந்தச் சங்கி லியை எடுத்து, ''அந்தச் சங்கிலி இதோ இருக்கிறது. ஜோதியின் கழுத்தில் அதைப் பார்த்தால் கோபமடை யப் போகிருயேயென்று பயந்து அதை நான்தான் கழற்றி வைத்தேன். நிலைமை இவ்வளவு தூரத்திற்கு வந்தபிறகு உண்மையை உன்னிடமிருந்து இனியும் மறைக்க நான் விரும்பவில்லை. சந்திரிகா தனது வரலாறு முழுவதையும் ஒரு ஏட்டுச் சுவடியில் எழுதிவைத்திருந்தாள். அந்தச் சுவடி அவளுடைய சந்ததி வாரியாக ஜோதிவர்மன்வசம் வந்து சேர்ந்தது. விஜயகேசரியைக் கொலைசெய்த மலைக் கன்னியைத் தனது சந்ததியில் தோன்றும் யாராவது ஒரு வர் பழிக்குப் பழி வாங்கவேண்டுமென்று சந்திரிகா கேட் டுக்கொண்டிருந்தாள். ஜோதியின் தகப்பனர் விஜயவர் மன் செம்பவளத்தீவுக்கு வந்து உன்னைச் சந்திக்காமலே திரும்பிவிட்டார். சுவடியிலிருக்கும் வரலாறு உண்மை யாயிருந்தாலும் மலைக்கன்னி சாகாவரம் பெற்றவளென் பது கட்டுக் கதையென்றே நாங்கள் நம்பினேம். இயற்கை யின் நியதிகளை மீறி ஒரு பெண் இறவாமலிருப்பது அசாத் தியமென்றே நாங்கள் நினைத்தோம். ஆயினும் சுவடியில் குறிப்பிட்டிருந்த செம்பவளத்தீவுக்குப் போய் மலைக் கன்னியின் வரலாற்றைத் தெரிந்துகொண்டு வரவேண்டு மென்ற ஆராய்ச்சி ஆவலுடனேயே நாங்கள் இங்கு வந் தோம். உண்மையில் உன்னைக் கொன்று வஞ்சம் தீர்க்க வேண்டுமென்ற எண்ணத்துடன் நாங்கள் இங்கு வர

வில்லை. 2500 ஆண்டுகள் வரையில் நீ உயிரோடு இருப்பது சாத்தியமென்பதை நம்பினலல்லவா உன் மீது வஞ்சம் தீர்க்கும் எண்ணம் எங்களுக்கு ஏற்பட முடியும்? உண்மையை ஆராய்ந்து அறியும் ஆவலே எங்களை இவ்வளவு தூரத்திற்குக் கொண்டுவந்தது'' என்றான்.

''ஆமாம் தேவி! பெரியப்பா சொல்வதுதான் உண்மை. மலைக்கன்னி என்ற ஒருவள் மரணத்தை வென்று 2500 ஆண்டுகளாக உயிருடனிருக்க முடியுமானல் அந்த அமானுஷ்யமான பெண்ணை சர்வசாதாரண மனிதனாகிய என்னால் கொன்று பழிதீர்க்க முடியுமென்று நான் நினைக்க வில்லை. அந்த ஆச்சரியமான பெண்ணை நேரில் பார்க்க வேண்டுமென்ற ஆவல்தான் எங்களிடம் மேலிட்டிருந்தது. சந்திரிகா எழுதிய வரலாற்றைப் படித்தவுடன் உங்களிடம் எனக்கு எவ்வளவு அருவருப்பும் துவேஷமும் தோன்றியதோ அதைவிட அதிகமான அனுதாபமும் பச்சாத்தாபமும் ஏற்படுகிறது உன் வாயிலிருந்து உன் வரலாற்றைக் கேட்டவுடன்!'' என்றான் ஜோதி.

''என் பிரபுவின் உத்தமமான குணத்தையும் உயர்ந்த பண்புகளையும் எப்பொழுதுமே நான் சந்தேகித்ததில்லை. நீங்கள் சொல்லுவதை அப்படியே நான் நம்புகிறேன். நான் எப்படி இந்நாட்டுக்கு வந்தேன்? ஜீவஜோதியில் மூழ்கி எவ்விதம் அமரத்துவம் பெற்றேன்? என்ற வரலாறுகளைச் சொல்வதன் முன்னல் என் காதலின் தூய்மையையும் வைராக்கியத்தையும் உங்களுக்கு நிதர்சனமாக ருசுப்படுத்தவேண்டும். இதுவரை மனித சமுதாயத்தின் நீண்ட வரலாற்றில் நீங்கள் கண்டும் கேட்டுமிராத ஒரு அதிசயத்தைக் காட்டுகிறேன் வாருங்கள்!'' என்று சொல்லி விட்டு தேவதேவி திரிசூலத்தைக் கையிலெடுத்துக்கொண்டு புறப்பட்டாள்.

பல கூடங்களையும் தாழ்வாரங்களையும் தாண்டி தரை மட்டத்துக்கு அடியிலுள்ள ஒரு விசாலமான நில அறையை

அவர்கள் அடைந்தார்கள். அங்கு ஒரு மூலையில் உளுத்துப் போன மரக் கதவு ஒன்று தொத்திக்கொண்டு நிற்பதைப் பார்த்த மாத்திரத்தில் முந்திய நாளிரவு சந்தடியின்றி தான் மறைந்து பார்த்த கல்லறைக்கே இப்பொழுது வந்திருக்கிறோமென்பதை பாலாஜி உறுதியாகத் தெரிந்து கொண்டான்.

நாம் ஏற்கனவே வர்ணித்ததைப் போல அவ்வறையின் சுவர்களில் பதிப்பிக்கப்பட்டிருந்த சந்திரகாந்தக் கற்கள் அந்த இடத்தை ஒளிமயமாக்கிக் கொண்டிருந்தன. அறையின் நடு மத்தியில்தொங்கியபெரிய கொசுவலைக்குள் ஐந்தாறு அடி இடம்விட்டு இரண்டு நீண்ட கருங்கல் மேடைகள் இருந்தன. ஒரு மேடை காலியாகவும் மற்றொன்றின் மீது பாலாஜி முன்பு பார்த்த அதே பிரேதப் பெட்டியுமிருந்தன. தேவதேவி அருகில் சென்று கொசு வலையைச் சுற்றி மேலே போட்டதும் பிரேதப் பெட்டியின் அருகில் மலர்கள் தூவிக் கிடந்தது தெரிந்தது. பிரேதப் பெட்டியின் கால் பக்கத்தில் தேவதேவி திரிசூலத்தை வைத்துவிட்டு பெட்டியை மூன்று முறை வலம்வந்து வணங்கினாள். பிறகு வாய்க்குள் மந்திர உச்சாடனம் செய்வதைப்போல சிறிது நேரம்வரை முணுமுணுத்தாள். மறுபடியும் ஒரு தடவை பிரேதப் பெட்டியை வணங்கிவிட்டு ஜோதிவர்மன் பக்கம் திரும்பி, ''ஸ்வாமி! என் காதல் எவ்வளவு உறுதியானதென்பதையும் இரண்டாயிரத்து ஐந்நூறுஆண்டுகளாக உங்கள் வரவுக்கு ஆவலோடு நான் காத்திருப்பதை ருசுப்படுத்தவுமே இங்கு உங்களை அழைத்து வந்தேன். நான் சொல்லும் விசித்திரமான வரலாற்றைக் கேட்கவும், நான் காண்பிக்கும் அதிபயங்கரமான, அதேசமயம் அசைக்க முடியாத அத்தாட்சியைக் காணவும் மனதைத் திடப்படுத்திக்கொள்ளுங்கள்!'' என்றாள்.

பிறகு காலியாகக் கிடந்த கருங்கல் மேடையைச் சுட்டிக் காட்டி. ''இதோ இந்தக் கருங்கல் மேடையைப்

பாருங்கள் ஸ்வாமி! சென்ற 2500 ஆண்டுகளாக, கிட்டத் தட்ட பத்து இலட்சம் இரவுகளாக இந்நாட்டின் மகா ராணி படுத்துறங்கிய மஞ்சத்தைப் பாருங்கள் ஸ்வாமி! ஹம்ஸதுளிகா மஞ்சமும் அண்டி சேவைபுரிய அநேகம் பணிப் பெண்களும் நினைத்ததை அடையும் ஐசுவரியங்களும் போக பாக்கியங்களும் இருந்தும்கூட அந்த சுகவாழ்க்கையைத் துறந்து கருங்கல் மேடையின்மீது இலட்சக்கணக்கான இரவுகளை நான் கழித்தேன். ஏன் தெரியுமா? என்னுடைய கடுமையானவிரதமும்தன்னலமற்றதியாகமும் ஏன்? யாருக்காக என்று தெரியுமா? அதோ பேசாமடந்தையாக, கல்லோடு கல்லாக, உணர்ச்சியும் உயிருமற்ற சவமாகக் கிடக்கும் என் ஸ்வாமியை உத்தேசித்துத்தான்! கருங்கல் மேடையிலே பிரேதப் பெட்டியில் அவர் சவமாகக் கிடக்கும்பொழுது நான் மட்டும் பட்டு மெத்தையிலே படுத்துறங்குவது எப்படி நியாயமாகும்? சுந்தர புருஷனாக மீண்டும் என் பிரபுவைச் சந்திக்கும்வரையில் அவர் விட்டுச் சென்ற பூதவுடலுடனேயே இரவைக் கழிப்பதென்ற வைராக்கியத்துடன் புனிதமான அவருடைய கல்லறையையே என்னுடைய சயனக்கிரகமாக்கிக்கொண்டேன். என் காதல் உறுதிக்கும் வாழ்க்கையின் வைராக்கியத்துக்கும் இதைவிட இன்னும் வேறென்ன அத்தாட்சி வேண்டும்? அதோ உங்களுடைய பூதவுடலைப் பாருங்கள். இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னால் என் பூஜைக்காக நீங்கள் விட்டுச் சென்ற புனித பூதவுடலைப் பாருங்கள்.''

இவ்விதம் சொல்லிய தேவதேவி பிரேதப்பெட்டியின் அருகில் சென்று அதன் மேல் மூடியை லாகவமாகத் திறந்து கீழே எடுத்து வைத்தாள். பெட்டிக்குள் தூய வெண்ணிறப் பட்டு மெத்தையின் மீது இளவரசனுக்குரிய உடுப்புகளுடன் ஒரு பிரேதம் வைக்கப்பட்டிருந்தது. பிரேதம் என்று சொன்னலொழிய பெட்டிக்குள் ஒரு சுதந்திர புருஷன் படுத்து அயர்ந்து தூங்குவதாகவே எவரும் நினைப்பர். கொஞ்சமும் கெடாமல், வாட்டம்கூடத் தெரியாமல்

அவ்வளவு பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டிருந்த விஜயகே சரியின் சவம் அவன் இறந்தபொழுது எந்த நிலைமையில் அவன் இருந்திருப்பானே அதே பசுமையுடனும், இளமை யுடனுமிருந்தது. கண்ணிமைகளிலிருந்த கறு கறுத்த உரோ மமும் புருவங்களும்கூட உயிருள்ள ஒரு மனிதன் அனுயாச மாகப் படுத்துத் தூங்குவதைப்போலத் தோன்றச் செய்வ தாயிருந்தன. அது இரண்டாயிரத்து ஐந்நூறுஆண்டுகளுக்கு முற்பட்ட பிரேதமென்று சத்தியம்செய்து சொன்னல்கூட சுலபத்தில் நம்பமுடிவதாயில்லை.

ஜோதிவர்மன் கொஞ்சம் எட்டி நிற்க, பாலாஜி மாத் திரம் சவப்பெட்டியினருகில் சென்று விஜயகேசரியின் பிரேதத்தைப் பார்த்தான். பார்த்தவன் ஆச்சரியத்துடன் ஜோதியையும் பிரேதத்தையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டேயிருந்தான்.

ஜோதிவர்மன் தூரத்தில் நின்று பார்ப்பதைக் கவ னித்த தேவதேவி, ''அருகில் சென்று உங்களைப் பாருங்கள் ஸ்வாமி! உங்களை நீங்களே பார்க்கத் தயக்கம் ஏன்? கண் ணுடியில் பார்க்கும் உங்கள் உருவத்தைப் போல கண்ணுடி ஏதுமில்லாமலே பெட்டிக்குள் நீங்கள் கிடப்பதை அருகில் போய்ப் பாருங்கள். இதுமாதிரியான சந்தர்ப்பம் உலகத் தில் வேறு யாருக்குக் கிடைத்திருக்கிறது? நீண்ட மனித வரலாற்றில் எவருக்கும் எந்த யுகத்திலும் கிடைத்திராத ஒரு புதுமையான அனுபவம் உங்களுக்குக் கிடைத்திருக் கிறது. உயிருடனிருப்பவர் இறந்த தன்னைத்தானே காணும் சந்தர்ப்பம் உலக சிருஷ்டி காலத்திலிருந்து இன்றுவரை உங்களைத் தவிர வேறு எவருக்கும் கிடைத்ததில்லை. 2500 ஆண்டுகளுக்கு முன்னல் இந்தப் பாவியின் கரங்களினல் உயிரைவிட்ட உத்தம புருஷனை சவமாகவும், ஜீவனுள்ள மனிதனுகவும் ஏககாலத்தில் பார்க்கும் இந்தப் புனித சந் தர்ப்பத்துக்காக எவ்வளவு அகோரமாக நான் தவம்செய் தேன்'' என்ருள்.

ஜோதிவர்மன் பிரேதப் பெட்டியினருகில் சென்று உள்ளேயிருந்த விஜயகேசரியின் பிரேதத்தை உன்னிப்பாகக் கவனித்துப் பார்த்தான். பெட்டியிலிருக்கும் பிரேதத்தின் சாயல் கிட்டத்தட்ட தன்னைப்போலவே இருப்பதைக் கண்டு அவன் ஆச்சரியத்துடன் தேவதேவியைத் திரும்பிப் பார்த்தான்.

''பிரேதமாகக் கிடக்கும் நிலைமையில் உங்களை நீங்களே பார்க்கும்பொழுது ஆச்சரியப்படுகிறீர்களா ஸ்வாமி! என் பிரபுவின் பூதவுடல் மற்ற எல்லாப் பிரேதங்களையும் போலப் பாடம்செய்து வைக்கப்படவில்லை. அதன் நரம்புகளிலும், இரத்தக் குழாய்களிலும் ஒரு துளி ஔஷத தைலமும் ஊற்றவில்லை. என் பிரபு இறந்தவுடன், ஒரு சமயம் ஜீவாக்னி அவரைப் பிழைப்பிக்குமோ என்ற ஆவலுடன் பிரேதத்தைத் தூக்கிச் சுமந்துகொண்டு காடு மலைகளையெல்லாம் தாண்டி ஜீவாக்னி இருக்குமிடத்துக்குப் போனேன். ஜீவாக்னியில் என் பிரபுவை ஸ்நானம் செய்வித்து இராப் பகலாக அவர் மீண்டும் வருவாரென்று அங்கேயே தன்னந்தனிமையாகக் காத்துக்கிடந்தேன். ஆனால், விதியை வெல்லும் வலிமை என்னிடமில்லை. சாவைத் தடுத்து ஒத்திவைக்கும் ஜீவாக்னிக்கு செத்தவரை உயிர்ப்பிக்கும் சக்தியில்லாமற் போய்விட்டது. ஆனால், ஜீவாக்னி எனக்கு ஒரு நன்மையைச் செய்தது. இறந்த என் பிரபுவை அப்பொழுது அவர் இருந்த நிலைமையிலேயே ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பாதுகாத்துக் கொடுக்க உதவியது. என் ஸ்வாமி உயிருடனிருக்கையில் அவரை ஜீவாக்னிக்கு அழைத்துப்போய் சிரஞ்சீவித்தன்மையை அளிப்பதாக எவ்வளவோ நயமாகச் சொல்லிப்பார்த்தேன். என் பேச்சை அவர் கேட்கவில்லை. அவருக்குப் பதில் அவருடைய பூதவுடலுக்குச் சிரஞ்சீவித் தன்மை கிடைத்தது. சாவிலும் எவ்வளவு சௌந்தர்யமாக நீங்கள் இருக்கிறீர்கள் என்பதை நன்றாக உற்றுப் பாருங்கள் ஸ்வாமி'' என்றாள் தேவதேவி!

"நான் விஜயகேசரியின் வம்சத்தில் வந்தவனென்றாலும் நீங்கள் நினைப்பதைப் போல உண்மையில் விஜய கேசரியின் புனர் ஜன்மமாயிருந்தால் அவரைப் போலவே ஒரே அச்சில் வார்த்து எடுத்த மாதிரி நான் இருப்பது எனக்குப் பெரிய ஆச்சரியமாயிருக்கிறது. ஒருவர் ஒவ்வொரு ஜன்மத்திலும் ஒரே தோற்றமுடனிருப்பது சாத்தியமா? அப்படியானால் இன்று உலகில் இருப்பவர்கள் அவ்வளவு பேர்களும் பழைய முகங்களாக அல்லவா இருக்கவேண்டும்? என் தோற்றம் 2500 ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்த விஜயகேசரியின் தோற்றத்தைப்போல எப்படியிருக்கிறது? என்னைப் பார்த்த மாத்திரத்தில் நான் விஜய கேசரியின் புனர்ஜென்மம் என்பதை நீங்கள் எப்படித் தெரிந்துகொள்ள முடிந்தது? இந்த ஒரு அம்சம்தான் எனக்கு விளங்காத புதிராயிருக்கிறது தேவி" என்றான் ஜோதிவர்மன்.

"உங்களுக்கு மட்டுமல்ல; இது எனக்கும் விளங்காத புதிராகத்தான் இருக்கிறது. உங்களைப் பார்த்தமாத்திரத்தில் நானே திடுக்கிட்டுத் திகைத்துப்போனேன். ஞான திருஷ்டியினால் முக்காலங்களையும் அறியும் தன்மை வாய்ந்த சித்தர் சொற்படி என் விஜயகேசரி எவ்வளவு ஆயிரம் ஜன்மங்கள் எடுத்தபொழுதிலும் என்னைத் தேடிக் கொண்டு நான் இருக்கும் இடத்துக்கு வருவாரென்ற திட நம்பிக்கை கொண்டிருந்தேன் என்றும் எப்பொழுதும் அல்லும் பகலும் அனவரதமும் எந்த முகார விந்தத்தை நினைத்து நினைத்து நான் பூஜித்துக்கொண்டிருந்தேனோ அதே தோற்றத்தில், அதே உருவ அமைப்பில் என் பிரபு திரும்பவும் என்னை வந்தடைவாரென்று நான் கனவிலும் எதிர்பார்க்கவில்லை. இயற்கையின் புலப்படாத எவ்வளவோ அதிசயங்களில் இதுவும் ஒன்று. இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளாக, நீங்கள் அனைவரும் அறிந்த இயற்கையின் நியதிகளுக்கு மாறாக நான் ஜீவித்திருப்பதே ஒரு ஆச்சரியமல்லவா? ஒரு வம்ச வரலாறு 2500 ஆண்டுகளாக

உங்களுடைய காலம்வரையில் தொடர்ந்து வந்திருப்பது ஆச்சரியமல்லவா? நீங்கள் யார்? எந்த ஊர்? என்பதை அறிவதன் முன்னதாகவே உங்கள் முகத்தைப் பார்த்த மாத்திரத்தில் நீங்கள்தானே என் பிரபு என்பதை என் அந்தராத்மா நொடிப்பொழுதில் காட்டிக் கொடுத்தது ஆச்சரியமல்லவா? உலகில் எவருக்கும் தெரியாத ஜீவஜோதியை நான் அறிந்திருப்பதும், அதில் மூழ்கி சிரஞ்சீவியாக வாழும் சந்தர்ப்பம் கிடைத்ததும் அது வேண்டாமென்று உதறித்தள்ளி என் பிரபு அன்று சாவைத் தழுவியதும் ஆச்சரியமல்லவா? இதில் எதைவிட எது அதிக ஆச்சரியமானதென்று நாம் சொல்ல முடியும்? விதியின் கைப்பாவைகளாகிய நாம் அனைவரும் விதிவிட்ட வழியே அதன் சுழல்களிலும் சூழ்ச்சிகளிலும் சிக்கித் திக்கு முக்காடிக்கொண்டு வாழ்கிறோம். விதியின் விநோதங்களுடைய வரையறைகளையும் தன்மைகளையும் அறிந்து ஞானத்தின் எல்லையை எட்டிப் பிடித்த மனிதன் யார் ஸ்வாமி? விஜயகேசரியைப் போல சகல அங்க அடையாளங்களும் ஒற்றுமையாயிருப்பதைக் கண்டு நீங்கள் ஆச்சரியப்படுகிறீர்கள். என் பிரபு எந்த உருவத்தில் வந்தபொழுதிலும் என் அந்தராத்மா அவரை எனக்குக் காட்டிக்கொடுத்துவிடுமென்ற நம்பிக்கை மாத்திரம் எனக்கு எப்பொழுதுமேஉண்டு. ஆனால், எந்த உருவத்தில் என் பிரபு என் உள்ளத்தைக் கவர்ந்தாரோ அதே உருவத்தில் மீண்டும் வந்து என்னை ஆட்கொள்ளுவாரென்று நான் கனவிலும் நினைக்கவில்லை. இதுதான் என் பெரும் பாக்கியமும் கடுந்தவத்துக்குக் கைமேல் கிடைத்த பலனுமாகும். உலகமே நம்பிக்கையினால்தான் இயங்குகிறது. அந்த நம்பிக்கையே இவ்வளவு காலமும் என்னை வாழ வைத்தது. இப்பொழுது இருண்டிருந்த என் வாழ்வில் ஒளி ஏற்றிவைத்து மலரச் செய்வதும் அசைக்க முடியாத அதே நம்பிக்கைதான்!''

இவ்வாறு சொல்லிய தேவதேவி தன்னுடைய படுக்கையென்று சொல்லிய கருங்கல் மேடைக்கு அடியில்

குனிந்து அங்கிருந்து ஒரு சிறு மண் கலத்தைக் கையிலெடுத்தாள். கலயத்துக்குள் இருந்த ஒரு திராவகத்தைப் பிரேதத்தின்மீது கவிழ்த்தாள். கலயத்தையும் பிரேதத்தின் மீது போட்டுவிட்டு கீழே இருந்த மூடியைத் தூக்கி அவசர அவசரமாகப் பிரேதப் பெட்டியை அழுத்தி மூடினுள். அவள் சரியாக மூடுவதற்குள்ளாகவே பிரேதத்தின் மேலிருந்து வெண்மையான புகை லேசாகக் கிளம்பவாரம்பித்தது. பெட்டியை மூடியவுடன் புகை வெளியே வரவில்லையென்றாலும் பெட்டிக்குள் எலும்புக்கூடுகள் படார் படார் என்று வெடிக்கும் சப்தம் தெளிவாகக் கேட்டது.

''என் பிரபு உயிரோடு என்னிடம் வந்தபிறகு அவருடைய பழைய சின்னம் இனி எனக்குத் தேவையில்லை. 2500 ஆண்டுகளாகப் பாதுகாத்துவந்த பூதவுடலை இதோ அக்னி தேவனுக்கு அர்ப்பணித்துவிட்டேன். அக்னிதேவன் ஆண்டவனின் அம்சம். மனதுக்கு மிகவும் பிடித்தமானவைகளை ஆண்டவனுக்கு அர்ப்பணிப்பதைப் போல என் பிரபுவின் புனித பூதவுடலும் இதோ ஆண்டவனிடம் ஐக்கியமாகிறது. அரை விஞடியில் ஆயிரமாயிரமாண்டுகளாகப் பழைய சோபை குன்றுமலிருந்த என் பிரபுவின் பழைய சடலம் பஸ்பமாகிவிடுவதைப் பாருங்கள்!'' என்றுள் தேவி.

இவ்விதம் சொல்லியவள் திரிசூலத்தின் ஒரு முனையிஞல் பிரேதப் பெட்டியின் மேல் மூடியை தூக்கிக் கீழே வீச, சுத்தத் தங்கத்தில் செய்திருந்த அந்த மூடி கணீரென்ற சப்தத்துடன் அப்பால்போய் விழுந்தது. பெட்டிக்குள்ளேயிருந்து வெண்மையான புகை குப்பென்று கிளம்பி அரை நொடியில் அந்த அறை முழுவதும் பரவி ஒருவர் முகம் மற்றொருவருக்குத் தெரியாதபடி செய்துவிட்டது.

''இந்தப் புகை நச்சுப் புகையில்லை. பயப்படாமல் அப்படியே நில்லுங்கள்!'' என்றுள் தேவதேவி.

குகையின் சுவர்களிலே காற்று வருவதற்காக அமைத்திருந்த ஒரு விசேஷமான இடைவெளியின் வழியாக ஓரளவுக்குப் புகை வெளியேறியதும் தேவதேவி பிரேதப் பெட்டிக்குள் இரண்டு கைகளையும் விட்டுச் சாம்பலை அள்ளினுள். "மண்ணிலிருந்து தோன்றிய சடலம் திரும்பவும் மண்ணுக்கே போய்விட்டது. இவ்வுலகிலுள்ள சர்வமும் இப்படித்தான்!" என்று சொல்லிக்கொண்டே கையில் அள்ளிய அஸ்தியை இரண்டு கண்களிலும் ஒத்திக்கொண்டு திரும்பவும் அதைப் பெட்டிக்குள்ளேயே போட்டாள்.

"பிரேதப் பெட்டிக்குள் ஊற்றிய திராவகத்தின் தன்மை ஆச்சரியமாயிருக்கிறது தேவி. அரைக் கணத்தில் பிரேதத்தை அது பஸ்பமாக்கிவிட்டதே!" என்முன் ஜோதி.

"ஆம்! கல்லையும், உலோகத்தையும் தவிர இதர சகல பொருள்களையும் எரித்துச் சாம்பலாக்கும் விசேஷ சக்தி வாய்ந்தது இந்தத் திராவகம். செம்பவளத்தீவின் புராதன நாகரிகத்தை அடியோடு அழித்து நாசமாக்கிய சிம்மேந்திர பூபதியின் காலத்தில் தயாராகியதுதான் இந்தப் பயங்கரத் தன்மை வாய்ந்த திராவகமும். என் பிரபுவைத் திரும்ப அடைந்தவுடன் அவர் கண்ணெதிரில் அவருடைய பழைய உடலைத் தகனம் செய்ய வேண்டுமென்பதற்காக சென்ற 2500 ஆண்டுகளாக இந்தத் திராவகக் கலயம் இதே அறையில் இருந்து வந்தது!" என்முள் தேவி. பிறகு "கிட்டத்தட்ட நடுஜாமமாகிவிட்டது. வெகு நேரம்வரையில் உங்களைக் கண்விழிக்கவைத்துச் சிரமப்படுத்திவிட்டேன். என் பிரபு என்றும் இளமையுடன் சிரஞ்சீவியாயிருக்க நாளை ஜீவஜோதியை நாடி நெடுந்தூரம் பிரயாணத்தை ஆரம்பிக்கவேண்டும். அதற்கு முன் நன்முக ஓய்வெடுத்துக்கொள்ளுங்கள்!" என்று சொல்லிவிட்டு திரிசூலத்தைக் கையிலெடுத்துக்கொண்டு கிளம்பினுள் தேவதேவி. அவளைத் தொடர்ந்து பாலாஜியும் ஜோதியும் பின்னுல் நடந்தார்கள்.

# அத்தியாயம் -8

மறுநாட்காலை ஜோதியும் பாலாஜியும் எழுந்து காலைக்கடன்களை முடித்துக்கொண்டு சாப்பிட உட்கார்ந்தவுடன் முதல் நாள் காலையைப் போலவே அவர்களுக்குப் பலகாரமும் சூடான காப்பியும் வந்தன. சாப்பிட்டுக்கொண்டே "சித்ராவுக்கு ஏற்பட்ட கதியை அறிந்தால், பாவம் உக்கிரசேனர் எப்படி துடிதுடித்துப் போவார்?" என்றான் ஜோதி.

"ஆமாம் ஜோதி! பாவம், அந்த மனிதர் சித்ராவை அருமையாக வளர்த்து வந்தார். அவள் மரணத்துக்கு நாம் காரணமாகவிருந்ததை நினைக்கும் பொழுதுதான் எனக்கு துக்கமாயிருக்கிறது. ஒவ்வொருவருக்கும் விதி எந்த உருவத்தில் எப்படி வருகிறது பார்த்தாயா?" என்றான் பாலாஜி.

"விதியைத் தடுக்க நாம் யார்?" என்று யாரோ ஒருவர் வாசற்படியிலிருந்து கேட்பதைப்போலிருந்தது. ஜோதியும் பாலாஜியும் திரும்பிப் பார்த்தபொழுது தளபதி உக்கிரசேனர் உள்ளே வந்துகொண்டிருந்தார்.

"ஓ! விஷயம் உங்களுக்குத் தெரியுமா?" என்று விஷயத்தைச் சொல்லாமல் அடக்கமாகக் கேட்டான் பாலாஜி.

"என் மகள் சித்ராவின் முடிவைப்பற்றித்தானே கேட்கிறீர்கள்? தெரியும். சற்று முன்புதான் மகாராணியே சொன்னாள். சித்ரா என் பெண்ணென்று சொல்லிக் கொள்ளவே நான் வெட்கப்படுகிறேன் அய்யா! அப்படிப்பட்ட

ஒரு பெண் இருப்பதைவிட இல்லாமற் போனதே நல்லது?'' என்று மனக்கசப்புடன் சொன்னார் உக்கிரசேனர்.

"அப்படிச் சொல்லாதீர்கள்! பெண்களிலே மாணிக்கம் போன்றவள் சித்ரா! அவள் மரணத்தை என்னால் தடுக்க முடியாமற்போய்விட்ட பொழுதிலும் அந்த உத்தமியை என் உயிருள்ளவரையில் நான் மறக்கவே முடியாது. பாவம், என்னால் அவள் இறக்க நேரிட்டதை நினைக்கும் பொழுதுதான் என் நெஞ்சு வெடித்துவிடும் போலிருக்கிறது!'' என்றான் ஜோதி. இதைச் சொல்லுகையில் அவன் குரல் தழுதழுத்தது. கண்களில் கண்ணீர் ததும்பி நின்றது.

"அவள் எவருடைய அனுதாபத்துக்கும் உரியவளில்லை. இந்நாட்டின் ராணியை நிந்தித்தாள் அந்தப் பேதைப் பெண். மகாராணி தெய்வத்துக்குச் சமானம். ராணியை எதிர்ப்பவர்கள் தெய்வத்தை எதிர்ப்பவர்கள். தெய்வத்தை எதிர்ப்பவர்களுக்கு உலகில் வாழ உரிமையேயில்லை. இதுதான் போகட்டும். மகாராணி தன்னுடைய அந்தஸ்தையும் அதிகாரத்தையும் மானத்தையும் விட்டு தனது வரலாற்றைச் சொல்லி மன்றுடிய பொழுதாவது பண்புள்ள பெண்ணுயிருந்தால் சித்ரா என்ன செய்திருக்க வேண்டும்? தன் சுகத்தையும் காதலையும் இந்நாட்டின் ராணிக்காக, இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளாய் உங்களுக்காகக் காத்திருக்கும் தெய்வாம்சம் பொருந்திய தேவிக்காக அவள் தியாகம் செய்திருக்க வேண்டும். அப்படித் தியாகம் செய்திருந்தால் இன்று அவள் பெருமை உயர்ந்து சரித்திரத்தில் அவள் இடம் பெற்றிருப்பாள். தலைமுறை தத்துவமாக ராஜ விசுவாசிகளாயிருந்து வரும் என் குலத்தின் பெருமையும் உயர்ந்திருக்கும். பெண்குலத்தின் பெருமையையே அவளுடைய மகத்தான தியாகம் வானளவுக்கு உயர்த்தியிருக்கும். இதைவிட்டு சுயநலனைப் பெரிதாக மதித்து தெய்வத்தின் பிரதிநிதியான இந்நாட்டின் ராணியையே எதிர்த்து என் குலத்துக்கும் பொறுமைக்கும்,

தியாகத்துக்கும், இருப்பிடமான பெண் குலத்துக்கும் அவள் என்றும் அழியாத மாசு கற்பித்துவிட்டாள். ராஜ துரோகம் மன்னிக்கமுடியாத குற்றம்; அக்குற்றத்தைச் செய்தவர் யாராயிருந்தாலும் தண்டனையடைய வேண்டிய வர்கள்தான்'' என்றார் உக்கிரசேனர்.

அவர் இவ்விதம் சொல்லுவதைக் கேட்டுக்கொண்டே வந்த மகாராணி தேவதேவி "சபாஷ் உக்கிரசேனா, சபாஷ்! உன் ராஜ விசுவாசத்தை மனப்பூர்வமாக மெச்சுகிறேன். உன்போன்ற ராஜ விசுவாசியை எங்கும் கண்ட தில்லையென்று நேற்றுத்தான் பாலாஜி சொன்னார். அது வெறும் முகஸ்துதியல்லவென்பதை நன்றாக உணருகிறேன். உன்னைப்போன்ற உண்மையான ஊழியர்கள் இருப்பதினால்தான் இந்த ராஜ்யத்தை என்னால் நிர்வகிக்க முடிகிறது. இப்படிப்பட்ட மெய்விசுவாசமுடைய தளபதிக்கு இந்த ராஜ்யம் வெகுவாகக் கடமைப்பட்டிருக்கிறது உக்கிர சேனா! மற்றவர்களைப் போலில்லாமல் நீ நீடூழி வாழவேண்டும். உன் சேவை இந்நாட்டுக்குக் காலவரையறையில்லாமல் என்றென்றும் நிரந்தரமாகக் கிடைத்துக் கொண்டிருக்க வேண்டும். இதற்கு என்ன செய்யப்போகிறேன் தெரியுமா? இன்று பிற்பகல் நாங்கள் ஜீவஜோதியை நாடிச்செல்லும் பொழுது உன்னையும் எங்கள்கூட அழைத்துச் செல்லப் போகிறேன். ஜீவஜோதியில் ஸ்நானம் செய்வித்து உன்னையும் அமரனாக்கப் போகிறேன். உன் தன்னலமற்ற தியாகத்துக்கும், ராஜவிசுவாசத்துக்கும் உகந்த பரிசு இது தான்'' என்றாள்.

''ஆஹா! இவரல்லவா உண்மையான தியாகி. சொந்தப் பெண்ணின் மரணத்தைக் கூடப் பொருட்படுத்தாமல் ராஜசேவையே பெரிதென மதிக்கும் உக்கிரசேனரைப் போன்ற ஊழியரை உலகத்தில் வேறு எங்கு பார்க்க முடியும்?'' என்று பாலாஜி தன்னை மறந்து சொன்னான். உக்கிர சேனர் சொல்லியதையும், மலைக்கன்னி பதில் சொல்லி

யதையும் கேட்டு ஜோதிவர்மன் மலைத்துப்போய் நிற்கையில், ''உக்கிரசேனு! நீ போய் மகாமந்திரியிடம் சொல்லி பிரயாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் செய். எங்கு போகிறேமென்பது யாருக்கும் தெரிய வேண்டாம். இரண்டு நாள் பிரயாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் தயாராகட்டும். நம்முடன் ஆறு ஈட்டி வீரர்கள் வந்தால் போதும்!'' என்று உக்கிரசேனரிடம் சொல்லியனுப்பினுள் மலைக்கன்னி.

உக்கிரசேனர் சம்பிரதாய முறைப்படி வணக்கம் தெரிவித்துவிட்டு வெளியேறியபின் தேவதேவி ஜோதியைப் பார்த்து ''இரவு நன்ருகத் தூங்கினீர்களா?'' என்று கேட்டாள்.

''இல்லை தேவி! சரியான தூக்கமில்லை. பரபரப்பான பல சம்பவங்கள் நடந்த இரவில் எப்படி நிம்மதியாக தூக்கம் வரும்?'' என்ருன் ஜோதி.

''நானும் சரியாகத் தூங்கவில்லை. நம் வாழ்க்கையிலேயே ஒரு அதிமுக்கியமான மாறுதல் ஏற்படவிருக்கும் தருணத்தில் தூக்கம் எப்படி வரும்? இன்னும் ஓரிரண்டு தினங்கள் வரையில் இப்படித்தான். இன்று நண்பகல் சாப்பாட்டுக்குப் பிறகு நாம் சிரஞ்சீவி பர்வதத்துக்குப் பிரயாணமாகிறேம். நாம் அந்த இடத்துக்குப் போய் எவ்வளவோ நூற்ருண்டுகளாகிவிட்டன. என் குருநாதரின் சமாதியில் அஞ்சலி செய்வதற்காக சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஒரு தடவை அங்கு போய் வந்தேன். போகும் வழி மறக்காமலிருக்க வேண்டுமேயென்றுதான் இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறேன்'' என்ருள் தேவி. ''ஜீவஜோதி உண்மையாயிருக்கும் பட்சத்தில் வருங்கால உலகுக்கு அதை நாம் கண்டுபிடிப்பது பாரதூரமான முக்கியத்துவம் வாய்ந்ததாயிருக்கும்!'' என்று கூறிய பாலாஜி சட்டென்று தனது மனைவி ராதையை நினைத்துக் கொண்டு, ''ஏன் ஜோதி! உனக்கு இவ்வளவு வயதாகியும்

உன் பெரியம்மா உன்னை இன்னமும் குழந்தை, குழந்தையென்று வாஞ்சையோடு தடவிக்கொடுப்பாளே! நீ ஜீவஜோதியில் ஸ்நானம் செய்து உன்னை அவள் தொட முடியாமல் போய்விட்டால் ராதைக்கு எவ்வளவு பெரிய ஏமாற்றமாயிருக்கும்?'' என்றாள்.

''ஜீவஜோதிக்கு உண்மையாகவே இவ்வித சக்தி இருக்குமானால் பெரியம்மாவையும்...''என்று ஜோதி ஆரம்பிக்கவும் தேவதேவி இடைமறித்து ''பெரியம்மா என்று யாரைக் குறிப்பிடுகிறீர்கள்?'' என்று கேட்டாள்.

''நான் அமரனாகி என்னை யாரும் தொட முடியாமல் போய்விட்டால் என் பெரியம்மாவுக்கு பெரிய ஏமாற்றமாயிருக்குமேயென்று பெரியப்பா சொல்லிக்கொண்டிருந்தார்!'' என்றான் ஜோதி.

''உங்கள் பெரியம்மாவுக்கு ஏன் ஏமாற்றமேற்பட வேண்டும்? என் மாமிக்கும் அவள் பிள்ளையைப் போலவே அமரத்துவமளித்து விட்டால்போகிறது. தென் பாரதத்தில் மாமி எங்கிருக்கிறாளென்று சொல்லுங்கள். இப்பொழுதே கருட விமானத்தையனுப்பி இங்கு அழைத்து வரச்சொல்லி விடுவோம்!'' என்றாள் தேவி.

''வேண்டாம் தேவி வேண்டாம். தென்பாரதத்துக்கு உன்னுடைய கருட விமானம் போனால் ஏகக் களேபரமாகி விடும். பறக்கும் தட்டுகளில் ஒரு புதுமாதிரியான தட்டு என்று எண்ணி அதை யாரேனும் சுட்டு வீழ்த்தினாலும் வீழ்த்திவிடுவார்கள். தவிர விமானத்தில் ஏறிக் கொண்டு வர என் பெரியம்மா பயப்படுவாள். பிறகு ஒரு சமயம் நாமே பெரியம்மாவை இங்கு அழைத்து வந்தால் போகிறது. அதற்கு இப்பொழுது அவசரமில்லை!'' என்று மழுப்பினான் ஜோதி.

"சரி உங்கள் இஷ்டம்! சாப்பாடு முடிந்த பிறகு நடு ஜாமத்திற்கு இரண்டரை நாழிகை நேரம் கழித்து நாம் புறப்படுகிறோம். ஜோதிடர்கள் அதுதான் நல்ல நேரம் என்கிறார்கள்" என்று மலைக்கன்னி சொல்லிவிட்டுப் போனாள்.

பிற்பகல் சாப்பாட்டிற்குப் பின்னர் தேவதேவி ஜாஜ்வல்யமாகத் தன்னை அலங்கரித்துக் கொண்டு கையில் திரிசூலமும் இடையில் வாளும் தலையில் நவரத்தின கிரீடமுமாக ராஜரீக உடையுடன் ஜோதியின் அறைக்கு வந்தாள். அப்பொழுது பாலாஜியும் ஜோதியும் பிரயாணத்துக்கு ஆயத்தமாயிருந்தார்கள்.

தேவியைக் கண்டவுடன் "எங்கள் வேலைக்காரன் முனிசாமியைக் காணோமே!" என்றான் ஜோதி.

"முனிசாமியும் நம்முடன் சிரஞ்சீவி பர்வதத்துக்கு வருகிறான். அவனும் உக்கிரசேனரும் ஏற்கனவே மலையடிவாரத்துக்குப் போய் காத்திருக்கிறார்கள். நாமும் புறப்படுவோம் வாருங்கள் என்றாள் தேவி.

அம்மூவரும் கீழ்த்தளத்துக்கு வந்தார்கள். மலையில் இருந்து கீழே இறங்க மின்சார ஏணி போன்ற "தொட்டில் ஏணி"யிருக்கும் உப்பரிகைப் பகுதியை அடைந்ததும் உள்ளங்கால்களில் இருந்து கழுத்துவரை எஃகுக் கவசம் தரித்த பொறுக்கியெடுத்த ஐம்பது ஈட்டி வீரர்கள் அணி வகுத்து நின்று தேவதேவிக்கு ராணுவ மரியாதைகள் செய்தனர் திரிசூலத்தைக் கம்பீரமாகப் பிடித்துக் கொண்டு அந்த வீரர்களை தேவதேவி பார்வையிட்ட காட்சியை ஜோதியும் பாலாஜியும் அவர்களுடைய வாழ்நாளில் என்றுமே மறக்க முடியாது.

அணிவகுப்பு முடிந்து வீரர்கள் சுவற்றின் ஓரமாகப் போய் நின்று கொண்டதும் ஏணியிருக்கும் இடத்தில் தேவ

தேவியும் பாலாஜியும் ஜோதியும் வந்து கொண்டார்கள். அவர்கள் நின்ற இடம் சமதரையில் இதர பாகங்களில் இருந்து பெயர்ந்து மளமளவென்று கீழே இறங்கியது! எந்த வழியாக அவர்கள் அமரகிரியின் மீது ஏறினார்களோ அதே வழியாகத்தான் கீழே இறங்குகிறோமென்பதை ஜோதியும் பாலாஜியும் தெரிந்து கொண்டனர். ஏணி கீழே நின்றவுடன் அந்தக் குகைப் பகுதி முன்போல இருட்டாயிராமல் தீவட்டிகள் சகிதம் பலர் அங்கு வரிசையாக நின்று கொண்டிருந்தார்கள்.

குகைக்கு வெளியில் அவர்கள் வந்ததும் வெளியில் நின்ற ஒரு ஸ்வர்ணப் பல்லக்கு சூரிய வெளிச்சத்தில் தகதகவென்று பிரகாசித்தது. பல்லக்குக்கு முன்னால் கவசமணிந்த ஆறு ஈட்டி வீரர்கள் வெண் புரவிகளில் கம்பீரமாக வீற்றிருந்தார்கள். பல்லக்கிற்குப் பின்னால் ஒரு குதிரையில் உக்கிரசேனரும் மற்றொன்றில் முனிசாமியும் உட்கார்ந்திருந்தனர். இன்னொரு குதிரையை ஒருவன் பிடித்துக் கொண்டிருந்தான். பல்லக்கை பக்கத்துக்கு நால்வராகத் தூக்கிக் கொண்டு நின்றவர்கள் தேவியைக் கண்டதும் பல்லக்கைக் கீழே வைத்துவிட்டு கை கட்டிக் கொண்டு நின்றார்கள். ஜோதிவர்மன் தனக்காகக் குதிரையோ அல்லது இன்னொரு பல்லக்கோ அங்கில்லாததைக் கண்டதும் சற்றுத் திகைத்துப் போனான். அவர்கள் பல்லக்கு நிற்கும் இடத்தை நெருங்கியதும் தேவதேவி ஜோதியைப் பார்த்து "நாமிருவரும் இந்தப் பல்லக்கில் சேர்ந்து பிரயாணம் செய்கிறோம். உங்கள் பெரியப்பாவுக்கு அதோ ஒரு குதிரை நிற்கிறது" என்று சொல்லிவிட்டு பல்லக்கில் ஏறி உட்கார்ந்து கொண்டாள்.

"நீ பல்லக்கில் வா ஜோதி! நான் குதிரையில் வருகிறேன்" என்று சொல்லிய பாலாஜி தனக்காக நின்ற குதிரையில் போய் ஏறிக் கொள்ளவும் ஜோதிவர்மன் பதில் பேசவழியில்லாமல் பல்லக்கில் ஏறித் தேவிக்கு எதிரில் உட்கார்ந்து கொள்ள வேண்டியதாயிற்று. சரியாக

பிற்பகல் இரண்டு மணிக்குப் பிரயாணம் ஆரம்பமாகியது. பல்லக்கின் முன்னால் சென்ற குதிரை வீரர்களில் ஒருவன் மாத்திரம் மற்றவர்களிடமிருந்து பிரிந்து சுமார் 100 கஜ தூரத்துக்கு முன்னால் சென்றான். அவன் காது செவிடு படும்படி இடையிடையில் சங்கநாதம் செய்து கொண்டு போனான்.

கொஞ்சத் தூரம் வரையில் பல்லக்கும் குதிரைகளும் ஒரு முறையான ரஸ்தாவின் வழியாகச் சென்றன. பிறகு ரஸ்தாவைவிட்டு இறங்கி ஒரு சமவெளிப் பிரதேசத்தின் வழியாக அவர்கள் பிரயாணம் செய்தார்கள்! அவர்கள் சென்ற வழியில் ஒரு மனிதன் கூட குறுக்கே தென்படாதது ஜோதிக்கு ஆச்சரியமாயிருந்தது. யாரும் எதிரில் தென்படக் கூடாதென்று எச்சரிக்கவே முன்னால் போகும் வீரன் சங்கநாதம் செய்து கொண்டு போகிறானென்று அவன் நினைத்தான். இதை அவன் தேவியிடம் கேட்ட பொழுது "ஆம்! சங்கநாதத்தின் பொருள் எவரும் குறுக்கே வரக்கூடாதென்று எச்சரிப்பதுதான். இப் பொழுது ஜனசஞ்சாரமற்ற பிரதேசத்தின் வழியாக நாம் போகிறோம். ஆகையால் சங்கநாதமும் நின்று விட்டது பாருங்கள்! என்றாள் தேவி.

"இரவு முழுவதும் நாம் பிரயாணம் செய்ய வேண்டுமா? என்று கேட்டான் ஜோதி.

"இல்லை! சந்தனக்கட்டு மடம் வரையில் இன்றிரவு நாம் பிரயாணம் செய்வோம். அநேகமாக இரவு 8 மணிக்கு முன்னால் நாம் அங்குபோய்ச் சேர்ந்துவிடலாம். அங்கிருந்து சிரஞ்சீவி பர்வதத்துக்கு நாம் கால் நடையாகத்தான் போக வேண்டும். மடத்திலிருந்து மலைக்குப் போக முறையான பாதை இல்லாததால் பல்லக்குப் போக முடியாது? என்றாள் தேவி.

"கால் நடையாக எவ்வளவு தூரம் போக வேண்டும்?" என்று மறுபடியும் கேட்டான் ஜோதி.

"மடத்திலிருந்து சிரஞ்சீவி பர்வதம் பதினைந்து நாழிகை நேரப் பிரயாணம். சூர்யோதயத்தில் கிளம்பிவிட்டால் நண்பகல் கழிந்த சிறிது நேரத்துக்கெல்லாம் நாம் மலையடிவாரத்தை அடைந்து விடலாம். எப்படியும் பொழுது சாய்வதற்குள் நாம் மலையிலிருந்து இறங்கிவிட முடியும் என்று நினைக்கிறேன். கால்நடையாகப் போவதற்குப் பதிலாக சாத்தியமானல் குதிரையில்போக முயற்சிப்போம்" என்றுள் தேவி.

"எனக்கு ஒரு சந்தேகம் தேவி. சிரஞ்சீவி பர்வதத்தில் ஜீவஜோதியிருக்கும் ரகசியம் இந்நாட்டில் வேறு யாருக்கும் தெரியாதா?" என்றுன் ஜோதி.

"தெரியாது. சந்தனக் காட்டின் பக்கம் யாருமே போகக் கூடாதென்பது கண்டிப்பான உத்தரவு. அங்கு இறந்தவர்களின் ஆன்மாக்களும் தேவதைகளும் சஞ்சரிப்பதாக ஒரு ஐதீகமிருப்பதினுல் அந்தத் திசைக்கே யாரும் துணிந்து போவதில்லை. காட்டைச் சுற்றிக் கட்டுக் காவல்களும் பலமாக உண்டு. வடதிசை திக்கு பாலகனின் பாசறை அந்தக் காட்டின் விளிம்பில்தான் இருக்கிறது" என்றுள் தேவதேவி.

"சொல்லியதைப்போல இரவு ஏழரைமணி சுமாருக்கு அவர்கள் சந்தனக் காட்டு மண்டபத்தை அடைந்தார்கள். அவர்கள் வரவை எதிர்பார்த்து முன்னேற்பாட்டின் பிரகாரம் அங்கு அறுசுவை உண்டி அவர்களுக்குக் காத்திருந்தது: சாப்பாட்டை முடித்துக் கொண்டு இரவை அங்கு கழித்தனர்.

மறுநாட் காலையில் அவர்கள் ஸ்நானம் செய்து காலைப் போஜனத்தை முடித்துக் கொண்டு பிரயாணத்தைத் தொடங்கினுர்கள். இப்பொழுது அவர்கள் பல்லக்கில் செல்லவில்லை. பல்லக்கையும் பல்லக்குத் தூக்கிகளையும் ஈட்டி வீரர்களையும் விட்டு தேவதேவி, ஜோதிவர்மன், உக்

கிரசேனர், பாலாஜி, முனிசாமி ஆகிய ஐவர் மாத்திரம் ஐந்து குதிரைகளில் பிரயாணத்தை ஆரம்பித்தனர். குதிரையின்மீது மரத்தினல் கவசம் போட்டிருப்பதைக் கவனித்த பாலாஜி அதைப் பற்றி விசாரித்த பொழுது ''சிரஞ்சீவி பர்வதத்திலிருந்து திரும்பும்பொழுது நீங்கள் புது மனிதர்களாக வருவீர்கள். உங்களிடமிருந்து குதிரையைப் பாதுகாக்கவே இந்த மரக் கவசம்! என்ருள் தேவதேவி. போகும்பொழுது பழங்கால வரலாறுகளைப் பற்றி கதை கதையாக அவள் சொல்லிக் கொண்டே வந்தாள். கிட்டத்தட்ட நடுப்பகல் நெருங்கும்பொழுது தூரத்தில் தென்பட்ட ஒரு மலையைக் காட்டி ''அதோ தெரிகிறது பாருங்கள்! அதுதான் சிரஞ்சீவி பர்வதம்!'' என்ருள்.

இன்னும் கொஞ்சம் நெருங்கியதும் ''அப்பாடா! கடவுள் என்னைக் கைவிடவில்லை!'' என்ருள் தேவி.

''எதைக் குறிப்பிடுகிருய் தேவி!'' என்ருன் ஜோதிவர்மன்.

''மலை உச்சியைப் பாருங்கள்!'' வெண்மையான புகை தெரியவில்லையா?'' என்று கேட்டாள் தேவி.

ஜோதியும் பாலாஜியும் பார்த்துவிட்டு ''ஆம் தெரிகிறது!'' என்ருர்கள்.

''அதுதான் ஜீவஜோதி! ஜீவஜோதி இடம் மாறியிருக்குமோ என்று நான் சந்தேகப்பட்டுக் கொஞ்சம் பயந்தேன். கடவுள் அருளால் ஜோதி அதே இடத்தில் இன்னமும் இருக்கிறது'' என்று சொல்லிவிட்டு அவள் ஒரு பெரு மூச்செறிந்தாள். கட்டுக் கதையென்று எண்ணிய ஜீவஜோதி கண் பார்வைக்கே வந்துவிட்டதில் ஜோதிவர்மனும் பாலாஜியும் பேசுவதற்கும் சக்தியை இழந்து மிகுந்த பரபரப்பு அடைந்திருந்தார்கள். ஜோதியை அமரனுக்கி ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகக் காத்திருந்த காதலனை அடையப்போகிருேமென்ற பெருமிதத்தில் தேவ

தேவியும் மெய்மறந்திருந்தாளென்று கூறினல் மிகையாகாது.

அரைமணி நேரத்துக்கெல்லாம் அவர்கள் மலையடிவாரத்தில் ஒரு சிறு கோவிலை அடைந்தார்கள். தேவதேவி குதிரையிலிருந்து இறங்கி கோவிலின் முன்னுல் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினுள். ஜோதிவர்மனையும் மற்றவர்களையும் பார்த்து "இறங்கி வந்து வணங்குங்கள். 'இது தான் என்குருநாதர் சர்வஞான யோகீஸ்வரரின் சமாதி!" என்ருள். அவள் சொல்லியதைப் போலவே ஜோதியும் மற்றவர்களும் அந்தச் சமாதிக்கு அஞ்சலி செய்தார்கள்.

குதிரைகளைப் பக்கத்திலிருந்த மரங்களில் கட்டிவிட்டு தேவதேவி முன்னுல் செல்ல அவளைப் பின்தொடர்ந்து மற்றவர்களும் சிகரத்தின்மீது ஏற ஆரம்பித்தார்கள். மலையில் ஏற சரியான பாதையில்லாதபடியினுல் அவர்கள் மிகுந்த பிரயாசையுடனேயே மெதுவாக மேலே போகமுடிந்தது. உச்சிநேர வெயிலும் அவர்களைக் கடுமையாகச் சோதித்தது இடையில் சற்று உட்கார்ந்து இளைப்பாறிவிட்டு அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக ஏறினுர்கள். சிரமம் தெரியாமலிருக்க வேண்டுமென்பதற்காக செம்பவளத்தீவின் மீது நடந்த பல படையெடுப்புகளைப் பற்றியும் தேவதேவி ரசமான கதை சொல்லிக் கொண்டே வந்தாள். சிறைப்பிடிக்கும் கைதிகள் மூலம் அவர்களுடைய நாட்டு வரலாறுகளை எழுதி வாங்கியதையும் அரண்மனைப் புத்தகசாலையில் இவ்விதம் உலக சரித்திரத்தை வர்ணிக்கும் ஆயிரக்கணக்கான ஏட்டுச் சுவடிகள் இருப்பதையும் அந்நியர்களின் வருகையினுல் பல மொழிகளையும் தான் கற்றுக் கொண்டதையும் அவள் சொல்லிக்கொண்டே வந்தாள். பாரதநாட்டுக்குத் திரும்பிய பின் அங்கு என்னென்ன செய்ய உத்தேசித்திருக்கிருளென்பதையும் அவள் சொன்னுள்.

இப்படிப் பேசிக் கொண்டே அவர்கள் மலை உச்சியை அடைந்தபொழுது ஜீவஜோதி அப்பொழுதுதான் மும்முறை சுடர்விட்டு எழுந்து பிரகாசித்துவிட்டு மெதுவாகக் கீழே இறங்கிக் கொண்டிருந்தது. அதைக் கண்ட மாத்திரத்தில் ஜோதியும் பாலாஜியும் தங்களையே மறந்து இருகரங்களையும் குவித்துக் கொண்டு நின்றார்கள்.

கருநீல நிறத்துடனும் கண்ணைப்பறிக்கும் மின்னொளியுடனும் கம்பீரமாக கொழுந்துவிட்டு எரிந்து தணிந்த ஜீவஜோதி பார்ப்பவர்களுக்கு பயத்தை உண்டுபண்ணுவதைவிட அவர்களுடைய பக்தியைக் கவருவதாகவே இருந்ததென்று கூறவேண்டும். மலையை இரண்டு பாகங்களாகப் பிளந்ததைப் போல நடுவில் நீண்ட வெடிப்பு இருப்பதையும் அதன் அடியிலிருந்து ஜீவஜோதி குபீரென்று கிளம்பி சில வினாடி நேரம் ஜகஜோதியுடன் நின்று பிரகாசித்துவிட்டுத் தணிந்ததையும் கண்ட மாத்திரத்தில் ஜோதிவர்மனும் பாலாஜியும் தங்களையே மறந்துவிட்டனர். இருகரங்களையும் குவித்துக்கொண்டு நின்ற அவர்கள் மனதில் அப்பொழுது தோன்றிய உணர்ச்சிகளை வர்ணிக்க வார்த்தைகளே இல்லை. சர்வேசுரனின் லீலா விநோதங்களை வியந்து அவன்பால் அவர்கள் மனம் பரிபூரணமாக அப்பொழுது ஈடுபட்டுக்கொண்டிருந்ததென்று மட்டும் சுருக்கமாகச் சொல்லலாம்.

இதற்கிடையில் தேவதேவி ஜீவஜோதியின் உற்பத்தி ஸ்தானத்தின் அருகில் போய் மண்டியிட்டு அஞ்சலி செய்த வண்ணம் வடமொழியில் கிணீரென்று மந்திரோச்சாடனம் செய்தாள். பிரபஞ்சத்தின் உற்பத்தி விசேஷத்தை வர்ணிக்கும் புருஷ ஸூக்தத்தை அவள் சொல்லியபொழுது ஜோதிவர்மனும் பாலாஜியும் பக்திபரவசத்துடன் அவள் பக்கத்தில் போய் கைகட்டிக்கொண்டு நின்றார்கள். மலைக்கன்னி புருஷஸூக்தம் முழுவதையும் சொல்லிமுடித்து ஜீவஜோதியையும் வானத்தையும் எட்டுத்திக்கு பாலகர்களையும் வணங்கிவிட்டு ஜோதியின் பக்கம் திரும்பினாள்.

''பூமிமாதாவின் அதிசய ஜோதியைப் பார்த்தீர்களா பிரபு! படைத்துக்காத்து ரட்சிக்கும் சர்வேசுவரன் ஒளிமயமாக நமக்குப் பிரத்யட்சமாக தரிசனம் தரும் லீலா விநோதத்தைப் பார்த்தீர்களா பிரபு! பூமிமாதாவின் மடியிலிருந்து ஆயிரம் ஆயிரம் யோசனை தூர ஆழத்திலிருக்கும் பூமியின் நடுமத்திய பாகத்திலிருந்து கம்பீரமாகக் கிளம்பி ஜகஜோதியாக வரும் அன்னையின் அருள் வடிவத்தைப் பார்த்தீர்களா பிரபு! எத்தனை ஆயிரம் ஆண்டுகளாக, கல்பகோடி வருடங்களாக, இப் பூமண்டலத்தைப் பஞ்ச பூதங்களைக் கொண்டு பகவான் சிருஷ்டித்த நாள் முதல் கொண்டு ஜீவாத்மாக்கள் அனைத்துக்கும் பிதாவாகிய பரமாத்மா ஜோதி வடிவாக இங்கு காட்சி தரும் சௌந்தர்யத் தோற்றத்தைப் பார்த்தீர்களா பிரபு? மனிதனின் பகுத்தறிவுக்கு அப்பாற்பட்ட யுகயுகாந்திரங்களாக யோகீஸ்வரர்களும் மஹா தபஸிகளும் முனிபுங்கவர்களும் தேடித் திரிந்து அவர்கள் திருஷ்டியிலே படாமலிருந்த ஜீவஜோதி இதோ நம் கண் முன்னே நிற்கிறது. இறைவனை ஒளிவடிவத்தில் கண்டு அவரிடம் நம்மை ஒன்றிக் கலந்து ஐக்கியப்படுத்தி அவர் அருளுடன் நித்திய யுவனுயிருக்கும் பாக்கியம் உங்களைத் தவிர வேறு யாருக்குக் கிடைக்கும்? கிடைத்தற்கரிய பாக்கியம் உங்களுக்குக் கிடைக்கவிருக்கிறது. நான் சொல்லுவதைச் சற்றுக் கவனமாகக் கேளுங்கள். பூமிக்கு அடியிலே மலைகள் உருளுவதைப் போன்ற பேரிரைச்சல் மறுபடியும் கேட்கும். ஜீவஜோதி மீண்டும் மேலே வருவதற்கு அதுதான் அறிகுறி. ஒலி பிறந்தவுடன் அதைத்தொடர்ந்து ஒளி பிறக்கும். இதோ இந்தப்பிளவின் இரு புறங்களிலும் இரண்டு கால்களை ஊன்றி, கரங்களைக் குவித்து பரமாத்மாவிடம் மனதை லயிக்கச் செய்துகொண்டு நில்லுங்கள். உங்களுக்குத் தெரிந்தால் புருஷஸூக்தம் அல்லது ஸ்ரீஸூகத்தை சுருதி சுத்தமாக உச்சாடனம் செய்யுங்கள். நெருப்புச் சுட்டுவிடுமோ என்று அஞ்சாதீர்கள். அழிக்கும் அதே அக்கினிதேவன்தான் ஆத்மனைச் சரீரத்தில் வைத்துக் காப்

பவனும் அக்கினியின்றி அகிலத்தில் எதுவுமே நடை பெறுது மூலக்கடவுளென்றும், முதற் கடவுள் என்றும் வேதங்கள் கோஷிப்பது அக்கினி தேவனைத்தான் பிரபு! ஆனந்தகுண ரூபிணுகிய ஆண்டவன் நமக்குப் பிரதியட்ச மாகத் தரிசனம் தருவது அக்கினிதேவன் ரூபத்தில்தான். காக்கும் கடவுளான அந்த சர்வேஸ்வரனிடம் சஞ்சலமின்றி நெருங்கிச் சென்று உங்களை அவரிடம் ஒப்படையுங்கள். அவர் அமர வாழ்வையும் நித்திய தேஜஸையும், புஜ பல பராக்கிரமத்தையும், வீர்யம், சௌந்தர்யம் ஆகியவற் றையும் அளிப்பார். இதோ... அதோ... ஜீவஜோதி ஜகத் ஜோதியாகக் கிளம்பப் போகிறது பிரபு! அருகில் செல்லுங் கள்!''

இவ்வாறு சொல்லிவிட்டு தேவதேவி சற்று ஒதுங்கி நின்றுகொண்டிருந்தாள். ஜீவஜோதி மேலே கிளம்பும் வரையில் மனேதிடத்துடன் அதன் அருகிலே நின்ற ஜோதி வர்மன் ஜோதி கிளம்பியவுடன் பளிச்சென்று நகர்ந்து கொண்டுவிட்டான். இதைக்கண்டு மலைக்கன்னி மிகுந்த ஏமாற்றமடைந்திருக்க வேண்டும்.

அவள் ஜோதியின் அருகில் வந்து ''ஏன் பயமாயிருக் கிறதா? நெருப்பைக் கண்டதும் அது சுட்டு எரித்துவிடுமோ என்று அஞ்சுகிறீர்கள் போலிருக்கிறது. அது சுட்டெரிக்கும் சாதாரண நெருப்பில்லை. ஜீவனுக்கு அமரத்துவத்தை யளிக்கும் அபூர்வமான ஜகத்ஜோதியல்லவா அந்த அக்கினி ஜுவாலை! அது எவருக்கும் எவ்விதத் தீங்கும் செய்யாது பிரபு! நான் இவ்வளவு சொல்லியபிறகும் இன்னுமா உங் களுக்குத் தயக்கம்? ஜீவஜோதியில் ஸ்நானம் செய்து அமர வாழ்வு வாழும் பிரத்யட்ச சாட்சியாக நான் இருப்பதைப் பார்த்தபிறகு ஏன் இந்தப் பயம் பிரபு?'' என்ருள்.

ஜோதிவர்மன் பதிலே சொல்லாமல் மும்முறை பிர காசித்துவிட்டு அணைந்த அக்கினி ஜுவாலையை இமைகொட் டாமல் பார்த்துக்கொண்டு நின்ருன்.

"வேண்டாம்! நீங்கள் தீக்குளிக்க வேண்டாம். உங்களுடைய பயத்தையும் சந்தேகத்தையும் போக்க முதலில் நானே தீக்குளிக்கிறேன். முதலில் நான் தீக்குளிப்பது இன்னொருவிதத்திலும் நல்லதுதான். சென்ற இருபத்தாறு நூற்றாண்டுகளுக்கிடையில் ஜீவஜோதியின் தன்மை மாறியிருந்தால் அதன் விளைவுகள் என் பிரபுவைப் பாதிக்காமல் என்னைப்பாதிக்கட்டும். நான் காயம் ஏதுமின்றி வெளியில் வந்தால் பிறகு உங்களுக்கு தைரியம் ஏற்படுமல்லவா? ஒரு முறை தீக்குளித்தவர் மறுபடியும் இந்த ஜீவஜோதியில் குளித்து எழுந்தால் அதன் பலன் எப்படியிருக்குமோ தெரியாது. என்னிடம் இன்னும் என்னென்ன புதிய மாற்றங்கள் ஏற்படுமென்பதை நான் அறியேன். இது எப்படியிருப்பினும் என் பிரபுவின் சந்தேகம் நீங்க வேண்டும். என்னைப் போல அமரத்துவமும் அழியாத நித்திய சௌந்தர்யமும் பெறவேண்டும். இதற்கு நான் எவ்விதத் தியாகமும் செய்யச் சித்தமாயிருக்கிறேன். இந்த அக்கினி அடியோடு என்னை அழித்துவிட்டாலும் பரவாயில்லை. அமரத்துவமளித்த ஜீவஜோதிக்கு காலப்போக்கில் அழிக்கும் தன்மை ஏற்பட்டிருந்தால் என் பிரபுவை அழிக்காமல் முதலில் என்னைப் பலி வாங்கிக் கொள்ளட்டும்!"

இப்படிச் சொல்லிக்கொண்டிருந்த தேவதேவி மீண்டும் ஜீவஜோதி மேலே வருவதைக் கண்டதும் திரிசூலத்தையும் நவரத்தின மகுடத்தையும் சற்றுத் தூரத்தில் வீசியெறிந்துவிட்டு, புருஷஸூக்தத்தை கிணீரென்று உச்சாடனம் செய்துகொண்டே ஜீவஜோதியின் மத்தியில் போய் கரம்குவித்து நின்றுகொண்டிருந்தாள். அக்கினி ஜுவாலை அவளை முழுவதும் சுற்றிவளைத்துக்கொண்டு ஜகஜ்ஜோதியாகக் கிளம்பிப் பிரகாசித்தது.

# அத்தியாயம் - 9

தேவதேவி அக்கினிக்கு மத்தியில் கரம் குவித்துக் கொண்டு நின்றபொழுது மூன்று ஆள் உயரத்துக்கு குபீ ரென்று கிளம்பிய நீல நிற ஜுவாலைக்கு மத்தியில் அவளு டைய சௌந்தர்யம் கோடி சூரியப் பிரகாசத்துடன் பொலிவுற்று விளங்குவதைப் போல ஜோதிவர்மனுக்கும் மற்றவர்களுக்கும் தோன்றியது. இந்தக் காட்சியை இவர் களும் உக்கிரசேனர் முனிசாமி ஆகியவர்களும் இமை கொட்டாமல் பார்த்துக்கொண்டு நின்முர்கள். தேவியின் நிலைமை என்ன ஆகுமோ என்ற கவலை அந்நால்வர் மனதி லும் குடிகொண்டிருந்ததை திகில் நிறைந்த அவர்களுடைய தோற்றம் எடுத்துக்காட்டுவதாயிருந்தது.

அக்கினியில் நின்ற தேவியோ சிறிது கூட அசைய வில்லை. ஸ்வர்ணச் சிலையைப்போல அவள் பன்மடங்கு அதிக சோபையுடன் கம்பீரமாக நின்று கொண்டிருந்தாள். அவளுடைய ஒவ்வொரு அங்கத்தையும் அக்கினி ஜுவாலை தழுவிக்கொண்டும் அவளைப் பரிபூரணமாகச் சுற்றி வளைத் துக்கொண்டும் கொழுந்துவிட்டு எரிந்தது. ஜுவாலை தணிந்து வெடிப்பினுள் சென்றபொழுது தேவதேவி சிறி தும் காயமின்றி மறுமுறை ஜீவஜோதியின் வருகைக்காக மந்தகாசத்துடன் அதே இடத்தில் அசைவற்று நின்று கொண்டிருந்தாள். இப்பொழுதுதான் எல்லா நெருப்புகளை யும் போல இந்த நெருப்புச் சுட்டுப் பொசுக்கமாட்டா தென்பதை ஜோதிவர்மனும் மற்றவர்களும் சந்தேக மின்றி தெரிந்துகொள்ள முடிந்தது. இந்த அதிசயக்காட்சி, ஒரு சில வார்த்தைகளினுல் வர்ணிக்க முடியாத அதிபயங்

கரமானதும் ஆச்சரியமானதுமான காட்சி ஜோதிவர்மனை யும் அவனுடனிருந்த மற்றவர்களையும் கிட்டத்தட்ட சுய நினைவையே இழக்கச் செய்திருந்ததென்று கூடச் சொல்ல லாம்.

ஒளிமயமாக நின்ற தேவதேவியின் மீது ஜீவஜோதி இரண்டாவது முறையாக குபீரென்று கிளம்பி வந்து அவ ளைச் சூழ்ந்துகொண்டது. அப்பொழுதும் தேவியின் முகம் வாட்டமின்றி மந்தகாசத்துடனிருந்தது. அவளுடைய வாய் மாத்திரம் புருஷஸூக்தத்தைக் கிணீரென்று ஒலித் துக்கொண்டிருந்ததே தவிர மற்ற அவயவங்கள் சிலை போலச் சிறிதும் அசைவின்றி அமைதியாயிருந்தன. மூன் றுவது தடவையாக அக்கினி ஜுவாலை எழுந்தபொழுது ஒரு அதிபயங்கரமான கூக்குரல் ஜுவாலையின் மத்தியி லிருந்து கேட்டது. இடியோசையைவிடப் பலமாகக் கேட்ட அந்தக்கூக்குரல் ஒரு கணம் எதிரில் நின்றவர்களின் ரத்தத் தைச் சில்லிட்டு உறைந்துபோகச் செய்துவிட்டது. என்ன நடந்துவிட்டதென்பதை அவர்கள் உணர்ந்து கொள்ளு வதற்குள் மூன்றுவது முறையாகக் கிளம்பிய அக்கினி ஜுவாலை கொஞ்சம் கொஞ்சமாக வெடிப்பின் கீழே போய் விட்டது தேவதேவி சில விநாடிகளுக்கு முன்பு வரை நின்று கொண்டிருந்த இடம் சூன்யமாகக் கிடந்தது அதைக் கண்ட மாத்திரத்தில் ஜோதிவர்மனுக்கும் மற்றவர்களுக் கும் பகீரென்றது. 'ஐயோ தேவி!' என்று அலறிய வண்ணம் ஜோதிவர்மன் சுற்றுமுற்றிலும் பார்த்தான். அவனைப் போலவே மற்றவர்களும் திடீரென்று மறைந்த தேவியை பரபரப்புடன் நாற்றிசையிலும் தேடவாரம்பித்தார்கள்.

இதற்குள் வெடிப்பின் அருகில் போய்ப்பார்த்த பாலாஜி ''தேவி நிச்சயம் வெடிப்பிற்குள் விழுந்திருக்க முடியாது. மூன்று நான்கு அங்குல அகலம்கூட இல்லாத வெடிப்பில் தேவி எப்படி விழுந்திருக்க முடியும்?'' என்று ஒன்றும் புரியாமல் சொன்னார்.

"இல்லே! தேவி பொசுங்கிச் சாம்பலாகிப் பூமிக்குள் மறைந்துவிட்டாள். ஆயிரமாயிரமாண்டுகளாக எனக்காகக் காத்திருந்த உத்தமி, என்னைத் திருப்திசெய்து என் பயத்தைப் போக்குவதற்காக தன்னையே அக்கினிக்கு அர்ப்பணித்துக் கொண்டுவிட்டாள். தேவி! ஐயோ தேவி! நீ எங்கே போய்விட்டாய்? ஏன் திடீரென்று இப்படி அந்தர்த்யாமியாகிவிட்டாய்! நம்பியவர்களை யெல்லாம் நாசமடையச்செய்யும் மகாபாவியான நான் ஏன் இந்நாட்டுக்கு வந்தேன்? என்னோடு வந்த வில்லியம் இறந்தான்! என்னிடம் வாஞ்சை காட்டிய சித்ரா மரித்தாள்! எனக்காக கடுந்தவம் புரிந்த நீயும் இப்பொழுது என்பொருட்டு மகத்தான உயிர்த்தியாகம் செய்துவிட்டாய்! தேவி! ஐயோ தேவி!" என்று வெறி பிடித்தவனைப் போல ஜோதிவர்மன் வாய் விட்டுப் புலம்பலானான்.

அந்த நிலைமையில் அவனை என்ன சொல்லி சமாதானம் செய்வதென்று புரியாமல் பாலாஜியும் உக்கிரசேனரும் தவித்துக்கொண்டிருந்தார்கள்.

தேவியின் தன்னலமற்ற தியாகச் சிந்தையையும், காதல் வைராக்கியத்தையும் அமரத்துவமளிக்க ஆசையோடு தன்னை அங்கு அழைத்து வந்ததையும் ஜோதிவர்மன் சொல்லிச் சொல்லி அலறினான். அந்த அலறலின் நடுவே "அழாதீர்கள் பிரபு!" என்று தேவதேவி சொல்லும் வார்த்தைகள் அவர்களுக்குக் கிணீரென்று கேட்டன.

தேவியின் குரலைக் கேட்டதும் ஜோதிவர்மன் சட்டென்று அழுகையை நிறுத்தி, "தேவி! தேவி! அழாதேயென்று நீயா சொன்னாய்? நிஜமாக நீயா பேசினாய்? நான் கனவு காண்கிறேனா? பிரமையில் நீ பேசுவதைப் போலக் கேட்கிறதா? சொல்லு தேவி!" என்று பரபரப்போடு நாற்றிசையும் சுற்றிப்பார்த்துக்கொண்டு கேட்டான்.

''நான்தான் பேசுகிறேன் பிரபு! என்னை நினைத்து நீங்கள் அழுவதில் இனிப் பயனில்லை! தயவுசெய்து இந்த இடத்தைவிட்டு உடனே போய்விடுங்கள். திரும்பிப் பார்க்காமல் போய்விடுங்கள். ஏனென்று மட்டும் கேட்காதீர்கள். போய்விடுங்கள் பிரபு!'' இவ்வாறு சொன்னாள் தேவி. இப்படிப் பேசியது தேவதேவிதானென்பதில் ஜோதிவர்மனுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ சந்தேகமில்லை. வழக்கமான கம்பீரமும், இனிமையும் இல்லாமல் சோகத்துடன் துக்கமும், துயரமும் தொனித்த அந்தக் குரல் தேவியின் குரலேதான்.

ஆனால், தேவி எங்கிருக்கிறாள்? எங்கேயிருந்து பேசுகிறாள்? பூதவுடலைவிட்டுக் காற்றில் கலந்துவிட்டாளா? அகக்கண்களுக்குப் புலப்படாமல் அந்தர்தயாமியாக இருந்துகொண்டு அசரீரியைப்போலப் பேசுகிறாளா? தேவி எங்கிருந்து பேசுகிறாள்?

அவள் இருக்குமிடம் தெரியாமல் பரிதவித்த ஜோதிவர்மன், ''நீ எங்கிருந்து பேசுகிறாய் தேவி? ஏன் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்துகொண்டு பேசுகிறாய்? நான் உன் ஜோதியில்லையா? உன் காவியக் காதலன் விஜயகேசரியில்லையா? என்னையா உன்னைவிட்டுவிட்டு ஓடச் சொல்கிறாய்? மாட்டேன்! மாட்டேன்! என்னைக் கொன்றாலும் இந்த இடத்தில் தன்னந் தனிமையாக உருவமற்ற அருவமாயிருக்கும் உன்னைவிட்டுப் போகமாட்டேன். எனக்காக இருபத்தைந்து நூற்றாண்டுகள் வரையில் நீ காத்திருந்தாய். உனக்காக என் உயிருள்ளவரையில் இதே இடத்தில் பட்டினி விரதமிருந்து படிப்படியாக உடலையும் உயிரையும் ஒடுக்கி உன்னை வந்தடைவேன்!'' என்று புலம்பினான் ஜோதிவர்மன். அவன் சொல்வதைக் கேட்டு எதற்கும் கண்ணீர்விட்டுக் கதறி அழுதறியாத தேவதேவி 2500 ஆண்டுகளுக்கு முன்னால் முன்கோபத்தில் விஜயகேசரியைக் குத்திக்கொன்றுவிட்டு எவ்விதம் பிறகு கதறியழு

தாளோ அதேபோல மண்ணிலும் விண்ணிலும் எதிரொலித்துக் கேட்கும்படி குமுறியழுதாள்.

அழுகுரலைக் கவனித்துக் கேட்டுக்கொண்டிருந்த முனிசாமி திடீரென்று முன்னால் போய், ''தேவதேவி அதோ அங்கிருக்கிறாள் எஜமான்!'' என்றான். அவன் சுட்டிக் காட்டிய திசையில் பாய்ந்து ஓடினான் ஜோதிவர்மன்.

ஜோதிவர்மன் ஓடிவரும் சப்தம் தேவதேவிக்குக் கேட்டிருக்கவேண்டும். ''வராதீர்கள்! என் அருகில் வராதீர்கள்! அப்படியே நில்லுங்கள்!'' என்று அவள் அலறினாள். அவள் தொனியில் ஒரு பரபரப்பும் நடுக்கமும் தென்பட்டன.

சட்டென்று நின்ற ஜோதிவர்மன், ''நான் ஏன் உன் அருகில் வரக்கூடாது? ஏன் உன்னைப் பார்க்கக் கூடாது? காரணம் சொல்லு தேவி! நீ எங்கேயிருந்து பேசுகிறாய் என்பது கூட எனக்குத் தெரியவில்லையே!'' என்றான்.

தேவதேவி விக்கி விக்கி அழுதுகொண்டே, ''நான் இப்பொழுதிருக்கும் நிலைமையில் என்னைப் பார்ப்பதைவிடப் பாராமலிருப்பதே நல்லது பிரபு! என் அழகும் யௌவனமும் கம்பீரமும் அழிந்துவிட்டன. என் அந்தஸ்தும் அதிகாரமும் அஸ்தமித்துவிட்டன. என் வாழ்வே அதிவிரைவாக ஒரு முடிவுக்கு வந்துகொண்டிருக்கிறது. உலகத்திலுள்ள மிக மிகக் கோரமான உருவங்களைவிடப் பன்மடங்கு கோரமான அருவருக்கத் தகுந்த உருவத்தை நான் அடைந்திருக்கிறேன். அழகின் சிகரமாக என்னைப் பார்த்து ரசித்த என் பிரபு இப்பொழுது அவமானத்தின் சின்னமாக நான் இருப்பதைப் பார்க்கவே கூடாது. இப்பொழுதே இவ்விடத்தைவிட்டுப் போய்விட்டால் கம்பீரமான என் சௌந்தர்யம் எப்பொழுதும் உங்கள் நெஞ்சத்தைவிட்டு அகலாமலிருக்கும். அதில் என் ஆத்மா சாந்தியையும் சந்தோஷத்தையும் காணும். இப்போதிருக்கும்

அருவருக்கத் தகுந்த என் தோற்றத்தைக் கண்டு அதற்கு உங்கள் மனதில் இடம்கொடுத்துவிடாதீர்கள் பிரபு! சாவிலும் எனக்குச் சாந்தியில்லாமல் செய்துவிடாதீர்கள்! தயவு செய்து உடனே போய்விடமாட்டீர்களா?'' என்று கெஞ்சி மன்றாடினாள்.

''போகவா? உன்னை இங்கு இந்த நிலைமையில் தனித்து விட்டுப்போகவா? ஒருக்காலும் இல்லை. ஒருக்காலும் உன்னை விட்டுப் போகமாட்டேன். நீ எந்த உருவத்தில் எவ்வளவு கோரமாக இருந்தாலும் உன் பதி பக்தியையும் வைராக்கியத்தையும் எண்ணி என்றென்றும் உன்னை என் இதயத்தில் வைத்துப் பூஜிப்பேன். அழகும் இளமையும் அநித்தியமானவை. அழியாத அன்பு உன்னிடமிருக்கிறது. அந்த அன்புக்கு உரியவளை ஒருபோதும் நான் விட்டுப்போகச் சம்மதிக்கமாட்டேன்!'' என்று சொல்லிய வண்ணம் தேவியின் குரல் பிறந்த இடத்தையடைந்தான் ஜோதிவர்மன்.

அருகில் சென்றதும் தேவியின் அழுகுரல் தரையில் தனது காலடியிலிருந்து வருவது அவனுக்குத் தெளிவாகக் கேட்டது. காலடியில் தேவி அணிந்திருந்த பட்டாடைகளும் முகத்திரையும் குவியலாகத் தரையில் கிடந்தன. அவைகளுக்கு உள்ளேயிருந்துதான் சப்தம் பிறக்கிறதென்பதைத் தெளிவாக அறிந்துகொண்ட ஜோதிவர்மன் அந்த ஆடைகளை மெதுவாகக் கையிலெடுத்தான். அவற்றின் கீழே தரையில் ஐந்தாறு அங்குல உயரத்துக்கு திருப்பதி மரப்பாச்சி பொம்மையைப் போல ஒரு உருவம் தென்பட்டது. கன்னங்கரேலென்று கறுத்து கையிலடங்கும் அளவிற்கு இருந்த அந்த உருவத்தினிடமிருந்துதான் தேவியின் குரல் வந்தது.

அந்த உருவத்தை ஜோதிவர்மன் தன்னிரு கைகளாலும் எடுத்துப் பார்த்தபொழுது அதில் தேவதேவியின் சாயலை அவன் தெளிவாகக் காண முடிந்தது. ''தேவி! நீ யா

இதுவா நீ? என் தேவதேவியா நீ?'' என்றான் ஜோதிவர்மன்.

''ஆமாம் பிரபு! உங்கள் தேவதேவியேதான் இப்பொழுது கறுப்புக் கட்டையாக, சித்திரக்குள்ளர்களைவிடச் சிறிய கரிப் பொம்மையைப்போல உங்கள் கையிலிருப்பது. இந்த அசங்கிலித் தோற்றத்தைப் பார்க்கவேண்டாமென்று எவ்வளவோ மன்றாடினேன். என் பேச்சை நீங்கள் கேட்கவில்லை. என் அந்தஸ்தும் அகங்காரமும் அழகும் அமரத்துவமும் அழிந்து ஒழிந்து உலகத்தில் மிக மிக அருவருப்பான உருவத்துடன் நான் இருப்பதைப் பிடிவாதமாகப் பார்க்க ஆசைப்பட்டு விட்டீர்கள் போகட்டும். இன்னும் கொஞ்ச நேரம்தான் நான் நிலைக்கப்போகிறேன். இதோ மரண தேவனே என்னை அழைத்துப்போக வந்துவிட்டான். என் வைராக்கியமும் மனதின் உறுதியும்தான் கடைசி நேரத்தில்கூட எனக்குச் சுயநினைவையும் பேசும் சக்தியையும் அளித்திருக்கின்றன. பல நூற்றாண்டுகளாக இதயத்தில் ஒளி ஏற்றிப் பூஜித்துவந்த என் ஸ்வாமியிடம் நான் கடைசியாக விடைபெற்றுக்கொள்ள இறைவன் எனக்கு ஒரு சந்தர்ப்பத்தையளித்தார். அவர் கருணையே கருணை! இன்னும் சொற்ப நேரம்தான் பாக்கியிருக்கிறது. அதற்குள் நான் சொல்ல விரும்புவதைச் சொல்லி முடித்துவிடுகிறேன், கேளுங்கள். உங்களுக்காகவே இவ்வளவு காலமும் நான் உயிரைச் சுமந்துகொண்டிருந்தேன். அமரத்துவம் அடைந்திருந்தும் ரசனையின்றி சப்பென்றுபோன வாழ்க்கையில் உங்களுக்காகக் கடும் விரதம் அனுஷ்டித்து காலத்தைத் தள்ளிக்கொண்டு வந்தேன். இப்பொழுது கடைசியாக உங்களுக்குத் தைரியமும் நம்பிக்கையும் ஊட்டி உங்களையும் அமரனாக்கவேண்டுமென்ற ஒரு ஆசையுடன்தான் ஜீவஜோதியில் மூழ்கி இந்த அவலநிலைமையை அடைந்தேன்!

இத்துடன் நம் உறவு அற்றுப்போய்விட்டதாக எண்ணு தீர்கள். எவ்விதம் பல நூறு ஜென்மங்கள் எடுத்தும் கடைசியாக நீங்கள் என்னை வந்தடைந்தீர்களோ அதே போல அடுத்தடுத்துப் பல ஜன்மங்கள் எடுத்தாலும் எப் படியும் ஏதாவது ஒரு காலத்தில் உங்களை நிச்சயம் பதியா கப் பெறும் பாக்கியம் எனக்குக் கிடைக்கும். உங்களிடம் நான் வைத்திருந்த அன்பும் பக்தியும் பரிசுத்தமானதா யிருக்கும் பட்சத்தில் இறைவன் இந்த வரத்தை எனக்கு ஒருபோதும் மறுக்கமாட்டார். இப்பொழுது நான் போய் வருகிறேன். ஆனால், விரைவில் உங்களிடம் திரும்பி வருவே னென்று உறுதி கூறிவிட்டுப் போகிறேன் பிரபு! ஜீவஜோதி யில் தயவுசெய்து நீங்கள் ஸ்நானம் செய்யாதீர்கள். அதன் தன்மை காலப்போக்கில் மாறினாலும் மாறியிருக்கலாம். அல்லது ஒரு முறை ஸ்நானம் செய்தவர் மறுமுறை ஸ்நா னம் செய்தால் நான் அடைந்த அவல நிலைமையை அடைவ தாகவுமிருக்கும். என் சரீரத்தைப் பாருங்கள்! 2500 ஆண்டு கள்வரை ஒரு மனிதப் பிறவி ஜீவித்திருக்க முடியுமானால் அதனிடம் எவ்வளவு சுருக்கமும் தொய்வும் முதுமையும் ஏற்படுமோ அவை ஒரு கணத்தில் என்னிடம் ஏற்பட்டுவிட் டன. என் ஆடைகள் அவிழ்ந்து விழுந்து அவற்றினிடை யில் நான் புதைந்துபோய்விட்ட பரிதாபத்தைப் பாருங் கள். இயற்கையை வென்றுவிட்டதாக நினைப்பவர்களெல் லாம் கடைசியில் அடையும் கதி இதுதான்! இயற்கையை நான் முதலில் வென்றேன். இப்பொழுது எதிர்பாராதவித மாக அதே இயற்கை என்னை வென்று என் செருக்கை அரைக் கணத்தில் சிதறடித்துவிட்டது. இயற்கையின் சக் திக்கு எதிரில் நாம் எம்மாத்திரம்?

எனக்கு ஒரே ஒரு உதவி செய்யுங்கள்! நான் கேட்கும் வரத்தைத் தருகிறேனென்று உறுதி கூறுங்கள்!" என்றாள் தேவி.

"என்ன செய்யவேண்டும்? சொல்லு தேவி! எது வேண்டுமானாலும் செய்கிறேன்" என்றான் ஜோதிவர்மன்.

தேவி சொன்னுள்:— ''இன்னும் சில விநாடிகளுக்குள் நான் சவமாகிவிடுவேன். எனக்கு எந்தப் பூமிமாதா இருபத்தாறு நூற்ருண்டுகள் வரையில் ஜீவித்திருக்கும் பாக்கியத்தை அளித்தாளோ, அவளுடைய மடியிலேயே என் பூதவுடலைச் சேர்த்துவிடவேண்டும். ஜகன் மாதாவின் பாதாரவிந்தங்களில் போய் இருந்துகொண்டு உங்களுக்கு ஆரோக்கியத்தையும் சகல சௌபாக்கியங்களையும் அருளுமாறு அவளிடம் சதா சர்வதா நான் மன்ருடிக்கொண்டிருப்பேன். மீண்டும் ஜீவஜோதி கிளம்பி வரும்பொழுது என் பூதவுடலை அந்த அக்னிதேவனுக்கு அர்ப்பணித்துவிடுங்கள் பிரபு...... உக்கிரசேனு! இப்படி என் முன்னுல் வா! உன் ராணி அடைந்திருக்கும் அலங்கோலத்தைப் பார் அப்பா! பாவம் என் வெற்றிக்காக உன் பெண்ணைப் பறிகொடுத்தாய். பெண் இறந்ததையும் பொருட்படுத்தாமல் என்னிடம் உறுதியான பத்தி செலுத்திஞய். அதற்கு வெகுமதியாக உனக்கு அமரத்துவமளிக்க விரும்பினேன். வரம் அளிக்கும் சர்வ வல்லமை பொருந்திய இறைவனைப் போல என்னை எண்ணிக்கொண்டு உன்னையும் இங்கு இழுத்து வந்தேன். என் செருக்கு இதோ சீரழிந்து நிற்பதைப் பார் உக்கிரசேனு!'' என்ருள்.

''தயவுசெய்து இப்படியெல்லாம் சொல்லாதீர்கள் கன்னி மாதா! கடல் போன்ற விசாலமான உங்கள் இதயத்தை நான் அறிவேன்'' என்ருர் உக்கிரசேனர்.

''உன்னைப் போலொத்த ராஜபக்தன் இந்த உலகில் என்றுமே பிறந்ததில்லை உக்கிரசேனு! என் பிரபுவுக்கு அமரத்துவமளித்து அவரோடு பாரத நாட்டுக்குப் போய்விடவும், இந்நாட்டுக்கு உன்னை அரசனுக்கவும் நான் திட்டமிட்டிருந்தேன். இதை மகா மந்திரியிடமும் சொல்லியிருக்கிறேன். அதோ கிடக்கும் என் திரிசூலத்தின் பின்புறத்திலிருக்கும் கைப்பிடியைத் திறந்து பார் உக்கிரசேனு! அதற்குள் வைத்திருக்கும் சுவடியை எடுத்துக்கொண்டு வா!'' என்ருள் தேவி.

தேவி சொல்லியபடியே சூலத்தின் பின்புறத்தில் திருகு போலிருந்த மூடியைக் கழற்றி அதற்குள்ளேயிருந்த சுவடியை உக்கிரசேனர் எடுத்து வந்தார்.

"அந்தச் சுவடியில் உன்னை செம்பவளத்தீவின் மன்னனாக நான் பிரகடனம் செய்திருக்கிறேன். ஒரு சமயம் திடீரென்று இங்கிருந்து பாரத நாட்டுக்கு நாங்கள் புறப்பட்டுவிடக் கூடுமென்று எண்ணியே முன்யோசனையுடன் பிரகடனத்தை எழுதி என் முத்திரையையும் வைத்திருக்கிறேன். அதை மகா மந்திரியிடம் கொண்டுபோய்க் கொடு. கீழே கிடக்கும் என் முத்திரை மோதிரத்தை என் பிரபு எனது சின்னமாகத் தாய்நாட்டுக்குக் கொண்டு போகட்டும். என் மணிமுடியையும் திரிசூலத்தையும் என் அதிகாரத்தின் சின்னமாக நீ எடுத்துக் கொண்டு போ! இன்னொன்றையும் கவனமாகக் கேள் உக்கிரசேனா! நான் அழிந்துவிட்ட விவரம் எவருக்கும் தெரிய வேண்டாம். என்பிரபுவுடன் நான் பாரதநாட்டுக்குப் போயிருப்பதாக மகாமந்திரியிடம் சொல்லு. உன் ஆட்சியை எவராவது எதிர்த்தால் அவர்களை இந்த நிமிடமும் நான் திரும்ப வந்து ஹதம் செய்து விடுவேனென்று கடுமையாக எச்சரித்ததாகவும் மகாமந்திரியிடம் சொல்லு.

இதற்குப் பின் தேவதேவி பாலாஜியிடம் விடைபெற்றுக் கொள்ளுவதற்காக "ஐயா பெரியவரே! உங்கள்...! என்று பேசிக் கொண்டிருக்கையில் வலிப்பு ஏற்பட்டதைப் போல ஜோதியின் கரத்தில் அவள் நெளிந்து நெளிந்து துடித்தாள். சிறிது நேரத்துக்கெல்லாம் அவள் ஆவி பிரிந்துவிட்டதற்கு அடையாளமாக அவள் செயலற்றுப் போய்விட்டாள்.

தேவி இறந்துவிட்டாளென்பதை ஜோதிவர்மன் உணர்ந்தவுடன் பிரேதத்தை மெதுவாகக் கீழே வைத்துவிட்டு வாய்விட்டு அலறினான். துடித்தான். வானத்தில் எதிரொலிக்கும்படி கூக்குரலிட்டான். பாலாஜியும், உக்கிர

சேனரும், முனிசாமியும் எவ்வளவு சமாதானப்படுத்தியும் கூட அவன் சுயநினைவை இழந்து கதறினன்.

"தேவி! உன்னைவிட்டு என்னல் இனி வாழமுடியாது. எனக்காகவே நீ இவ்வளவு காலம் வாழ்ந்தாய். கடைசியில் எனக்காகவே என் முன்னிலையில் பிராணத் தியாகம் செய்தாய். உன் முடிவைப் பார்த்த பிறகு கூட என் இதயம் இன்னும் வெடிக்காமலிருக்கிறது. ரத்தக் குழாய்கள் உடைந்து நான் இன்னும் சாகாமலிருக்கிறேன். நீ போன பிறகு இவ்வுலகம் எனக்குச் சூன்யமாகிவிட்டது. இதோ நானும் உன்னேடு வருகிறேன். இந்த மண்ணுலகில் வேண்டுமானல் விதி நமக்குச் சதி செய்யலாம். விண்ணுலகிலே எவரும் நம்மைப் பிரிக்க முடியாது. இதோ ஜீவஜோதியில் உன்னைப்போல நானும் இருமுறை தீக்குளித்து உன்னைப் பின்பற்றி விண்ணுலகுக்கு ஓடிவருகிறேன். தேவி, முதலில் நீ போகிருய். பிறகு நான் வருகிறேன். நம் இருவருக்கும் அவ்வளவுதான் வித்தியாசம். சரித்திரமறியாத தெய்வீகக் காதலியை, தியாகத்தின் சிகரத்தைத் துடித்துச் சாகவிட்டு உயிருடனிருக்கும் உன்மத்தனென்ற பெயர் எனக்கு வேண்டாம். நான் அவ்வளவு பண்பு கெட்டவனில்லை தேவி! உன் பின்னல் இதோ வந்துவிட்டேன்!"

இவ்விதம் புலம்பிய வண்ணம் ஜோதிவர்மன் தேவதேவியின் பூதவுடலை எடுத்துக் கொண்டு உயரக் கிளம்பியிருந்த ஜீவஜோதியை நோக்கி அம்புபோலப் பாய்ந்து ஓடினன்.

தேவியின் சடலத்தை அக்கினியில் அர்ப்பணித்துவிட்டு அதைத் தொடர்ந்து தானும் தீக்குளிக்க ஜோதிவர்மன் முயற்சிக்கையில் அவனைபாலாஜியும் உக்கிரசேனரும் கட்டிப் பிடித்துப் பலாத்காரமாக இழுத்து வரவும் அவர்களிடம் இருந்து திமிறிக் கொண்டு தீயில் போய்விழ அவன் துவண்டு துவண்டு துடித்தான்.

தளபதி உக்கிரசேனரும் பாலாஜியும் முனிசாமியும் சேர்ந்து ஜோதியை ஒருவாறு கட்டுப்படுத்திக் கீழே உட்காரவைத்தார்கள்.

"ஜோதி! என்ன முட்டாள்தனமான காரியம் செய்யப் பார்க்கிருய்? தேவி உன்னிடம் என்ன சொல்லிவிட்டுப் போனுளென்பதை மறந்து விட்டாயா? எப்படியும் அதிவிரைவில் மறுபடி உன்னிடம் வந்து சேருவேனென்று தேவி உறுதி கூறவில்லையா? அவள் எப்படித் தெய்வீகமான சக்தியுடன் இவ்வளவு காலம் ஜீவித்தாளோ அதே தெய்வீக சக்தியின் உதவியினுல் அவள் திரும்பி வரும் பட்சத்தில் நீ தற்கொலை செய்து கொண்டு விட்டதைக் கேட்டு எவ்வளவு துன்பப்படுவாள். இதுதான் போகட்டும். தேவி இறந்துவிட்டாலும் அவள் ஆன்மா செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கும். உன் சுகத்துக்காகப் பரலோகத்திலும் ஜகன்மாதாவிடம் இடைவிடாமல் மன்ருடுவேன் என்று சொல்லிவிட்டுப்போன தேவிக்கு நீ தற்கொலை செய்து கொள்ளுவது சாவிலும் நிம்மதியைக் கொடுக்குமென்று நினைக்கிருயா? பரலோகத்திலும் அவள் ஆன்மா சஞ்சலப்பட்டுக் கொண்டிருக்க வேண்டுமென்று நீ ஆசைப்பட்டால் உன் இஷ்டம்போல் செய். அல்லும் பகலும் உன்னை நினைத்து உனக்காகவே உயிர்விட்ட ஒரு உத்தமிக்கு நீ செய்யும் கைம்மாறு இதுதான் போலிருக்கிறது. சித்தரின் வாக்குப் பொய்க்காமல் தேவியிடம் நீ வந்து சேர்ந்ததைப்போல் தேவியின் வாக்கும் பொய்க்காமல் ஒருசமயம் உன்னுடைய இந்த ஜன்மத்திலேயே அவள் உன்னை வந்து அடைந்தாலும் அடையலாம். அவள் வரும்பொழுது நீ தற்கொலை செய்து கொண்டு பிசாசாக அலைவதைத் தான் அவள் காண வேண்டுமென்று விரும்புகிருயா? நன்ருக யோசித்துப் பார் ஜோதி. உன்னிடம் அவள் வைத்திருந்த வாஞ்சையில் ஆயிரத்தில் ஒரு மடங்கு வாஞ்சையாவது அவளிடத்தில் உனக்கு இருக்குமானுல் அவளுடைய கடைசி விருப்

பத்தை நிறைவேற்று. அவள் சொல்லியபடி நாம் பேசாமல் பாரதநாட்டுக்குத் திரும்புவோம். நம் ஆயுள் இருக்கும்வரையில் அவள் திரும்பி வருவாளென்ற நம்பிக்கையோடு காத்திருப்போம். அவள் ஆன்மா சாந்தியடைய இறைவனிடம் மனம் கசிந்து பிரார்த்தித்து முறையிடுவோம். இதுதான் தேவதேவிக்கு நாம் நன்றி செலுத்த நேரான வழி! இந்த நேரான வழியைவிட்டு விபரீதமான குறுக்கு வழியில் போய் தேவியின் ஆன்மாவுக்கு நிம்மதியில்லாமல் செய்துவிடாதே.

இவ்வாறு பாலாஜி உணர்ச்சி வேகத்துடனும் ஜோதியின் மனதில் ஆழமாகப் பதியும்படியும் சொல்லிய பிறகு தான் அவன் கொஞ்சம் சாந்தமடைந்தான்.

"இருட்டும் நேரமாகிவிட்டது. இருட்டுக்கு முன் நாம் மலைச்சிகரத்திலிருந்து கீழே இறங்காவிட்டால் இரவு குளிரில் நாம் விறைத்துப் போய்விடுவோம்!" என்று எச்சரித்தார் உக்கிரசேனர்.

"ஆம்! நாம் உடனே கீழிறங்கிவிட வேண்டியதுதான்! என்று சொல்லிய பாலாஜி ஜோதியைப் பிடித்துத் தூக்கி நிறுத்திக் கொண்டு எழுந்தான். அவர்கள் வெடிப்பின் அருகில்போய் பார்த்த பொழுது தேவதேவியின் சாம்பல் கூட அங்கில்லை. அவளுடைய அஸ்தி காற்றிலே அஷ்ட திக்குகளிலும் பறந்துபோய் விட்டது. அம்மூவரிலும் அதி பலசாலியான உக்கிரசேனர் தரையில் கிடந்த திரிசூலத்தையும் முத்திரை மோதிரத்தையும் எடுத்துக் கொண்டார். தேவியின் மணி முடியையும் ஆடைகளையும் ஜோதிவர்மன் எடுத்துக் கொள்ள அவர்கள் மலையிலிருந்து மெதுவாகக் கீழே இறங்க ஆரம்பித்தார்கள். தேவியைத் திடீரென்று இழந்த துக்கத்தில் ஜோதிவர்மன் எவருடனும் பேசாமல் மௌனமாக இறங்கினான். அவர்கள் மலையடிவாரத்தில் குதிரைகளைக் கட்டியிருந்த இடத்தை அடைந்ததும் "நீங்

கள் அமரகிரிக்கு வருவது அவ்வளவு நல்லதென்று எனக்குத் தோன்றவில்லை!'' என்றார் உக்கிரசேனர்.

''ஏன்?'' என்று பாலாஜி கேட்டபொழுது ''என்னை இந்நாட்டின் மன்னனாகக் கன்னி மாதா பிரகடனப்படுத்தி ஓலை எழுதிக் கொடுத்திருப்பது வாஸ்தவம்தான். இதைப் பற்றி ஏற்கனவே மகாமந்திரியிடமும் சொல்லியிருப்பதாகக் கன்னிமாதா தெரிவித்தார். மகாமந்திரியும் படைத் தலைவர்களும் எனக்கு விரோதமாகச் சதிசெய்யாமலிருப்பதற்காகக் கன்னி மாதா எந்த நிமிடமும் பாரதநாட்டிலிருந்து செம்பவளத் தீவுக்குத் திரும்பலாமென்று சொல்லிப் பயமுறுத்தி வைக்கும்படியும் சொல்லி விட்டுப் போயிருக்கிறாள். ஆயினும் படைத் தலைவர்களுக்கு ஏதாவது சந்தேகம் ஏற்பட்டுச் சதிசெய்யக் கிளம்பினால் அது உங்களையும் பாதிக்காமல் இருக்க வேண்டும். சந்தேகமேற்பட்டால் அந்த முரடர்கள் என்ன செய்வார்கள் என்று சொல்ல முடியாது. ஆகையால் காட்டுப் பாதையில் குறுக்கு வழியாகத் தென்திசைப் பிராந்தியத்துக்குப் போவோம். உங்களைக் கப்பலில் ஏற்றிவிட்டு நான் என் பாசறைக்குப் போய் எனது வீரர்களின் பக்கபலத்தோடு அமரகிரிக்குப் போவதுதான் நல்லது. தனியாகப்போய் அவர்களிடம் மாட்டிக் கொள்ளக் கூடாது. என் பாசறையில் இருந்து ஒலிபெருக்கியின் மூலம் அமரகிரியிலுள்ள மகாமந்திரியுடன் பேசிவிட்டு அரண்மனைக்குப் போவதுதான் உசிதமானது'' என்றார் உக்கிரசேனர்.

தேவியின் வாசஸ்தலமான அமரகிரியை இன்னொரு தடவை பார்க்காமல் திரும்புவது ஜோதிவர்மனுக்குச் சமாதானமாயில்லாவிட்டாலும் அமரகிரிக்கு அவன் வருவது ஆபத்தானதென்று உக்கிரசேனர் பல காரணங்களையும் எடுத்துக் காட்டி வற்புறுத்தியபடியினால் அவர் பேச்சுக்கு அவன் இணங்க வேண்டியதாயிற்று. ஆகவே அவர்கள் குதிரைகளில் ஏறி காட்டுக்குள் குறுக்குப் பாதை வழியாக தென்திசைப் பிராந்தியத்தை நோக்கி விரைந்தார்கள்.

போகும் பொழுது ''நீங்கள் வந்த இயந்திரப் படகு விட்டு வந்த இடத்திலேயே இன்னும் இருக்குமென்று நிச்சயமாக நினைக்கிறீர்களா?'' என்று கேட்டார் உக்கிரசேனர்.

''ஆம்! அதில் சந்தேகமேயில்லை. நாங்கள் இத்தீவுக்கு வந்து இத்துடன் சரியாக பதின்நான்கு தினங்களாகின்றன. பதினைந்து தினங்கள்வரையில் காத்திருந்து பார்த்து விட்டு நாங்கள் திரும்பி வராவிட்டால் அதன் பிறகு மற்றும் இருவர் கரைக்கு இறங்கி வந்து பார்க்க வேண்டும் என்பது ஏற்பாடு. படகு நாங்கள் விட்டு வந்த இடத்தில் நிற்குமென்பதில் சந்தேகமேயில்லை'' என்றார் பாலாஜி.

''தேவி சொல்லிவிட்டுப் போனதைப்போல அவள் இறந்துவிட்டாளென்பதைக் கொஞ்சக் காலத்துக்கு வெளியிடாமல் இருப்பதுதான் நல்லது. அவள் இறந்து விட்டாளென்பது தெரிந்தால் நாட்டில் பெரிய பரபரப்பும், கொந்தளிப்பும் உருவாகிச் சமாளிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுவிடும். முன் யோசனையுடன் தேவி பிரகடனம் எழுதி வைத்திருந்ததைக் கவனித்தால் எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. சென்ற பத்துத் தினங்களுக்குள் எவ்வளவு ஆச்சர்யமான சம்பவங்கள் நிகழ்ந்து விட்டன!'' என்றார் உக்கிரசேனர்.

''ஆச்சர்யமான இந்தச் சம்பவங்கள் எவ்வளவோ அரிய தத்துவார்த்த உண்மைகளையும் நமக்கு அறிவுறுத்தியிருக்கின்றன. இயற்கை என்ற மகா சக்தியின் கையில் நாமெல்லாம் விளையாட்டுப் பொம்மைகளென்பதற்குத் தேவியின் முடிவைவிட வேறு என்ன அத்தாட்சி வேண்டும்?'' என்றார் பாலாஜி.

அவர்கள் இவ்விதம் பேசிக் கொண்டே தீவின் தென் பிராந்தியத்தின் கடற்கரையோரத்துக்கு வந்து சேர்ந்தார்கள். கடலிலிருந்து தீவுக்குள் இட்டுச் செல்லும்

நதியை இடையில் சந்தியாமலே கடற்கரைப் பகுதிக்கு வந்துவிட்டது. பாலாஜிக்கு ஆச்சர்யமாயிருந்தது. தாங்கள் வந்தது குறுக்குப் பாதையென்றும், பவானியின் மண்டபம் இருந்த திறந்து வெளிப் பிரதேசத்துக்குப் போகாமலே காட்டு வழியாகக் கடலோரத்துக்கு வந்து விட்டதாயும் உக்கிரசேனர் சொன்னார்.

கடற்கரையில் அவர்கள் நின்ற இடத்திலிருந்து பார்த்த பொழுது கொஞ்சத் தூரத்துக்கு அப்பால் ஜோதிவர்மன் கடலில் விட்டு வந்த கடற்படையின் இயந்திரப் படகு விளக்குகளைப் போட்டுக் கொண்டு நிற்பது அவர்களுக்குத் தெளிவாகத் தெரிந்தது.

"அதோ எங்கள் படகு நிற்கிறது பாருங்கள்! படகு நிச்சயம் காத்திருக்குமென்று நான் சொல்லவில்லையா?" என்றான் பாலாஜி.

இதற்குள் அவர்களுடைய பேச்சுக் குரலைக் கேட்டு அக்கம் பக்கங்களிலிருந்து சிலர் அங்கு ஓடிவந்தார்கள். வந்தவர்கள் கையில் கொண்டு வந்திருந்த தீவட்டி வெளிச்சத்தில் தங்களுடைய தளபதி உக்கிரசேனரைக் கண்டவுடன் தலைகுனிந்து வணங்கிவிட்டு உக்கிரசேனர் கையில் திரிசூலமும், ஜோதிவர்மன் கையில் மணி முடியும் இருப்பதைப் பார்த்து அவர்கள் ஆச்சரியப்பட்டிருக்க வேண்டும். தேவியை நேரில் பார்த்திராத அவர்களுக்கு அவை தேவியினுடையதென்பது தெரிந்திருக்க நியாயமில்லை என்றாலும் நடு நிசி நேரத்தில் அந்தச் சாமான்களுடன் அவர்களைக் கடற்கரையோரத்தில் கண்டதே அந்த மனிதர்கள் ஆச்சரியம் அடைந்ததற்குக் காரணமாயிருக்க வேண்டும்.

அவர்களில் ஒருவனைப் பார்த்து "ஒரு படகு கொண்டு வா!" என்று உக்கிரசேனர் உத்தரவிட்டார்!

படகு கரையில் தயாராயிருக்கிறது எஜ[illegible]! என்றான் அம்மனிதன்.

பிறகு உக்கிரசேனர் ஜோதிவர்மனைப் பார்த்து ''அய்யா! தேவியின் பிரியத்துக்கும் பக்திக்கும் பாத்திரமாகிய நீங்களே எங்கள் கன்னிமாதாவின் வாரிசு. எங்கள் சம்பந்தப்பட்ட மட்டில் உங்கள் வாக்கு கன்னிமாதாவின் வாக்கு. தேவியின் விருப்பத்தை உங்கள் கையினுல் தயவு செய்து நிறைவேற்றி வையுங்கள்! என்ருர்.

இவ்விதம் சொல்லிவிட்டு உக்கிரசேனர் ஜோதிவர்மன் முன்னிலையில் மண்டியிட்டு அமரவும் ஜோதிவர்மன் தனது கையிலிருந்த மணி முடியை உக்கிரசேனர் தலையில் வைத்து தேவதேவியின் ஆணைப்படி உங்களை இந்நாட்டின் மன்னராக முடிசூட்டிப் பிரகடனம் செய்கிறேன் முடிசூட்டு வைபவத்தின் பொழுது அதற்குச் சாட்சியாக உங்கள் நாட்டுப் பிரஜைகளில் சிலரே நம்பக்கத்திலிருப்பது நல்ல சகுனம். மகா மந்திரிக்கும் படைத் தலைவர்களுக்கும் தேவியின் பிரகடனத்தை வாசித்துக் காட்டி அவள் பெயரால் நல்லாட்சி நடத்தி மக்களின் அன்பையும் பிரியத்தையும் பெறுவீர்களாக! வாழ்க உக்கிரசேன மகாராஜா!'' என்ருன் ஜோதிவர்மன்.

அதைத் தொடர்ந்து பாலாஜியும் முனிசாமியும் வாழ்க! உக்கிரசேன மகாராஜா! என்று கோஷிக்கவும் ஈட்டி வீரர்களும் அவர்களைத் தொடர்ந்து விஷயம் புரியாமலே வாழ்த்து ஒலியை முழங்கினுர்கள்.

இதன் பின்னர் கரையில் கட்டியிருந்த ஒரு படகில் அவர்கள் புறப்பட்டனர். அந்நாட்டு வீரர்களில் ஒருவன் படகைச் செலுத்திக் கொண்டு வந்தான்.

இயந்திரப் படகை நெருங்கியதும் ஜோதி, பாலாஜி, முனிசா[illegible]கிய மூவரும் இயந்திரப்படகில் ஏறிக்கொள்ள மணி மு[illegible]யைத் தரித்த உக்கிரசேனருடன் நாட்டுப் படகு மெதுவாகத் திரும்பியது.

இயந்திரப் படகில் ஜோதியும், பாலாஜியும் ஏறிய வுடன் காப்டன் வில்லியம் எங்கே என்று படகிலிருந்தவர் கள் சரமாரியான கேள்விகளை அடுக்கினார்கள்.

முதலில் படகைக் கிளப்புங்கள்! பிறகு மற்றதைப் பேசுவோம்! என்று பாலாஜி அவசரப்படுத்தவே அவ் விதம் அவசரப்படுத்துவதில் ஏதோ ஒரு காரணமிருக்க வேண்டுமென்று நினைத்து மாலுமிகள் படகைக் கிளப்பி னார்கள். அவர்களுக்கு செம்பவளத்தீவில் நடந்த அதி பயங்கரமான சம்பவங்களைப் பற்றி பாலாஜி கதை கதை யாகச் சொல்லிக் கொண்டிருக்கையில் ஜோதிவர்மன் மட் டும் அவர்களுடைய சம்பாஷணையில் கலந்து கொள்ளாமல் அரைப் பிறைச் சந்திரனின் மங்கிய வெளிச்சத்தில் செம் பவளத் தீவின் இரு நிரந்தர சின்னங்களான ரிஷபம் படுத் திருப்பதைப்போன்ற பிரமாண்டமான மலைச் சிகரத்தை இமைகொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான். அந் தச் சிகரங்கள் கொஞ்சம் கொஞ்சமாக அடிவானத்துக் கப் பால் போய் மறைந்து விடவே ஒரு நீண்ட பெருமூச்சுடன் கையிலிருந்த தேவியின் ஆடைகளைத் தன் இதயத்துடன் அணைத்துக் கொண்டு இடிந்துபோய் ஒருமூலையில் உட்கார்ந் தான்.

"தேவி கடைசியில் சொல்லிவிட்டுப் போனதைப் போல திரும்பவும் என்னிடம் வருவாளா எப்பொழுது வருவாள்? சீக்கிரம் வருவாளா? அம்மாதிரி ரதியின் வரு கைக்காக இன்னும் எவ்வளவு காலம் நான் இப்படியே பெருமூச்சுவிட்டுக் கொண்டு காத்திருக்க வேண்டும்?"

கீழே படகின் மீது மோதிக் கொண்டிருந்த கடல் அலை களைப்போல அவன் நெஞ்சத்தில் இப்படியான எண்ணங் கள் அலைமோதி நெஞ்சிலிருந்த பாரம் பெருமூச்சாக வெளியே வந்து கொண்டிருந்தது.

முற்றும்.

ஈழத்தின் தலைசிறந்த எழுத்தாளர்களின் தரமான படைப்புகள் மாதா மாதம் வீரகேசரி பிரசுரமாக நூலுருவில் வெளிவருகின்றன.

தவறுமல் இவைகளைப் பெற்று உங்கள் இல்லத்தில் ஓர் "குடும்ப நூல் நிலையத்தை" ஆரம்பியுங்கள்.

ஆறு புத்தகங்களை அடுத்து நீங்கள் வாங்கிஞல், ஏழாவது புத்தகம் இனமாக அனுப்பி வைக்கப்படும் இப்பரிசுத் திட்டத்தில் ஏற்கனவே ஆயிரத்திற்கு மேற்பட்ட வாசகர்கள் இனமாக நூல்களைப் பெற்றுள்ளனர்.

புத்தகங்களைக் கிரமமாகப் பெறுவதில் சிரமமிருந்தால் நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்:

விநியோக நிர்வாகி,
வீரகேசரி,
த.பெ. 160,
கொழும்பு.

# வீரகேசரி பிரசுரம்-70

''மலைக்கன்னி'' நாவலின் தொடர்ச்சி இந் நாவல்:

வீரகேசரி நாளிதழில் இருபது ஆண்டுகளுக்கு முன் தொடர்கதையாக வெளிவந்த போது வாசகர்களிடையே அமோக ஆதரவைப் பெற்றது. விறுவிறுப்பான கதை அம்சம் மட்டும் இதன் வெற்றிக்குக் காரணமில்லை. மேலைத்தேச இலக்கியமொன்றைத் தழுவிய இந் நாவலை, இந்திய பண்பாட்டுடனும், வரலாற்றுடனும் இணைத்து, இது ஒரு சரித்திர நாவலோ என வாசகர்களை வியப்படைய வைக்க பிரபல நாவலாசிரியர், திரு. வாஸ் அவர்களால் மட்டுமே இயலும். ஆசிரியரின் ஆழ்ந்த அறிவும், எழுதுகோலின் சிறப்பும் இந் நாவலில் எழுத்துக்கு எழுத்து மிளிர்கின்றது. இருபது வருடங்கள் கழிந்தும் இந் நாவல் இன்றைய சந்ததியின் இதயங்களைக் கொள்ளை கொள்ளும் என்பதில் ஐயமில்லை.

2018